மத்தேயு - முன்னுரை

காலம்

கி.பி. 37-ஆம் ஆண்டில் யூதேயாவில் இந்த சுவிசேஷம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

மத்தேயு. மறுபெயர் லேவி. அல்பேயுவின் குமாரன். யாக்கோபுவின் சகோதரன். (லூக்கா 6:16) ஆயக்காரன். இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன். (மத் 9:9; மத் 10:3; மாற்கு 2:14-15; மாற்கு 3:18; லூக்கா 5:27-29; லூக்கா 6:12-16; அப் 1:13). பதினைந்து வருஷங்களாக யூதேயாவிலே பிரசங்கம் பண்ணினான். அதன்பின்பு எத்தியோப்பியாவிற்கும், பிற தேசங்களுக்கும் சென்று இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வந்தான். (அப் 2:43) இவன் இரத்தச்சாட்சியாக மரிக்கவில்லை.

மையக்கருத்து

இயேசு கிறிஸ்து யூதருடைய இராஜா. உலக இரட்சகர். இந்த சுவிசேஷம் விசேஷமாக இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எழுதப்பட்டது.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் காணப்படும் விசேஷித்த காரியங்கள்

குழந்தைப்பருவம்

1. சாஸ்திரிகளின் வருகை (மத் 2:1-15)
2. இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளைகள் கொல்லப்படுதல் (மத் 2:16-18)
3. எகிப்திற்கு ஓடிப்போதல் (மத் 2:13-15)
4. எகிப்திலிருந்து திரும்பி வருதல் (மத் 2:19-23)

பத்து உவமைகள்

1. களைகள் (மத் 13:24-30)
2. மறைந்திருக்கும் பொக்கிஷம் (மத் 13:44)
3. முத்து (மத் 13:45)
4. வலை (மத் 13:47)
5. இரக்கமில்லாத ஊழியக்காரன் (மத் 18:23-35)
6. வேலையாட்கள் (மத் 20:1-16)
7. இரண்டு குமாரர் (மத் 21:28-32)
8. கலியாண விருந்து (மத் 22:1-14)
9. பத்து கன்னிகைகள் (மத் 25:1-13)
10. தாலந்துகள் (மத் 25:14-30)

அற்புதங்கள்

1. மீன்வாயில் வெள்ளிப்பணம் (மத் 17:24-27)
2. இரண்டு குருடருக்குப் பார்வை கிடைத்த அற்புதம் (மத் 20:30-34)

சம்பாஷணைகள்

1. மலைப்பிரசங்கம் (மத் 5:1-7:29
2. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே (மத் 11:28-30)
3. வீணான வார்த்தைகள் (மத் 12:36-37)
4. இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் (மத் 16:17-19)
5. உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம்செய்தால் (மத் 18:15-35)
6. தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். (மத் 21:43)
7. வேதபாரகர், பரிசேயர் ஆகியோரைப் பற்றிய காரியங்கள் (மத் 23:1-33)
8. ஒருகல்லின்மேல் ஒருகல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும். (மத் 24:1-25:46)
9. நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். (மத் 28:18-20)

மத்தேயு - முன்னுரை

இயேசுவின் பாடுகளின்போது நடைபெற்ற காரியங்கள்

1. மத் 27:3-11
2. மத் 27:19
3. மத் 27:52-53
4. மத் 27:62-64
5. மத் 27:65-66
6. மத் 28:2

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 28

வசனங்கள் - 1,071

கேள்விகள் - 177

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 25

புதிய தீர்க்கதரிசனங்கள் - 47

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 815

பொருளடக்கம்

I. இயேசு கிறிஸ்துவின் ஊழிய காலத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள்

1. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு - (1:1)
2. இயேசுவின் முன்னோர்கள்
   (1) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள் - (1:2-5)
   (2) இராஜாக்களாக இருந்த 14 வம்சங்கள் - (1:6-11)
   (3) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள் - (1:12-16)
   (4) ஆபிரகாமிலிருந்து இயேசு கிறிஸ்து வரையிலும் - யூத மார்க்கத்து முன்னோர்கள் - (1:17)
3. இயேசு கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு - (1:18-25)
4. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் - (2:1-12)
5. இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவம்
   (1) எகிப்திற்குப் பிரயாணம் - (2:13-15)
   (2) பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள் - இயேசுவைக் கொல்வதற்கு நடந்த முதலாவது சதி - (2:16-18)
   (3) எகிப்திலிருந்து திரும்பி வருதல் - (2:19-23)

II. யோவான் ஸ்நானனின் ஊழியம்

1. மூன்று அம்ச செய்தி - (3:5-6)
2. யோவான் ஸ்நானனின் எளிய வாழ்வு - (3:4)
3. ஊழியத்தின் வெற்றி - (3:5-6)
4. பதிமூன்று அம்சச் செய்தி - (3:7-12)

III. இயேசுவின் ஊழிய ஆயத்தம்

1. தண்ணீர் ஞானஸ்நானம் - (3:13-15)
2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (3:16-17)
3. சோதனை - (4:1-11)

IV. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும்

1. கலிலேயாவில் ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - (4:12)
2. நாசரேத்தில் உள்ளவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - கப்பர் நகூமிற்குச் செல்கிறார் - (4:13-16)
3. இராஜ்ஜியத்தைப் பற்றி பிரசங்கம் பண்ணுகிறார் - (4:17)
4. பேதுரு, அந்திரேயா ஆகியோரின் அழைப்பு - (4:18-20)

மத்தேயு - முன்னுரை

5. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (4:21-22)

6. கலிலேயாவிற்கு இரண்டாவது பிரயாணம் - (4:23-25)

7. மலைப்பிரசங்கம்

(1) முன்னுரை - (5:1-2)

(2) பாக்கியவான்கள் - (5:3-12)

(3) விசுவாசிகளின் ஒப்புமை - (5:13-16)

(4) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்காக வந்தார் - (5:17-18)

(5) இராஜ்ஜியத்தின் பிரமாணங்கள்

(அ) மோசேயின் பிரமாணங்களும் இராஜ்ஜியத்தின் பிரமாணங்களும் - (5:19-20)

(ஆ) இராஜ்ஜியத்தின் பிரமாணங்களுடைய சிறப்பு அம்சம்

(i) கொலை செய்யாதிருப்பாயாக - (5:20-22)

(ii) ஒப்புரவாதலும் ஜெபமும் - (5:23-24)

(iii) நியாயாதிபதியினிடத்தில் வழக்கு - (5:25-26)

(iv) விபசாரம் செய்யாதிருப்பாயாக - (5:27-30)

(v) மனைவியைத் தள்ளிவிடுவதும் மறுபடியும் திருமணம் செய்வதும் - (5:31-32)

(vi) ஆணையிடுதல் - (5:33-37)

(vii) கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் - (5:38-42)

(viii) அன்பு கூருதல் - (5:43-48)

(ix) தர்மம் செய்தல் - (6:1-4)

(x) ஜெபம் - அந்தரங்கத்திலிருக்கிற பிதாவிடம் - (6:5-6)

(xi) பிதாவின் சர்வ வியாபகம் - (6:7-8)

(xii) மாதிரி ஜெபம் - (6:9-13)

(xiii) ஜெபம் - பதில் பெறுவதற்கு நிபந்தனை - (6:14-15)

(xiv) உபவாசம் - (6:16-18)

(6) விசுவாசிகளுக்கு எச்சரிப்புக்கள்

(அ) பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் - (6:19-21)

(ஆ) இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது - (6:22-24)

(இ) கவலைப்படுவதினால் பயனில்லை - (6:25-34)

(ஈ) உன் கண்ணிலிருக்கிற உத்திரம் - (7:1-5)

(உ) பரிசுத்தமானதைக் கவனமாகக் கையாளவேண்டும் - (7:6)

(ஊ) பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பார் - (7:7-11)

(எ) தங்கச்சட்டம் - மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் - (7:12)

மத்தேயு - முன்னுரை

(ஏ) இடுக்கமான வாசல் வழியும் விசாலமான வாசல் வழியும் - (7:12-14)

(ஐ) கள்ளத்தீர்க்கதரிசிகள் - (7:15-20)

(ஒ) தேவனுடைய சித்தத்தைச் செய்யாமல் கர்த்தாவே, கர்த்தாவே என்று கூறுவது - (7:21-23)

(ஓ) கன்மலையின்மேல் அஸ்திபாரமும் மணலின்மேல் அஸ்திபாரமும் - (7:24-29)

8. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - (8:1-4)

9. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குணமானான் - (8:5-13)

10. பேதுருவின் மாமி சொஸ்தமானாள் - (8:14-15)

11. பிசாசுகளைத் துரத்தினார் - பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்கினார் - (8:16-17)

12. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - (8:18-22)

13. இயேசு பெருங்காற்றை அமைதிப் படுத்துகிறார் - (8:23-27)

14. இயேசு பிசாசு பிடித்திருந்த இரண்டு பேரைச் சொஸ்தமாக்குகிறார் - (8:28-34)

15. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனைக் குணப்படுத்துகிறார் - (9:1-8)

16. மத்தேயு அல்லது லேவியின் அழைப்பு - (9:9)

17. பரிசேயருக்குப் பதிலுரைகள் - (9:10-13)

18. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்குப் பதிலுரை - (9:14-15)

19. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - (9:16-17)

20. பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - மரித்த சிறுபெண்ணை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - (9:18-26)

21. இரண்டு குருடரைக் குணமாக்குகிறார் - (9:27-31)

22. ஊமையனைக் குணப்படுத்துகிறார் - பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக முதலாவது தூஷணம் - (9:32-34)

23. கலிலேயாவிற்கு மூன்றாவது முறையாக பிரயாணம் - (9:35-38)

24. பன்னிரெண்டு சீஷர்களின் அபிஷேகம்

(1) சீஷர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார் - (10:1)

(2) அப்போஸ்தலர்களின் பெயர்கள் - (10:2-4)

(3) முதலாவது ஊழிய ஸ்தலம் - (10:5-6)

(4) செய்தியும் வல்லமையும் - (10:7-8)

(5) வேலையாள் தன் ஆகாரத்திற்குப் பாத்திரனாயிருக்கிறான் - (10:9-10)

(6) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்கிறவர்கள் - (10:11-13)

(7) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் - (10:14-15)

(8) சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பு

(அ) ஜெபாலயத் தலைவர்களின் பகை - (10:16-17)

(ஆ) அதிபதிகளின் பகை - (10:18-20)

(இ) உறவினர்களின் பகை - (10:21)

(ஈ) உலகத்தின் பகை - (10:22-23)

மத்தேயு - முன்னுரை

(9) கிறிஸ்துவோடு சமம் - (10:24-25)

(10) மாய்மாலத்திற்கு எதிரான எச்சரிப்பு - (10:26-27)

(11) மனுஷ பயத்திற்கு எதிரான எச்சரிப்பு - (10:28-33)

(12) சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பு பற்றி மறுபடியும் முன்னறிவிக்கப்படுதல் - (10:34-36)

(13) சீஷர்களின் பரிசோதனை - (10:37-39)

(14) சிறிய சேவைகளுக்கும் வெகுமதி அளிக்கப்படும் - (10:40-42)

25. கலிலேயாவிற்கு நான்காவது பிரயாணம் - (11:1)

26. யோவான் ஸ்நானன் இயேசுவிடம் கேட்ட கேள்வி - (11:2-3)

27. இயேசு வார்த்தைகளால் பதில் கூறாமல் கிரியைகளால் பதில் கூறுகிறார் - (11:4-6)

28. யோவான் ஸ்நானனைப் பற்றி இயேசு கூறிய சாட்சி - (11:7-15)

29. இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கூறுகிறார் - (11:16-19)

30. விசுவாசியாத பட்டணங்கள்மீது வரும் நியாயத்தீர்ப்பை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (11:20-24)

31. சத்தியத்தின் எளிமைக்காக இயேசு களிகூருகிறார் - (11:25-27)

32. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அழைப்பு - (11:28-30)

33. இயேசு ஓய்வுநாட்களுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (12:1-8)

34. ஓய்வுநாளில் இயேசு சூம்பின கையையுடைய மனுஷனைச் சொஸ்தமாக்குகிறார் - (12:9-13)

35. இயேசுவைக் கொலைசெய்யும்படி நடைபெற்ற முதலாவது ஆலோசனை - (12:14)

36. திரளான ஜனங்களைச் சொஸ்தமாக்குகிறார் - (12:15-21)

37. குருடும் ஊமையுமான ஒருவனைச் சொஸ்தமாக்குகிறார் - (12:22-23)

38. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான இரண்டாவது தூஷணம், பிரிந்த ராஜ்யம் - (12:24-30)

39. மனுஷருக்கு மன்னிக்கப்படாத பாவம் - (12:31-32)

40. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் - (12:33-37)

41. யோனாவின் அடையாளம் - (12:38-40)

42. இயேசு யூதர்களைக் கடிந்து கூறுகிறார் - (12:41-42)

43. இஸ்ரவேலைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (12:43-45)

44. இயேசுவின் உறவினர்கள் - (12:46-50)

45. பிரசங்கம் - பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள்

(1) இடம் - கலிலேயாக்கடல் - (13:1-2)

(2) விதைக்கிறவனைப் பற்றிய உவமை - (13:3-9)

(3) இயேசு உவமைகளாகப் பேசியதற்கு காரணம் - (13:10-17)

(4) விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (13:18-23)

(5) கோதுமை, களைகள் ஆகியவற்றின் உவமை - (13:24-30)

(6) கடுகு விதையின் உவமை - (13:31-32)

மத்தேயு - முன்னுரை

(7) புளித்தமாவின் உவமை - (13:33)

(8) இயேசு உவமைகளாகப் பேசியதற்குக் காரணம் - (13:34-35)

(9) கோதுமை, களைகள் ஆகியவற்றின் உவமை பற்றிய விளக்கம் - (13:36-43)

(10) புதைத்திருக்கிற பொக்கிஷத்தின் உவமை - (13:44)

(11) விலையுயர்ந்த ஒரு முத்தின் உவமை - (13:45-46)

(12) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் வலையின் உவமை - (13:47-48)

(13) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் வலையின் உவமையின் விளக்கம் - (13:49-50)

(14) வீட்டெஜமானாகிய மனுஷனின் உவமை - (13:51-52)

46. நாசரேத்தில் இயேசு - இந்த ஊரிலுள்ள ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் - (13:53-58)

47. ஏரோதுவின் குற்ற மனச்சாட்சி - யோவான் ஸ்நானனின் சிரச்சேதம் - (14:1-12)

48. இயேசு மறுபடியும் கலிலேயாவின் வழியாகப் பிரயாணம் செய்கிறார் - வியாதியஸ்தராயிருந்தவர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (14:13-14)

49. ஐயாயிரம்பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (14:15-21)

50. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - பேதுருவால் தண்ணீரின்மீது நடக்க முடியவில்லை - (14:22-33)

51. இயேசு கெனேசரேத்து நாட்டில் பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்குகிறார் - (14:34-36)

52. இயேசு வேதபாரகரையும் பரிசேயரையும் கடிந்து கொள்கிறார் - (15:1-9)

53. மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (15:10-20)

54. சீரோபேனிக்கேயா ஸ்திரீயின் குமாரத்தியை இயேசு குணப்படுத்துகிறார் - (15:21-28)

55. கலிலேயாவில் இயேசு வியாதியஸ்தர்கள் அனைவரையும் சொஸ்தப்படுத்துகிறார் - (15:29-31)

56. நான்காயிரம் பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (15:32-39)

57. இயேசு பரிசேயரைக் கடிந்து கொள்கிறார் - (16:1-5)

58. பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைப் பற்றிய விளக்கம் - (16:6-12)

59. பேதுருவின் அறிக்கை - (16:13-16)

60. புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து இயேசுவின் அறிவிப்பு - (16:17-18)

61. பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களைப் பேதுரு பெறுகிறான் - (16:19-20)

62. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முற்குறித்துக் கூறுகிறார் - (16:21)

63. இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள் - (16:22-23)

64. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - ஆத்துமாவின் மதிப்பு - (16:24-25)

65. இரண்டாம் வருகையை முற்குறித்துக் கூறுகிறார் - (16:26-27)

66. மறுரூபமாதலை முற்குறித்துக் கூறுகிறார் - (16:28)

67. மறுரூபமாதல் - வரப்போகும் இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (17:1-9)

மத்தேயு - முன்னுரை

68. யோவான் ஸ்நானனும், எலியாவும் - (17:10-13)

69. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்லமையுள்ள கிறிஸ்துவும் - (17:14-18)

70. ஜெபமும் உபவாசமும் - (17:19-21)

71. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (17:22-23)

72. வரிப்பணம் - மீனின் வாயில் வெள்ளிப்பணம் - (17:24-27)

73. சீஷத்துவத்தைப் பற்றிய உபதேசம்

(1) மாம்சமான மனுஷனின் பிரதான கேள்வி - (18:1)

(2) இயேசுவின் பதிலுரை - (18:1-4)

(3) விசுவாசிகளுக்கு உலகத்திலிருந்து இடறல்கள் - (18:5-7)

(4) இடறல் உண்டாக்கும் சரீர உறுப்புக்கள் - (18:8-9)

(5) எல்லோருக்கும் எச்சரிப்பு - (18:10)

(6) காணாமல்போன ஆடு - (18:11-14)

(7) விசுவாசிகளின் ஒழுக்கக் கட்டுப்பாடு - (18:15-17)

(8) விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் வல்லமை - (18:18)

(9) ஒன்றுகூடி ஜெபிப்பதின் வல்லமை - (18:19)

(10) ஸ்தலசபைகளின் எளிமையும் கிறிஸ்தவ ஆராதனையும் - (18:20)

(11) மன்னிப்பின் பிரமாணம் - (18:21-22)

(12) மன்னிப்பு - இரக்கமில்லாத ஊழியக்காரனைப் பற்றிய உவமை - (18:23-35)

74. இயேசு திரளான ஜனங்களைச் சுத்தமாக்குகிறார் - (19:1-2)

75. மனைவியைத் தள்ளிவிடுவது, மறுவிவகாரம் பண்ணுவது ஆகியவை பற்றிய பிரமாணம் - (19:3-9)

76. மனைவியைத் தள்ளிவிடுவதினால் ஏற்படும் விளைவுகள் - (19:10-12)

77. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (19:13-15)

78. மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - (19:16-22)

79. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (19:23-26)

80. நித்திய இராஜ்ஜியத்தில் அப்போஸ்தலர்களுக்கு உரிய இடம் - (19:27-28)

81. முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்களுக்கு வெகுமதிகள் - (19:29-30)

82. தாழ்மை - திராட்சைத்தோட்டத்து வேலையாட்களைப் பற்றிய உவமை - (20:1-16)

83. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (20:17-19)

84. யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச சுபாவம் - (20:20-23)

85. மற்ற பத்துப் பேரின் மாம்ச சுபாவம் - (20:24-28)

86. இயேசு இரண்டு குருடரை சொஸ்தமாக்குகிறார் - (20:29-34)

87. வெற்றிப்பவனி - (21:1-11)

88. தேவாலயத்தின் சுத்திகரிப்பு - (21:12-16)

89. கனிகொடாத அத்திமரத்தை இயேசு சபிக்கிறார் - (21:17-20)

90. சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும் - (21:21-22)

மத்தேயு - முன்னுரை

91. இயேசுவின் அதிகாரத்தைக் குறித்துக் கேட்கப்பட்ட கேள்வி - *(21:23-27)*

92. இரண்டு குமாரர்களைப் பற்றிய உவமை - *(21:28-32)*

93. வீட்டெஜமானைப் பற்றிய உவமை - *(21:33-46)*

94. கலியாண விருந்தைப் பற்றிய உவமை - *(22:1-14)*

95. வரிக்காசைப் பற்றிய உவமை - *(22:15-22)*

96. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - *(22:23-33)*

97. பிரதான கற்பனையைப் பற்றிய கேள்வி - *(22:34-40)*

98. இயேசு பரிசேயரிடம் கேள்வி கேட்கிறார் - *(22:41-46)*

99. பரிசேயரின் குணங்கள் - *(23:1-7)*

100. பரிசேய உபதேசத்திற்கு எதிரான எச்சரிப்புக்கள் - *(23:8-12)*

101. பரிசேயர்மீது எட்டு "ஐயோ"க்கள் -

(1) தேவனுக்கு விரோதமாகக் கிரியை செய்து பரலோகத்தைப் பூட்டிப் போடுகிறார்கள் - *(23:13)*

(2) ஒடுக்குகிறார்கள் - மாய்மாலக் காரர்கள் - *(23:14)*

(3) ஆத்துமாக்களை அழித்துப் போடுகிறார்கள் - *(23:15)*

(4) பொய்யான ஆணையிடுகிறார்கள் - *(23:16-22)*

(5) வெளிவேஷம் போடுகிறார்கள் - *(23:23-24)*

(6) தவறான சுத்திகரிப்புக்கள் - *(23:25-26)*

(7) சுயநீதி - *(23:27-28)*

(8) பெருமை - *(23:29-33)*

102. கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப் படுவார்கள் என்று இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - *(23:34-36)*

103. இயேசு எருசலேமிற்காக அழுகிறார் - *(23:37-39)*

104. இயேசு ஒலிவமலையில் கூறிய தீர்க்கதரிசனம்

(1) எருசலேமின் அழிவை முற்குறித்துக் கூறுகிறார் - *(24:1-2)*

(2) மூன்று முக்கியமான கேள்விகள் - *(24:3)*

(3) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளங்கள்

(அ) எட்டு அடையாளங்கள் - யூதர்களின் வருத்தங்கள் - *(24:4-8)*

(ஆ) இஸ்ரவேலின் வருத்தங்களின்போது எட்டு அடையாளங்கள் - *(24:9-14)*

(இ) பாழாக்குகிற அருவருப்பு - *(24:15)*

(ஈ) அந்திக்கிறிஸ்துவிடம் இஸ்ரவேல் தோற்றுப்போதல் - *(24:16-20)*

(உ) மகா உபத்திரவம் - *(24:21-22)*

(ஊ) மகா உபத்திரவத்தின்போது நடைபெறும் ஆறு அடையாளங்கள் - *(24:23-26)*

(4) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும் விதமும் காலமும் - *(24:27-31)*

(5) அத்திமரத்தைப் பற்றிய உவமை - *(24:32-33)*

(6) இந்தத் தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரு சந்ததியில் சம்பவிக்கும் - *(24:34-35)*

(7) அவருடைய வருகையின் குறிப்பிட்ட காலம் அறிவிக்கப் படவில்லை - *(24:36)*

(8) கிறிஸ்துவின் வருகை துன்மார்க்கருக்கு அழிவைக் கொண்டு வரும் - (24:37-39)

(9) அர்மகெதோன் - சிலர் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் - சிலர் கைவிடப்படுவார்கள் - (24:40-42)

(10) வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (24:43-44)

(11) உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரனைப் பற்றிய உவமை - (24:45-51)

(12) பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமை - (25:1-13)

(13) தாலந்துகளைப் பற்றிய உவமை - (25:14-30)

(14) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேசங்கள்மீது நியாயத் தீர்ப்பு - (25:31-46)

105. இயேசு தமது மரணத்தை மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (26:1-2)

106. இயேசுவைக் கொல்வதற்குச் சதியாலோசனை - (26:3-5)

107. இயேசுவின்மீது அபிஷேகம் - (26:6-13)

108. இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (26:14-16)

109. பஸ்காவிற்கு ஆயத்தம் - (26:17-19)

110. கடைசி பஸ்கா

(1) தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (26:20-25)

(2) கர்த்தருடைய பந்தி - (26:26-30)

(3) தம்மைப் பேதுரு மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (26:31-35)

V. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (26:36-46)

2. இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - காட்டிக்கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் - (26:47-56)

3. இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - (26:57-68)

4. பேதுரு மறுதலிக்கிறான் - (26:69-75)

5. இயேசுவைப் பிலாத்துவிடம் அனுப்புகிறார்கள் - (27:1-2)

6. யூதாஸ் நான்றுகொண்டு செத்துப் போகிறான் - (27:3-10)

7. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (27:11-14)

8. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (27:15-26)

9. இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (27:27-32)

10. இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள் - (27:33-44)

11. இயேசுவின் மரணம் - (27:45-56)

12. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (27:57-61)

13. கல்லுக்கு முத்திரைபோட்டு இயேசுவின் கல்லறையைப் பத்திரப்படுத்துகிறார்கள் - (27:62-66)

VI. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம் -

1. உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (28:1-7)

2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (28:8-10)

3. உயிர்த்தெழுதலுக்கு காவல்சேவகரின் சாட்சி - (28:11)

4. இயேசுவின் உயிர்த்தெழுதல்மீதுள்ள விசுவாசத்தை அழிப்பதற்கு சதியாலோசனை - (28:12-15)

5. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சீஷர்களின் சாட்சி - (28:16-17)

6. பிரதான கட்டளை - (28:18-20)

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

I. இயேசு கிறிஸ்துவின் ஊழிய காலத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள் - (மாற்கு 1:1; லூக் 1:1; யோவான் 1:1)

1. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு

மத் 1:1 ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு:

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து என்னும் பெயர் 569 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து தேவகுமாரன். முப்பதாவது வயதில் இயேசு கிறிஸ்து அபிஷேகிக்கப்பட்டார். (மத் 3:16; யோவான் 3:34; ஏசா 11:1; ஏசா 42:15-5; ஏசா 61:1; அப் 10:38) இயேசுவைத் தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார். (அப்2:36) கிறிஸ்து - அபிஷேகிக்கப்பட்டவர் என்னும் பெயர் எபிரெய மொழியில் மேசியா (Mashiyach) என்று அழைக்கப் படுகிறது. (தானி 9:24-26; யோவான் 1:41; யோவான் 4:25)

கிறிஸ்து (Christ) - Χριστός - Christos - 5547

பெயர்ச்சொல் - கிறிஸ்து

"அபிஷேகிக்கப்பட்டவர்" (Anointed)

மேசியா (Anointed) - מָשִׁיחַ - maw-shee'-akh - 4899

ஆண்பால் பெயர்ச்சொல் - மேசியா, அபிஷேகம் பெற்றவர், அபிஷேகம் பண்ணப்பட்டவர்

"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரன்" - இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியிலிருந்து வந்தவர். (மத் 1:2-16; ரோமர் 9:5) வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக இயேசு கிறிஸ்து ஆபிரகாம், தாவீது ஆகியோரின் குமாரன். (ஆதி 12:1-3; கலா 3:6-22; ஏசா 11:1; மத் 22:41-46; 2தீமோ 2:8)

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து ஒன்பது இடங்களில் தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார். (மத் 1:1; மத் 9:27; மத்12:23; மத் 15:22; மத் 20:30-31; மத் 21:9,15; மத் 22:42). இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் தாவீது மிகவும் முக்கியமானவர். அவர் ஒரு இராஜா, ஒரு தீர்க்கதரிசி.

2. இயேசுவின் முன்னோர்கள் - (லூக் 3:23-38; 1நாளா 1:1-4:23)

(1) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள்

மத் 1:2 ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்;

மத் 1:3 யூதா பாரேசையும் சாராவையும் தாமாரினிடத்தில் பெற்றான்; பாரேஸ் எஸ்ரோமைப் பெற்றான்; எஸ்ரோம் ஆராமைப் பெற்றான்;

மத் 1:4 ஆராம் அம்மினதாபைப் பெற்றான்; அம்மினதாப் நகசோனைப் பெற்றான்; நகசோன் சல்மோனைப் பெற்றான்;

மத் 1:5 சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான்;

1. ஆபிரகாமின் வரலாறு (ஆதி 11:26-25:11)
2. ஈசாக்கின் வரலாறு (ஆதி 21: 1-35:29)
3. யாக்கோபின் வரலாறு (ஆதி 25:24-50:14)
4. யூதாவும், அவன் சகோதரரும் (ஆதி 29:16-30:24; 1நாளா 2:1-4)

"பாரேசு" - (1நாளா 2:4-12; ரூத் 4:13-22) பாரேசிலிருந்து ஈசாய் வரையிலும் உள்ள வம்ச வரலாற்றை நாம் மத் 1:3-5 ஆகிய வசனங்களில் வாசித்தறியலாம்.

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

"தாமார்" - இயேசுவின் வம்சவரலாற்றில் நான்கு ஸ்திரீகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவர்களில் ராகாபும், ரூத்தும் புறஜாதி ஸ்திரீகள். தாமாரும், பத்சேபாளும் யூத ஸ்திரீகள். இவ்வாறாக இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் யூத ஸ்திரீகளும், புறஜாதி ஸ்திரீகளும் வருகிறார்கள். ராகாப் ஒரு வேசி. (யாக் 2:25) தாமாரும், பத்சேபாளும் விபச்சாரம் பண்ணியவர்கள். (ஆதி 38; 2சாமு 11:1-5) ரூத் சுத்தமான ஸ்திரீ. (ரூத் 3:11)

ஒரு ஸ்திரீ பெற்றாள் என்று கூறும்போது அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள் என்று பொருள்படும். ஒரு புருஷன் பெற்றான் என்று சொல்லும்போது அவன் தந்தையானான் என்று பொருள்படும். புதிய ஏற்பாட்டில் இந்தக் கிரேக்க சொல் இவ்விரண்டு பொருள்படுமாறும் பஸ்ன்படுத்த பட்டிருக்கிறது. (மத் 1:16, மத் 1:20, கலா 4:24, லூக்கா 1:13)

பெற்றான் (begat) -γεννάω - gennaoo - 1080

வினைச்சொல் - பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு, (ஜென்ம), ஜெநிப்பி

"ராகாப்" - (யோசு 2:1-24; யோசு 6:25; யாக் 2:25)

(2) இராஜாக்களாக இருந்த 14 வம்சங்கள்

மத் 1:6 ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான். தாவீது ராஜா உரியாவின் மனைவியாயிருந்தவளிடத்தில் சாலொமோனைப் பெற்றான்;

மத் 1:7 சாலொமோன் ரெகொபெயாமைப் பெற்றான்; ரெகொபெயாம்அபியாவைப் பெற்றான்; அபியா ஆசாவைப் பெற்றான்;

மத் 1:8 ஆசா யோசபாத்தைப் பெற்றான்; யோசபாத் யோராமைப் பெற்றான்; யோராம் உசியாவைப் பெற்றான்;

மத் 1:9 உசியா யோதாமைப் பெற்றான்; யோதாம் ஆகாசைப் பெற்றான்; ஆகாஸ் எசேக்கியாவைப் பெற்றான்;

மத் 1:10 எசேக்கியா மனாசேயைப் பெற்றான்; மனாசே ஆமோனைப் பெற்றான்; ஆமோன் யோசியாவைப் பெற்றான்.

மத் 1:11 பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போகுங்காலத்தில், யோசியா எகொனியாவையும் அவனுடைய சகோதரரையும் பெற்றான்.

"தாவீது ராஜா" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் தாவீதின் வம்சவழி சாலொமோன் மூலமாக ராஜரீக வம்சமாக இருக்கிறது. தாவீதிற்கு நாத்தான் என்று இன்னும் ஒரு குமாரன் உண்டு. (2சாமு 5:14) லூக்கா 3:23-38-இல் தாவீதின் வழி நாத்தான் மூலமாக விளக்கப்படுகிறது. யோசேப்பு ஏலியின் குமாரன்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கு இவ்விரண்டு வம்சவழியும் தேவையானவை. கர்த்தர் எகொனியாவைச் சபித்தார். தாவீதின் அரியாசனத்தில் அவனுடைய சந்ததியில் யாரும் அமர்ந்து எருசலேமை ஆளுகை செய்ய மாட்டார்கள். (எரே 22:24-30)

கர்த்தர் தாவீதிடம் அவனுடைய குமாரனாகிய சாலொமோன் மூலமாக அவனுடைய ஆட்சி என்றென்றும் நிலைத்திருக்கும் என்று வாக்குப் பண்ணினார். (2சாமு 7)

இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற வேண்டுமாயின், தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து நாத்தான், மரியாள் ஆகியோரின் வம்சவழியில் வரவேண்டும். யோசேப்பின் மூலமாக இயேசு கிறிஸ்து தாவீதின் ராஜரீக வம்சத்தில் வருகிறார். (லூக்கா 1:32-33; ஏசா 9:6-7; வெளி 5:5; வெளி 22:16)

இயேசு கிறிஸ்து யோசேப்பிற்கு நியமிக்கப் பட்டிருந்த கன்னி மரியாளின் வயிற்றில் உற்பத்தியானவர். ஆகையினால், யோசேப்பின் குமாரன் என்று இயேசு அழைக்கப்படுகிறார். இயேசு கிறிஸ்து யோசேப்பின் குடும்பத்தில் முதலாவது பிறந்தவர். இதன் மூலமாக இயேசு தாவீதின் சிம்மாசனத்திற்கு ராஜரீக வாரிசு ஆகிறார்.

1 அதிகாரம்

"உரியாவின் மனைவி" - பத்சேபாள் (2சாமு 11; 1இராஜா 1:11-31)

"ரெகொபெயாம்" - (1இராஜா11:41-12:24)

"அபியா" - (1இராஜா 14:31-15:8).

"யோசபாத்" (1இராஜா 15:23-24; 1இராஜா 22:2-50)

"யோராம்" - (2இராஜா 8:16-24)

"உசியா" - 2இராஜா 15:1-7. யோராமிற்கும், உசியாவிற்கும் இடையில் மூன்று இராஜாக்கள் ஆட்சி புரிந்தார்கள். இந்த வம்ச வரலாற்று அட்டவணையில் அவர்களுடைய பெயர்கள் குறிப்பிடவில்லை.

1. அகசியா (2இராஜா 8:25-26)

2. யோவாகாஸ் (2இராஜா 12:1)

3. அமத்சியா (2இராஜா 14:1-2)

இயேசு கிறிஸ்துவின் இராஜரீக வம்சவரலாற்றிற்கு இவர்களின் பெயர்கள் தேவையில்லை.

"யோதாம்" - (2இராஜா15:32-38)

"ஆகாஸ்" - (2இராஜா 16:1-20)

"எசேக்கியா" - (2இராஜா18:1-20:20)

"மனாசே" - (2இராஜா 21:1-18)

"யோசியா" - (2இராஜா 22:1-23:30)

"எகொனியா" - (2இராஜா 24:6-16). எகொனியாவிற்கும், யோசியாவிற்கும் இடையே இரண்டு இராஜாக்கள் ஆட்சி புரிந்தார்கள். யோவாகாஸ், யோயாக்கீம் (2இராஜா 23:31-24:6) இவர்களுடைய பெயர்களும் இந்த வம்ச அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை. இவனுக்கு அடுத்தபடியாக சிதேக்கியா ஆட்சி புரிந்தான். இவனோடு யூத சாம்ராஜ்ஜியம் முடிவு பெறுகிறது. (2இராஜா 24:6-25:30)

(3) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள்

மத் 1:12 பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன பின்பு, எகொனியா சலாத்தியேலைப் பெற்றான்; சலாத்தியேல் சொரொபாபேலைப் பெற்றான்;

மத் 1:13 சொரொபாபேல் அபியூதைப் பெற்றான்; அபியூத் எலியாக்கீமைப் பெற்றான்; எலியாக்கீம் ஆசோரைப் பெற்றான்;

மத் 1:14 ஆசோர் சாதோக்கைப் பெற்றான்; சாதோக்கு ஆகீமைப் பெற்றான்; ஆகீம் எலியூதைப் பெற்றான்;

மத் 1:15 எலியூத் எலெயாசாரைப் பெற்றான்; எலெயாசார் மாத்தானைப் பெற்றான்; மாத்தான் யாக்கோபைப் பெற்றான்;

மத் 1:16 யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அவளிடத்தில் கிறிஸ்து என்னப்படுகிற இயேசு பிறந்தார்.

"சலாத்தியேல்" - (1நாளா 3:17-19; எஸ்றா 3:2; எஸ்றா 5:2)

"அபியூத்" - இவனுடைய பெயரிலிருந்து யோசேப்பின் பெயர் வரையிலும் ஒன்பது பேர் வருகிறார்கள். இவர்களுடைய பெயர்கள் வேதாகமத்தில்வேறெங்கும் காணப்படவில்லை.

"யோசேப்பு" - வேதாகமத்தில் யோசேப்பு என்னும் பெயரில் 11 பேர் இருக்கிறார்கள். இவர்கள் 5 பேர் பழைய ஏற்பாட்டில் வருகிறார்கள். (ஆதி 30:24; எண் 13:7; 1நாளா 25:2; எஸ்றா 10:42; நெகே 12:14) இன்னும் 6 பேர் புதிய ஏற்பாட்டில் வருகிறார்கள். (மத் 1:16; மத் 27:57; லூக்கா 3:24,26,30; அப் 1:23)

"மரியாள்" - யோசேப்பின் மனைவி. இயேசுவின் தாய். இயேசு தவிர இன்னும் நான்கு குமாரர்களுக்குத் தாய். யாக்கோபு, யோசே, சீமோன், யூதா ஆகியோரும் மரியாளின் குமாரர். மரியாளுக்கு மூன்று குமாரத்திகள் பிறந்திருக்கலாம். (லூக்கா 8:19)

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

(4) ஆபிரகாமிலிருந்து இயேசு கிறிஸ்து வரையிலும் - யூத மார்க்கத்து முன்னோர்கள் - (லூக் 3:23-38)

மத் 1:17 இவ்விதமாய் உண்டான தலைமுறைகளெல்லாம் ஆபிரகாம் முதல் தாவீது வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; தாவீதுமுதல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலம் வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலமுதல் கிறிஸ்து வரைக்கும் பதினாலு தலைமுறைகளுமாம்.

ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரையிலும் 42 தலைமுறைகளின் பெயர்கள் மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவை தவிர இந்த சுவிசேஷத்தில் கூறப்பட்டிராத மேலும் சில தலைமுறைகளும் இயேசுவின் வம்சவரலாற்றில் உள்ளன. (மத் 1:8,11)

3. இயேசு கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு - (ஆதி 3:15; ஏசா 7:14; 9:6-7; லூக் 1:26-56; 2:1-39; யோவான் 1:14; ரோமர் 8:3; கலா 4:4; 1தீமோ 3:16; எபி 1:5-6; 2:6-9, 14-18)

மத் 1:18 இயேசுகிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

மத் 1:19 அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப் படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாய் இருந்தான்.

மத் 1:20 அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப் படாதே; அவளிடத்தில் உற்பத்தியாய் இருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது.

மத் 1:21 அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

மத் 1:22 தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும் படி இதெல்லாம் நடந்தது.

மத் 1:23 அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.

மத் 1:24 யோசேப்பு நித்திரைதெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு;

மத் 1:25 அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்.

"மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில்" - எபிரெயருடைய வழக்கத்தின் பிரகாரம் "நியமிக்கப்படுதல்" என்பது திருமணத்தின் சட்டப்பூர்வமான ஓர் அங்கம். நியமிக்கப்பட்டதை முறிக்க வேண்டுமானால், அதற்காகத் தள்ளுதற்சீட்டைத் தரவேண்டும். நியமிக்கப் படும்போது அதற்குரியவர்கள் ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்திடுவார்கள். இந்த ஒப்பந்தத்தில் நிச்சயக்கப்படும் நாள், திருமண நாள் எல்லாமே குறிப்பிடப் பட்டிருக்கும். (ஆதி 29:18; உபா 20)

"பரிசுத்தஆவியினாலே" - (லூக்கா 1:35; யோவான் 1:14; பிலி 2; எபி 2)

1 அதிகாரம்

நீதிமான் (just) - **δικαιος** - **dikaios** - 1342

பெயர்ச்சொல் - நீதிமானான், நீதியுள்ளவன், நியாயமானவன், உண்மையுள்ளவன் (மத் 13:49)

"அவளைஅவமானப்படுத்த மனதில்லாமல்" - யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருப்பவர் தவறு செய்யும்போது அவருக்கு மிகுந்த அவமானம் உண்டாகும். அவருக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். (உபா 22:25-28)

"இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்" - எல்லோருக்கும் தெரியும் விதத்தில் தனக்கு நியமிக்கப் பட்டவளைத் தள்ளிவிடுவதற்குப் பதிலாக யோசேப்பு அவளை இரகசியமாகத் தள்ளி விடலாம் என்று யோசனை பண்ணினான். (உபா 24:1-4)

"கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டான்" - காப்ரியேல் என்னும் தூதன் (லூக்கா 1:26) கர்த்தருடைய தூதன் யோசேப்பிற்கு நான்கு முறை தரிசனமானான். (மத் 1:20,24; மத் 2:13,19)

"சொப்பனம்" - சுவிசேஷங்களில் 6 இடங்களில் சொப்பனத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆறுமே மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் வருகிறது. (மத் 1:20; மத் 2:12,13,19,22; மத் 27:19)

தீர்க்கதரிசன எண் - 1

"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1:21) - இந்தத் தீர்க்கதரிசனம் மத் 1:25-இல் நிறைவேறிற்று.

"அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" - வேதாகமத்தில் 7 பேருக்கு அவர்கள் பிறப்பதற்கு முன்பாகவே பெயரிடப்பட்டது.

1. இஸ்மவேல் (ஆதி 16:11)
2. ஈசாக்கு (ஆதி 17:19)
3. சாலொமோன் (1நாளா 22:9)
4. யோசியா (பிறப்பதற்கு 325 வருஷங்களுக்கு முன்பாக) (1இராஜா 13:2; 2இராஜா 22:1)
5. கோரேஸ் (பிறப்பதற்கு 175 வருஷங்களுக்கு முன்பாக) (ஏசா 44:28-45:1)
6. யோவான் ஸ்நானன் (லூக் 1:13,60-63)
7. இயேசு (மத் 1:21)

"இயேசு" - புதிய ஏற்பாட்டில் இயேசு என்னும் பெயர் 983 தடவைகள் வந்திருக்கிறது. தேவகுமாரனுக்கு இந்த உலகத்தில் வழங்கப்படும் பெயர். இயேசு என்னும் பெயர் கிரேக்க மொழிச்சொல். இதற்கு இணையான எபிரெய பெயர் "யோசுவா". யோசுவா அல்லது இயேசு என்பதற்கு இரட்சகர் அல்லது இரட்சிப்பாக இருக்கும் தேவன் என்று பொருள்.

யோசுவா - **יְהוֹשׁוּעַ** - **yeh-ho-shoo'-ah-3091**

ஆ.பெ.சொ.-யோசுவா

யெகோவா இரட்சிக்கிறார்

இரட்சி - **σώζω** - **soozoo** - 4982

வினைச்சொல் - இரட்சி, சொஸ்தமாகு, ஆரோக்கியம் அடை, சுகமடை, தப்பிப்போ, இரட்சிக்கப்படு. பாவத்திலிருந்து இரட்சிக்கப் படுதல் (மத் 1:21; எபி 7:25) ஆபத்திலிருந்து இரட்சிக்கப்படுதல் (மத் 14:30; மத் 27:42) ஆவிக்குரிய போராட்டத்திலிருந்து இரட்சிக்கப் படுதல் (யோவான் 12:27; 1தீமோ 4:16), வியாதியிலிருந்து சொஸ்தமாதல் (யாக் 5:15) நரகத்திலிருந்து தப்புவிக்கப்படுதல் (யோவான் 3:16-18; மாற்கு 16:16) அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் படுதல் (யூதா 1:5)

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

பாவம் - ἁμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம், தோல்வி

(அ) பாவச் செயல் (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில் முங்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா. 1:21,29), (ரோமர் 3:1)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்" - (மத் 1:23; ஏசா 7:14)

"அவளை அறியாதிருந்தான்" - எபிரெய வழக்குச்சொல். குடும்ப உறவில் ஈடுபடாமல் இருத்தல், உடல் உறவு கொள்ளாமல் இருத்தல் என்று பொருள்படும். (ஆதி 4:1,17,25; ஆதி 19:5)

"அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும்" - மரியாள் இயேசுவைத் தவிர மேலும் நான்கு குமாரர்களைப் பெற்றாள். (லூக்கா 8:19) அவர்களுடைய பெயர் யாக்கோபு, யோசே, சீமோன், யூதா (மத் 13:55).

மத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

4. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரீகள் - (1நாளா 12:32; தானி 1:17-20; 2:10-11, 21-29,47; 4:18-27)

மத் 2:1 ஏரோதுராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து,

மத் 2:2 யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்.

மத் 2:3 ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடுகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்.

மத் 2:4 அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.

மத் 2:5 அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்:

மத் 2:6 யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.

மத் 2:7 அப்பொழுது ஏரோது, சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக் குறித்து அவர்களிடத்தில் திட்டமாய் விசாரித்து:

மத் 2:8 நீங்கள் போய், பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக்கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான்.

மத் 2:9 ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது.

மத் 2:10 அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்.

மத் 2:11 அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மாரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

மத் 2:12 பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

"யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே" - எருசலேமிற்குத் தெற்கே 5 மைல் தொலைவில் பெத்லகேம் இருக்கிறது. இது மீகா 5:2-இல் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்.

"சாஸ்திரிகள்" - இந்த சாஸ்திரிகள் எந்த தேசத்திலிருந்து வந்தார்கள் என்பதும் எத்தனை சாஸ்திரிகள் வந்தார்கள் என்பதும் தெரிய வில்லை. கிழக்கு தேசத்தில் இவர்கள் தீர்க்கதரிசனம் கூறுகிறவர்களாகவோ, சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுகிறவர்களாகவோ, ஆவி வழிபாடு செய்கிறவர்களாகவோ இருக்கலாம். (தானி 2:2,48; தானி 4:9)

2 அதிகாரம்

சாஸ்திரிகள் (wise men) - **μάγος** - **magos** - 3097

ஆண்பால் பெயர்ச்சொல் - சாஸ்திரி, மாயவித்தைக்காரன்

"யூதருக்கு ராஜா" - இயேசு கிறிஸ்து பிறந்த காலத்தில் யூதருக்கு ஒரு இராஜா பிறப்பார் என்றும் அவர் உலகம் முழுவதையும் ஆளுகை செய்வார் என்றும் ஒரு பொதுவான எதிர்பார்ப்பு ஜனங்கள் மத்தியில் இருந்தது. தானியேலும், இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்து தீர்க்கதரிசனமாகக் கூறுகிறான். (தானி 9:24-26) இயேசு கிறிஸ்து ஆளப்பிறந்தவர். அவருடைய இரண்டாம் வருகைக்குப் பின்பு அவர் இந்த உலகத்தை நித்திய காலமாக ஆட்சி புரிவார். (லூக்கா 1:32-33; யோவான் 18:37; ஏசா 9:6-7; வெளி 11:15; வெளி 22:1-5)

"கிழக்கே அவருடைய நட்சத்திரம்" - (எண் 24:15-19)

"ஏரோதுராஜா" - ஏரோதுராஜா அந்திபேத்தரின் **(Antipater)** குமாரன். இவன் இதுமேய தேசத்தான் **(Idumean)**. இவனுடைய தாயின் பெயர் சிப்ரோஸ் **(Cypros)** இவள் அரேபிய தேசத்து ஸ்திரீ.

கி.மு. 47-ஆம் ஆண்டு ஜூலியஸ் சீசர் யூதேயாவின் ஆளுநராக அந்திபேத்தரை நியமித்தான். ஏரோது 25 வயது ஆனபோது கலிலேயாவிற்கு ஆளுநர் ஆனான். அதன் பின்பு, கி.மு. 37-இல் ஏரோது யூதேயாவிற்கு இராஜாவானான். யூதருடைய தேவாலயத்தை ஏரோது கட்டினான். (யோவான் 2:20) கி.மு. 4-இல் ஏரோது மரணமடைந்தான். அவனுடைய இராஜ்ஜியம் பிரிக்கப்பட்டது.

ஏரோதுவின் குமாரனாகிய ஏரோது அந்திபாஸ் கலிலேயாவையும், பெரேயாவையும் கி.மு. 4 முதல் கி.பி. 39 வரையிலும் ஆட்சி புரிந்தான். (லூக்கா 3:1-2) யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணியவன் இவனே. (மத் 14:1)

ஏரோது இராஜாவின் மற்றொரு குமாரனாகிய அர்கேலியஸ் யூதேயாவையும், சமாரியாவையும் ஆட்சி புரிந்தான். (மத் 2:22) இவனுடைய பெயர் பிலிப்பு என்று மத் 14:3-இல் கூறப்பட்டிருக்கிறது.

அர்கேலியசிற்கு பின்பு கி.பி. 37-ஆம் ஆண்டு முதலாம் ஏரோது அகிரிப்பா ஆட்சிக்கு வந்தான். ஏரோது இராஜா ஆட்சி புரிந்த எல்லா மாநிலங்களையும் கி.பி. 40-இல் தன் ஆளுகையின்கீழ் கொண்டு வந்தான். அப் 12-ஆம் அதிகாரத்தில் இவனைப் பற்றி குறிப்பு உள்ளது. இவனுக்குப் பின்பு இரண்டாம் ஏரோது அகிரிப்பா ஆட்சிக்கு வந்தான். (அப் 25:13; அப் 26:32)

"பிரதான ஆசாரியர்" - 24 பிரிவுகளுக்குத் தலைவர்கள் (1நாளா 24). சங்கத்தின் தலைவர்கள். (அப் 5:21) இந்தச் சங்கம் ஆலோசனைச் சங்கம் **(Sanhedrin)** என்று அழைக்கப்பட்டது.

"வேதபாரகர்" - வேதாகமத்தில் 120 இடங்களில் வேதபாரகரைப் பற்றி குறிப்புள்ளது. பழங்காலத்தில் இவர்கள் ராஜாக்களுக்கு காரியதரிசிகளாகப் பணிபுரிந்தார்கள். (2சாமு 8:17; 2சாமு 20:25; 2இராஜா 12:10; 2இராஜா 22:3-12) பின்பு, வேத வாக்கியங்களைப் பிரதி எடுப்பதற்கும், வியாக்கியானம் பண்ணுவதற்கும் இவர்களைப் பயன் படுத்தினார்கள். எல்லா ஆவணங்களையும் இவர்கள் பாதுகாக்க வேண்டும். இஸ்ரவேலின் சட்டங்கள் இவர்களுக்கு நன்றாக தெரியும். இவர்கள் வழக்கறிஞர்களாகவும், பள்ளி ஆசிரியர்களாகவும் பணிபுரிந்தார்கள். (எஸ்றா 7:6-21; நெகே 8:1-13; மத் 23:2-34; மாற்கு 9:11; மாற்கு 14:43; மாற்கு 15:1; லூக்கா 5:17; லூக்கா 22:66; லூக்கா 23:10; அப் 4:5; அப் 5:34; 1தீமோ 1:7).

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார்" - (மத் 2:6; மீகா 5:2)

2 அதிகாரம்

"என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலிருந்து நித்திய காலமாக அவர் இஸ்ரவேலையும், மற்ற தேசங்களையும் ஆளுகை செய்வார். (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11:15;வெளி 20:1-15; வெளி 22:4-5)

"இஸ்ரவேல்" - இஸ்ரவேல் ஜனத்தையும், யூத ஜனத்தையும் குறிக்கும்.

"நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும் படி எனக்கு அறிவியுங்கள்" என்று கூறி சாஸ்திரிகளை ஏரோது அனுப்பினான். ஆனால் அவன் சொன்ன பிரகாரம் அவர்கள் போகவில்லை. அவர்கள் தீர்க்கதரிசனத்தைப் பின்பற்றாமல் நட்சத்திரத்தைப் பின்பற்றினார்கள். நட்சத்திரம் அவர்களை இயேசு பிறந்த இடமான நாசரேத்திற்கு அழைத்துச் சென்றது. (மத் 2:11)

"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மாரியாளையும் கண்டார்கள்" - இயேசு கிறிஸ்து மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். இது பெத்லகேமில் இருந்தது. ஆனால் சாஸ்திரிகளோ நாசரேத்திலுள்ள ஒரு வீட்டிற்கு வந்தார்கள். இயேசு கிறிஸ்து பிறந்து இரண்டு வருஷங்களுக்குப் பின்பு சாஸ்திரிகள் இயேசுவைப் பணிந்து கொள்ள வருகிறார்கள். இயேசு கிறிஸ்து பிறந்து 41 நாட்களுக்குப் பின்பு கர்த்தரிடத்தில் அவரை பிரதிஷ்டை பண்ணினார்கள். (லூக்கா 2:7,21-39) அதன்பின்பு இயேசு நாசரேத்தில் வளர்ந்து வந்தார்.

"சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டார்கள்" - தேவனை மட்டுமே நாம் ஆராதிக்க வேண்டும். இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்துவின் தெய்வ தத்துவம் வலியுறுத்தப்படுகிறது. (வெளி 19:10; வெளி 22:8-9; லூக்கா 2:13)

"சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப் பட்டார்கள்" - புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் 6 சொப்பனங்களில் இது இரண்டாவது சொப்பனமாகும். (மத் 1:20)

5. இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவம்

(1) எகிப்திற்குப் பிரயாணம்

மத் 2:13 அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றான்.

மத் 2:14 அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய்,

மத் 2:15 ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

தீர்க்கதரிசன எண் - 2

"ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்......" (மத் 2:13) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இயேசு கிறிஸ்து ஸ்திரீயின் வித்து. அவர் சாத்தானின் தலையை நசுக்குவார். மனுஷருக்கு இரட்சிப்பைக் கொடுப்பார் என்னும் காரியங்கள் சாத்தானுக்கு நன்றாகத் தெரியும். (ஆதி 3:15; 1யோவான் 3:8) ஆகையினால், இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரித்து தன்னை மிதிப்பதற்கு முன்பாகச் சாத்தான் இயேசுவைப் பலமுறை கொலைபண்ணுவதற்கு முயற்சி பண்ணினான். (மத் 26:3, கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)

2 அதிகாரம்

"இரவிலே" - நாசரேத்திலே சாஸ்திரிகள் வந்து இயேசுவைப் பணிந்து கொண்டவுடன் உடனடியாக நடைபெற்ற காரியம். அவர்கள் பெத்லகேமில் இருந்திருப்பார்கள் என்றால், எகிப்திற்குப் போவதற்கு முன்பாக அவர்களால் நாசரேத்திலுள்ள ஒரு வீட்டில் குடியிருந்திருக்க முடியாது. (லூக்கா 2:39) சாஸ்திரிகள் ஏரோதின் கட்டளைப் பிரகாரம் பெத்லகேமிற்குச் சென்றார்கள் என்று வேதத்தில் குறிப்பிடப்பட வில்லை. நட்சத்திரம் அவர்களை மாட்டுத் தொழுவத்திற்கு அழைத்துச் சென்றது என்றும் வேதம் கூறவில்லை.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" - (மத் 2:15; ஓசி 11:1).

(2) பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள் - இயேசுவைக் கொல்வதற்கு நடந்த முதலாவது சதி - (மத் 26:3)

மத் 2:16 அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்.

மத் 2:17 புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாத படியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று,

மத் 2:18 எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

"வஞ்சி" - ஏரோதின் கட்டளைப் பிரகாரம் சாஸ்திரிகள் பெத்லகேமிற்குச் செல்லவில்லை. அவர்கள் ஏரோதை வஞ்சித்தார்கள். ஏரோதின் தீய நோக்கம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. வஞ்சித்தல் என்னும் இதே சொல் மத் 27:29-31; லூக்கா 18:32 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வஞ்சி (mocked) - ἐμπαίζω - **empaizoo** - 1702

வினைச்சொல் - வஞ்சி, பரியாசம் பண்ணு

"தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே.....இரண்டு வயதுக்குட்பட்டஎல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான்" - சாஸ்திரிகள் இயேசுவை அவர் சிறுபிள்ளையாக "பைதியோன்" ஆக இருந்தபோது கண்டார்கள். சிறுபிள்ளை என்பதன் கிரேக்க சொல் "பைதியோன்" (paidion) (மத்2:9) பிறந்த குழந்தையைக் குறிக்கும் கிரேக்கச்சொல் "பிரபோஸ்" (brephos) மேய்ப்பர்கள் இயேசு பிறந்தபோது அந்த குழந்தையை "பிரபோஸ்" ஆக கண்டார்கள். (லூக்கா 2:16)

சிறுபிள்ளை (young child) - παιδίον - **paidion** - 3813

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பாலகன், சிறுபிள்ளை

குழந்தை (babe) - βρέφος - **brephos** - 1025

பால் வேறுபாடற்றப் பெயர்ச்சொல் - பிள்ளை, குழந்தை

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்" - (மத் 2:18; எரே 31:15)

2 அதிகாரம்

ராமா எருசலேமிலிருந்து 5 மைல் தூரத்தில் இருந்தது. ஏரோது பெத்லகேமைச் சுற்றிலும் 10 மைல் தூரத்திலுள்ள 2 வயதிற்குட்பட்டஎல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான். எருசலேம் பட்டணமும் இந்தத் தூரத்திற்குள் வருகிறது.

(3) எகிப்திலிருந்து திரும்பி வருதல் - (லூக் 2:39; ஓசி 11:1)

மத் 2:19 ஏரோது இறந்தபின்பு, கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு:

மத் 2:20 நீ எழுந்து, பிள்ளையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; பிள்ளையின் பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்துபோனார்கள் என்றான்.

மத் 2:21 அவன் எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான்.

மத் 2:22 ஆகிலும், அர்கெலாயு தன் தகப்பனாகிய ஏரோதின் பட்டத்துக்கு வந்து, யூதேயாவில் அரசாளுகிறான் என்று கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான். அப்பொழுது, அவன் சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, கலிலேயா நாட்டின் புறங்களிலே விலகிப்போய்,

மத் 2:23 நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டான்" - யோசேப்பிற்கு சொப்பனத்தில் தூதன் மொத்தம் 4 முறை வந்தான். அவற்றுள் இது மூன்றாவது முறையாகும். (மத் 1:20; மத் 2:13,19)

"இஸ்ரவேல் தேசம்" - மத் 2:20-21 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் தேசம் என்று இரண்டு முறை அழைக்கப்பட்டிருக்கிறது. அப் 10:39-இல் யூதருடைய தேசம் என்று அழைக்கப்படுகிறது. யூதரும், இஸ்ரவேலரும் ஒரே ஜனமே. மற்ற கோத்திரத்தாரும் அறியப்பட்டிருந்தார்கள். (மத் 19:28; அப் 26:7; யாக் 1:1)

"அவன் எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக் வந்தான்" - யோசேப்பு தேவனுடைய எல்லா கட்டளைகளுக்கும் அப்படியே கீழ்ப்படிந்தான். அவன் தேவபக்தியுள்ளவன். நீதிமான். கர்த்தருக்குப் பூரணமாகக் கீழ்ப்படிகிறவன்.

"கலிலேயா" - சமாரியாவின் வடக்குப்பகுதி

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" - (மத் 2:23) - உரைக்கப்பட்டது - இந்தத் தீர்க்கதரிசனத்தை எந்த தீர்க்கதரிசியும் எழுதி வைக்கவில்லை.

3 அதிகாரம்

II. யோவான் ஸ்நானனின் ஊழியம் - (11:2; மாற்கு 1; லூக் 3; யோவான் 1:6,15,19; 3:23)

1. மூன்று அம்ச செய்தி

மத் 3:1 அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து:

மத் 3:2 மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்.

மத் 3:3 கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே.

"யோவான்" - சகரியா, எலிசபெத் ஆகியோரின் குமாரன் (லூக்கா 1:5-20,39-80)

"ஸ்நானன்" - ஞானஸ்நானம் கொடுக்கிறவன். (யோவான் 1:31)

"யூதேயாவின் வனாந்தரத்தில் பிரசங்கித்தான்" - தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி பிரசங்கம் பண்ணுதல். (1கொரி 14:3) யோவான் ஸ்நானன் பெரிய தீர்க்கதரிசி. (மத் 11:9-11) அவன் பல காரியங்களை முன்னறிவித்தான். (மத் 3:2-3,11-12; யோவான் 1:29-33; யோவான் 3:30).

யோவான் ஸ்நானனின் உபதேசங்கள்

1. மனந்திரும்புதல் (மத் 3:2-8; மாற்கு 1:4)
2. பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது (மத் 3:2)
3. தீர்க்கதரிசனம் (மத் 3:3-12; யோவான் 1:15-34)
4. தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3:11; யோவான் 1:31)
5. மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிதருதல் (மத் 3:8; லூக்கா 3:8)
6. தேவபக்தி (மத் 3:3-10; மத் 14:4)
7. வரப்போகிற கோபாக்கினை (மத் 3:7; லூக்கா 3)
8. பெருமைக்கு எதிராக (மத் 3:9; லூக்கா 3:7)
9. அற்புதங்கள் (மத் 3:9; லூக்கா 3:8)
10. பரலோகமும், நரகமும் (மத் 3:10-12; லூக்கா 3)
11. பரிசுத்த ஆவியில் அபிஷேகம் (மத் 3:11; யோவான் 1:33)
12. கிறிஸ்துவின் முதலாம் வருகை (மத் 3:11; யோவான் 1:29)
13. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (மத் 3:12; லூக்கா 3:17)
14. பாவத்தின் நியாயத்தீர்ப்பு (மத் 3:10; லூக்கா 3)
15. இரட்சிப்பு (லூக்கா3:6; யோவான்1:29)
16. பிறர்மீது அன்பாக இருப்பது (லூக்கா 3:11)
17. தொழிலில் நேர்மை (லூக்கா 3:13)
18. நீதி (லூக்கா 3:14)
19. இயேசு - தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29)
20. இயேசு - பரிசுத்தஆவியில் அபிஷேகம் பண்ணுகிறவர் (மத் 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16; யோவான் 1:33)
21. இயேசு - தேவனுடைய குமாரன் (யோவான் 1:34)
22. இயேசு - பாவங்களைச் சுமக்கிறவர் (யோவான் 1:29)
23. மனுஷனுடைய தகுதியின்மை (யோவான் 1:27)

மத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

24. இயேசு - மணவாளன் (யோவான் 3:29)

25. இயேசுவின் மாட்சிமை (யோவான் 3:30)

26. பரலோகத்திலிருந்து இயேசு (யோவான் 3:31-36)

27. இயேசுவை மறுதலித்தல் (யோவான் 3:32)

28. இயேசு - சத்தியம் (யோவான் 3:30-36)

29. இயேசு - அபிஷேகிக்கப்பட்டவர் (யோவான் 3:34)

30. இயேசு - தேவனுடைய சுதந்தரவாளி (யோவான் 3:35)

"பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" - (மத் 4:17; மத் 13:11)

"ஏசாயா" (Esaias) - புதிய ஏற்பாட்டில் 21 இடங்களில் இந்தப் பெயர் வருகிறது. (மத் 3:3; மத் 4:14; மத் 8:17; மத் 12:17; மத் 13:14; மத் 15:7; லூக்கா 3:4; லூக்கா 4:17; யோவான் 1:23; யோவான் 12:38-41; அப் 8:28-30; அப் 28:25; ரோமர் 9:27-29; ரோமர் 10:16,20; ரோமர் 15:12)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம்" - (மத் 3:3; ஏசா 40:3; மல் 3:1)

2. யோவான் ஸ்நானனின் எளிய வாழ்வு - (மாற்கு 1:6; மத் 11:8)

மத் 3:4 இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க் கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது.

"ஒட்டகமயிர்" - 2இராஜா 1:8. தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மிகவும் முரடான வஸ்திரங்களை அணிந்தார்கள். இப்பேர்ப்பட்ட வஸ்திரங்கள் தீர்க்கதரிசிகளுக்கு அடையாளம். (சக 13:4; மத் 11:8)

"தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்" - ஏழைகள் மட்டுமே அரையில் வார்க்கச்சைகளைக் கட்டுவார்கள். ஐசுவரியவான்கள் அரையில் மெல்லிய வஸ்திரங்களையும், பொன்னாலும், வெள்ளியாலும் அலங்கரிக்கப்பட்ட கச்சைகளையும் கட்டுவார்கள்.

"வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும்" - சுத்தமான உணவு. (லேவி 11:22) வெட்டுக்கிளிகளை உலர வைத்து, உப்பிட்டு, தேனோடு சேர்த்து உண்பது ஏழைகளின் உணவுப் பழக்கம்.

3. ஊழியத்தின் வெற்றி - (மாற்கு 1:5; லூக் 3:7-15; யோவான் 1:19-28)

மத் 3:5 அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய்,

மத் 3:6 தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

"ஞானஸ்நானம் பெற்றார்கள்" - முழுக்குதல் (லூக்கா 16:24; வெளி 19:13; யோவான் 13:26) பாடுகளில் மூழ்கியிருத்தல் (மத் 20:22-23; லூக்கா 12:50) அடக்கம் பண்ணுதல் (ரோமர் 6:3-7, கொலோ 2:12)

ஞானஸ்நானம் பெறு (baptized) - βαπτίζω - baptizoo - 907

வினைச்சொல் - முழுக்கு, கழுவு, ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு, கைகழுவு

கழுவு - βάπτω - baptoo - 911

வினைச்சொல் - கழுவு

மத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு விதமான ஞானஸ்நானங்கள்

1. யோவான் ஸ்நானனின் தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3; மாற்கு 1; லூக்கா 3; லூக்கா 7:29-30; யாவான்1:31-33; யோவான் 3:23-26; யோவான் 10:40; அப் 1:5; அப் 11:16; அப் 19:3)
2. தண்ணீரில் கிறிஸ்துவின் ஞானஸ்நானம் (யோவான் 3:22; யோவான் 4:1-2)
3. பாடுகளின் ஞானஸ்நானம் (லூக்கா 12:50)
4. மேகத்திலும், கடலிலும் ஞானஸ்நானம் (1கொரி 10:2)
5. தண்ணீரில் விசுவாசிகளின் ஞானஸ்நானம் (மத் 28:19; மாற்கு 16:16; அப் 2:38-41; அப் 8:12-16,36-38; அப் 9:18; அப் 10:47-48; அப் 16:15,33; அப் 18:8; அப் 19:5; அப் 22:16; 1கொரி 1:13-17; 1பேதுரு 3:21)
6. கிறிஸ்துவிற்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் ஞானஸ்நானம் (ரோமர் 6:3-7; 1கொரி 12:13; கலா 3:27; கொலோ 2:12)
7. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் (மத் 3:11,14; மத் 20:22-23; மாற்கு 1:8; மாற்கு 10:38-39;லூக்கா 3:16; யோவான்1:33; யோவான் 7:37-39; அப் 1:5; அப் 11:16; அப் 19:2-3)

விசுவாசிகள் எடுக்க வேண்டிய ஞானஸ்நானம்

1. கிறிஸ்துவிலும், அவருடைய சரீரத்திற்குள்ளும்ஒருவர்மனந்திரும்பி, புதிதாய்ப் பிறக்கும்போது எடுக்க வேண்டிய ஞானஸ்நானம். இது ஒரே ஞானஸ்நானம் என்று அழைக்கப் படுகிறது. (எபே 4:5) இந்த ஞானஸ்நானம் மட்டுமே ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும். அந்த ஆத்துமாவைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரும்.
2. ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பு எடுக்கும் தண்ணீர் ஞானஸ்நானம். (மத் 3:11)
3. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம். தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்வதற்காக விசுவாசி இந்த ஞானஸ்நானம் பெறவேண்டும். தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவோ (அப் 10:44-48) அல்லது தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்த பின்போ (அப் 1:4-8; அப் 2:1-11;அப் 8:12-21; அப் 19:1-7) ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வார்.

கிறிஸ்துவிற்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவர் பரிசுத்த ஆவியானவர். (1கொரி 12:13)

பரிசுத்த ஆவியில் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவர் இயேசு கிறிஸ்து. (மத் 3:11; யோவான் 1:31-33)

ஊழியக்காரர்கள் நமக்கு தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். (மத் 28:19).

4. பதிமூன்று அம்சச் செய்தி

மத் 3:7 பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ளஉங்களுக்குவகைகாட்டினவன் யார்?

மத் 3:8 மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.

மத் 3:9 ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

3 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு விதமான ஞானஸ்நானங்கள்

1. யோவான் ஸ்நானனின் தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3; மாற்கு 1; லூக்கா 3; லூக்கா 7:29-30; யாவான்1:31-33; யோவான் 3:23-26; யோவான் 10:40; அப் 1:5; அப் 11:16; அப் 19:3)
2. தண்ணீரில் கிறிஸ்துவின் ஞானஸ்நானம் (யோவான் 3:22; யோவான் 4:1-2)
3. பாடுகளின் ஞானஸ்நானம் (லூக்கா 12:50)
4. மேகத்திலும், கடலிலும் ஞானஸ்நானம் (1கொரி 10:2)
5. தண்ணீரில் விசுவாசிகளின் ஞானஸ்நானம் (மத் 28:19; மாற்கு 16:16; அப் 2:38-41; அப் 8:12-16,36-38; அப் 9:18; அப் 10:47-48; அப் 16:15,33; அப் 18:8; அப் 19:5; அப் 22:16; 1கொரி 1:13-17; 1பேதுரு 3:21)
6. கிறிஸ்துவிற்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் ஞானஸ்நானம் (ரோமர் 6:3-7; 1கொரி 12:13; கலா 3:27; கொலோ 2:12)
7. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் (மத் 3:11,14; மத் 20:22-23; மாற்கு 1:8; மாற்கு 10:38-39;லூக்கா 3:16; யோவான்1:33; யோவான் 7:37-39; அப் 1:5; அப் 11:16; அப் 19:2-3)

விசுவாசிகள் எடுக்க வேண்டிய ஞானஸ்நானம்

1. கிறிஸ்துவிலும், அவருடைய சரீரத்திற்குள்ளும்ஒருவர்மனந்திரும்பி, புதிதாய்ப் பிறக்கும்போது எடுக்க வேண்டிய ஞானஸ்நானம். இது ஒரே ஞானஸ்நானம் என்று அழைக்கப் படுகிறது. (எபே 4:5) இந்த ஞானஸ்நானம் மட்டுமே ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும். அந்த ஆத்துமாவைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரும்.

மத் 3:10 இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.

மத் 3:11 மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

மத் 3:12 தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.

"பரிசேயர்" - யூதமார்க்கத்தில் ஒரு பிரிவினர் மிகவும் வைராக்கியமானவர்கள். வேத வசனங்களைத் தங்களுடைய பாரம்பரியத்தின் பிரகாரமாகவும், கட்டளைகளின் பிரகாரமாகவும் வியாக்கியானம் செய்வார்கள். இவர்கள் கிறிஸ்துவின் விரோதிகள். (மத் 15:2; மத் 23:1-33; மாற்கு 7:8-13; லூக்கா 11:42; கலா 1:14; பிலி 3:4-6)

"சதுசேயர்கள்" - யூதமார்க்கத்தில் ஒரு பிரிவினர். மார்க்கத்தீவிரவாதிகள். தேவ தூதர்கள், பிசாசுகள், உயிர்த்தெழுதல் ஆகியவை இல்லை என்கிறவர்கள். (மாற்கு 12:18; அப் 4:1; அப் 5:15-17; அப் 23:8)

"விரியன்பாம்புக்குட்டிகளே" - சாதாரண பாம்புகள் அல்ல. 4 அங்குல நீளமும், மிகவும் மெல்லியதாகவும் இருக்கும். கல் இடுக்குகளிலும், மணல்களிலும் புதைந்திருக்கும். கொடிய விஷம் உள்ளவை. (ஆதி 49:17; யோபு 20:16; ஏசா 59:5; அப் 28:3)

3 அதிகாரம்

"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" - மனந்திரும்புதல் என்பது வாயினால் அறிக்கை பண்ணுவது மட்டுமல்ல. வெளித்தோற்றத்தில் விசுவாசியைப்போல் இருந்தால் போதாது. நாம் உண்மையிலே மனந்திரும்பியிருக்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கு அதற்கேற்ற கனிகளை நமது ஆவிக்குரிய ஜீவியத்தின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும். (லூக்கா 3:8-14; லூக்கா 19:8; 2கொரி 5:17; 2கொரி. 7:9-11)

தீர்க்கதரிசன எண் - 3

"இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் " (மத் 3:10-12)

இந்தத் தீர்க்கதரிசனத்தில் மூன்று அம்சங்கள் உள்ளன. அவையாவன:

1. நியாயத்தீர்ப்பு (மத் 3:10; மத் 7:15-23)
2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் (மத் 3:11; அப் 1:4-8; அப் 2:1-39; அப் 11:14-18)
3. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (மத் 3:12; மத் 13:30, 39-43, 49-50; மத் 25:31-46)

"மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்" - இது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலமாக இரட்சிப்பு வராது. இயேசு கிறிஸ்துவால் மட்டுமே ஒரு பாவியை மன்னித்து இரட்சிக்க முடியும்.

தண்ணீர் ஞானஸ்நானம் பாவமன்னிப்பு தராது என்பதற்குக் காரணங்கள்

1. "என்று" **"unto"** - இதன் கிரேக்கச்சொல் **(eis).** மாற்கு 1:4; லூக்கா 3:3; அப் 2:38 ஆகிய வசனங்களில் "இதனால்', இதன் காரணத்தினால்" **(because of, by reason of, on account of)** என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. "இதே நோக்கத்திற்காக" **(for this same purpose)** (ரோமர் 9:17; கொலோ 4:8), இந்த காரணத்திற்காக **(for this purpose)** (அப் 26:16; 1யோவான் 3:8), "இதற்காக" **(for that intent)** (அப் 9:21) என்று பொருள் படுகிறது. அதாவது "மனந் திரும்புதலுக்கென்று" என்னும் வாக்கியம் "மனந்திரும்புதலுக்காக" என்று பொருள்படும்.

   நோக்கி **(unto)** - **εἰς** - **eis** - 1519

   முன்னிடைச்சொல் - நோக்கி, மூலம்

2. மனந்திரும்புதற்கு நாம் பாவஅறிக்கை செய்ய வேண்டும். இந்த அறிக்கையை நாம் தண்ணீரில் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாகவே செய்ய வேண்டும். (மத் 3:8,11; மாற்கு 1:5; லூக்கா 3:8-14)
3. விசுவாசிகள் மட்டுமே மனந்திரும்பிய பின்பு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, தண்ணீரில் ஞானஸ்நானம் பெற வேண்டும். (மத் 28:19; மாற்கு 16:16; அப் 2:28,41; அப் 8:12-13,37; அப் 16:14-15,31-33; அப் 18:8; அப் 19:1-7)

   சில வேளைகளில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்ற பின்பு தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்கலாம். (அப் 9:17-18; அப் 10:44-48)

4. இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. ஆனாலும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

3 அதிகாரம்

(1) நீதியை நிறைவேற்ற வேண்டும் (மத் 3:15)

(2) இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்த வேண்டும் (யோவான் 1:31)

5. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது மரணம், அடக்கம்பண்ணப்படுதல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் அடையாளம் மட்டுமே. (1பேதுரு 3:21)

6. இரட்சிப்பிற்கு தண்ணீர் ஞானஸ்நானம் தேவையில்லை. (2கொரி 1:13-21)

7. இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தத்தில் நாம் வைக்கும் விசுவாசமே நமக்கு பாவமன்னிப்பு தரும். (மத் 26:28; ரோமர் 3:24-25; ரோமர் 4:1-25; ரோமர் 5:1-11; ரோமர் 8:2; ரோமர் 10:4-10; 1கொரி 15:1-5; எபே 1:7; எபே 2:8-9; கலா 3:19-29; யோவான் 3:16; அப் 10:43; அப் 13:38-39; 1கொரி 1:18-21; 1யோவான் 1:9; 1யோவான் 5:1)

8. பழைய ஏற்பாட்டில் பரிசுத்தவான்களும், யோவானும், லூக்கா 1:15,41,46,67; லூக்கா 2:25-38 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டோரும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றவர்கள். அவர்கள் தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டார்கள்.

9. தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலே கிறிஸ்து பாவிகளை இரட்சித்தார். (மத் 9:1-7; லூக்கா 7:36-50; லூக்கா 18:9-14; லூக்கா 19:1-9; லூக்கா 23:43; யோவான் 4:49-53; யோவான்7:31; யோவான் 8:30-31; யோவான் 11:45; யோவான் 12:11,42; அப் 3:1-11,16; அப் 4:10-12)

10. மாம்சத்தின் அசுத்தங்களைத் தண்ணீர் ஞானஸ்நானம் கழுவாது. (1பேதுரு 3:21)

"அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும்உங்களுக்குஞானஸ்நானம் கொடுப்பார்" - (யோவான் 7:37-39; அப் 1:4-8)

"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது" - (லூக்கா 3:17)

"அவியாத அக்கினி" - (மத் 8:12; மத் 13:42-50; மத் 18:8-9; மத் 24:51; மத் 25:41,46; மாற்கு 9:43-49; வெளி 14:9-11; வெளி 20: 11-15; வெளி 21:8; ஏசா 66:22-24)

III. இயேசுவின் ஊழிய ஆயத்தம் - (மாற்கு 1:9; லூக் 3:21; யோவான் 1:31)

1. தண்ணீர் ஞானஸ்நானம்

மத் 3:13 அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்.

மத் 3:14 யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்.

மத் 3:15 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்.

"நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்" - இயேசு கிறிஸ்துவினால் யோவான் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெறவேண்டு மென்று விரும்பினான். யோவான் 1:31-34) யோவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான். (லூக்கா 1:15) கிறிஸ்து மகிமை அடையும் வரையிலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப்பட வில்லை. (யோவான் 7:37-39; அப் 1:4-8; அப் 2:33-34; அப் 11:16)

"எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" - கிறிஸ்துவையும், யோவானையும் தேவன் அனுப்பினார். அவர்கள் எதற்காக அனுப்பப்பட்டார்களோ அந்த நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்.

மத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (20:22; மாற்கு 1:10; லூக் 3:22; 4:18; யோவான் 1:32; 3:34; அப் 10:38; ஏசா 11:2; 42:1; 61:1; வெளி 1:4; 3:1; 5:6)

மத் 3:16 இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப் பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.

மத் 3:17 அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

"இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே" (மத் 3:16) "அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே" (மாற்கு 1:10) "பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது..." (அப் 8:38-39) ஆகிய வாக்கியங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதை வலியுறுத்துகின்றன.

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" - இயேசு கிறிஸ்துவைத் தேவன் தமது சொந்த குமாரனாக அங்கீகாரம் பண்ணுகிறார். (மத் 17:5; யோவான் 12:28; எபி 1:1-4)

4 அதிகாரம்

3. சோதனை - (மாற்கு 1:12; லூக் 4:1; எபி 2:9-18; 4:14; 5:9)

மத் 4:1 அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.

மத் 4:2 அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.

மத்4:3 அப்பொழுது சோதனைக் காரன்அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

மத் 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

மத் 4:5 அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய், தேவாலயத்து உப்பரிகையின் மேல் அவரை நிறுத்தி:

மத் 4:6 நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்.

மத் 4:7 அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்.

மத் 4:8 மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும்அவருக்குக் காண்பித்து:

மத் 4:9 நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.

மத் 4:10 அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

மத் 4:11 அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான். உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

“இயேசுபிசாசினால் சோதிக்கப்படுவதற்கு” - தேவன் ஆதாமைச் சோதித்ததுபோல பிசாசு இயேசு கிறிஸ்துவைச் சோதித்தான். (ஆதி 3:6;1யோவான் 2:15-17;1கொரி 15:45)

“இரவும் பகலும் நாற்பதுநாள்” - யோவான் 1:19-2:1 ஆகிய வசனங்கள் கூறப்பட்டிருக்கிறகாரியங்கள்நடைபெறுவதற்கு முன்பாக நாற்பது நாள் உபவாசம் வருகிறது.

நாற்பது நாட்கள் உபவாசம் பண்ணியவர்கள்

1. மோசே (உபா 9:9,18,25; உபா 10:10)

2. யோசுவா (யாத் 24:13-18; யாத் 32:15-17)

3. எலியா (1இராஜா 19:7-18)

4. இயேசு (மத் 4:1-11; லூக்கா 1:1-22)

“பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று” - ஒருசில நாட்கள் உபவாசம் பண்ணியபிறகு பசி வராது. முதலில் பசிக்கும். பின்பு பசிக்காது. நாற்பது நாட்கள் சென்ற பின்பு மறுபடியும் பசியுண்டாகும். அந்நாட்களில் சரீரத்திலுள்ள எல்லா விஷங்களும் வெளியேறும். நமது மூச்சுக்காற்று சிறுபிள்ளையின் சுவாசத்தைப் போன்று நறுமணத்துடன் இருக்கும். சாதாரண சரீர ஆரோக்கியத்தில் இருக்கிற யாரும் எவ்வித பிரச்சனைகளும் இல்லாமல் நாற்பது நாட்களுக்கு உபவாசம் இருக்க முடியும். பசியுண்டான பிறகு சாப்பிடாமல் இருப்பது பட்டினியாயிருப்பதாகும். நீண்டநாட்கள் உபவாசம் இருக்கிறவர்கள் தண்ணீரைப் பருகிக்கொள்ளலாம். உபவாசம் முடிந்தபின்பு உடனடியாக அதிகளவு உணவு உட்கொள்ளக் கூடாது. உணவு உட்கொள்வதைச் சிறிது சிறிதாகக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

4 அதிகாரம்

"எழுதியிருக்கிறதே" - இயேசு கிறிஸ்து அபிஷேகம் பண்ணப்பட்ட பிறகு கூறிய முதலாவது வாக்கியம். இயேசு கிறிஸ்து சோதிக்கப்படுவதில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் மூன்று சோதனைகள் வரும். முதலாவது மூன்று சோதனைகள் லூக்கா 4:1-13-இல் நாம் வாசிக்கலாம். அதன்பின்பு "சிலகாலம் பிசாசு அவரைவிட்டு விலகிப் போனான்". அடுத்த மூன்று சோதனைகளை மத் 4:1-11 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கலாம். இந்த சோதனைக்குப் பின்பு இயேசு கிறிஸ்து பிசாசானவனை "அப்பாலே போ சாத்தானே" என்று கூறி துரத்திவிட்டார். அதன்பின்பு பிசாசு இயேசுவைச் சோதிக்க வரவில்லை.

"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" - உபா 8:3-ஆவது வசனத்தின் மேற்கோள்.

"தேவாலயத்து உப்பரிகை" - தரையிலிருந்து 700 அடி உயரமுள்ள இடம்.

"தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்" - சங் 91:11-12 ஆகிய வசனங்களை முழுவதுமாக மேற்கோளாகக் கூறுவதற்குப் பதிலாக அரைகுறையாகவும், தவறாகவும் இங்கு பிசாசானவன் மேற்கோளாகக் கூறுகிறான்.

"உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" - உபா 6:16-ஆவது வசனத்தின் மேற்கோள்.

"உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும்" - சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி. (யோவான் 8:44; யோவான் 12:31; யோவான் 14:30; 2கொரி 4:4; எபே 2:1-3; 1யோவான் 5:19)

"நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால்" - என்னை ஆராதனை செய்து, எனக்குக் கீழ்ப்படிந்து, என்னை மகிமைப்படுத்தவேண்டும் என்று பொருள்படும்.

"உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" - உபா 6:13-ஆவது வசனத்தின் மேற்கோள்.

பிசாசு இயேசுவைச் சோதித்த விதங்கள்

1. உமது அற்புத வல்லமைகளைப் பயன்படுத்தி என்னுடைய கட்டளைகளின் பிரகாரம் உமது சாதாரண அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்.
2. நீர் தேவனுடைய குமாரன் என்பதைத் தேவனுடைய விசேஷித்த பாதுகாப்பை வெளிப்படுத்தி நிரூபித்து காண்பியும்.
3. இந்த உலகத்தில் எனக்குள்ள அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றை நீர் பயன்படுத்தி எனக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

IV. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும் - (4:12-26; மாற்கு 1:14; லூக் 4:14; யோவான் 1:35)

1. கலிலேயாவில் ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - (மாற்கு 1:14; லூக் 4:14)

மத் 4:12 யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்,

"யோவான் காவலில் வைக்கப்பட்டான்" - (மத் 11:1-14)

2. நாசரேத்தில் உள்ளவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - கப்பர்நகூமிற்குச் செல்கிறார் - (லூக் 4:28)

மத் 4:13 நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்.

4. அதிகாரம்

மத் 4:14 கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே,

மத் 4:15 இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று,

மத் 4:16 ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"கப்பர்நகூம்" - பழைய ஏற்பாட்டில் இந்த ஊரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. (மத் 11:23)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது" (மத் 4:14-16; ஏசா 9: 1-2)

"நப்தலி" - (ஆதி 49:21; யோசு 19:32)

வெளிச்சம் (light) - φῶς - phoos - 5457

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிரகாசம், வெளிச்சம் (underived and absolute light—the opposite of all darkness) குறிப்பாக தேவனையும், (1தீமோ 6:16; 1யோவான் 1:5) கிறிஸ்துவையும் (யோவான் 1:4-10) குறிக்கும் சொல்.

3. இராஜ்ஜியத்தைப் பற்றி பிரசங்கம் பண்ணுகிறார் - (மத் 4:23; 10:7; 24:14; மாற்கு 1:15)

மத் 4:17 அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

"மனந்திரும்புங்கள்" - வேதாகமத்தில் மனந்திரும்புங்கள் என்பது மிகவும் முக்கியமான சத்தியம். ஆதி 6:6 வசனத்திலிருந்து வெளி 16:11 வசனம் வரையிலும் மனந்திரும்புங்கள் என்னும் வாக்கியம் 110 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"மனந்திரும்புங்கள்" என்னும் வாக்கியத்தின் மூலபாஷைச் சொற்கள்

1. மனஸ்தாபப்படு (to sigh) - נָחַם - naw-kham' - 5162

   வினைச்சொல் - மனஸ்தாபமாயிரு, மனஸ்தாபப்படு, ஆறுதல்அடை, மனம்மாறு, தேற்றப்படு, பொறு, பரிதாபங்கொள், பரிதபி,துக்கம், ஆறு, மனமடி, பிரியப்படு, தேற்று, ஆறுதல்செய், ஆறுதல் சொல்லு, தேற்றரவாயிரு, தேற்றரவுபண்ணு, ஆற்று, ஆறுதலாகஇரு, தேற்றரவு, பரிதாபப்படு (breathe strongly, to be sorry) (ஆதி 6:6; யாத் 13:17; யோபு 42:6; யோனா 3:10)

2. திரும்பு (to turn back) - שׁוּב - shoob - 7725

   வினைச்சொல் - திரும்பு, திரும்பப்போ, திரும்பவா, பின்வாங்கு, திருப்பு வா, அளி, மனந்திரும்பு, சாய், மாற்று, ஆறு, மாறு, நீங்கு, வற்றிக்கொள், வற்றிப்போ, தணி, புரள், விலகு, தீர், திரி, மறுபடியும்போ, வடி, திரும்பிச்சேர், அழைத்துக்கொள், திரும்பயனுப்பிவிடு, வை, செல், திரும்பக்கிடை, சீர்ப்படு, திரும்ப சீர்ப்படு, திரும்ப முன் போலிரு, பின்செல், விலகிப்போ, வந்திரு, கொண்டுவா, தள்ளப்படு, சரிக்கட்டு, பின்னிட்டுப்போ, திரும்பிவிடு, தவறு, கிடை, திரும்பவிழு, பின்னிடை, யாகூப், திருப்பப்படு, மாற்றாட்டம் பண்ணு, இன்னமும், திரும்புகிறவர், வரவு, கெடு, நடு, அலையவிடு, பிடுங்கு, தேற்று, திருத்துகிறவன், திரும்பவும் தா, திரும்பப் போடும்படிசெய், அனுப்பிவிடு, திரும்ப அனுப்பு, திரும்பப்பண்ணு, திருப்பிக்கொள், திருப்பிக் கொண்டு வந்தவன், திரும்பவை, செலுத்து, திரும்பச் சேர்த்துக் கொள், பலனளி, நீக்கிவிடு, முடக்கிக்கொள்,

4 அதிகாரம்

விலக்கு, கொண்டு போ, பாவநிவர்த்தி செய், கொடுத்துவிடு, சேர், திரும்ப அழைத்துவா, எவ்விதத்திலும், முடக்கு, மறுமொழி சொல், திரும்பத் தன் வசமாக்கிக்கொள், திரும்பஅழை, மறுஉத்தரவுகொடு, திரும்பச்சொல்லு, மறுமொழியாகச் சொல்லு, மறு, திரும்ப எடு, காப்பாற்று, திரும்ப எழுப்பு, திரும்ப போடு, திரும்ப அழைத்துக்கொண்டுவா, தப்புவி, கிடைக்கும்படிசெய், திருப்பிக் கொண்டுவா,கொடு,மறி,திரும்பஒப்புவி, மறுபடியும் அழைத்துப்போ, மறுபடியும் வை, கொண்டுவந்திரு, சரிக்குச் சரிக்கட்டு, தெரிவி, எடுத்துக்கொள், திரும்பப்போகப் பண்ணு, வாங்கு, திரும்ப நிறுத்து, எடு, திரும்பப் பிடி, மறுமொழி, அனுப்பு, தடைபண்ணு, எழுப்பு, மறுஉத்தரவு, கொடுக்க ஏவு, ஒப்புக்கொடு, மறுஉத்தரவு சொல்லு, பிரதியுத்தரம்சொல், மழுக்கிப் போடு, திரும்பச் சீர்ப்படுத்து, மறுபடியும் அழைப்பி, உருட்டு, குளிரப்பண்ணு, தடு, திரும்பக் கட்டளையிடு, திரும்ப நடத்திக் கொண்டுபோ, உத்தரவு சொல், திரும்ப உள்ளேவாங்கிக் கொள், திரும்ப அழைத்துப்போ, ஆறுதல் செய், ஆகப்பண்ணு, திரும்பக்கொண்டு வா, திரும்பப்படு (1இராஜா 8:47; எசே 14:6)

3. இரக்கம் (regret) - נֹחַם - no'-kham - 5164

ஆண்பால் பெயர்ச்சொல் - இரக்கம், மனதுருக்கம் (ஓசி 13:14)

4. பரிதாபம் (compassion) - נִחוּם - nee-khoom', nee-khoom' - 5150

ஆ.பெ.சொ. - ஆறுதல், பரிதாபம் (ஓசி 11:8)

5. மனந்திரும்பு (to change the mind) - μετανοέω - metanoeoo - 3340

வினைச்சொல் - மனந்திரும்பு, மனஸ்தாபப்படு, பாவத்தைக் குறித்த நமது எண்ணத்தை மாற்றுதல் (to change the attitude toward sin) (லூக்கா 13:3)

6. மனம் மாறாமலிரு - μεταμέλομαι - metamelomai - 3338

வினைச்சொல் - மனஸ்தாபப்படு, மனம் மாறாமலிரு (to regret consequences of sin, not the cause) (மத் 27:3; 2கொரி 7:8)

7. மனம் மாறுதல் (change of mind) - μετάνοια - metanoia - 3341

பெண்பால் பெயர்ச்சொல் - மனந்திரும்புதல், மனஸ்தாபப்படுதல், மனம் மாறுதல் (real change of mind and attitude toward sin and its cause, not merely the consequences of it) (மத் 3:8,11; மத் 9:13; லூக்கா 24:47)

பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது

இந்தவாக்கியத்திற்குப்பரலோகத்திலிருந்து ஆளுகை செய்யப்படும் இராஜ்ஜியம் என்று பொருள். தேவனுடைய இராஜ்ஜியத்தை மறுபடியும் ஸ்தாபிப்பது தேவனுடைய நோக்கம். இயேசு கிறிஸ்து இந்த இராஜ்ஜியத்தை ஆளுகை செய்வார். தேவனுடைய இராஜ்ஜியம் என்னும் சத்தியம் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகிறது. இந்த சுவிசேஷம் யெகோவாவை இராஜாவாகச் சித்தரிக்கிறது. பரலோக இராஜ்ஜியம் என்பது காலங்களைக் குறிக்கும் ஒரு வாக்கியம். பூமியில் மேசியாவின் இராஜ்ஜியத்தை இந்த வாக்கியம் குறிக்கும். யோவானும், இயேசுவும் இந்த இராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். (மத் 3:2; மத் 4:17; மத் 10:7) ஆனால் ஜனங்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்து இந்த இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் வரையிலும் இக்காலம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. (மத் 11:12,20-24; மத் 27:22-25; லூக்கா 19:11-27; அப் 1:6-7; அப் 3:19-26)

4 அதிகாரம்

நாம் இப்போது கிருபையின் காலத்தில் இருக்கிறோம். (மத் 13:11-17, 30, 38-43,47-50) இராஜ்ஜியத்தைப் பற்றிய உவமைகள் இக்காலத்திற்குரியவைகள். இயேசு கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வரும்போது தமது இராஜ்ஜியத்தை நித்தியகாலமாக ஸ்தாபிப்பார். (மத் 25:31-46; வெளி 11:15; வெளி 19:11-20:10; சக 14; ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-27; லூக்கா 1:32-33)

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் பூமியில் 1000 வருஷம் ஆளுகை செய்வார். அப்போது கலகக்காரர்கள் எல்லோரையும் அடக்கி அழிப்பார். (வெளி 20:1-10; வெளி 21:1-22:5; 1கொரி 15:24-28; எபே 1:10).

பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறப்படும் காரியங்களைத் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் கூறலாம்.

4. பேதுரு, அந்திரேகியா ஆகியோரின் அழைப்பு - (மாற்கு 1:16; லூக் 5; யோவான் 1:40)

மத் 4:18 இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு:

மத் 4:19 என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

மத் 4:20 உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

"கலிலேயாக் கடல்" - திபேரியாக்கடல், கெனேசரேத்துக்கடல் என்று மறுபெயர்களும் இதற்கு உண்டு. இதிலுள்ள தண்ணீர் சுத்தமாக இருக்கும். (லூக்கா 5:1; யோவான் 21:1; யோசு 12:3; யோசு 13:27; உபா 3:17)

"அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் முதலாவது சீஷன். (யோவான் 1:33-42) தன்னுடைய சகோதரன் பேதுருவை இயேசு சீஷனாக அழைக்கும் வரையிலும் அவன் மீன்பிடித்துக் கொண்டிருந்தான். (மத் 4:18; மாற்கு 1:17) பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன். (மத் 10:2; மாற்கு 3:18; லூக்கா 6:14; அப் 1:13) அந்திரேயாவைப் பற்றி மாற்கு 1:29; மாற்கு 13:3; யோவான் 6:8; யோவான் 12:22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. வரலாற்றின் பிரகாரம் இவன் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவன். சீத்தியா (Scythia) என்னும் இரஷ்ய தேசத்துப் பகுதியில் கர்த்தருக்கு ஊழியம் செய்தான். இவனை அங்கு கல்லெறிந்தார்கள். கிரேக்கம், அல்லது சீத்தியாவில் அந்திரேயா சிலுவையில் அறையப்பட்டான் என்று வரலாறு கூறுகிறது.

"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" - சுவிசேஷ ஊழியம் செய்வது மீன்களைப் பிடிப்பதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. பின்னே வாருங்கள் என்பது சீஷத்துவத்தைக் குறிக்கும் வாக்கியம். (2இராஜா 6:19)

"உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" - தங்களுடைய சொத்துக்களை, தாங்கள் நம்பியிருந்த உபகரணங்களை விட்டுவிட்டு, இயேசுவிற்குப் பின்சென்றார்கள். தங்கள் ஜீவியத்தில் கர்த்தருக்கு முதலிடம் கொடுத்தார்கள். (மத் 19:27-30; லூக்கா 14:33)

5. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (மாற்கு 1:19; லூக் 5:10)

மத் 4:21 அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார்.

மத் 4:22 உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.

4 அதிகாரம்

"யாக்கோபு" (James, Jacob) - இவன் யோவானின் சகோதரன். செபெதேயுவின் மகன். (மத் 4:21; மத் 20:20; மாற்கு 1:19; லூக்கா 5:10-11) பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன். (மத் 10:2; மாற்கு 3:17; லூக்கா 6:14; அப் 1:13) இயேசு கிறிஸ்துவிடம் மிகவும் நெருக்கமாக இருந்த மூவரில் ஒருவன். (மாற்கு 5:37; மத் 17:1-8; மத் 26:36-46, மாற்கு 13:3-4; லூக்கா 9:54; யோவான் 21:1-14)) அப்போஸ்தலர்களில் இரத்தச்சாட்சியாக முதலாவது மரித்தவன். (அப் 12:1-2) வரலாற்றின் பிரகாரம் தன் தந்தை வழியில் இவன் லேவி கோத்திரத்தான். தன் தாயார் வழியில் யூதா கோத்திரத்தான். இவனும் பேதுருவும், இந்தியாவில் சிறிது காலம் ஊழியம் செய்ததாகவும், பின்பு ஸ்பெயின் தேசத்தில் ஊழியம் செய்ததாகவும் வரலாறு கூறுகிறது.

6. கலிலேயாவிற்கு இரண்டாவது பிரயாணம் - (மாற்கு 1:38; லூக் 4:42; மத் 4:12; 9:35)

மத் 4:23 பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.

மத் 4:24 அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திர ரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

மத் 4:25 கலிலேயாவிலும், தெக்கப்போலி யிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.

"இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்தார்" - பிரயாணம் செய்து சுவிசேஷ ஊழியம் செய்த முதலாவது மிஷினெரி இயேசு கிறிஸ்துவே. (மத் 9:35; மாற்கு 6:6) தமது ஊழியத்தில் இயேசு கிறிஸ்து மூன்று காரியங்களைச் செய்தார். அவையாவன:

1. உபதேசித்தார்
2. ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்
3. ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார் (மத் 9:35; அப் 10:38)

சொஸ்தமாக்கு (healing) - θεραπεύω - therapeuoo - 2323

வினைச்சொல் - சொஸ்தமாக்கு, குணமாக்கு, சௌக்கியமாக்கு, ஆரோக்கியமாக்கு, பணிவிடைகொள் **(to wait upon menially, to relieve of disease)**

"சீரியா" - பத்து பட்டணங்கள் கொண்ட மாவட்டம். இதன் தலைநகரம் தமஸ்கு.

வியாதி (diseases) - νόσος - nosos - 3554

பெண்பால் பெயர்ச்சொல் - வியாதி, நோய் - வியாதி (disease) (மத் 4:24; மாற்கு 1:34; லூக்கா 4:40; லூக்கா 6:17; லூக்கா 9:1; அப் 19:12) நோய் (sickness) (மத் 4:23; மத் 8:17; மத் 9:35; மத் 10:1; மாற்கு 3:15) பலவீனம் (infirmity) (லூக்கா 7:21)

இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல்லிற்கும், மத் 4:23; மத் 9:35; மத் 10:1 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கும் "மலாக்கியா" (malakia) என்னும் சொல்லிற்கும் வேறுபாடு உண்டு.

4 அதிகாரம்

நோய் (infirmity) - **μαλακία** - **malakia** - 3119

பெண்பால் பெயர்ச்சொல் - நோய்

பிசாசு - அசுத்த ஆவிகள்

சந்திரரோகி (lunatick) - **σεληνιάζομαι** - **seleeniazomai** - 4583

பெயர்ச்சொல் - சந்திரரோகி

இந்தச் சொல் இந்த வசனத்திலும் மத் 17:15-இலும் மட்டுமே வருகிறது. இந்த வியாதிக்கும், சந்திரனுக்கும் தொடர்பு உண்டு. பௌர்ணமி அல்லது அமாவாசை ஆகிய நாட்களில் இந்த வியாதி தாக்கும்.

சந்திரன் (moon) - **σελήνη** - **seleenee** - 4582

பெண்பால் பெயர்ச்சொல் - சந்திரன்

திமிர்வாதக்காரன் (paralyzed) - **παραλυτικός** - **paralytikos** - 3885

பெயர்ச்சொல் - திமிர்வாதக்காரன் (மத் 4:24; மத் 8:6; மத் 9:2; மாற்கு 2:3-9; லூக்கா 5:24; லூக்கா 5:18; அப் 8:7;அப் 9:33)

5 அதிகாரம்

7. மலைப்பிரசங்கம் - (5:1-7:29)

(1) முன்னுரை

மத் 5:1 அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

மத் 5:2 அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:

"திரளான ஜனங்கள்" - தேவன் ஒரு ஊழியத்தைக் கனப்படுத்தும்போது அந்த ஊழியத்தின் மூலமாக திரளான ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். திரளான ஜனங்கள் கூடுவது தேவனுடைய அனுக்கிரகம். வேதாகமத்திலே மலைகளில் 16 தடவைகளும், பிற இடங்களில் 7 தடவைகளும் திரளான ஜனங்கள் கூடிவந்ததாக நாம் வாசிக்கிறோம்.

"மலை" - எந்த மலை என்று குறிப்பிடப்படவில்லை. லூக்கா 6: 17-49-ஆவது வசனங்களில் கூறப்பட்டிருப்பது சமமான இடத்தில் ஜனங்கள் கூடிவந்தார்கள் என்பதாகும்.

"உட்கார்ந்தார்" - கிழக்கு தேசங்களில் ஆசிரியர்கள் உட்கார்ந்திருந்து உபதேசம் பண்ணுவார்கள். (மத் 9:10; மத் 13:1; மத் 15:29; மத் 18:2; மத் 24:3; மத் 26:55; மாற்கு 3:32; மாற்கு 4:1; மாற்கு 9:35; மாற்கு 12:41; யோவான் 6:3; யோவான் 8:2) ஜனங்கள் அவர் உட்கார்ந்த விதத்தைப் பார்த்து ஆச்சரியப் படாமல் அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் கிருபை நிறைந்ததாக இருந்ததினால் ஆச்சரியப்பட்டார்கள்.

(2) பாக்கியவான்கள் - (லூக் 6:20)

மத் 5:3 ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

மத் 5:4 துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

மத் 5:5 சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

மத் 5:6 நீதியின்மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

மத் 5:7 இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

மத் 5:8 இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

மத் 5:9 சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்;அவர்கள்தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

மத் 5:10 நீதியினிமித்தம் துன்பப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

மத் 5:11 என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில்பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான் களாயிருப்பீர்கள்;

மத் 5:12 சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

பாக்கியவான்கள்

1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் (மத் 5:3; மத் 11:28-30; சங் 51:17; ஏசா 57:15; ஏசா 66:2)
2. துயரப்படுகிறவர்கள் (மத் 5:4; ஏசா 61:2; யாக் 4:9; 2கொரி 7:9-11)
3. சாந்தகுணமுள்ளவர்கள் (மத் 5:5; மத் 11:29; சங் 37:11; 1பேதுரு 3:4)
4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் (மத் 5:6; சங் 34:10; சங் 42:1-3; சங் 63:1; சங் 84:2; யோவான் 7:37-39)

5 அதிகாரம்

5. இரக்கமுள்ளவர்கள் (மத் 5:7; மத் 18:27; 1பேதுரு 3:8)

6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் (மத் 5:8; பிலி 4:8; 1தீமோ 1:5; 1தீமோ 3:9; 1தீமோ 5:22; 1பேதுரு 1:22)

7. சமாதானம் பண்ணுகிறவர்கள் (மத் 5:9; ரோமர் 14:19; 1கொரி 13)

8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள். கர்த்தர் நிமித்தம் பலவித தீமையான மொழிகளையும் அவர்கள்பேரில் பொய்யாய்ச் சொல்லி துன்பப்படுத்தப் படுகிறவர்கள் (மத் 5:10-12; மத் 10:16-28; 1கொரி 13; 1பேதுரு 3:14-17; 1பேதுரு 4:3-19)

தீர்க்கதரிசன எண் - 4

"பரலோகராஜ்யம் அவர்களுடையது....." (1பேதுரு 5:3-12) - இந்தத் தீர்க்கதரிசனங்களில் எட்டு வாக்குத் தத்தங்கள்நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது பூரணமாக நிறைவேறும்.

"பசிதாகமுள்ளவர்கள்" - வலுவான வாஞ்சையுடையவர்கள் என்னும் பொருளைத் தரும் எபிரெய வழக்குச்சொல் (யோவான் 7:37)

சுத்தம் (clean) - καθαρός - katharos – 2513

பெயரடை - சுத்தமுள்ள, தூயதான, சுத்தமாயிருக்கிற, சுத்த (யோவான் 13:11) நாம் மறுபடியும் பிறக்கும்போது நமது இருதயம் சுத்தமடைகிறது. (2கொரி 5:17; 1யோவான்1:9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18; எபே 4:24; 2தெச 2:13)

"சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" - (அப் 5:41; அப் 16:25; 1பேதுரு 4:13)

(3) விசுவாசிகளின் ஒப்புமை - (மாற்கு 4:21; லூக் 8:16; 11:33)

மத் 5:13 நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப் படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

மத் 5:14 நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

மத் 5:15 விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

மத் 5:16 இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

"உப்பானது சாரமற்றுப்போனால்" - உப்பு உணவைப் பாதுகாக்கிறது. உணவிற்குச் சுவை தருகிறது. உப்பைப் பயன்படுத்தாமல் வெயிலிலும், காற்றிலும், மழையிலும் கவனியாமல் விட்டுவிட்டால் அது தனது சாரத்தை இழந்துவிடும். சாரமற்ற உப்பினால் ஒரு பிரயோஜனமுமில்லை. (மாற்கு 9:50; லூக்கா 14:34-35)

"உலகத்துக்கு வெளிச்சம்" - விசுவாசிகள் இந்த உலகத்திற்குத் தெய்வீக வெளிச்சமாக இருக்கிறார்கள். மனுஷர் மத்தியிலே தேவனைப் பிரதிபலிக்கிறார்கள்.

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்

5 அதிகாரம்

"விளக்கு" - வேதாகம நாட்களில் மெழுகுவர்த்தியிருந்ததாகத் தெரியவில்லை. அக்காலத்தில் மண், செம்பு, இரும்பு, பித்தளை, வெள்ளி, பொன் ஆகியவற்றால் விளக்குகளைச் செய்தார்கள். அதில் எண்ணெய் ஊற்றி, திரியை வைத்து, விளக்கை எரிய வைத்தார்கள். (யாத் 25: 31-35; யாத் 30:27) ஒலிவ எண்ணெயை விளக்கு எரிப்பதற்கும், சமையல் செய்வதற்கும், சரீரங்களில் பூசிக்கொள்வதற்கும் பயன்படுத்தினார்கள். (யாத் 25:6; யாத் 27:20; யாத் 29:2,23)

விளக்கு (candle) - λύχνος - **lychnos** - 3088

ஆண்பால் பெயர்ச்சொல் - விளக்கு

மரக்கால் (bushel) - μόδιος - **modios** - 3426

ஆண்பால் பெயர்ச்சொல் - மரக்கால் - நான்குபடி பிடிக்கும் அளவு

"விளக்குத்தண்டு" - இந்தத் தண்டின்மீது விளக்கை ஏற்றிவைப்பார்கள். இதிலுள்ள ஒரு குழியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றப்பட்டிருக்கும்.

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்த வேண்டும்" - மனுஷர் மத்தியிலே நாம் செய்யும் எல்லா நல்ல காரியங்களுக்கும் ஒரு நோக்கம் உண்டு. பரலோகத்திலுள்ள பரமபிதாவை எல்லோரும் மகிமைப்படுத்த வேண்டும். அதுவே நாம் செய்யும் நற்கிரியைகளின் நோக்கம். (யோவான் 14:12-15; யோவான் 15:7-8; தீத்து 2:14; வெளி 4:11)

தேவனை மகிமைப்படுத்தும் காரியங்கள்

1. சரீர சுகமாதல் (மத் 9:8; மத் 15:31; லூக்கா 5:25-26; லூக்கா 13:13; அப் 4:21)
2. சரீரம் உயிர்த்தெழுதல் (யோவான் 11:4)
3. கிறிஸ்துவின் மீட்பின் கிரியை (யோவான் 13:3-32)
4. ஜெபத்திற்குப் பதில் கிடைத்தல் (யோவான் 14:13)
5. அதிக கனி கொடுத்தல் (யோவான் 15:8)
6. தேவனுடைய வேலையை நிறைவுசெய்தல் (யோவான் 17:4)
7. புறஜாதியாரின் இரட்சிப்பு (அப் 13:48)
8. புறஜாதியார் மத்தியில் அற்புதங்கள் (அப் 21:20)
9. வரங்களைமுறையாகப் பயன்படுத்துதல் (1பேதுரு 4:10-11)
10. துதி செலுத்துதல் (சங் 50:23)
11. நற்கிரியைகள் (மத் 5:16; 1பேதுரு 2:12)
12. இரத்தச்சாட்சிகள் (யோவான் 21:19)
13. சுத்தமான சரீரங்கள் (1கொரி 3:16-17; 1கொரி 6:19-20)
13. கிறிஸ்தவ வேலை (2கொரி 9:13)
14. சுதந்தரம் (2கொரி 9:13)

(4) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்காக வந்தார் - (ரோமர் 10:4)

மத்5:17 நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

மத் 5:18 வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்,நியாயப் பிரமாணத்திலுள்ள தெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

5 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 5

"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்........" (மத் 5:17-19) - இந்தத் தீர்க்கதரிசனத்தில் மத் 5:17-18 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. மத் 5:19-ஆவது வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"அழித்தல்" - மத் 26:61-இல் கூறப்பட்டிருக்கிற பிரகாரமாக "இடித்துப் போடுதல்" **(Pull down)** என்று பொருள்படும்.

"நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும்" - இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தை 15 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார். (மத் 5:17-18; மத் 7:12; மத் 11:13; மத் 12:5; மத் 22:40; மத் 23:23; லூக்கா 10:26; லூக்கா 16:16-17; லூக்கா 24:44; யோவான் 7:19-23; யோவான் 8:17; யோவான் 10:34; யோவான் 15:25).

நிறைவேற்று **(fulfil)** - **πληρόω** - **pleerooo** - 4137

வினைச்சொல் - நிறைவேற்று, நிரப்பு, முடி, பூரணமாயிரு **(to satisfy, expire, and to end by fulfilling like other prophecies when fulfilled)** (மத் 1:22; மத் 2:15,17,23; மத் 4:14; மத் 8:17; மத் 12:17; மத் 13:35)

"வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்" - வானமும் பூமியும் அக்கினியினால் பரிசுத்தமாக்கப்படும், புதுப்பிக்கப்படும். (எபி 1: 10-12; எபி 12:25-29; 2பேதுரு 3: 10-13; ரோமர் 8:21-24; வெளி 21:1). அவை நித்தியகாலமாக இருக்கும். (பிர 1:4; சங் 72:17; சங் 89:36-37; சங் 104:5) பழையவை ஒழிந்துபோயின. கிறிஸ்துவில் எல்லாம் புதுசிருஷ்டியாயின என்பதுபோன்று இருக்கும். (2கொரி 5:17-18)

ஒழிந்துபோ **(pass)** - **παρέρχομαι** - **parerchomai** - 3928

வினைச்சொல் - கடந்துப்போ, ஒழிந்துப்போ, நீங்கு, நீங்கிப்போ, விட்டுவிடு, அகன்றுபோ

"ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" - மெய்யெழுத்தின் மேலும், கீழும் வைக்கப்படும் புள்ளிகள் எழுத்தின் உறுப்புக்கள் எனப்படும். சீனாய் மலையில் கர்த்தர் மோசேக்கு கொடுத்த பிரமாணங்கள் நிறைவேறிற்று அல்லது முடிந்துபோயிற்று. கிறிஸ்துவில் அவை எல்லாம் பழையதாயிற்று. இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். (2கொரி 3:6-15; அப் 15:5-29; கலா 3:19-25; கலா 4:21-31; கலா 5:1-5,18; எபே 2:15; கொலோ 2:14-17; எபி 7:11-28; எபி 8:6-13; எபி 9:1-22; எபி 10:1-18; ரோமர் 10:4)

(5) இராஜ்ஜியத்தின் பிரமாணங்கள் - (5:17-6:18)

(அ) மோசேயின் பிரமாணங்களும் இராஜ்ஜியத்தின் பிரமாணங்களும்

மத் 5:19 ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக் கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.

மத் 5:20 வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"கற்பனைகள்" - புதிய உடன்படிக்கையின் கற்பனைகள் பழைய உடன்படிக்கையைப் போன்றே முக்கியமானவை. (யாக் 2:10). புதிய உடன்படிக்கையில் 1,050க்கும் மேற்பட்ட கட்டளைகள் உள்ளன.

"பரலோகராஜ்யத்தில் பெரியவன்" - (லூக்கா 7:28)

5 அதிகாரம்

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17)

"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதி" - மத் 12:22-30; மத் 15:1-14; மத் 16:12; மத் 23:1-33; லூக்கா 11:39-54;லூக்கா 18:9-14; ரோமர் 10:1-3; கலா 1:14; கலா 2:14; பிலி 3:2-6 ஆகிய வசனங்களில் அவர்களுடைய சுயநீதி கூறப்பட்டிருக்கிறது.

(ஆ) இராஜ்ஜியத்தின் பிரமாணங்களுடைய சிறப்பு அம்சம் - (5:21-38)

(i) கொலை செய்யாதிருப்பாயாக

மத் 5:21 கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும்,பூர்வத்தாருக்குஉரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

மத் 5:22 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்.

"கொலை செய்யாதிருப்பாயாக" - (யாத் 20:13; உபா 5:17)

"கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" - இது உரைக்கப்பட்ட கட்டளை. எழுதப்படவில்லை.

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" - இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையைக் கூறும்போது அதிகாரத்துடன் பேசுகிறார். (மத் 7:29; மத் 26:28; யோவான் 1:17)

"நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" - கோபிப்பதற்கு நியாயம் இருந்தாலும் நாம் நமது கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். (எபே 4:26) ஆவியின் கனியில் சாந்தம், இச்சையடக்கம், நீடிய பொறுமை ஆகியவை முக்கியமானவை. (கலா 5:22)

"வீணன்" (Raca) - ராகா என்பது அராமாயிக் மொழிச்சொல். ஒன்றும் பிரயோஜனமற்றவன், துன்மார்க்கன் என்று பொருள்படும். **(scoundrel, wicked rascal)**

"ஆலோசனைச்சங்கம்" (Sanhedrin) - ஆலோசனைச் சங்கத்தில் 71 நியாயாதிபதிகள் இருப்பார்கள். பிரதான ஆசாரியர் இவர்களுக்குத் தலைவர். ஒவ்வொரு ஜெபாலயத்திலும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நியாயாதிபதிகளைக் கொண்ட ஆலோசனைசங்கம் இருந்தது.

மூடன் (fool) - **μωρός - mooros** - 3474

பெயரடை - மூடனான, புத்தியில்லாத, மதிகேடான, பைத்தியமான, புத்தியீனமான **(wicked reprobate, destitute of all spirituality)**

நரகம் (hell) - **γέεννα - geenna** - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம்

பள்ளத்தாக்கு (Valley) - **גַּיְא - gah'ee, gah'ee - 1516**

பொதுப் பெயர்ச்சொல் - பள்ளத்தாக்கு

இன்னோம் (Hinnom) - **בֶּן־הִנֹּם - hin-nome' - 2011**

ஆ.பெ.சொ. - இன்னோம்

இன்னோமின் பள்ளத்தாக்கு

இந்தப் பள்ளத்தாக்கு எருசலேமிற்கு அருகில் உள்ளது. காற்றைச் சுத்தப்படுத்துவதற்காக அங்கு எப்போதும் அக்கினி எரிந்து கொண்டிருக்கும். (ஏசா 30:33; எரே 7:31-32; எரே 19:6-14; 2இராஜா 23:10).

5 அதிகாரம்

துன்மார்க்கர் நித்திய தண்டனை அனுபவிக்கும் நரகத்தையும், இச்சொல் குறிக்கும். (மத் 5:22,29,30; மத் 10:28; மத் 18:9; மத் 23:15,33; மாற்கு 9:43-47; லூக்கா 12:5; யாக் 3:6)

அக்கினிக்கடலையும் நரகம் என்னும் சொல் குறிக்கும். (வெளி 19:20; வெளி 20:11-15; வெளி 21:8)

அவியாத அக்கினி (மத் 8:12; மத் 13:42,50; மத் 22:13; மத் 24:51; மத் 25:30; லூக்கா 3:17)

நித்திய அக்கினி (மத் 25:41,46; வெளி 14:9-11; வெளி 19:20; வெளி 20:10-15; வெளி 21:8; ஏசா 66:22-24)

(ii) ஒப்புரவாதலும் ஜெபமும் - (லூக் 12:58)

மத் 5:23 ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்,

மத் 5:24 அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

"அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" - இது ஒவ்வொரு விசுவாசிக்கும் நியமிக்கப் பட்டிருக்கும் கட்டளை. (மத் 18:15-17,21-35)

"பலிபீடம்" - வேதாகமத்தில் பலிபீடம் என்னும் சொல் 433 இடங்களில் வந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டில் மட்டும் 24 இடங்களில் பலிபீடம் என்னும் சொல்லைக் காண்கிறோம். பலிபீடம் என்பதற்குப் பலி செலுத்தும் இடம் அல்லது தேவனை நாம் சந்திக்கும் இடம் என்று பொருள். கர்த்தருக்கும், விசுவாசிக்கும் நடுவிலே ஒரு பலிபீடம் இருக்க வேண்டும். (மத் 5: 23-24; எபி 13:10; ரோமர் 12:1-3)

(iii) நியாயாதிபதியினிடத்தில் வழக்கு

மத் 5:25 எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக் கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும் போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.

மத் 5:26 பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

"எதிராளி" - சட்டத்தின் பிரகாரமாக நம்மை எதிர்க்கிறவன். ரோமப் பேரரசின் சட்டத்தின் பிரகாரம் எதிராளி ஒருவனை நியாயாதிபதிக்கு முன்பாக நிறுத்த முடியும். (மத் 18:28-30) தன்னுடைய வழக்குகளை நியாயாதிபதிக்குக் கொண்டுபோவதற்கு முன்பாகவே வழியிலே அவனோடு ஒப்புரவாகிவிட்டால் அதாவது சமாதானம் ஆகிவிட்டால் நியாயாதிபதியிடம் போகவேண்டிய அவசியம் இராது. நியாயாதிபதியும் நம்மைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடுக்க மாட்டார். சிறைச்சாலையிலும், நம்மை வைக்க மாட்டார்கள். (லூக்கா 12:58-59)

"ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும்" - கடன் சம்பந்தமான வழக்குகளில் இப்பேர்ப்பட்ட காரியம் நடைபெறும்.

(iv) விபசாரம் செய்யாதிருப்பாயாக - (15:19; 19:18; கலா 5:19)

மத்5:27 விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப் பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

5 அதிகாரம்

மத் 5:28 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.

மத் 5:29 உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

மத் 5:30 உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

"விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" - (யாத் 20:14; உபா 5:18)

"ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" - மனதில் ஒரு காரியத்தைத் தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பது அந்தக் காரியத்தை நடைமுறையில் செய்வதற்கு சமம். (யாக் 1:13-16) நமது இருதயத்தில் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் காரியமே நமது நடைமுறையில் செயல்படுத்தப்படும். கிரியைகளைப் போலவே சிந்தையும் சில சமயங்களில் ஆபத்தானவை. (1சாமு 16:7; மாற்கு 7:19-23)

"உனக்கு இடறலுண்டாக்கினால்" - உன்னை உன் ஆவிக்குரிய ஜீவியத்திலிருந்து வீழ்ச்சியுறச்செய்யுமானால், உன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுமானால் என்று பொருள்படும்.

"அதைப் பிடுங்கி எறிந்துபோடு" - நம்முடைய ஆத்துமாவிற்கு இடறலாக இருக்கும் காரியங்களிலிருந்து நாம் பிரிந்து வரவேண்டும். பிரச்சனைகளை எப்போதும் தழுவிக் கொண்டிருக்கக்கூடாது.

"உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப் படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" - ஆண்டவர் இயேசு கிறிஸ்து நரகத்தின் உபாதையை இந்த வசனத்தில் விளக்குகிறார். நரகம் அவியாத அக்கினி. அங்கு அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும். நரக அக்கினியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு சுவிசேஷத்தில் எளிய வழிமுறை ஒன்று கூறப்பட்டிருக்கிறது. நமது பாவங்களை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்யும்போது நாம் மறுபடியும் சிருஷ்டிக்கப் படுகிறோம். கிறிஸ்துவில் நாம் புது சிருஷ்டியாகும்போது நரக அக்கினியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். நமது அவயவங்களைப் பிடுங்கி எறிந்துபோடுவதைவிட இது மிகவும் சுலபமான வழி. (2கொரி 5:17-18; கலா 5:16-26; ரோமர் 6:16-23; ரோமர் 8: 1-13; 1யோவான் 1:7; 1யோவான் 2:29; 1யோவான் 3:6-10; 1யோவான் 5:1-5,18, மத் 18:8-9)

"உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும்" - இந்த வாக்கியம் இரண்டு முறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. நரகத்திற்கு முழுச் சரீரமும் போகும். நரகத்தில் சரீரம் முழுவதும் வேதனையை அனுபவிக்கும். (மத் 5:29-30; மத் 10:28; லூக்கா 12:5; வெளி 20:11-15)

"நரகம்" - இந்த வசனப்பகுதியில் மூன்று முறை நரகம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத்5:22,29-30; மத் 18:8-9; மாற்கு 9:43-48; ஏசா 66:24)

(v) மனைவியைத் தள்ளிவிடுவதும் மறுபடியும் திருமணம் செய்வதும் - (19:3-9; லூக் 16:18)

மத் 5:31 தன் மனைவியைத் தள்ளி விடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக்கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது.

மத் 5:32 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்.

5 அதிகாரம்

"தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக் கடவன்" - (உபா 24:1-4; ஏசா 50:1; எரே 3:8)

தள்ளுதற்சீட்டைக் கொடுப்பது என்பது விவாகரத்தைக் குறிக்கும். யூதர்கள் இந்த அர்த்தத்தில்தான் இந்த வாக்கியத்தை புரிந்து கொள்வார்கள். வேசித்தனம் பண்ணியதற்காக விவாகரத்து பண்ணலாம். கர்த்தர் வேசித்தனத்தை அருவருக்கிறார். தள்ளுதற் சீட்டைக் கொடுத்த பின்பு, திருமண உறவு தள்ளுபடியாகிறது. (உபா 24:1-4)

தள்ளிவிடு **(put away)** - **ἀπολύω** - **apolyoo** - 630

வினைச்சொல் - தள்ளிவிடு, அனுப்பிவிடு, போகவிடு, விடுதலை செய், விடுதலை பண்ணு, விடுதலையாக்கு, விட்டுப்போ, புறப்பட்டுபோ - விடுதலைபண்ணு **(to loose)** (மத் 18:27); விடுதலையாக்கு **(release)** (மத் 27:15-26); அனுப்பிவிடு **(let go)** (லூக்கா 14:4); விடுதலை பண்ணு **(set at liberty)** (அப் 26:32); அனுப்பிவிடு **(send away)** (மத் 14:15-23); அனுப்பிவிடு **(dismiss)** (அப் 15:30); தள்ளிவிடு **(put away)** (மத் 1:19; மத் 5:31-32; மத் 19:3-9; மாற்கு 10:2-12; லூக்கா 16:18); தள்ளிவிடு **(divorce)** (மத் 5:32).

"தள்ளுதற்சீட்டு" - யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் திருமண உறவை முறித்துக் கொள்வதற்காகச் சட்டப்படி எழுதப்படும் ஆவணம். (மத் 5:31; மத் 19:7, உபா 24:1-3; ஏசா 50:1; எரே 3:8; மாற்கு 10:4, மத் 19:1-12; மாற்கு 10:2-4; 1கொரி 7)

"வேசித்தனம்" - வேதாகமத்தில் வேசித்தனம் என்பது பல பொருளுடையது. அவையாவன:

திருமணமானவர்கள் அல்லது திருமணமாகாதவர்கள் செய்யும் விபச்சாரம் (மத் 5:32; மத் 19:9; 1கொரி 7:2; 1கொரி 10:8; 1தெச 4:3; வெளி 9:21) விபச்சாரம் (1கொரி 5:1; 1கொரி 10:8) விக்கிரகாராதனையும்,விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக விபச்சாரம் பண்ணுவதும் (2நாளா 21:11; ஏசா 23:17; எசே 16:15,26,29; அப் 15:20,29; அப் 21:25; வெளி 2:14-21; வெளி 14:8; வெளி 17:2-4; வெளி 18:3-9; வெளி 19:2) சரீரப்பிரகாரமான வேசித்தனம் (யோவான் 8:41; 1கொரி 6:13-18) ஆவிக்குரிய வேசித்தனம் (எசே 16:15,26,29; வெளி 17:2-4;வெளி 18:3-9; வெளி 19:2) சுயபுணர்ச்சியும், ஆண்புணர்ச்சியும் (1கொரி 6:9-11; எபி 12:16; யூதா 1:6-7; ரோமர் 1:24-29; 2கொரி 12:21; கலா 5:19; எபே 5:3; கொலோ 3:5) ஒரு சிலர் வேசித்தனம் **(fornication)** என்பது திருமணமாகாதவர்கள் செய்யும் உடலுறவுப் பாவம் என்று கூறுகிறார்கள்.

"விபச்சாரம்" - ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் திருமணச் சட்டத்திற்கு புறம்பாக நடைபெறும் உடலுறவு. இது திருமணமானவர்களுக்கும் பொருந்தும், திருமணமாகாதவர்களுக்கும் பொருந்தும். வேதத்தில் 69 இடங்களில் இந்தப் பாவத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றுள் இரண்டு வசனங்கள் மட்டுமே ஆவிக்குரிய விபச்சாரத்தைப் பற்றிப் பேசுகிறது. (எரே 3:3-12; எசே 16:37) விபச்சாரமும், வேசித்தனமும் ஒன்றல்ல. வேசித்தனம் பொதுவான பொருளுடையது. விபச்சாரம் பாலுறவு பாவத்தை மட்டும் குறிக்கும். எல்லா விபச்சாரமும் வேசித்தனமே. ஆனால் எல்லா வேசித்தனமும் விபச்சாரமாகாது.

வேசித்தனம் **(fornication)** - **πορνεία** - **porneia** - 4202

பெண்பால் பெயர்ச்சொல் - வேசித்தனம், வேசிமார்க்கம்

(vi) ஆணையிடுதல் - (யாக் 5:12; சங் 15:4; 76:11)

மத் 5:33 அன்றியும், பொய்யாணை யிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள்.

5 அதிகாரம்

மத் 5:34 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம்.

மத் 5:35 பூமியின்பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின் பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம்.

மத் 5:36 உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே.

மத் 5:37 உள்ளதை உள்ளதென்றும், இல்லதைஇல்லதென்றும்சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.

"பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக" - (லேவி 19:12; எண் 30:2; உபா 23:21)

பொய்யாணையிடு (forswear) - ἐπιορκέω - epiorkeoo - 1964

வினைச்சொல் - பொய்யாணையிடு.

"பொய்யாணையிடு" -வானத்தின் பேரிலும், பூமியின் பேரிலும் நமக்கு உரிமையில்லாத எந்த காரியத்தின் பேரிலும் ஆணையிடுவது தவறு. (மத் 5: 33-37; யாக் 5:12) ஆனாலும் சத்தியத்தைப் பேசுவதும், கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணுவதும் சரியானதே. (மத் 5:33; எபி 6:16; ஆதி 22:16; ஆதி 28:20)

(vii) கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் - (மத் 18:21; லூக் 6:29; 17:1)

மத் 5:38 கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப் பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

மத் 5:39 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு.

மத் 5:40 உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு.

மத் 5:42 ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ.

மத்5:42 உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக்கொடு,உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே.

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" - (யாத் 21:24; லேவி 24:20; உபா 19:21)

"தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்" - இந்த ஆலோசனையை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கிறார். நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் மூன்று அடிப்படைத்தத்துவங்கள் காணப்பட வேண்டும். அவையாவன:

1. எதிர்த்து நிற்கக்கூடாது (மத் 5:39; ரோமர் 12:14)

2. எதிர்பார்ப்பதைவிட அதிகமாகச் செய்ய வேண்டும். (மத் 5:40-41)

3. அன்புடனும், தாராளமனதுடனும் இருக்க வேண்டும் (மத் 5:42)

"ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" - ரோமப்பேரரசின் காலத்தில் இராஜாவின் சுமைகளை யாரை வேண்டுமானாலும் கட்டாயப்படுத்தி, சுமக்க வைக்க முடியும். முடியாது என்று யாரும் கூறக்கூடாது. இராஜாவின் வேலையைச் செய்ய மறுப்பது மன்னிக்கமுடியாத குற்றம். (மத் 27:32; மாற்கு 15:21)

5 அதிகாரம்

"உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே" - நாம் நமது குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும், மற்றவர்களுக்கும் அன்புடன் உதவி புரிய வேண்டும். (1தீமோ 5:8; லூக்கா 6:38; 2கொரி 9:6-8; 1யோவான் 3:17)

(viii) அன்பு கூருதல் - (லூக் 6:27; யோவான் 13:34; 15:9; 17:26)

மத் 5:43 உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாகவென்றுசொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

மத் 5:44 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

மத் 5:45 இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.

மத் 5:46 உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா?

மத் 5:47 உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா?

மத் 5:48 ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்.

"உனக்கடுத்தவனைச் சிநேகிப்பாயாக" - (லேவி 19:17-18; மத் 22:39; லூக்கா 10:27)

"உன் சத்துருவைப் பகைப்பாயாக" - (யாத் 17:14-16; உபா 7:1-2; உபா 23:3-6)

மத்தேயு 5:44-இல் கூறப்பட்டிருக்கிற கட்டளைகள்

1. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்
2. உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்
3. உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்
4. உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

புதிய ஏற்பாட்டில் இதைத் தவிர இன்னும் 1,050 கட்டளைகளுக்கு மேல் உள்ளன. விசுவாசிகள் இவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். பழைய ஏற்பாட்டின் 10 கட்டளைகள் மட்டுமே முக்கியமானவை என்று நினைக்கக்கூடாது.

"ஆயக்காரர்" - வரிவசூல் பண்ணுகிறவர். வேதாகமத்தில் 17 இடங்களில் ஆயக்காரரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. யூதர்கள் ஆயக்காரரை வெறுத்தார்கள். அவர்கள் அநியாயமாக வரிவசூலிப்பதாக அவர்கள்மீது குற்றம் சுமத்தினார்கள். அவர்களைப் பாவிகளாகக் கருதினார்கள். (மத் 9:10-11; மத் 11:19; மத் 21:31-32) ஆயக்காரரில் அநேகர் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். (லூக்கா 3:12; லூக்கா 7:29) மத்தேயு ஆயக்காரரில் ஒருவர். அவர் இயேசுவின் அப்போஸ்தலர் ஆனார். (லூக்கா 5:27-29; லூக்கா 19:1-10)

பரிபூரணம் (perfect) - τέλειος - teleios – 5046

மத்தேயு - தொகுப்புரை

5 அதிகாரம்

பெயரடை - பூரண, பரிபூரணமான, நிறைவான, தேறின, உத்தமுமான **(complete in conformity to God's laws)**

விசுவாசிகளிடம் காணப்பட வேண்டிய குணாதிசயங்கள்

1. ஆவியில் எளிமையுடனும், தாழ்மையுடனும், நீதியின்மேல் பசிதாகமுடனும், இருதயத்தில் சுத்தமுடனும், இரக்கமுடனும், கிருபையுடனும் இருக்க வேண்டும். (மத் 5:3-12)
2. உப்பாகவும், விளக்காகவும் இருக்க வேண்டும். (மத் 5:13-16)
3. சத்தியத்தைக் கைக்கொண்டு உபதேசிக்க வேண்டும். (மத் 5:17-19)
4. மாய்மாலம், சுயம் ஆகியவை இருக்கக் கூடாது (மத் 5:20-24)
5. சமாதானம் பண்ண வேண்டும் (மத் 5:9,25-26)
6. ஆசை இச்சைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் (மத் 5:27-30)
7. குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும் (மத் 5:31-32)
8. உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் (மத் 5:31-37)
9. தீமைக்கு எதிர்த்து நிற்கக்கூடாது (மத் 5:38-41)
10. பிறரை நேசிக்கிறவராகவும், நல்ல சுபாவம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் (மத் 5:38-47)
11. இயேசு கிறிஸ்துவைப் போல பூரண சற்குணராக இருக்க வேண்டும். (மத் 5:48)

இவை எவ்வாறு சாத்தியமாகும்

1. புதிய பிறப்பு (2கொரி 5:17; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18)
2. ஆவியில் நடந்து ஜீவிப்பது (ரோமர் 8:1-13; கலா 5:16-26)
3. ஆவிக்குரிய ஆயுதங்களை முறையாகப் பயன்படுத்துவது (2கொரி 10:5-7; எபே 6:10-18; கொலோ 2:6-10; கொலோ 3:3-10; 2தீமோ 2:21)

6 அதிகாரம்

(ix) **தர்மம் செய்தல்** - (5:42; 6:1; 19:21; லூக் 11:41; 12:33)

மத் 6:1 மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.

மத் 6:2 ஆகையால் நீ தர்மஞ்செய்யும் போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 6:3 நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.

மத் 6:4 அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

"எச்சரிக்கையாயிருங்கள்" - இந்த வாக்கியம் பழைய ஏற்பாட்டில் 29 தடவைகளும், புதிய ஏற்பாட்டில் 28 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. (மத் 11:29)

எச்சரிக்கையாயிரு (Take heed) - προσέχω - prosechoo - 4337

வினைச்சொல் - எச்சரிக்கையாயிரு, கவனி, செவிகொடு, ஜாக்கிரதையாயிரு (to hold the mind, pay strict attention to, and apply one's self to) (அப் 5:35; அப் 8:6,10; 1தீமோ 4:1; லூக்கா 21:34; எபி 2:1).

"தர்மம்" - தர்மம் மனமிரங்கி செய்யப்படவேண்டிய காரியம்.

தர்மம் செய்யும்போது நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள்

1. தர்மம் பண்ணும்போது இருதயத்தில் எளிமையுடனும் (மத் 6:1-4) உதாரத்துவமாகவும் (உபா 15:11; ரோமர் 12:8) சந்தோஷமாகவும் (2கொரி 9:7) கொடுக்க வேண்டும்.

2. தர்மம் பண்ணும்போது நாம் அதில் சந்தோஷமாயிருக்க வேண்டும். (லேவி 25:35; உபா 15:7-11; ஏசா 58:7; மத் 5:42; லூக்கா 11:41; 2கொரி 9:5; 1தீமோ 6:18)

3. தர்மம் பண்ணுவதற்குப் பலன் உண்டு. (உபா 14:28-29; உபா 15:10; மத் 10:42; மத் 19:21; லூக்கா 12:33)

4. தர்மம் பண்ணுவதற்கு எடுத்துக் காட்டுக்கள் (லூக்கா 19:8; அப் 9:36; அப் 10:2; 2கொரி 8-9)

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலன் உண்டு" - நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிரியையையும் சரியான நோக்கத்தோடு தேவநாம மகிமைக்காகவும், ஜனங்களின் பிரயோஜனத்திற்காகவும் செய்யும்போது கர்த்தர் நமக்குப் பலன் தருவார். (மத் 5:12; மத் 6:1,18; மத் 10:41-42; மத் 16:27; மாற்கு 9:41; லூக்கா 6:23,35; ரோமர் 14:10-11; 1கொரி 3:8-15; 1கொரி 9:17-18; 2கொரி 5:10; கொலோ 2:18; கொலோ 3:24; 2தீமோ 4:14; எபி 10:35; எபி 11:26; 2பேதுரு 2:13; வெளி 11:18; வெளி 22:12).

"மாயக்காரர்" - மாய்மாலம் செய்கிறவர்கள். இவர்கள் உள்ளத்தில் உண்மையான அன்பு இராது. வேஷதாரிகள். சுய பெருமைக்காரர்கள். விளம்பரப் பிரியர்கள். பொது இடங்களில் தர்மம் செய்து எல்லோரும் தங்களைப் புகழ வேண்டுமென்று விரும்புகிறவர்கள். (மத் 22:18; மத் 23:28; மத் 24:51; மாற்கு 12:15)

"அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தார்கள்" - மற்றவர்களுடைய புகழ்ச்சியே இவர்களுக்குக் கிடைக்கும் பலன். பரலோகத்திலிருக்கிற கர்த்தரிடமிருந்து இவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமும் வராது.

6 அதிகாரம்

"உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது" - யூதர்களுடைய சமுதாய பழக்கவழக்கத்தில் உண்மையான தாழ்மையைக் குறிக்கும் வழக்குச் சொல்.

(x) ஜெபம் - அந்தரங்கத்திலிருக்கிற பிதாவிடம் - (லூக் 11:1; 18:1; யோவான் 14:12; 15:7)

மத் 6:5 அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 6:6 நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.

"நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு" - கர்த்தரிடம் நாம் ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்க வேண்டுமென்றால் நமது ஜெபத்தில் இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். (மத் 7:7-11)

அறைவீடு (closet) - ταμεῖον - **tameion** - 5009 பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அறைவீடு, பண்டகசாலை **(storehouse, or room for privacy or retirement; secret chamber)** (மத் 6:6; மத் 24:26; லூக்கா 12:3,24)

"அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" - நாம் அந்தரங்கமாக மற்றவர்களுக்கு உதவி புரியும்போது நமது பரலோக பிதா நமக்கு வெளியரங்கமாகப் பலனை அளிப்பார். (மத் 10:40-42)

(xi) பிதாவின் சர்வ வியாபகம் - (மத் 2:25; 11:25; ரோமர் 11:33)

மத் 6:7 அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது, அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.

மத் 6:8 அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

மத்தேயு 5-7 ஆகிய அதிகாரங்களில் தேவனைப் பற்றி கூறப்பட்டிருக்கிற சத்தியங்கள்

1. தேவனைத் தரிசிக்க முடியும். (மத் 5:8)
2. சமாதானம் பண்ணுகிறவர்களைத் தேவன் நேசிக்கிறார். (மத் 5:9)
3. பரமண்டலங்களில் தேவன் வாசம் பண்ணுகிறார். (மத் 5:16,34-48; மத் 6:9)
4. மனுஷருடைய நற்கிரியைகளினால் தேவன் மகிமையடைகிறார். (மத் 5:16)
5. அவர் தீயோரையும், நல்லோரையும் ஆசீர்வதிக்கிறார். (மத் 5:45)
6. தேவன் பூரண சற்குணர். (மத் 5:48)

6 அதிகாரம்

7. தேவன் கீழ்ப்படிதலுக்கு வெகுமதி அளிக்கிறார். (மத் 6:1-6,18).

8. அவர் சர்வஞானி (மத் 6:4,6,8,18,32)

9. எல்லா பாவங்களையும் மன்னிக்கிறார். (மத் 6:12-15)

10. கீழ்ப்படிகிற அனைவருக்கும் அவர் பிதாவாக இருக்கிறார். (மத் 5:44-48; மத் 6:4,6, 8-15,33; மத் 7:7-11,13-23).

11. அவர் மாய்மாலத்தை வெறுக்கிறார். (மத் 6:1-8,16-18; மத் 7:1-5)

12. அவர் எல்லா ஜெபங்களையும் கேட்கிறார். (மத் 6:6,33; மத் 7:7-11)

13. தேவன் ஒரு ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார். பூமியில் அவருடைய சித்தம் நிறைவேறும். (மத் 6:10,33)

14. அவருடைய பராமரிப்பு அனைவருக்கும் உரியது. (மத் 6:11-25)

15. தேவன் தீமையினின்று இரட்சித்துக் கொள்வார். (மத் 6:13,33; மத் 7:11)

16. முழு இருதயத்தோடு செய்யப்படும் சேவையை அங்கீகரிப்பார். (மத் 6:24)

17. அவர் நித்திய பிதா (மத் 7:7-11)

18. அவர் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார். (மத் 7:21-23)

(xii) மாதிரி ஜெபம் - (லூக் 11:2)

மத் 6:9 நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

மத் 6:10 உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

மத் 6:11 எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

மத் 6:12 எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

மத் 6:13 எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

பரமண்டல ஜெபத்தில் கூறப்பட்டிருக்கிற அம்சங்கள்

1. உறவு - எங்கள் பிதாவே

2. அங்கீகாரம் - பரமண்டலங்களில் இருக்கிறவர்

3. போற்றுதல் - உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக

4. எதிர்பார்ப்பு - உம்முடைய ராஜ்யம் வருவதாக

5. பொருத்தனை - உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக

6. முழு உலகத்திற்கும் - பூமியிலே

7. உறுதி - பரலோகத்திலே செய்யப்படுகிறது போல

8. விண்ணப்பம் - எங்களுக்குத்தாரும்

9. நிச்சயம் - இன்று

10. தேவை - எங்களுக்கு வேண்டிய ஆகாரம்

11. தவறுக்கு வருந்துதல் - எங்களுக்கு மன்னியும்

12. கடமை - எங்கள் கடன்கள்

6 அதிகாரம்

13. மன்னிப்பு - நாங்கள் மன்னிக்கிறது போல

14. அன்பும், இரக்கமும் - எங்கள் கடனாளிகள்

15. வழிநடத்துதல் - வழிநடத்தும்

16. பாதுகாப்பு - சோதனைக்கு உட்படப் பண்ணாமல்

17. இரட்சிப்பு - எங்களை இரட்சித்துக் கொள்ளும்

18. நீதி - தீமையினின்று

19. விசுவாசம் - இராஜ்ஜியம் உம்முடையது

20. தாழ்மை - வல்லமையும் உம்முடையது

21. பக்தி - மகிமையும் உம்முடையது

22. நித்தியம் - என்றென்றைக்கும்

23. உறுதிப்பாடு - ஆமென்.

பரமண்டல ஜெபத்தில் முதல் மூன்று விண்ணப்பங்கள் கர்த்தரைப் பற்றியவை. இறுதியில் வரும் 4 நான்கு விண்ணப்பங்கள் மனுஷனைப் பற்றியவை.

"உம்முடைய ராஜ்யம் வருவதாக" - விசுவாசிகள் தேவனுடைய இராஜ்யம் பூமிக்கு வரவேண்டுமென்றும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும். (சக 14; வெளி 11:15; வெளி 19:11-20:10; மத் 25:31-46).

தேவனுடைய சித்தத்தைப் பற்றிய சத்தியங்கள்

1. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. (மத் 6:10)

2. நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34)

3. எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே தேடுகிறேன். (யோவான் 5:30)

4. கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். (எபே 5:17)

5. மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். (எபே 6:6)

6. தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஜீவிக்க வேண்டும். (1பேதுரு 2:11-17)

7. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், தேவனை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். (1தீமோ 2:4; 2பேதுரு 3:9).

8. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)

9. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (1தெச 4:3-4; 1கொரி 3:16-17; 1கொரி 6:19-20)

10. நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். (யோவான் 15:7)

"எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" - ஆண்டவரே தீமை எங்களை மேற்கொள்ளக்கூடாது. தீமையிலிருந்து எங்களை மீட்டுக் கொள்ளும்.

(xiii) ஜெபம் - பதில் பெறுவதற்கு நிபந்தனை - (மத் 7:7; 17:20; 18:18; 21:22; மாற்கு 9:23; 11:22; யோவான் 15:7)

மத் 6:14 மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

6 அதிகாரம்

மத் 6:15 மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

(xiv) உபவாசம் - (மத் 9:15; 17:21; லூக் 5:33)

மத் 6:16 நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 6:17 நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.

மத் 6:18 அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

"முகவாடல்" - தங்கள் முகங்களில் சாம்பலைப் பூசிக்கொள்ளுதல்.

"அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தார்கள்" - மனுஷர்கள் இவர்களைப் புகழுவார்கள். இதுவே இவர்களுக்குக் கிடைக்கும் பலன். இவர்களுக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லை.

(6) விசுவாசிகளுக்கு எச்சரிப்புக்கள் - *(6:19-7:29)*

(அ) பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் - *(13:22; 19:16; லூக் 12:15; 1தீமோ 6:17)*

மத் 6:19 பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

மத் 6:20 பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

மத் 6:21 உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்கள்" - கிழக்கு தேசத்து நாடுகளில் ஆடை ஆபரணங்கள், பொன் வெள்ளி,போர் ஆயுதங்கள், ஆகியவற்றைப் பொக்கிஷங்களாகச் சேர்த்து வைத்தார்கள். உலோகங்கள் துருப்பிடித்துப் போகும். திருடர்கள் பொக்கிஷங்களைத் திருடிச் சென்றுவிடுவார்கள்.

"பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்" - பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பது என்பது தேவனுக்கு நம்மைப் பிரதிஷ்டை பண்ணுவதும், தேவையுள்ள ஜனங்களுக்கு உதவி புரிவதும் ஆகும். நாம் கொடுக்கும் ஒரு கலசம் தண்ணீர்கூட கர்த்தருடைய பார்வையில் மிகவும் அருமையானது. கர்த்தர் இதற்கும் பலனளிப்பார். (மத் 10:40,42).

"அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை" - பரலோகத்தில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அங்கே பூச்சிகளின் பிரச்சனை இல்லை. உலோகங்கள் துருப்பிடிக்காது. திருடர் பயம் அங்கில்லை. எல்லாருடைய இருதயமும் பயமின்றி இருக்கும்.

6 அதிகாரம்

"உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" - கொலோ 3:1-4 ஆகிய வசனங்களில் நமக்கு பவுல் இவ்வாறு ஆலோசனை கூறுகிறார். "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

(ஆ) இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது - (லூக் 16:9; யாக் 1:5; எபி 10:38)

மத் 6:22 கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.

மத் 6:23 உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!

மத் 6:24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

விளக்கு (**light**) - **λύχνος** - **lychnos** - 3088

ஆண்பால் பெயர்ச்சொல் - விளக்கு - எண்ணெய் ஊற்றப்பட்ட விளக்கு சிறிது நேரம் எரிந்து, பின்பு அணைந்துவிடும்.

விளக்கு (**light**) (மத் 6:22; லூக்கா 11:34; லூக்கா 12:35; யோவான் 5:35; 2பேதுரு 1:19; வெளி 21:23) விளக்கு (**candle**) (மத் 5:15; மாற்கு 4:21; லூக்கா 8:16; லூக்கா 11:33,36; லூக்கா 15:8; வெளி 18:23; வெளி 22:5)

கெட்டது (**evil**) - **πονηρός** - **poneeros** - 4190

பெயரடை - கெட்டது, தீமையான, துன்பமான (**wicked, diseased, blind, full of evil, as in**) (மத் 20:15; மாற்கு 7:21-23; ரோமர் 1:29-32; கலா 5:19-21) யூதருடைய வழக்கத்தில் பொறாமைக்காரன், துஷ்டன் ஆகியோருடைய கண்களைக் கெட்ட கண் என்பார்கள். அவர்களுடைய கண் பார்வையே மற்றவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும் என்பது யூதருடைய நம்பிக்கை.

"அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" - (யோவான் 3:16-20; 2கொரி 4:4; எபே 5:11).

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது" - இது இயலாத காரியம். ஒருவனைப் பகைப்பான் மற்றவனைச் சிநேகிப்பான். நாம் தேவனுக்கும், சாத்தானுக்கும் ஊழியம் செய்ய முடியாது. பரிசுத்தத்திற்கும், பாவத்திற்கும் நாம் பங்காளிகளாக முடியாது. பிசாசிற்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு நரகம் நிச்சயம். (மத் 25:41, லூக்கா 14:26, 1யோவான் 3:8)

(இ) கவலைப்படுவதினால் பயனில்லை - (லூக் 12:22; பிலி 4:6; 1பேதுரு 5:7)

மத் 6:25 ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித் தவைகள் அல்லவா?

6 அதிகாரம்

மத் 6:26 ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

மத் 6:27 கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

மத் 6:28 உடைக்காகவும் நீங்கள் கவலைப் படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;

மத் 6:29 என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 6:30 அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

மத் 6:31 ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.

மத் 6:32 இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

மத் 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

மத் 6:34 ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப் படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.

"தேவனுக்கும் உலகப்பொருளுக்கும்" - உலகப்பொருள் என்பது உலக ஐசுவரியத்தைக் குறிக்கும். லூக்கா 16:9-13)

நாம் கவலைப்படக்கூடாது என்பதற்குக் காரணங்கள்

1. ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவன் விசேஷித்தது (மத் 6:25)
2. உடையைப் பார்க்கிலும் சரீரம் விசேஷித்தது (மத் 6:25).
3. பௌதீகப் பொருட்களைப் பார்க்கிலும் மனுஷர் விசேஷித்தவர்கள் (மத் 6:25)
4. பறவைகளை விட மனுஷர் விசேஷித்தவர்கள் (மத் 6:26)
5. கவலைப்படுகிறதினாலே சரீரத்தை மாற்ற முடியாது (மத் 6:27)
6. காட்டுப்புஷ்பங்களைப் பார்க்கிலும் மனுஷர் விசேஷித்தவர்கள் (மத் 6:28-30).
7. எல்லா சிருஷ்டிக்கும் தேவனுடைய பராமரிப்பு உண்டு (மத் 6:26-32)
8. கவலைப்படுவதினால் பிரயோஜனம் இல்லை. கவலைப்படுதல் பாவம் (மத் 6:33-34)

கவலைப்படுதலின் சுபாவங்கள்

1. பாவமானது, பயத்தை உண்டாக்கும்
2. மற்ற தீமைகளுக்குக் காரணமாக இருக்கும் நோய்

மத்தேயு - தொகுப்புரை

6 அதிகாரம்

3. பிரச்சனைகளைக் கடன்வாங்கும். இதைத் திரும்ப அடைக்கமுடியாது.

4. நடக்காத காரியத்திற்காகவும், நடக்க முடியாத காரியத்திற்காகவும் மனதில் பயத்தை உண்டாக்கும்.

5. பிரச்சனை, வருத்தம், மரணம் ஆகியவற்றை உண்டாக்கும்.

6. நாளைக்காக நாம் கடனாக வாங்கும் பாரச்சுமைகளை மற்றவர்கள் சுமக்க வேண்டும்

7. கவலைப்படும் பாரம் நம்மை அற்ப ஆயுசில் கொன்றுபோடும்

8. மனக்குழப்பமும், தற்கொலையும் உண்டாக்கும்.

9. கவலைப்படுதல் நம்மீது இரக்கம் காண்பிக்காமல் நமது சவக்குழியைத் தோண்டும்.

10. கவலைப்படும் நேரம் வீணாய்ப் போகிறது. இதை நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்தலாம்.

11. கர்த்தரிடத்தில் நாம் வைக்கும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நமது சமாதானத்தையும் கவலை திருடும்.

12. மற்றவர்களுக்கு நமது கவலை இடறுவதற்கு ஏதுவான கல்லாக இருக்கும்.

13. தேவனுக்கு அவகீர்த்தியை உண்டு பண்ணும்

14. நாளைக்காகக் கவலைப்படுவதால் இன்றைக்கும் நிம்மதியாக இருக்க முடியாது.

15. கர்த்தரை நம்புகிறவர்கள் கவலைகளில் சிக்கிக்கொள்ள மாட்டார்கள்

16. கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுக்கு வரும் பிரச்சனைகளைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள்.

17. நாம் கவலைப்படுவதினால் நமக்கு பரலோகப்பிதா இருந்தும், நாம் ஒரு அனாதையைப்போல வாழ்வதற்கு சமம்.

18. கவலைப்படுவது தேவனுக்கு எதிராகவும், மனுஷனுக்கு எதிராகவும் செய்யும் பாவம்.

19. கவலைப்படுவது தன்னுடைய மனதையும், மற்றவர்களுடைய மனதையும் துன்புறுத்தும்.

20. கவலைப்படுவது மதியீனமானது. நமக்கு நடக்கப் போவதை நாம் கவலைப் படுவதினால் தடுத்து நிறுத்த முடியாது. நமக்கு பிரச்சனைகள் வந்தாலும், கர்த்தரிடத்தில் நம்பிக்கையோடு ஜீவிப்போம் என்றால் கர்த்தர் நமது பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவிக்க வல்லவராக இருக்கிறார்.

"முழம்" - 18 அங்குல நீளம். (லூக்கா 12:25)

"சரீர அளவு" - (லூக்கா 2:52; லூக்கா 19:3; எபே 4:13)

"சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை" - (1இராஜா 9:14-28; 1இராஜா 10:10; 2நாளா 9:13-28)

"அடுப்பு" - கிழக்கு தேசத்து ஜனங்கள் விறகுகளாலும், புல்லுகளாலும் சமையல் பண்ணும் அடுப்புக்களை எரிப்பார்கள். காட்டுப்புல் முக்கிய எரிபொருள். (1இராஜா 17:10; சங் 58:9)

அற்பவிசுவாசிகளே

1. ஜீவனைக்குறித்து கவலைப்படுகிறர்கள் (மத் 6:30)

2. பயப்படுகிறவர்கள் (மத் 8:26)

3. அற்புதங்களை விசுவாசியாதவர்கள் (மத் 14:31)

4. போஜனத்தைக் குறித்துக் கவலைப் படுகிறவர்கள். (மத் 16:6-12)

மத்தேயு - தொகுப்புரை

6 அதிகாரம்

"அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்" - புறஜாதியாருக்கு அவர்களுடைய வயிறு தான் தெய்வம். தங்களுடைய மாம்சத்தின் இச்சைப் பிரகாரம் அவர்கள் தங்கள் தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். ஜீவியத்தின் பெருமை, கண்களின் இச்சை, ஆகியவை அஞ்ஞானிகளை ஆட்கொள்ளுகிறது. (1யோவான் 2:15-17)

"தேடுங்கள்" - வாஞ்சையோடு தேடிப்பாருங்கள். (லூக்கா 15:8; லூக்கா 17:33)

"தேவனுடைய இராஜ்யம்" - புதிய ஏற்பாட்டில் பரலோக இராஜ்யம் என்னும் வாக்கியம் 33 இடங்களில் வருகிறது. ஆனால் தேவனுடைய இராஜ்யம் என்னும் வாக்கியம் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் 5 இடங்களில் மட்டுமே வருகிறது. (மத் 6:33; மத் 12:28; மத் 19:24; மத் 21:31,43)

"நீதி" - (ரோமர் 3:26)

"நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்" - இன்றுபோலத் தான் நாளையும் இருக்கும். ஆகையினால் நாளைக்காகக் கவலைப் படுவதினால் எவ்வித பிரயோஜனமுமில்லை. அந்தந்த நாளுக்கு தேவையானதை நம் ஆண்டவர் தருவார் என்று விசுவாசத்தோடு ஜீவிக்க வேண்டும். வருங்காலத்தைக் குறித்த சிந்தையோடு இருப்பது தவறல்ல. ஆனால் வருங்காலத்தைக் குறித்த கவலை விசுவாசிகளிடம் இருக்கக்கூடாது. (மத் 6:25)

7 அதிகாரம்

(ஊ) உன் கண்ணிலிருக்கிற உத்திரம் - (லூக் 6:41; யோவான் 7:24; 8:7)

மத் 7:1 நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாத படிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.

மத் 7:2 ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின் படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின் படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

மத் 7:3 நீ உன் கண்ணணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

மத் 7:4 இதோ, உன் கண்ணணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?

மத் 7:5 மாயக்காரனே! முன்பு உன் கண்ணணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு; பின்பு உன் சகோதரன் கண்ணணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.

"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாத படிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" - நாம் நம்மிடத்தில் மட்டுமே குற்றம் காணவேண்டும். நமது இருதயத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பிறருடைய காரியங்களில் தலையிட்டு, மற்றவர்களை ஆராய்ச்சி பண்ணக்கூடாது. நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கும்போது நம்முடைய பாவங்கள் உணர்த்தப்படும், தேவனுடைய சமூகத்தில் நாம் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாம் மற்றவர்களை எப்படி நியாயம் தீர்க்கிறோமோ அப்படியே நாமும் தீர்க்கப்படுவோம். "நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்".

துரும்பு (mote) - κάρφος - karphos - 2595

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - துரும்பு (a twig, straw, chaff, or any particle of dust) (மத் 7:3; லூக்கா 6:41)

உத்திரம் (beam) - δοκός - dokos - 1385

பெண்பால் பெயர்ச்சொல் - உத்திரம் (wooden beam) (மத் 7:3; லூக்கா 6:41)

"மாயக்காரனே" - (லூக்கா 13:15; யோபு 20:4-5; யோபு 27:8; நீதி 11:9)

(உ) பரிசுத்தமானதைக் கவனமாக கையாள வேண்டும்

மத் 7:6 பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

"பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்" - சத்தியத்திற்கு எதிராக கலகம் பண்ணுகிறவர்களிடம் சத்தியத்தை வலியுறுத்தக்கூடாது. பரிசுத்தமான காரியங்களில் குற்றம் கண்டு பிடிக்கிறவர்களிடத்திலும், தீமையான காரியங்களைப் பேசுகிறவர்களிடத்திலும் பரிசுத்தமானவற்றைக் கொடுக்கக்கூடாது.

7 அதிகாரம்

"நாய்கள்" உருவகமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிற இடங்கள்

1. வேசிப்பணையம் (உபா 23:18)
2. ஏமாற்றுதல் (1சாமு 17:43; 1சாமு 24:14; 2சாமு 9:8; 2சாமு 16:9; 2இராஜா 8:13)
3. சாத்தானின் வல்லமை (சங் 22:20)
4. துன்மார்க்கன் (சங் 22:16; சங் 59:6,14)
5. கள்ளத்தீர்க்கதரிசி (ஏசா 56:10; பிலி 3:2)
6. ஏமாற்றும் ஜனங்கள் (மத் 7:6; வெளி 22:15)
7. மூடர் (நீதி 26:11)
8. புறஜாதியார் (மத் 15:26-27; மாற்கு 7:27-28)
9. பின்மாறிப் போனவர்கள் (2பேதுரு 2:20-23)

"பன்றிகள்" உருவகமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிற இடங்கள்

1. மதிகேடாய் நடக்கிற ஸ்திரீ (நீதி 11:22)
2. ஏமாற்றும் ஜனங்கள் (மத் 7:6)
3. பின்மாறிப் போனவர்கள். (2பேதுரு 2:20-22)

(ஊ) பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையான வைகளைக் கொடுப்பார் - (6:25;லூக் 11:5; 18:1)

மத் 7:7 கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;

மத் 7:8 ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

மத் 7:9 உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?

மத் 7:10 மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?

மத் 7:11 ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

கேள் (**Ask**) - αἰτέω - **aiteoo** - 154

வினைச்சொல் - கேள், வேண்டிக்கொள், விண்ணப்பம் பண்ணு **(to ask)** (யோவான் 15:7; மத் 21:22; யாக் 1:5-8; 1யோவான் 3:22; 1யோவான் 5:14-16); கேள் **(to crave)** (மாற்கு 15:43); கேள் **(to beg)** (மத் 27:58);கேள் **(to desire)** (மாற்கு 11:24); கேள் **(to require or demand)** (லூக்கா 1:63; 1கொரி 1:22; லூக்கா 12:48; 1பேதுரு 3:15)

இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் கர்த்தருடைய பிள்ளைகள். தேவனுடைய சுதந்தரவாளிகள். தமது குடும்பத்தில் கர்த்தர் நமக்கு ஒருசில சிலாக்கியங்களைக் கொடுத்திருக்கிறார். அவற்றை நாம் தேவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். மத் 7:7-11 ஆகிய வசனங்களில் 5 இடங்களில் "கேளுங்கள்" என்னும் வாக்கியம் வருகிறது. நாம் தேவனிடத்தில் கேட்பதைப் பெற்றுக்கொள்வோம் என்பது தேவனுடைய சித்தம். (சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; மாற்கு 11:24; யோவான் 15:7,16)

7 அதிகாரம்

"தேடுங்கள்" - முழு இருதயத்தோடு நாம் தேடவேண்டும். (உபா 4:29; 2நாளா 7:14; 2நாளா 11:16; 2நாளா 15:2; நீதி 8:17; லூக்கா 15:8; கொலோ 3:1; எபி 11:6; யாக் 1:5-8; 1பேதுரு 3:11)

"தட்டுங்கள்" - ஜெபத்திற்குப் பதில் கிடைக்க வேண்டுமென்றால் நாம் கேட்கவேண்டும், தேடவேண்டும், தட்ட வேண்டும். (லூக்கா 11:5-13; லூக்கா 18:1-18) நாம் விரும்புவதைத் தேவனிடம் கேட்கிறோம். நாம் இழந்துபோனதைத் தேடுகிறோம். நமக்கு தேவையானதைத் தருமாறு தேவனிடம் தட்டுகிறோம். தேவனிடத்தில் நாம் நம்பிக்கையுடனும், தாழ்மையுடனும் கேட்க வேண்டும். மிகுந்த கவனத்தோடு தேடவேண்டும். உண்மையான மனதுடனும், நீடிய பொறுமையுடனும் தட்ட வேண்டும். (லூக்கா 11:4-8)

"கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" - இது கர்த்தருடைய பிரமாணம். நாம் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் கேட்கும் நம்மிடம் விசுவாசம் குறைவாக இருக்கலாம். ஏனோதானோவென்று கவனமில்லாமல் தேடலாம். (யாக் 1:5-8, எபி 11:6, லூக்கா 11:5-13; லூக்கா 18:1-8)

நமது அவிசுவாசத்தினால் நமது விண்ணப்பங்களுக்குப் பதில் கிடைப்பதில்லை. (மத் 17:17-21; யாக் 1:5-8; எபி 11:6) தவறான உபதேசித்தினாலேயே ஒருவனுக்குள் அவிசுவாசம் முளைக்கிறது. (ரோமர் 10:17) தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு அளவேயில்லை. (சங் 34:9-10; சங் 84:11; சங் 91:1-12; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16)

"திறக்கப்படும்" - கிழக்கு தேசத்திலுள்ள வீடுகளில் கதவு அடைக்கப்பட்டிருக்கும். வீட்டிற்குள் போகவேண்டுமென்றால் அந்த வீட்டின் கதவைத் தட்ட வேண்டும். வீட்டிற்குள் இருப்பவர் கதவைத் தட்டுபவரிடம் அவரைப் பற்றிய விவரங்களைக் கேட்பார். அந்த நபர் வீட்டிற்குள் வரவேண்டுமென்று வீட்டுக்காரர் நினைத்தால் மட்டுமே கதவு திறக்கப்படும். (லூக்கா 11:5-8)

"தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிற அவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" - பொல்லாத தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கிறார்கள். தங்களால் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்கிறார்கள். பிள்ளைகளும், பெற்றோர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கிறார்கள். உணவு, உடை, மற்றும் தேவையான எல்லா பொருள்களையும் உலகப்பிரகாரமான தந்தைமார்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தாராளமாகக் கொடுக்கிறார்கள். அவர்களே இப்படிக் கொடுக்கும்போது நம்மீது கரிசனையுள்ள நமது பரலோகப்பிதா, நமது தேவைகளை அறிந்திருக்கிறவர், நிச்சயமாகவே நமக்குத் தேவையானவற்றை கொடுப்பார். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பார் என்று லூக்கா கூறுகிறார். (லூக்கா 11:13)

"நன்மையானவைகள்" - ஆபத்துக்களிலிருந்து விடுதலை, தீமையிலிருந்து பாதுகாப்பு, சரீர சுகம், வாழ்வில் வளம், சந்தோஷம், சமாதானம் இவை எல்லாமே நன்மையானவைகளே. இவற்றை நமது பரலோகப்பிதாவிடம் நாம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். கர்த்தர் நமது தேவைகளைச் சந்திக்க விரும்புகிறார். (மத் 7:7-11)

(எ) தங்கச்சட்டம் - மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் - (லூக் 6:31)

மத் 7:12 ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

7 அதிகாரம்

"இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்" - மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். மத் 7:1-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற மொத்த உபதேசத்தின் மையக்கருத்து இதுதான்.

(ஏ) இடுக்கமான வாசல் வழியும் விசாலமான வாசல் வழியும் - (6:24; 7:24; லூக் 6:47)

மத் 7:13 இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

மத் 7:14 ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.

"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது" - லூக்கா 13:24-27 ஆகிய வசனங்களை ஒப்பிடவும். இரண்டு வழிகளில் போவதற்கான காரணங்கள். (உபா 30:15; 1இராஜா 18:21; 2பேதுரு 2:2,15) அவன் போய்ச் சேரும் இரண்டு இடங்கள் (மத் 25:46; யோவான் 5:28-29; கலா 6:7-8) மனந்திரும்புவதினால் பாவமன்னிப்பு பெற்று நித்திய அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் (லூக்கா 13:1-5; யோவான் 3:16-20; அப் 3:19; 1யோவான் 1:9) பாவம் ஆத்துமாவை அழிக்கும். (ஆதி 2:17; எசே 18:4; ரோமர் 8:12-13)

"இடுக்கமான வாசல்வழி"- மத் 7:12-இல் கூறப்பட்டிருக்கிற தங்கச்சட்ட வாக்கியத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிதல், கர்த்தருடைய சமூகத்தில் பாவங்களுக்கு மனந்திருந்தி, ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிப்பது.

"விரிவும், விசாலமுமாயிருக்கிற வழி" - துன்மார்க்கரின் கண்ணியமில்லாத பாவமான ஜீவியம். சுயநல ஜீவியம். பிறருடைய பொருளை இச்சித்து ஜீவிப்பது. மத் 7:12-ல் கூறப்பட்டிருக்கிற உபதேசத்திற்குக் கீழ்ப்படியாமல் ஜீவிப்பது.

"கேட்டுக்குப் போகிற வாசல்" - இந்த வழியில் ஜீவிப்பது முடிவில் அழிவில் கொண்டுபோய்விடும். முடியும்போதுதான் இந்தப் பாதை அழிவுக்கு நேரானது என்பது தெரியும். (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:19-21; கலா 6:7-8; எபி 9:27) இந்த வாசல் வழியாகப் போனாலும், ஒருவன் தனது பாவமான ஜீவியத்தை உணர்ந்து கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வந்தால், அவன் கேட்டுக்குப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான். (அப் 26:18)

"ஜீவனுக்குப் போகிற வாசலைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" - இடுக்கமான வழி ஜீவனுக்குப்போகிறது. இந்த வழி நெருக்கமாக இருக்கிறது. நமது ஜீவியத்தை நித்திய ஜீவனுக்கு நேராக வழி நடத்தும் பாதை. இதில் ஒருசிலர் மட்டுமே நடந்து போகிறார்கள். (யோவான் 6:27; யோவான் 10:1-28; யோவான் 15:1-8)

(ஐ) கள்ளத்தீர்க்கதரிசிகள் - (24:4,24)

மத் 7:15 கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.

மத் 7:16 அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப் பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?

மத் 7:17 அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.

மத் 7:18 நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.

7 அதிகாரம்

மத் 7:19 நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்.

மத் 7:20 ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.

"கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" - உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். (1யோவான் 4:1)

கள்ளத்தீர்க்கதரிசிகளைச் சோதித்தறியும் வழிகள்

1. அவர்களுடைய வெளியரங்கமான நடத்தையினால் (மத் 7:15; மத் 5:20; மத் 6:1-24; மத் 23:1-33; 2தீமோ 3:5)

2. அவர்களுடைய உள்ளான சுபாவங்களினால் (மத் 7:15; மத் 5:22,28; மத் 23:25-28; மாற்கு 7:21-23)

3. அவர்கள் கொடுக்கும் கனிகளினால் (மத் 7:16-20; மத் 23:1-24; 2கொரி 11:13-15; பிலி 1:15-17; பிலி 3:3,17-19)

4. அவர்களுடைய உபதேசங்களினால் (மத் 7:16-20; மத் 12:33-37; மத் 15:1-9; மத் 16:12; மத் 23:1-33; 1தீமோ 4:1-6; 1தீமோ 6:3-5; 2தீமோ 3:1-8; 2தீமோ 4:1-4; 2பேதுரு 2)

5. தேவனுடைய சித்தத்தைச் செய்வதாகக் கூறி அதைச் செய்யாமல் இருப்பதினால் (மத் 7:21; மத் 5:20; மத் 23:1-33)

6. பிசாசின் கிரியைகளை அவர்கள் செய்வதினால் (மத் 7:22; மத் 24:24; அப் 8:9-13; அப் 13:6-13; அப் 16:16-24; 2கொரி. 11:13-15; 2தெச 2:8-12; வெளி 13:1-18; வெளி 16:13-16; வெளி 19:20)

7. அவர்களுடைய முடிவு (மத் 7:23; மத் 25:41,46; 2கொரி 11:13-15; வெளி 19:20; வெளி 20:10-15)

"அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்" - பாவி பாவமான காரியங்களைச் செய்வான். நீதிமான் நற்கிரியைகளைச் செய்வான். ஒரு மனுஷன் ஒரே சமயத்தில் பாவியாகவும், பரிசுத்தவானாகவும் இருக்க முடியாது. ஒன்று அவன் பாவியாக இருப்பான் அல்லது பரிசுத்தவானாக இருப்பான். (மத் 7:24; ரோமர் 6:16-23; ரோமர் 8:13)

"நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்" - விசுவாசியின் ஜீவியத்தில் ஆவியின் கனி வெளிப்படவேண்டும். ஆவியின் கனி வெளிப்படாத ஜீவியம் நல்ல கனிகொடாத மரத்தைப்போன்றது. அப்படிப்பட்டவர்கள் வெட்டப்பட்டு, அக்கினியிலே போடப்படுவார்கள் என்னும் ஆவிக்குரிய எச்சரிப்பு நமக்குள் எப்போதும் இருக்க வேண்டும். (யோவான் 15:1-8)

(ஓ) தேவனுடைய சித்தத்தைச் செய்யாமல் கர்த்தாவே, கர்த்தாவே என்று கூறுவது - (லூக் 13:22-30)

மத் 7:21 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

மத் 7:22 அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

7 அதிகாரம்

மத் 7:23 அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

தீர்க்கதரிசன எண் - 6

"கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை................" (மத் 7:21-23) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின்போது இது நிறைவேறும். (வெளி 20:11-15; அப் 17:31)

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" - நாம் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் "நான் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன். அவருடைய இரட்சிக்கும் கிருபை என்னை இரட்சிக்கும்" என்று வாயால் சொன்னால் மட்டும் போதாது. பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்கிறவன் மட்டுமே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பான். (மத் 7:21; 1பேதுரு 4:18; எபி 12:14; யாக் 1:19-27; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13)

"பரலோக இராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

"அந்நாளில் அநேகர்" - அநேகர் நரகத்திற்குப் போவார்கள். (மத் 7:13,22; மத் 20:16) ஒருசிலரே இரட்சிக்கப்படுவார்கள் (மத் 7:14; மத் 22:14; லூக்கா13:23-30).

"கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" - என்று கூறி அநேகர் நரகத்திற்குத் தப்பிக்கப் பார்ப்பார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்கள் இந்தக் காரியங்களைச் செய்தார்களா என்று இங்கு கூறப்படவில்லை.

(ஓ) கன்மலையின்மேல் அஸ்திபாரமும் மணலின்மேல் அஸ்திபாரமும் - (7:13; லூக் 6:47-49)

மத் 7:24 ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.

மத் 7:25 பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

மத் 7:26 நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.

மத் 7:27 பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

மத் 7:28 இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்த போது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால்,

மத் 7:29 ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டார்கள்.

மத்தேயு - தொகுப்புரை

7 அதிகாரம்

"இவைகளின்படி செய்கிறவன் எவனோ" - கர்த்தருடைய வசனத்தைக் கேட்டால்மட்டும் போதாது. அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும். அவைகளின்படி செய்ய வேண்டும். அவன் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டினவன்போல் இருப்பான். அவன் புத்தியுள்ளவன். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவன் புத்தியில்லாதவன். தன் வீட்டை மணலின்மேல் கட்டியவனுக்கு ஒப்பானவன்.

"பெருவெள்ளம்" - கிழக்கு தேசங்களில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். சூறாவளிக்காற்று அடிக்கும். வலுவான கட்டிடங்களைக்கூட காற்றும், வெள்ளமும் அழித்துப்போடும்.

வெள்ளம் **(flood)** - **ποταμός** - **potamos** - 4215

ஆண்பால் பெயர்ச்சொல் - வெள்ளம், நதி, ஆறு, நீரோட்டம் - வெள்ளம் **(flood)** *(மத் 7:25-27; வெளி 12:15-16)*; ஆறு **(river)** *(யோவான் 7:38; வெளி 22:1-2)*; ஓடை **(stream)** *(லூக்கா 6:48-49, சங் 42:7)*

"வேதபாரகர்" - *(மத் 2:4)*

8 அதிகாரம்

8. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - (மாற்கு 1:40; லூக் 5:12)

மத் 8:1 அவர் மலையிலிருந்து இறங்கினபோது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

மத் 8:2 அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.

மத் 8:3 இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.

மத் 8:4 இயேசு அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு; ஆயினும், அவர்களுக்குச் சாட்சியாக நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்.

"திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்" - கர்த்தருடைய வல்லமையினால் ஊழியம் செய்யும்போது திரளான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாகக் கர்த்தர் நம்மைப் பயன்படுத்துவார். திரளான ஜனங்கள் நம்மிடம் வருவார்கள்.

"குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து கொண்டான்" - இயேசு கிறிஸ்து அவனுடைய மரியாதையையும், ஆராதனையையும் அங்கீகரித்தார். (யாத் 4:6, மத் 15:25)

"ஆண்டவர்" - புதிய ஏற்பாட்டில் 367 இடங்களில் இயேசு "ஆண்டவர்" என்று அழைக்கப்படுகிறார். சுவிசேஷங்களில் 133 இடங்களிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் 84 இடங்களிலும், மற்ற புஸ்தகங்களில் 150 இடங்களிலும் இயேசு "ஆண்டவர்" என்று அழைக்கப்படுகிறார். இயேசு தம்மை ஆண்டவர் என்று அழைத்தார். (மத் 7:21-22; மத் 21:3) தீர்க்கதரிசிகள் இயேசுவை ஆண்டவர் என்று கூறினார்கள். (ஏசா 40:3=மத் 3:3; மல் 3:1=மாற்கு 1:2; லூக்கா 2:27) தூதர்கள் இயேசுவை ஆண்டவர் என்று அழைத்தார்கள். (லூக்கா 2:11) பரிசுத்த ஆவியானவரும் கர்த்தரும் இயேசுவை ஆண்டவர் என்று அழைத்தார்கள். (சங் 110:1-5; மத் 22:43-45; மல் 3:1; அப் 2:36) கர்த்தரும், ஆண்டவரும் அருகில் உட்கார்ந்திருப்பதாக நாம் வாசிக்கிறோம். (சங் 110:1-5; மத் 22:43-45)

"உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" - நோயாளியைக் குணப்படுத்துவது கர்த்தருடைய சித்தம். ஒரு காரியம் கர்த்தருக்குச் சித்தமானது என்று தெளிவாகத் தெரிந்த பின்பும், ஆண்டவரிடம் "கர்த்தாவே, இந்த காரியம் உமக்குச் சித்தமானதா?" என்று கேள்வி கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது. சந்தேகம் நமது ஜெபத்திற்கு பதில் கிடைப்பதைத் தடை செய்து விடும். தேவனிடத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் எல்லோருமே "தேவனால் எல்லாம் கூடும்" என்று விசுவாசிக்கிறார்கள். ஆனால் ஒருசிலர் மட்டுமே தேவன் கிரியை செய்வார் என்று எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருக்குச் சித்தமான காரியங்களைத் தமது பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3: 20-22; 1யோவான் 5:13-14; லூக்கா 5:12)

"இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டார்" - இயேசு 8 இடங்களில் வியாதியஸ்தர்களைத் தொட்டு குணமாக்கினார். (மத் 8:3,15; மத் 9:29; மத் 17:7; மத் 20:34; மாற்கு 1:41; மாற்கு 7:33; லூக்கா 5:13; லூக்கா 7:14; லூக்கா 22:51) பல வியாதியஸ்தர்கள் இயேசுவைத் தொட்டு சொஸ்தமானார்கள். (மத் 9:21; மத் 14:36; மாற்கு 3:10; மாற்கு 5:28; மாற்கு 6:56; மாற்கு 8:22; லூக்கா 6:19)

மத்தேயு - தொகுப்புரை

8 அதிகாரம்

"எனக்குச் சித்தமுண்டு" - தம்மை நம்பி தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை. "எனக்குச் சித்தமில்லை, உன்னை சொஸ்தமாக்க மாட்டேன்" என்று இயேசு யாரிடமும் கூறவில்லை. (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:1-15; யோவான் 15:7,16; யாக் 1:5-8).

"உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்" - இயேசு கிறிஸ்து சொஸ்தமாக்கும்போது அந்தச் சுகமாதல் உடனடியாக நடைபெறுகிறது. சிறிதுசிறிதாக வியாதியஸ்தர் சொஸ்தமானார்கள் என்று வேதத்தில் எங்கும் கூறப்படவில்லை. யோவான் 4:52, மாற்கு 8:23-25 ஆகிய வசனங்களை ஒருசிலர் எடுத்துக்காட்டாகக் கூறி, சில சமயங்களில் சொஸ்தமாதல் உடனடியாக நடைபெறாது என்று தேவையில்லாத விவாதம் பண்ணுகிறார்கள். இந்த இடங்களில்கூட வியாதியஸ்தர்கள் ஒரு மணிநேரத்திற்குள் குணமானார்கள்.

இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு என்று இயேசு கூறியதற்குக் காரணங்கள்

1. இயேசு தமது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் அவசரப்பட்டு தமது கர்த்தத்துவத்தை வெளிப்படுத்தவும், நிரூபிக்கவும் விரும்பவில்லை. இதனால் ஏற்படும் வீண் விவாதங்களை ஆரம்பத்தில் தவிர்க்க விரும்பினார். தமது சீஷர்களிடம்கூட தமது கிரியைகளைப் பிறருக்கு அறிவிக்க வேண்டாமென்று தடைபண்ணினார். (மத் 16:13-20) தீர்க்கதரிசிகள் முற்குறித்த காரியங்களை இயேசு ஆரம்ப முதலே செய்து வந்தார். ஆனாலும், ஆரம்பத்தில் தமது கர்த்தத்துவத்தை வலியுறுத்தவில்லை. (மத் 11:1-6)

2. நியாயப்பிரமாணத்தை இயேசு கிறிஸ்து நிறைவேற்ற விரும்பினார். மோசே கட்டளையிட்ட பிரகாரம், ஜனங்கள் சாட்சி பகர வேண்டுமென்றும் இயேசு விரும்பினார். (லேவி 14:4,10,21-22) குஷ்டரோகிகள் தேவாலயத்திற்குச் சுகமான பின்பு தான் செல்ல முடியும். அங்குள்ள ஆசாரியர்கள் குஷ்டரோகிகள் குணமான விதத்தை அறிந்து கொள்வார்கள். இயேசு கிறிஸ்து மேசியா என்பது வார்த்தையினால் மட்டும் அல்லாமல் குஷ்டரோகிகள் குணமான கிரியையினாலும், தெளிவாக விளங்கும். மேசியாவால் மட்டுமே குஷ்டரோகிகளைச் சொஸ்தமாக்க முடியும் என்று யூதமார்க்கக் குருமார்கள் நம்பினார்கள்.

3. இயேசு பிரபலியமடைவதை விரும்பவில்லை. தேவையற்ற விளம்பரத்தில் இயேசுவிற்குப் பிரியமில்லை. ஜனங்கள் இயேசுவை இராஜாவாக்க வேண்டுமென்று விரும்பினார்கள். (யோவான் 6:15-21) இயேசு வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கின பின்பு "இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு" என்று மத் 8:4; மாற்கு 8:26,30; லூக்கா 5:14; லூக்கா 8:56; லூக்கா 9:21 ஆகிய வசனங்களில் கூறியபடி தமது ஊழியத்தின் பின்பகுதியில் யாரிடமும் கூறவில்லை.

4. ஒரு வியாதியஸ்தன் பூரணமாகக் குணமடைந்த பின்பு தான் சொஸ்தமானதைக் குறித்துப் பிறரிடம் சாட்சி பகரவேண்டும். இந்த முன்மாதிரியை இயேசு கடைப்பிடிக்க விரும்பினார். ஒருவன் சொஸ்தம் அடையாமலேயே, தான் சொஸ்தமடைந்து விட்டதாகச் சாட்சி கூறுவது சரியாக இராது.

"மோசே" - புதிய ஏற்பாட்டில் மோசேயின் பெயர் 80 இடங்களில் வருகிறது. அவற்றில் இது முதலாவது குறிப்பு. லேவியராகமம் புஸ்தகத்தை மோசே எழுதினார் என்பதற்கு இதுவும் ஒரு சான்று. (லேவி 14:4-32)

8 அதிகாரம்

9. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குணமானான் - (லூக் 7:1-10)

மத் 8:5 இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து:

மத் 8:6 ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான்.

மத் 8:7 அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.

மத் 8:8. நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

மத் 8:9 நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப்போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான்.

மத் 8:10 இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 8:11 அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்.

மத் 8:12 ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 8:13 பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

"நூற்றுக்கு அதிபதி" - 100 போர் வீரர்களுக்குத் தலைவன். ரோமருடைய சேனையில் இது 60-ஆவது படைப்பிரிவு ஆகும்.

"திமிர்வாதம்" **(palsy) - A paralytic** (மத் 4:24)

கொடிய வேதனை - **δεινῶς** - **deinoos** - 1171

வினையடை - கொடிய, கொடிய வேதனை **(excessively, terribly)** (லூக்கா 11:53).

"ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" - இயேசு கிறிஸ்துவினுடைய வல்லமையில் நூற்றுக்கதிபதி பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தான். அவன் ஒரு தளபதி. அவன் ஒரு வார்த்தை சொன்னால் அவனுடைய போர்வீரர்கள் எல்லோருமே அவனுக்குக் கீழ்ப்படிந்து செயல்படுவார்கள். இயேசு கிறிஸ்துவிற்குப் பிசாசுகளின்மீது அதிகாரம் உள்ளது என்பதை நூற்றுக்கதிபதி நம்பினான். ஆகையினால், ஆண்டவரிடம் ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று விசுவாசத்தோடு கூறுகிறான். நமக்கும் இப்பேர்ப்பட்ட விசுவாசம் தேவை.

இயேசு ஆச்சரியப்பட்ட இரண்டு காரியங்கள்

1. புறஜாதியாரின் விசுவாசம் (மத் 8:10)
2. யூதரின் அவிசுவாசம் (மாற்கு 6:6)

8 அதிகாரம்

"இஸ்ரவேலர்" - யூத ஜனங்கள் (மத் 10:5)

தீர்க்கதரிசன எண் - 7

"அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து............" (மத் 8:11-12) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியில் இது நிறைவேறும். (மத் 25:31-46)

"பரலோக இராஜ்யம்" - மத் 4:17; மத் 19:24

"ராஜ்யத்தின் புத்திரர்" - யூதர்கள் - இராஜ்யம் யூதர்களுக்கு முதன்முதலாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. (யோவான் 17:12)

"புறம்பான இருள்" - (மத் 13:42)

"நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக் கடவது" - இது விசுவாசித்தின் பிரமாணம். (மத் 8:13; மத் 9:29; யாக் 1:5-8; எபி 11:6; மாற்கு 11:22-24)

10. பேதுருவின் மாமி சொஸ்தமானாள் - (மாற்கு 1:29; லூக் 4:38)

மத் 8:14 இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார்.

மத் 8:15 அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

"பேதுருவின் மாமி" - பேதுரு திருமணமாகாத அண்ணகர் என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். இது தவறு. இந்த மாமி யார்? பேதுருவினுடைய மனைவியின் தாய். (2கொரி 9:5).

"அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று" - (மத் 8:3)

11. பிசாசுகளைத் துரத்தினார் - பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்கினார் - (மாற்கு 1:32; லூக் 4:40)

மத் 8:16 அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.

மத் 8:17 அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப் பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"பிணியாளிகளெல்லாரையும்"- (மத் 13:58)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்". (மத் 8:17; ஏசா 53:4)

ஏற்றுக்கொள் (took) - **λαμβάνω** - **lambanoo** - 2983

வினைச்சொல் - எடுத்துக்கொள், ஏற்றுக்கொள், பெற்றுக்கொள், அடை, கொண்டுவா, வாங்கு, பிடித்துக்கொள், பண்ணு, தெரிந்துகொள், வருவித்துக் கொள், கைவசப்படுத்து, செய், வைத்துக்கொள், தரித்துக்கொள் - சுமப்பதற்காக எடுத்தல், அகற்றுதல் (to take in order to carry away; to remove) (மத் 8:17; மத் 5:40)

சும (to bear) - **βαστάζω** - **bastazoo** - 941

வினைச்சொல் - சும, சகி, கொண்டு போ, சுமந்துகொள், சுமந்துவா, எடுத்துக்கொள், தாங்கு, தூக்கிக்கொள் - அகற்ற வேண்டும் என்னும் எண்ணத்தோடு துவக்குவது அல்லது சுமப்பது (to bear or lift with the idea of removal) (மத் 8:17; லூக்கா 7:14)

மத்தேயு - தொகுப்புரை

8 அதிகாரம்

சும (to bear) נָשָׂא - nas-say' - 5375

வினைச்சொல் - பெரிய, உயர்ந்த, உச்சரி, சுட்டெரி, வாங்கு, அடித்துக்கொண்டுபோ, விவாகம்பண்ணு, விவாகஞ்செய், துக்கங்கொண்டாடு, நீக்கு, ஒப்பாரி சொல்லு, ஏந்திக்கொண்டுபோ, மன்றாடு, உரத்தசத்தமிடு, விழி, காய், தூக்கு, எடுபட்டுப்போ, பசிதாகமாயிரு, பார், எழும்பு, எடு, ஓங்கு, செலுத்து, பங்கிடு, விளைவி, ஆணையிட்டுக்கொடு, அகற்றிவிடு, எடுத்துக்கொள், பிடித்துக் கொள், சும, தாங்கு, இரட்சி, அநுக்கிரகம் பண்ணு, ஆணையிடு, கொண்டுவா, தரித்துக்கொள், எழுப்பு, எழுப்புதலடை, எழு, மன்னித்துவா, சுமத்து, கர்வங் கொள்ளப் பண்ணு, கொண்டுபோகப் பண்ணு, கொள், உயர்த்து, வாங்கு, தொகையேற்று, விவாகம்பண்ணு, எடுத்துக்கொண்டுபோ, கிடை, எண், தண்டிக்கப்படு, ஒப்புக்கொடு, சகி, மதி, உயரத்தூக்கு, ஏறெடு, வழங்கு, சொல், சத்தமிடு, கொண்டுபோ, உயரஎடுத்துக் கொள், விடு, அழை, புலம்பு, ஏற்று, முகதாட்சிணியம் பண்ணு, ஏற்றப்படு, எடுத்தவா, பொறுத்திரு, செல்லு, பெறு, பிடுங்கு, மன்னி, பிரகாசிக்கப்பண்ணு, உயரு, மன்னித்தருள், பாடு, வெளிச்சங் காட்டு, கிளம்பப்பண்ணு, தயவாயிரு, போடு, வழங்கு, ஏற்றுக்கொள், எண்ணப்படு, முகதாட்சிணியம் செய், பிரசன்னமாக்கு, தூக்கிக் கொண்டுவா, கூக்குரலிடு, முகம்பார், வரப்பண்ணு, ஆவலாயிரு, பிடித்திரு, பிடி, தாரி, கட்டு, உள்ளாகு, எண்ணிக்கையுள்ளவனாயிரு, கனவான், மன்னிக்கப்படு, கனம் பொருந்து, தூக்கிவரப்படு, மேன்மை பாராட்டு, உயர்த்தப்படு, சுமக்கப்படு, உயர்ந்தவன், ஓங்கல், உயரம், உதவிசெய், உன்னதம், கொடுக்கப்படு, உதவியாயிரு, துணைநில், சுமரப்பண்ணு, மேட்டிமையாகு, நிமிர்ந்துநில், மேன்மையடை, உயர்ந்திரு - பாவத்தின் கடனைச் சுமத்தல், ஒருவருடைய வியாதியைத் தன்னுடைய வியாதிபோன்று சுமப்பது (to bear, to take the debt of sin and sickness upon one's self, and carry it as his own) (ஏசா 53:4; லேவி 5:1,17; லேவி 16:22; லேவி 20:19-20; லேவி 24:15)

அவர் நமது நோய்களைச் சுமந்தார். (ஏசா 53:4; மத் 8:17) நம்முடைய பாடுகளில் நமக்கு உதவி புரிய வேண்டும் என்பதைவிட நமது பாடுகளிலிருந்து நம்மை விடுவிக்க வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் நோக்கம். சிறிது காலம் நமது நோய்களைச் சுமந்து விட்டு அதன்பின்பு அந்த வேதனைகளை நம்மிடம் திருப்பித் தரமாட்டார். நமது நோய்களை நம்மை விட்டு அகற்றுவார். (ரோமர் 8:17-24; 1பேதுரு 2:24)

நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்பது நமது ஆவிக்குரிய நோய்களை மட்டுமே குறிக்கும் என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து நமது சரீர நோய்களைச் சுமந்தார். நமது ஆத்துமாவிற்கு இரட்சிப்பைக் கொடுப்பதைப்போல நமது சரீரத்தையும் சொஸ்தமாக்கி இரட்சிக்கிறார். (ரோமர் 8:11, 17-24; பிலி 3:21; எபே 5:27)

இயேசு கிறிஸ்து நமது பாவங்களை அகற்றுவதுபோலவே நமது நோய்களையும் குணமாக்குகிறார். (ஏசா 6:10; ஏசா 61:1; மத் 13:15; யோவான் 10:10). அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் (With His stripes we are healed) (ஏசா 53:5; மத் 8:17; 1பேதுரு 2:24)

"பெலவீனங்கள்" (infirmities) - சரீரத்தில் பெலவீனம், சிந்தையில் பெலவீனம், சரீர வியாதி ஆகியவற்றைக் குறிக்கும். இவையெல்லாவற்றையுமே இயேசு கிறிஸ்து சிலுவையில் சுமந்து, ஏசாயா 53-ஆவது அதிகாரத்தை நிறைவேற்றினார். எல்லா பெலவீனங்களும் வியாதியல்ல. ஆனால் வியாதிகள் பெலவீனத்தைத் தரும். (லூக்கா 5:15; லூக்கா 7:21; லூக்கா 8:2; லூக்கா 13:11-12; யோவான் 5:5) ஆசாரியர்களுக்குப் பெலவீனம் இருந்தது. (எபி 5:2; எபி 7:28) அவர்கள் சரீரப்பிரகாரமாக ஆரோக்கியமாக இருந்தார்கள். ஆனாலும் பெலவீனமாக இருந்தார்கள். (லேவி 21:17-24)

எல்லா பரிசுத்தவான்களுமே ஏதாவது சில காரியங்களில் பெலவீனமானவர்களாக இருப்பார்கள். (ரோமர் 8:26) இந்தப் பெலவீனம் சரீர வியாதியைக் குறிக்கும் என்று கூறமுடியாது. (ரோமர் 14:1-2; ரோமர் 15:1)

8 அதிகாரம்

பவுலுக்குச் சரீரத்தில் பாடுகளினால் பெலவீனம் இருந்தது. (2கொரி 11: 24-30; 2கொரி 12:5-10; கலா 4:13) அவனுடைய சரீரத்தில் வியாதியிருந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை. பவுலின் சரீரத்தில் இருந்த முள் என்பது சாத்தானின் தூதனைக் குறிக்கும். அவன் பவுலுக்கு அடிகளையும், கல்லெறிகளையும் கிடைக்கச்செய்தான். (2கொரி 12:7)

சரீரம், ஆத்துமா, ஆவி, விசுவாசம், திறமை ஆகிய எதிலுமே பெலவீனம் இருக்க முடியும். அஸ்தினாய் **(astheneia)** என்னும் "கிரேக்கச்சொல்லே" பெலவீனம், வியாதி என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பலவீனம் **(weakness)** - **ἀσθένεια** - **astheneia** - 769

பெண்பால் பெயர்ச்சொல் - பலவீனம், **(weakness)** (1கொரி 2:3; 1கொரி 15:43; 2கொரி 12:9; 2கொரி 13:4; எபி 11:34) பிணி வியாதி **(infirmity)** (ரோமர் 6:19; ரோமர் 8:26; 2கொரி 11:30; எபி 4:15; எபி 5:2; எபி 7:28)

"நோய்" - வேதாகமத்தில் நோய் என்பது சரீர வியாதியையே குறிக்கும். (உபா 28:59; உபா 29:22; மத் 8:17; மாற்கு 3:15) ஆவிக்குரிய வியாதியைக் குறிப்பதாக வேதத்தில் குறிப்பு எதுவுமில்லை.

12. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - (10:37; 16:24)

மத் 8:18 பின்பு, திரளான ஜனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கிறதை இயேசு கண்டு, அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார்.

மத் 8:19 அப்பொழுது, வேதபாரகன் ஒருவன் வந்து: போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்.

மத் 8:20 அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.

மத் 8:21 அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான்.

மத் 8:22 அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்.

"மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" - (யோவான் 1:51)

"என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்" - இது ஒரு சாக்குப்போக்கு. மரித்தவரைப் பொதுவாக மரித்த நாளிலேயே அடக்கம்பண்ணுவது வழக்கம்.

"மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்" - ஆவிக்குரிய ரீதியாக மரித்தோர்கள் சரீரப்பிரகாரமாக மரித்தோரை அடக்கம்பண்ணட்டும். (எபே 2; 1தீமோ 5:6)

13. இயேசு பெருங்காற்றை அமைதிப் படுத்துகிறார் - (லூக் 8:22; மாற்கு 4:35)

மத் 8:23 அவர் படவில் ஏறினபோது அவருடைய சீஷர்கள் அவருக்குப் பின் சென்று ஏறினார்கள்.

மத் 8:24 அப்பொழுது படவு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார்.

மத் 8:25 அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள்.

8 அதிகாரம்

மத் 8:26 அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

மத் 8:27 அந்த மனுஷர்கள் ஆச்சரியப் பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.

பூமியதிர்ச்சி **(earthquake)** - **σεισμός** - **seismos** - 4578

ஆண்பால் பெயர்ச்சொல் - பெருங்காற்று, பூமியதிர்ச்சி (மத் 24:7; மத் 27:54; மத் 28:2; மாற்கு 13:8; லூக்கா 21:11; அப் 16:26; வெளி 6:12; வெளி 8:5; வெளி 11:13,19; வெளி 16:18)

சுழல்காற்று **(tempest)** - **λαῖλαψ** - **lailaps** - 2978

பெண்பால் பெயர்ச்சொல் - சுழல்காற்று (மாற்கு 4:37; லூக்கா 8:23; 2பேதுரு 2:17)

"காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று" - இந்தப் பெருங்காற்றிற்குக் காரணமானவன் சாத்தான். அவன் இயேசுவைக் கொல்ல முயற்சி பண்ணினான். (எபே 2:2) தேவன் இந்தக் காற்றை அனுப்பியிருந்தார் என்றால் இயேசு அதைக் கடிந்து கொள்ளமாட்டார். (மத் 8:24,26)

14. இயேசு பிசாசு பிடித்திருந்த இரண்டு பேரைச் சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 5:1-16; லூக் 8:26-36)

மத் 8:28 அவர் அக்கரையிலே கெர்கெசேனர் நாட்டில் வந்தபோது, பிசாசு பிடித்திருந்த இரண்டுபேர் பிரேதக் கல்லறைகளிலிருந்து புறப்பட்டு, அவருக்கு எதிராக வந்தார்கள்; அவர்கள் மிகவும் கொடியராயிருந்தபடியால், அந்த வழியாக ஒருவனும் நடக்கக் கூடாதிருந்தது.

மத் 8:29 அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்.

மத் 8:30 அவர்களுக்குக் கொஞ்ச தூரத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன.

மத் 8:31 அப்பொழுது, பிசாசுகள்: நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும் என்று அவரை வேண்டிக்கொண்டன.

மத் 8:32 அதற்கு அவர்: போங்கள் என்றார். அவைகள் புறப்பட்டு, பன்றிக்கூட்டத்தில் போயின; அப்பொழுது, பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, ஜலத்தில் மாண்டுபோயின.

மத் 8:33 அவைகளை மேய்த்தவர்கள் ஓடி, பட்டணத்தில் சென்று, இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும், பிசாசு பிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளையும் அறிவித்தார்கள்.

மத் 8:34 அப்பொழுது, அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர்கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள்.

8 அதிகாரம்

“அக்கரையிலே கெர்கெசேனர் நாடு” - கப்பர்நகூமின் எதிர்ப்புறம் (மத் 8:5,18,28)

கெர்கெசேனருடைய பட்டணம் என்பது கதரேனர் பட்டணம் அல்ல. கதரேனருடைய பட்டணத்தில் இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு சீஷர்களை அழைத்த பின்பு பிசாசு பிடித்த ஒருவனை மட்டும் குணமாக்கினார். (மாற்கு 5:1-20; லூக்கா 8:26-40)

“பிரேதக்கல்லறைகள்” - அக்காலத்தில் குகைகளில் பிரேதக்கல்லறைகளை வெட்டி வைத்திருப்பார்கள். ஊருக்கு வெளியே துரத்தப்பட்டவர்கள் இங்கு வந்து அடைக்கலம் புகுவது வழக்கம்.

“இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன?” - பிசாசுகளுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவரால் தங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பது பற்றியும் நன்றாகத் தெரியும். (அப் 19:15)

“பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, ஜலத்தில் மாண்டுபோயின” - (லூக்கா 8:32)

முதல் முறையாக ஒரு பட்டணத்தார் எல்லோருமாகச் சேர்ந்து இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் பட்டணம் கெர்கெசேனருடைய பட்டணமாக இருக்கலாம். (மத் 11:20-24; மத் 23:37-39) யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் பன்றி ஒரு அசுத்தமான மிருகம். (மத் 11:20-24; மத் 23:37-39) அதற்காக அவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. இயேசுவைச் சுத்தமான நீதியான காரியங்களுக்காக யாருமே புறக்கணிக்க இல்லை. (யோவான் 3:18-20)

9 அதிகாரம்

15. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர் வாதக்காரனைக் குணப் படுத்துகிறார் - (மாற்கு 2:1; லூக் 5:17; யோவான் 2:12)

மத் 9:1 அப்பொழுது, அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டு தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்.

மத் 9:2 அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

மத் 9:3 அப்பொழுது, வேதபாரகரில் சிலர்: இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக்கொண்டார்கள்.

மத் 9:4 இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?

மத் 9:5 உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?

மத் 9:6 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்.

மத் 9:7 உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான்.

மத் 9:8 ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

"தம்முடைய பட்டணம்" - இயேசு கிறிஸ்துவினுடைய தலைமைச் செயலகம். (மத் 4:13; மத் 8:5)

"திமிர்வாதக்காரன்" - **(palsy) A paralytic** (மத் 4:24)

"படுக்கை" - இந்தப் படுக்கையைச் சுற்றி வைத்து, ஒருவர் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்குச் சுமந்து செல்ல முடியும். (மாற்கு 2:3; லூக்கா 5:18; யோவான் 5:8-12; அப் 5:15)

"இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டார்" - விசுவாசத்தைக் காண முடியும். (மாற்கு 2:5; லூக்கா 5:20; அப் 14:9) அவிசுவாசத்தையும் காணமுடியும். (மாற்கு 6:6; மாற்கு 16:14).

"உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" - மத் 1:21 இந்த வசனத்தில் முதன் முறையாக நிறைவேறுகிறது. தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாகவோ அல்லது தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்காமலேயோ ஆண்டவரால் மனுஷருடைய பாவத்தை மன்னிக்க முடியும் என்பதற்கு இந்த வசனம் ஒரு சான்று. பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமானால் சில சடங்குகளைக் கையாளவேண்டும் என்று சிலர் உபதேசம் பண்ணுகிறார்கள். அது தவறான உபதேசம். (மத் 9:2,22; மாற்கு 5:34; மாற்கு 10:52; லூக்கா 7:36-50; லூக்கா 8:48; லூக்கா 18:9-14; லூக்கா 19:1-9; லூக்கா 23:43; யோவான் 4:49-53; யோவான் 7:31; யோவான் 8:30-31; யோவான் 11:45; யோவான் 12:11,42; அப் 3:1-16; அப் 4:12; அப் 10:43; அப் 11:14; அப் 15:9)

9 அதிகாரம்

"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?" - இந்தக் கேள்வியை இன்றும் சிலர் பிரச்சனையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இயேசுவின் காலத்தில் இயேசுவால் வியாதியைக் குணப்படுத்த முடியும் என்று ஜனங்கள் நம்பினார்கள். ஆனால் ஒருவனுடைய பாவத்தை மன்னிப்பதற்கு இயேசு கிறிஸ்துவிற்கு அதிகாரம் இல்லை என்றார்கள். இயேசு பாவத்தை மன்னிப்பதாகக் கூறுவது தேவதூஷணம் என்பது அந்த காலத்து ஜனங்களின் எண்ணம்.

இக்காலத்தில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இயேசு கிறிஸ்து பாவங்களை மன்னிப்பார் என்று எல்லோரும் நம்புகிறார்கள். ஆனால் அவர் நோய்களைக் குணப்படுத்துவார் என்று கூறும்போது பலர் அதை நம்ப மறுக்கிறார்கள். இது தேவதூஷணம் என்றே கூறுகிறார்கள்.

தேவனால் நோய்களைக் குணப்படுத்த முடியுமா? என்றால் முடியும் என்கிறார்கள். அவர் குணப்படுத்துகிறாரா என்றால் அவர் இப்பொழுது குணப்படுத்துவதில்லை என்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து மாறிவிட்டாரா? புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நோய்களைக் குணப்படுத்தியவர் நமது காலத்தில் குணப்படுத்தமாட்டாரா? அவருடைய அன்பு மாறிவிட்டதா? அவருடைய அன்பு மாறவில்லை. அவருடைய வல்லமையும் மாறவில்லை. நாம் மாறிவிட்டோம். நமது விசுவாசமும் மாறிவிட்டது. புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற காரியங்களை முழுவதுமாக விசுவாசித்துச் செயல்படுவதுதான் ஊழியம். (மத் 28:20; மாற்கு 16:15-20; யோவான் 14:12-17; அப் 1; 1கொரி 12; யாக் 5:14-16).

இயேசு கிறிஸ்துவால் சரீரத்தையும் சொஸ்தமாக்க முடியும், ஆத்துமாவையும் இரட்சிக்க முடியும். (மாற்கு 16:17-18; யோவான் 14:12-15; யோவான் 15:16; யோவான் 16:23-26; அப் 3:16; அப் 4:12)

இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்தின் பிரகாரம் ஊழியம் செய்தார். சரீரத்தைச் சொஸ்தமாக்கி, ஆத்துமாவை இரட்சிப்பது பிதாவின் சித்தம். கிறிஸ்து அந்த ஊழியத்தை இன்றும் எவ்வித மாற்றமுமின்றி செய்து வருகிறார். (மத் 7:7-11; லூக்கா 11:9-13)

அதிகாரம் (power) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம்

தேவனுடைய நாம மகிமைக்காக தேவனுடைய சார்பாக அவருடைய வல்லமையைப் பயன்படுத்தும் அதிகாரம். பூமியிலே தேவனுடைய சித்தத்தையும், கிரியையையும் செய்வதற்கு இயேசு கிறிஸ்துவிற்குப் பூரண அதிகாரம் இருந்தது. (மத் 9:6; மத் 4:23-24; மத் 8:17; மத் 10:1-8; மாற்கு 1:27; லூக்கா 4:36; லூக்கா 10:19; யோவான் 5:27; யோவான் 17:2). இப்பொழுது இயேசு கிறிஸ்துவிற்கு வானத்திலும், பூமியிலும் அதிகாரம் உள்ளது. (மத் 28:18; எபே 1:20-23; கொலோ 2:9-17; எபி 1:3; எபி 7:25; 1பேதுரு 3:22) தமது அதிகாரத்தை ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்வதாக வாக்குப்பண்ணுகிறார். (மத் 18:18)

16. மத்தேயு அல்லது லேவியின் அழைப்பு - (மாற்கு 2:13; லூக்கா 5:27)

மத் 9:9 இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின் சென்றுவா என்றார்; அவன் எழுந்து, அவருக்குப் பின்சென்றான்.

17. பரிசேயருக்குப் பதிலுரைகள் - (மாற்கு 2:15-17; லூக் 5:30-32)

மத் 9:10 பின்பு அவர் வீட்டிலே போஜன பந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள்.

9 அதிகாரம்

மத் 9:11 பரிசேயர் அதைக் கண்டு, அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும்போஜனம் பண்ணுகிறது என்னவென்று கேட்டார்கள்.

மத் 9:12 இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்குவேண்டியதில்லை.

மத் 9:13 பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

"அவர் வீட்டிலே போஜன பந்தியிருக்கையில்" - இது மத்தேயுவின் வீடு. (லூக்கா 5:27-30)

"ஆயக்காரர்" - (மத் 5:46)

"பாவிகள்" - யூதர்கள் ஒரு சில ஜனங்களைப் பாவிகள் என்று பிரித்து வைத்திருந்தார்கள். இவர்கள் தங்கள் பாவ ஜீவியத்தில் வெளிப்படையாக ஜீவித்து வந்தவர்கள். யூதமார்க்கத்தில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை, யூதமார்க்கத்துப் பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதும் இல்லை. பாவிகள் ஆயக்காரரோடு சேர்த்து ஒன்பது இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். (மத் 9:10-13; மத் 11:19; மாற்கு 2:15-16; லூக்கா 5:30; லூக்கா 7:34; லூக்கா 15:1) தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக் கேட்க மாட்டார் என்பது யூதர்களுடைய நம்பிக்கை. (யோவான் 9:31) புறஜாதிகள் எல்லோரையும் யூதர்கள் பாவிகள் என்றே கருதினார்கள். (கலா 2:15-17) கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களைப் புதிய ஏற்பாடு பாவிகள் என்று கூறுகிறது. (ரோமர் 3:19-23; ரோமர் 5:12-21)

"பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" - இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிப்பதற்கு வந்தார். நீதிமான்களை இரட்சிப்பதற்கு வரவில்லை. (மத் 9:12-13; ரோமர் 5:8; 1தீமோ 1:15)

"பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன். ... நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" - ஓசி 6:6; 1சாமு 15:22 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. நமது இருதயங்களில் பலிகளை விட இரக்கங்களைத் தேவன் அதிகமாக எதிர்பார்க்கிறார். நாம் பாவிகளோடு இருப்பதினால் அசுத்தமானவர்களாக இருக்கிறோம் என்னும் எண்ணம் நம்மிடத்தில் இருக்குமானால் நமது பலியினால் பிரயோஜனம் எதுவுமில்லை. இயேசு கிறிஸ்து பாவத்தை வெறுக்கிறார். ஆனால் பாவியையோ நேசிக்கிறார்.

18. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்குப் பதிலுரை - (மாற்கு 2:18-20; லூக் 5:33-35)

மத் 9:14 அப்பொழுது, யோவானுடைய சீஷர் அவரிடத்தில் வந்து: நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசிக்கிறோமே; உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள்.

மத் 9:15 அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்.

"யோவானுடைய சீஷர் அவரிடத்தில் வந்தார்கள்" - இந்த வசனத்தில் யோவானின் சீஷர்கள் முதல் முறையாக இயேசுவிடம் வந்த குறிப்பு உள்ளது. அவர்கள் மறுமுறை இயேசுவிடம் வந்தது மத் 11:1-15 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 8

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும்" - (மத் 9:15) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

9 அதிகாரம்

"மணவாளனுடைய தோழர்" - திருமண விழாவின்போது இவர்கள் மணவாளனுடன்கூட இருப்பார்கள். மணவாளன் மணவாட்டியின் வீட்டிற்குச் சென்று மணவாட்டியை அழைத்து வரும்போது இந்தத் தோழர்களும் மணவாளனோடு உடன் செல்வார்கள். திருமண விருந்து ஏழு நாட்கள் நடைபெறும். ஸ்திரீயானவள் முப்பது நாட்களுக்கு மணவாட்டியாக இருப்பாள். (யோவான் 17:12)

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்" - (லூக்கா 24:50-51; அப் 1:9-11)

19. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - (மாற்கு 2:21; லூக் 5:36)

மத் 9:16 ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்க மாட்டான்; இணைத்தால், அதினோடே இணைத்த துண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும்.

மத் 9:17 புது திராட்ச ரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதும் இல்லை; வார்த்து வைத்தால், துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்; புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார்.

"கோடித்துண்டு" - தைக்கப்படாத புதிய துணி. எளிதில் கிழிந்துவிடக்கூடியது.

புதிய (new) - νέος - neos - 3501

பெயரடை - புது, இளைய, வாலிபரான, புதிதான, புதிய, இளவயதுள்ள

"பழந்துருத்திகள்" - பழைய துருத்திகளில் திராட்சை ரசத்தை வார்த்து வைக்க மாட்டார்கள். பழந்துருத்திகள் பலவீனமாக இருக்கும். திராட்சை இரசம் வார்க்கப்படும்போது துருத்திகள் கிழிந்துபோகும். பழந்துருத்திகளில் திராட்சைரசத்தை வார்த்து வைப்பதற்கு முன்பாக துருத்திகளைத் தண்ணீரில் ஊறவைப்பார்கள். துருத்திகளின்மீது எண்ணெய் தேய்ப்பார்கள். இதனால் துருத்தி கீறல் விழுந்து, ஒழுகாது. திராட்சைரசத்தை வார்த்து வைக்கும்போது புதிய இரசங்களைப் புதிய துருத்திகளில் வார்த்து வைப்பது வழக்கம். புதிய துருத்தி என்னும் வாக்கியத்தில் புதிய என்னும் சொல்லின் கிரேக்கச் சொல் கைனோஸ் (kainos).

புதிய (new) - καινός - kainos - 2537

பெயரடை - புது, புதிய, நவமான, புதிதான

புதிய இரசம், புதிய துருத்தி என்பது பாவிகள் இரட்சிக்கப்படுவதையும், அவர்கள் புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்வதையும் குறிக்கும். (மத் 9:10-13, 2கொரி 5:17-18; எபே 4:23-24; கொலோ 3:10; ரோமர் 12:2)

20. பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - மரித்த சிறுபெண்ணை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - (மாற்கு 5:21; லூக் 8:40)

மத் 9:18 அவர் இவைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கையில், தலைவன் ஒருவன் வந்து அவரைப் பணிந்து: என் மகள் இப்பொழுதுதான் மரித்துப்போனாள்; ஆகிலும், நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்றான்.

மத் 9:19 இயேசு எழுந்து, தம்முடைய சீஷரோடுகூட அவன் பின்னே போனார்.

மத் 9:20 அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ:

9 அதிகாரம்

மத் 9:21 நான் அவருடைய வஸ்திரத்தை யாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

மத் 9:22 இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்.

மத் 9:23 இயேசுவானவர் தலைவனுடைய வீட்டிலே வந்து, தாரை ஊதுகிறவர்களையும், இரைகிற ஜனங்களையும் கண்டு:

மத் 9:24 விலகுங்கள், இந்தச் சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள்.

மத் 9:25 ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார்; உடனே அவள் எழுந்திருந்தாள்.

மத் 9:26 இந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

யவீரு என்னும் தலைவன் செய்த காரியங்கள்

1. இயேசுவிடம் தனிப்பட வந்தான். (மத் 9:18)
2. இயேசுவைத் தாழவிழுந்து பணிந்து கொண்டான். (மாற்கு 5:22)
3. இயேசுவிடம் வருந்திக் கேட்டுக் கொண்டான். (மாற்கு 5:23)
4. தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினான். (மத் 9:18)

"இப்பொழுதுதான் மரித்துப் போனாள்" - யவீரு வீட்டை விட்டுக் கிளம்பும்போது அவனுடைய மகள் மரித்துக் கொண்டிருந்தாள். இப்போது அவள் மரித்துப்போனாள்.

"இயேசு எழுந்து, தம்முடைய சீஷரோடுகூட அவன் பின்னே போனார்" - இயேசு விரும்பி இருந்தால் மத் 8:13; மத் 15:28; யோவான் 4:50-54 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரம் தூர இருந்தே அந்தச் சிறுமியைச் சொஸ்தமாக்க அவரால் கூடும். ஆனாலும் யவீரு கேட்டுக் கொண்டபிரகாரமாக அவனோடு கூட அவனுடைய வீட்டிற்குப் போனார். தம்முடைய சீஷர்களுக்கு ஊழியத்தைப் பற்றிக் கற்றுக் கொடுப்பதற்காகவும், தமது முன்மாதிரியை அவர்களுக்குக் காண்பிப்பதற்காகவும் இயேசு இவ்வாறு செய்திருக்கலாம்.

"அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்" - (லூக்கா 8:3)

ஓரம் (hem) - κράσπεδον - **kraspedon** - 2899

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஓரம், தொங்கல் (மத் 9:20; மத் 14:36; மத் 23:5; மாற்கு 6:56; லூக்கா 8:44, எண் 15:38-41; உபா 22:12, மத் 23:5).

"இயேசு திரும்பினார்" - தமது வஸ்திரத்தைத் தொட்டவுடனேயே அதை அவர் தமது ஆவியிலே உணர்ந்தார். மனுஷர்களைப் பற்றியும் அவர்களுடைய வியாதிகளைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும். அவர் ஆவியானவரின் வரங்கள் எல்லாவற்றையுமே பெற்றிருந்தார். (1கொரி 12; ஏசா 11:2; ஏசா 61:1)

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - சுவிசேஷப் புஸ்தகங்களில் ஏழு இடங்களில் இந்த வாக்கியத்தை வாசிக்கிறோம். (மத் 9:22; மாற்கு 5:34; மாற்கு 10:52; லூக்கா 7:50; லூக்கா 8:48; லூக்கா 17:19; லூக்கா 18:42)

9 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தின் ஓரம் நீல நிறத்தினால் ஆனது. வஸ்திரத்தின் ஓரத்திலுள்ள நீல நிறம் தேவனுடைய வார்த்தையைக் குறிக்கும். ஒரு சில மார்க்கத் தலைவர்கள் நீண்ட வஸ்திரத்தை அணிந்திருப்பார்கள். வஸ்திரத்தின் ஓரத்தில் நீலநிறமும் இருக்கும். ஆனால் அவர்களுடைய ஜீவியம் தங்கள் வஸ்திரத்திற்கு ஏற்றபடி இராது.

இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் ஜீவிக்கிறார். அவருடைய வஸ்திரத்தின் ஓரத்திலுள்ள நீலநிறம் அவர் ஒரு உண்மையான தேவமனுஷன் என்பதை வெளிப்படுத்துகிறது. அவரிடத்தில் மாய்மாலம் எதுவும் இல்லை. உடன்படிக்கையின் பிரகாரம் எல்லா இஸ்ரவேலரையும் தேவனுடைய வார்த்தை குணமாக்கும். (சங் 105:37; சங் 107:20) இதை அந்த ஸ்திரீ பூரணமாக நம்பினாள். இந்த விசுவாசத்தினால்தான் இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

தமது வஸ்திரத்தின் ஓரத்தை அந்த ஸ்திரீ தொட்டவுடன் அந்த ஸ்திரீயின் விசுவாசமும், அவளுடைய எதிர்பார்ப்பும் இயேசு கிறிஸ்துவிற்குப் பரிபூரணமாகத் தெரிய வந்தது. ஆகையினால்தான் இயேசு அவளைப் பார்த்தவுடனே "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறினார்.

இயேசு கிறிஸ்துவின் வார்த்தை அவளுடைய சரீரத்தில் உடனடியாகக் கிரியை செய்தது. 12 வருஷமாக அவளுக்கு இருந்த உதிரப்போக்கு உடனடியாக நின்றுபோனதை அவள் அறிந்து கொண்டாள். (மாற்கு 5:29)

"தாரை ஊதுகிறவர்களையும், இரைகிற ஜனங்களையும்" - மரித்தோர்களுடைய வீடுகளில் சில சடங்குகளைச் செய்வார்கள். தாரை ஊதுகிறவர்களை அழைத்து வந்து அதை ஊதச்செய்வார்கள். ஒப்பாரி வைக்கிற ஸ்திரீகளைக் கூலிக்கு அமர்த்தி, அவர்களை ஒப்பாரி பாடச்சொல்வார்கள். (எரே 9:17-21; எரே 48:36; ஆமோ 5:16). மிகவும் ஏழையானவனுடைய வீட்டில்கூட யாராவது மரித்துப்போனால் அங்கு இரண்டு தாரை ஊதுகிறவர்களும், ஒப்பாரி பாடுகிற ஒரு ஸ்திரீயும் குறைந்தபட்சமாக இருப்பார்கள்.

"மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" - நீங்கள் நினைப்பதுபோல அவள் நம்பிக்கையில்லாமல் மரித்துப்போகவில்லை. நான் அவளை உயிருடன் எழுப்புவேன்.

"ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு" - அங்கு ஏளனப்பேச்சுக்காரர்கள் இருந்தார்கள். ஒரே சந்தடியாக இருந்தது. அவர்கள் துரத்தப்பட்டால்தான் விசுவாசம் கிரியை நடப்பிக்கும். அற்புதம் நடைபெறும் என்பதற்காக அவர்கள் துரத்தப்படவில்லை. அவர்கள் சந்தடி பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் ஒரு அமைதியையும், பக்தியான சூழ்நிலையையும் கொண்டு வரவேண்டுமென்பதற்காக அந்த ஜனங்கள் வெளியே துரத்தப்பட்டார்கள்.

"அவள் எழுந்திருந்தாள்" - மரித்தவள் உயிரோடு எழும்பினாள். வேதாகமத்தில் பத்து இடங்களில் மரித்தோர் உயிரோடு எழுப்பப்பட்ட அற்புதங்களை நாம் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து மரித்துப்போன மூவரை உயிரோடு எழுப்பினார். (மத் 9:25; லூக்கா 7:14; யோவான் 11) மற்றவர்கள் மரித்துப்போன மேலும் ஏழு பேரை உயிரோடு எழுப்பினார்கள். (1இராஜா 17:21; 2இராஜா 4:34; 2இராஜா 13:20-21; யோனா 2:1-10-மத் 12:40; அப் 9:40; அப் 14:20; அப் 20:10).

21. இரண்டு குருடரைக் குணமாக்குகிறார் - (20:29; மாற்கு 10:46; லூக் 18:35)

மத் 9:27 இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

மத் 9:28 அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள்.

9 அதிகாரம்

மத் 9:29 அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.

மத் 9:30 உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

மத் 9:31 அவர்களோ புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள்.

"அவர் வீட்டிற்கு வந்தபின்பு" - இயேசு கிறிஸ்து மத்தேயுவின் வீட்டிற்கு திரும்பவும் வந்தபின்பு. (மத் 9:10,18,23,27-28)

"அவர்களுடைய கண்களை அவர் தொட்டார்" - (மத் 8:3)

"உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" - விசுவாசத்தின் பிரமாணம். (மத் 8:13)

கண்டிப்பாய்க் கட்டளையிடு (straitly charged) - ἐμβριμάομαι - embrimaomai - 1690

விணைச்சொல் - கண்டிப்பாய்க் கட்டளையிடு, கண்டிப்பாய் சொல்லு (sternly enjoin; to charge at risk of displeasure) தம்மைப் பற்றிய காரியங்களை முடிந்த வரையிலும் தமது சத்துருக்களை விளம்பரம் பண்ணாமல் இருக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார். (மத் 8:4)

"அவர்களோ புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள்" - இயேசு கிறிஸ்து மத் 9:30-இல் கூறியிருக்கிற காரியங்களை அவர்கள் புரிந்து கொள்ளவும் இல்லை, அதற்கு முக்கியத்துவம் தரவும்இல்லை.

22. ஊமையனைக் குணப்படுத்துகிறார் - பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக முதல்ாவது தூஷணம் - (12:24,31)

மத் 9:32 அவர்கள் புறப்பட்டுப் போகையில், பிசாசுபிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.

மத் 9:33 பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை என்றார்கள்.

மத் 9:34 பரிசேயரோ: இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

"அவர்கள் புறப்பட்டுப் போகையில்" - (மத் 9:9-10,18,27-28,32)

"பிசாசுபிடித்த ஊமையன்" - பிசாசு ஒருவனை ஊமையாக்குகிறது.

"இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான்" - பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகக் கூறப்பட்ட முதலாவது தேவதூஷணம். இயேசு கிறிஸ்துவை அவர்கள் எதிர்ப்பதை வெளிப்படையாகக் காண்பிக்கிறார்கள். அறிந்தும், வேண்டுமென்றும், ஒளிக்கு எதிராக பாவம் செய்கிறார்கள். (யோவான் 3: 1-2; மத் 12:31-32)

23. கலிலேயாவிற்கு மூன்றாவது முறையாகப் பிரயாணம் - (4:12,23; லூக் 4:42)

மத் 9:35 பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெபஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

9 அதிகாரம்

மத் 9:36 அவர் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப் பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,

மத் 9:37 தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;

மத் 9:38 ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்.

"ஜெபஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்" - இயேசு கிறிஸ்துவின் மூன்று அம்ச ஊழியம்.

1. உபதேசித்தார்
2. பிரசங்கித்தார்
3. சகல வியாதிகளையும் சகல வியாதிகளையும் நீக்கி, ஜனங்களைச் சொஸ்தமாக்கினார்.(மத் 4:23-24; அப் 10:38)

உபதேசி (Teaching) - διδάσκω - **didaskoo** - 1321

வினைச்சொல் - உபதேசி, போதி, பிரசங்கி, போதகம் பண்ணு, உபதேசம் பண்ணு, கற்றுக்கொடு **(to instruct; deliver a discourse; to impart knowledge; instill doctrine into another; to explain)**

இயேசு கிறிஸ்து மிகச்சிறந்த உபதேசியார். அவருடைய உபதேசங்களைக் கேட்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஜனங்கள் தம்மிடம் கேள்வி கேட்பதையும், இயேசு அனுமதித்தார். ஜனங்களுடைய சந்தேகங்களெல்லாம் தீர வேண்டும். அவர்கள் தெளிவடைய வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் நோக்கம். (மத் 13:11,51; மாற்கு 8:11; மாற்கு 12:34; லூக்கா 2:46; லூக்கா 23:9)

பிரசங்கி (Preaching) - κηρύσσω - **keeryssoo** - 2784

வினைச்சொல் - பிரசங்கி, பிரசங்கம் பண்ணு, பிரசித்தம் பண்ணு, கூறு **(to herald as a public crier; proclaim)**

வேதாகமத்தில் உபதேசம் பண்ணுதல் என்னும் சொல் 168 இடங்களில் வருகிறது. இவற்றில் பாதி பழைய ஏற்பாட்டிலும், மீதி புதிய ஏற்பாட்டிலும் உள்ளது. ஆனால் பிரசங்கம் பண்ணுதல் என்னும் சொல் பழைய ஏற்பாட்டில் 5 இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டிலோ 138 இடங்களில் உள்ளது.

பிரசங்கம் பண்ணுவதினால் ஜனங்களைச் சத்தியத்திற்கு நேராக அழைக்கிறோம். உபதேசம் பண்ணுவதினால் ஜனங்களுக்குச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறோம். ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய குடும்பத்தில் சத்தியத்தை உபதேசிப்பவராக இருக்க வேண்டும். (உபா 4:1-14; உபா 11:19)

"சொஸ்தமாக்கினார்" - வியாதிகளையும், நோய்களையும் சொஸ்தமாக்குவது இயேசு கிறிஸ்துவின் ஊழியம். (மத் 9:23-24; மத் 9:35; லூக்கா 4:16-21; யோவான் 10:10; அப் 10:38) தம்முடைய ஊழியக்காரர்களும் இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று இயேசு கட்டளை கொடுத்திருக்கிறார். (மத் 10:1-8; மத் 28:20; மாற்கு 3:15; மாற்கு 6:7-13; மாற்கு 16:15-20; லூக்கா 9:2; லூக்கா 10:9; யாக் 5:14-16)

"சகல வியாதிகளையும், சகல நோய்களையும்" - (யாக் 13:58)

"இயேசு அவர்கள்மேல் மனதுருகினார்" - மனதுருக்கம் கர்த்தருடைய சுபாவம். விசுவாசிகளிடமும் மனதுருக்கம் இருக்க வேண்டும். தேவையுள்ள ஜனங்களைக் காணும்போதும், அவதியுறும் ஜனங்களைக் காணும்போதும் நமது இருதயம் இளகவேண்டும். மனது உருக வேண்டும். அவர்களுக்கு விடுதலையைக் கொடுக்க வேண்டுமென்று நமது உள்ளத்தில் ஒரு வாஞ்சை உண்டாக வேண்டும்.

9 அதிகாரம்

இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும் ஜனங்களைக் காணும் போதெல்லாம் அவருடைய மனது உருகிற்று. ஒன்பது இடங்களில் இயேசுவின் மனதுருக்கத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். (மத் 9:36; மத் 14:14; மத் 15:32; மத் 20:34; மாற்கு 1:41; மாற்கு 5:19; மாற்கு 6:34; மாற்கு 8:2; லூக்கா 7:13)

"தொய்ந்து போனவர்கள்" - ஜனங்கள் களைத்துப்போயிருக்கிறார்கள். மேய்ப்பர்கள் கைவிட்டதினால் பல இடங்களுக்கும் அலைந்துதிரிந்து வாடிப்போயிருக்கும் ஆடுகளைப்போல இருக்கிறார்கள். பரிசேயரும், வேதபாரகரும் ஜனங்களைப் புறக்கணித்து விட்டார்கள். பாடுகளை அனுபவிக்கும் ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று கூறி, அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டார்கள். (யோவான் 7:49) கைவிடப்பட்ட ஜனங்களைப் பார்த்து இயேசு மனதுருகுகிறார்.

"மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல" - இரட்சிக்கப்படாதவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போன்றவர்கள். (சங் 119:176; ஏசா 53:6-7; எரே 50:6; மத் 10:6; லூக்கா 15:4-6) இரட்சிக்கப்பட்டவர்கள் ஒரு காலத்தில் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ இயேசு கிறிஸ்து அவர்களுக்கு நல்ல மேய்ப்பராக இருக்கிறார். (மத் 10:16; மத் 26:31; யோவான் 10:1-29; யோவான் 21:16,17; எபி 13:20; 1பேதுரு 2:25).

"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" - கிறிஸ்தவ ஊழியம் அறுவடையின் ஊழியத்திற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. (லூக்கா 10:1-2; யோவான் 4:35)

"அறுப்புக்கு வேலையாட்கள்" - சுவிசேஷ ஊழியத்தை இயேசு கிறிஸ்துவைப்போலவும், ஆதித்திருச்சபையாரைப் போலவும் செய்வதற்கு ஆட்கள் கொஞ்சமாக இருக்கிறார்கள்.

10 அதிகாரம்

24. பன்னிரெண்டு சீஷர்களின் அபிஷேகம் (மாற்கு 3:13; லூக் 6:12; 9:1; மாற்கு 6:7)

(1) சீஷர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார்

மத் 10:1 அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்தார்" - இயேசு கிறிஸ்து தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்கிறதற்காக இரவு முழுவதும் ஜெபம் பண்ணிய பின்பு பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்தெடுத்தார். (மாற்கு 3:13; லூக்கா 6:12-16)

"அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" - இதுவே வல்லமையின் இரகசியம். கர்த்தர் கொடுக்காமல் யாரும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. கர்த்தர் கொடுத்த பின்புகூட நாம் விசுவாசத்தினால் அதைக்காத்துக் கொள்ளவில்லையென்றால் நம்மிடத்தில் அந்த அதிகாரம் தங்காது. (யோவான் 3:27; ரோமர் 8:25)

(2) அப்போஸ்தலர்களின் பெயர்கள் - (மாற்கு 3:16-19; லூக் 6:14-16; அப் 1:13-26)

மத் 10:2 அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான்,

மத் 10:3 பிலிப்பு, பர்த்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு,

மத் 10:4 கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்து என்பவைகளே.

"முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன்" - நான்கு இடங்களில் அப்போஸ்தலர்களின் பெயர்கள் வரிசையாக அட்டவணை கொடுக்கப் பட்டிருக்கிறது. இவை அனைத்திலும் சீமோன் பேதுருவின் பெயரே முதலாவது வருகிறது. (மத் 10:2; மாற்கு 3:16; லூக்கா 6:14; அப் 1:13)

"அவன் சகோதரன் அந்திரேயா" - (மத் 4:18)

"செபெதேயுவின் குமாரன் யாக்கோபு" - (மத் 4:21)

"அவன் சகோதரன் யோவான்" - யோவான் சுவிசேஷம், 1,2,3 யோவான் நிருபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றை எழுதினவன்.

"பிலிப்பு" - (லூக்கா 6:14)

"பர்த்தொலொமேயு" - பிலிப்புவின் சகோதரன். நாத்தான்வேலின் மூதாதையருடைய பெயர். (யோவான் 1: 45-51; யோவான் 21:2) பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன். (மத் 10:3; மாற்கு 3:18; மாற்கு 6:14; அப் 1:13) வரலாற்றின் பிரகாரம் சீரியா, பிரிக்கியா, இந்தியா ஆகிய தேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினான். அதன்பின்பு இவனைச் சிலுவையில் தலைகீழாகத் தொங்கவிட்டு, அடித்துக் கொன்றார்கள். அர்மேனியாவில் அஸ்திகாஸ் இராஜா இவனைச் சிரச்சேதம் பண்ணினான் என்றும் வரலாறு கூறுகிறது.

"தோமா" -இந்தியாவில் இரத்தச்சாட்சியாக மரித்தவன்.

"மத்தேயு" - ஆயக்காரன்.

"அல்பேயுவின் குமாரன் யாக்கோபு" - (லூக்கா 24:10)

10 அதிகாரம்

"ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு" - (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:16; அப் 1:13; யோவான் 14:22). பெர்சியாவில் ஊழியம் செய்தான் என்றும் அங்கிருந்த புறஜாதி ஆசாரியர்கள் இவனை அடித்துக் கொன்று விட்டார்கள் என்றும் வரலாறு கூறுகிறது.

"கானானியனாகிய சீமோன்" - (லூக்கா 6:15)

"இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து" - (யோவான் 6:71)

(3) முதலாவது ஊழிய ஸ்தலம்

மத் 10:5 இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும்,

மத் 10:6 காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்.

"புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும்" - யூதர்கள் மத்தியில் மட்டும் ஊழியம் செய்யுமாறு இயேசு இவர்களை முதலாவதாக அனுப்பினார். (மத் 10:5-6; யோவான் 1:11; ரோமர் 1:16) அதன்பின்பு இயேசு பரமேறுகையில் முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை அறிவிக்குமாறு கட்டளையிட்டார். (மத் 28:19-20; மாற்கு 16:15-20; லூக்கா 24:47; அப் 1:8)

"இஸ்ரவேல் வீட்டார்" - யூதர்கள் (லூக்கா 7:3; யோவான் 1:11,19; யோவான் 3:1; அப் 2:5; அப் 10:39; அப் 11:19; ரோமர் 1:16) 200 இடங்களில் யூதர்களைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் 78 இடங்களில் யூதர்கள் இஸ்ரவேலர் என்று அழைக்கப் படுகிறார்கள். (ரோமர் 3:9,29; ரோமர் 9:24; 1கொரி 10:32; 1கொரி 12:13) யூதர் என்பது இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரையும் குறிக்கும். (மத் 19:28; அப் 26:7; யாக் 1:1; வெளி 7:4; வெளி 21:12)

(4) செய்தியும் வல்லமையும் - (மாற்கு 3:13; 6:7; லூக் 6:12; 9:1)

மத் 10:7 போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.

மத் 10:8 வியாதியுள்ளவர்களைச் சொஸ்த மாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.

"பிரசங்கியுங்கள்" - இயேசு கிறிஸ்து தாம் பிரசங்கித்த செய்தியையே தமது சீஷர்களும் பிரசங்கம்பண்ண வேண்டுமென்று அவர்களுக்குக் கூறினார். (மத் 10:1-8; மாற்கு 3:14-15; மாற்கு 6:7-13; லூக்கா 9:6; லூக்கா 10:1-20)

"பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" - (மத் 4:17; மத் 19:24)

"இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" - சில ஜனங்கள் இலவசமாய்க் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளவில்லை.

(5) வேலையாள் தன் ஆகாரத்திற்குப் பாத்திரனாயிருக்கிறான்

மத் 10:9 உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது,

10 அதிகாரம்

மத் 10:10 வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடிவைக்கவேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்.

"உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது...தேடி வைக்கவேண்டாம்" - தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிவதற்கு முன்பாக நமது பராமரிப்பிற்காக எதையும் சேர்த்து வைக்க வேண்டியதில்லை. தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படியும்போது கர்த்தர் நம்மைப் பராமரிப்பார். அதிகமான பாதரட்சைகளையும், அதிகமான அங்கிகளையும் தேடி வைத்த பின்பு கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம் என்று காத்திருக்கக்கூடாது. நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் நம்மைக் கைவிடமாட்டார். நம்மைப் போஷித்து வழிநடத்துவார். நம்மைப் பராமரிப்பார் என்னும் விசுவாசம் நம்மிடம் இருக்க வேண்டும். (மத் 10:9-10)

"கச்சை" - நம்முடைய முக்கியமான பொருட்களை வைத்துக் கொள்வதற்குப் பயன்படும் பைகள்.

"பை" (script) - மேய்ப்பரின் பை. தனக்குத் தேவையான பொருட்களை மேய்ப்பன் இதில் எடுத்துச் செல்வான்.

"இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடி வைக்கவேண்டாம்" - நம்மை அலங்கரிப்பதற்காக அல்லது நம்மைப் பராமரிப்பதற்காக ஏராளமான காரியங்களைச் சேர்த்து வைப்பதில் நமது காலத்தைச் செலவு செய்யக்கூடாது. (லூக்கா 9:3; மாற்கு 6:8)

"வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" - இது கர்த்தர் தமது ஊழியக்காரருக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம். தமது ஊழியக்காரர்களைக் கர்த்தர் போஷிப்பார். நம்மை அபிஷேகம் பண்ணினவர் நம்மைப் பராமரித்து வழிநடத்துவார். (லூக்கா 8:3; 1கொரி 9:6-16; கலா 6:6; எபி 7:1-10)

(6) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்கிறவர்கள்

மத் 10:11 எந்தப் பட்டணத்திலாவது கிராமத்திலாவது நீங்கள் பிரவேசிக்கும் போது, அதிலே பாத்திரமானவன் யாரென்று விசாரித்து, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள்.

மத் 10:12 ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும் போது அதை வாழ்த்துங்கள்.

மத் 10:13 அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது.

"பாத்திரமானவன்" - நல்ல பண்புடையவன், கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவன். ஊழியக்காரன் ஒருவனுடைய வீட்டில் தங்கும்போது அந்த வீட்டில் தங்குவதினால் தேவநாமம் தூஷிக்கப்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

"நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள்" - தங்குவதற்காக வீடுவீடாக அலைய வேண்டாம். நோக்கமில்லாமல் ஊர் ஊராகச் சுற்றித்திரிய வேண்டாம். (லூக்கா 10:7) காலத்தைத் திட்டமிட்டு ஜெபம் பண்ணுங்கள். வேதவசனங்களைத் தியானியுங்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். வீடுவீடாகச் சுற்றித்திரிந்தால் நாம் தேவையில்லாத காரியங்களைப் பேசிப் புறங்கூறுகிறவர்களாக இருப்போம். விருந்துகளிலும், கேளிக்கைகளிலும் அதிகளவில் பங்குபெற்று தேவனுடைய அபிஷேகத்தைச் சிறிதுசிறிதாக இழந்து போவோம்.

"நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது" - நீங்கள் ஒரு வீட்டை வாழ்த்தும் போது கர்த்தர் அந்த வீட்டை ஆசீர்வதிப்பார். அந்த வீட்டிலுள்ளவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும்.

10 அதிகாரம்

(7) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் - (லூக் 10:10)

மத் 10:14 எவனாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள்.

மத் 10:15 நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள்" - யூதர்கள் புறஜாதி தேசத்திலுள்ள தூசிகளை அசுத்தமாக எண்ணினார்கள். (எசே 45:1; ஆமோ 7:17) கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுவது என்பது தேவன் அவர்களைப் புறக்கணித்து விட்டார் என்பதற்கு அடையாளம். (மாற்கு 6:11; லூக்கா 9:5ப் 13:51)

தீர்க்கதரிசன எண் - 9

"சோதோம் கொமோரோ நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்............" (மத் 10:15-26) - மத் 10:15,23,26 ஆகிய வசனங்களில் உள்ள காரியங்கள் இன்னும் நிறைவேறவில்லை. மத் 10:16-22,24-25 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நிறைவேறியுள்ளன, இன்னும் நிறைவேறி வருகின்றன.

"நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரோ நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்" - நரகத்தில் கொடுக்கப்படும் தண்டனை எந்த அளவிற்கு கடுமையானதாக இருக்கும் என்பதை இந்த வசனம் விளக்குகிறது. (மத் 11:22; மத் 12:41; மத் 23:14; மாற்கு 6:11; மாற்கு 12:40; லூக்கா 10:14; லூக்கா 11:31-32; லூக்கா 20:47; வெளி 20:11-15)

"நியாயத்தீர்ப்புநாள்" - (அப் 17:31; வெளி 20:11-15)

(8) சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பு (வசனம் 34)

(அ) ஜெபாலயத் தலைவர்களின் பகை

மத் 10:16 ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.

மத் 10:17 மனுஷரைக்குறித்து எச்சரிக்கை யாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்.

"ஓநாய்கள்" - மாய்மாலக்காரர்கள், கள்ளத்தீர்க்கதரிசிகள், பேராசைப்பிடித்த அதிகாரிகள் ஆகியோருக்கு ஓநாய் அடையாளம்.

"சர்ப்பங்கள்"- சர்ப்பம் யாரையும் நேரடியாகத் தாக்காது. உடல் முழுவதும் விஷம் நிறைந்தது. மறைந்திருந்து தாக்கும். ஆனால் புறாக்களோ கபடற்றவை. பழங்காலத்தில் சூது, சாதுரியம், ஞானம் ஆகியவற்றிற்குச் சர்ப்பங்களை அடையாளமாக சொல்வார்கள். (ஆதி 3:1; 2கொரி 11:3) சாத்தான் சர்ப்பத்தைப் போல மாய்மாலக்காரன். (மத் 23:33; வெளி 12:9)

"மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - (மத் 7:16)

"அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்" - நீதிமன்றங்களிலும், ஆலோசனைச் சங்கங்களிலும் விசுவாசிகளுக்குப் பிரச்சனைகள் இருக்கும். (மத் 10:17-18) எல்லா ஜெபாலங்களிலும் ஆலோசனைச் சங்கங்கள் இருக்கும். ஒவ்வொரு சங்கத்திலும் 3 முதல் 23 புருஷர்கள் வரையிலும் ஆலோசனைக்காரர்களாக இருப்பார்கள்.

10 அதிகாரம்

எல்லா வழக்குகளையும் இவர்களே விசாரிப்பார்கள். இவர்களுடைய விசாரிப்புக்குப் பின்பே, வழக்குகள் சனகெரிப் எனப்படும் பெரிய நீதிமன்றத்திற்குச் செல்லும். ஆலோசனைச் சங்கங்கள் விசுவாசிகளைப் புறம்பே தள்ளும். (யோவான் 9:22) வாரினால் அடிக்கும் (உபா 25:3; 2கொரி 11:24) கல்லால் அடித்துக் கொல்லும். (உபா 22:24; யோவான் 8:5; அப் 7:58; அப் 14:19)

(ஆ) அதிபதிகளின் பகை

மத் 10:18 அவர்களுக்கும் புற ஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டு போகப்படுவீர்கள்.

மத் 10:19 அவர்கள் உங்களை ஒப்புக் கொடுக்கும் போது; எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்.

மத் 10:20 பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.

"எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்" - (மத் 6:25)

"நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்" - (மாற்கு 13:11; லூக்கா 21:13-15)

"உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" - (யோவான் 3:34)

(இ) உறவினர்களின் பகை

மத் 10:21 சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும், மரணத்துக்கு ஒப்புக் கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள்.

"சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும், மரணத்துக்கு ஒப்புக் கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலை செய்வார்கள்" - சுவிசேஷத்தின் மூலமாக ஜனங்கள் மத்தியிலே பிரிவினை உண்டாகிறது. சிலர் வெளிச்சத்தையும், சிலர் இருளையும் தெரிந்தெடுப்பதே இந்தப் பிரிவினைக்குக் காரணம். (யோவான் 3:18-21; 2கொரி 2:16-17; 2கொரி 4:2-4)

(ஈ) உலகத்தின் பகை

மத் 10:22 என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.

மத் 10:23 ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்; மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டணங்களையெல்லாம் சுற்றி முடியாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" - முடிவுபரியந்தம் என்பது நம்முடைய ஜீவியத்தின் முடிவுபரியந்தம் என்றும், மத் 24:4-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இந்த காலத்தின் முடிவுபரியந்தம் என்றும் பொருள்படும்.

10 அதிகாரம்

"ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால்" - நமக்குத் துன்பம் வரும்போது அந்தத் துன்பத்தில் நாம் பின்பற்ற வேண்டிய மாற்று வழிகளையும் ஆண்டவர் நமக்குக் கூறுகிறார். சான்றாக மத் 10:16-18 ஆகிய வசனங்களில் எச்சரிப்புக்களும், மத் 10:19-20 ஆகிய வசனங்களில் அவற்றுக்கு மாற்று வழியும் உள்ளன. அதுபோலவே மத் 10:21-22 ஆகிய வசனங்களில் எச்சரிப்புக்களும், மத் 10: 23-26 ஆகிய வசனங்களில் அவற்றிற்கு மாற்று வழிகளையும் இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார்.

"மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" - ஒரு பட்டணத்திலிருந்து ஒரு ஊழியக்காரர் ஓடிப்போவதினால் அவர் கோழையோ அல்லது மோளையோ அல்ல. அது ஞானமான செயல். சுவிசேஷப் பிரபலியத்திற்கு இது உதவி புரியும். துன்மார்க்கரின் கண்ணிகளிலிருந்து நாம் தப்பி பலருக்குச் சத்தியத்தை அறிவித்து தொடர்ந்து ஊழியம் செய்யலாம். ஒரு ஊழியக்காரர் துன்பப்படுத்தப்படும் இடத்தில் தொடர்ந்து தங்கியிருந்து கொலைசெய்யப் படுவாரானால், அவருடைய ஊழியம் அவருடைய மரணத்தோடு முடிந்து விடும். அவரால் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க முடியாது.

"மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டணங்களையெல்லாம் சுற்றி முடியாது" - இது சத்தியமான வாக்கியம். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக இஸ்ரவேல் பட்டணங்கள் எல்லாவற்றிலும் சுவிசேஷத்தை அறிவித்து, சுற்றி முடிக்க முடியாது. ஆதித்திருச்சபை உலகத்திற்கு முழுவதுமாக சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை. கிபி. 70-ஆம் ஆண்டில் ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டதும், எருசலேம் அழிக்கப்பட்டதும் இதற்கு முக்கியமான காரணம். (லூக்கா 21:20-24; அப் 8:1-4; அப் 9:1-4; அப் 11:19-21; அப் 12:1) திருச்சபை இன்னும் பூரணமாக முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை. ஆயிர வருஷ அரசாட்சி வரையிலும் இந்தப் பிரச்சனை தொடரும். (ஏசா 2:1-4; ஏசா 11:9; ரோமர் 11:25-29; சக 12:10-13:1)

நிறைவேற்று (gone over) - τελειόω - teleiooo - 5048

வினைச்சொல் - முடி, தேறு, நிறைவேற்று, பூரணப்படுத்து

(9) கிறிஸ்துவோடு சமம் - (லூக் 6:40)

மத் 10:24 சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல.

மத் 10:25 சீஷன் தன் போதகனைப் போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப் போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?

"சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" - கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் இயேசு கிறிஸ்துவைவிட மேன்மையடையலாம் என்று எதிர்பார்க்கக்கூடாது. கிறிஸ்து மட்டுமே கர்த்தரும், ஆண்டவருமாக இருக்கிறார். (அப் 2:36)

"சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும்" - ஒரு சீஷனுடைய வாழ்வில் அவன் தன் போதகனைப்போல உயரலாம். (யோவான் 13:16; யோவான் 14:12-15; யோவான் 17:18; யோவான் 20:21) விசுவாசிகளும் கிறிஸ்துவைப்போல ஆகவேண்டும். இதன் பொருள் இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (1கொரி 11:1) இயேசுவைப் போன்று உயர்ந்துவிட்டதாக யாரும் பெருமைப்படக்கூடாது.

நாம் எந்தெந்த வழிகளில் இயேசுவைப் போல ஆகவேண்டும்

1. நீதியில் (1யோவான் 3:7; யோவான் 15:10-14; 1கொரி 1:30; எபே 1:4; எபே 5:27)

10 அதிகாரம்

2. உலகக்காரியங்களிலிருந்து விடுதலை பெறுவதில் (யோவான் 17:14-16; ரோமர் 12:1; யாக் 4:4; 1யோவான் 2:15)

3. சுயத்தைச் சிலுவையில் அறைவதில் (ரோமர் 6; கலா 2:20)

4. புதிய ஜீவனில் ஜீவிப்பதில் (ரோமர் 6; கலா 5:16-26; எபே 4:1-24)

5. உபத்திரவங்களைச் சகித்துக் கொள்வதில் (மத் 10:25; யோவான் 15:18-20; மாற்கு 10:30)

6. கிரியைகளில் (யோவான் 14:12; மாற்கு 9:23; மாற்கு 16:17-18; மத் 17:20; மத் 21:22)

7. ஆவியின் கனியில் (கலா 5:22-23; யோவான் 13:34; யோவான் 15:11-13)

8. தேவனுடைய ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்பட்டு இருப்பதில் (யோவான் 10:36; யோவான் 17:17-19; யோவான் 20:21)

9. வெளிச்சத்தில் நடப்பதில் (1யோவான் 1:7)

10. தேவனோடு ஐக்கியமாக இருப்பதில் (யோவான் 17:11,21-23)

11. மற்றவர்களுக்காகப் பாடு அனுபவிப்பதில் (1பேதுரு 2:21-23; 1பேதுரு 3:18-4:1; பிலி 3:10)

12. ஜீவியத்திலும், நடத்தையிலும் (1யோவான் 2:6; 1யோவான் 4:17)

13. சோதனைகளைச் சகித்துக் கொள்வதில் (எபி 2:18; எபி 4:14-16; யாக் 1:2,12)

14. தேவனுடைய பரிபூரணத்தை வெளிப்படுத்துவதில் (யோவான் 3:34; யோவான் 7:37-39; யோவான் 14:12; எபே 3:19)

"பெயல்செபூல்" (Beelzebub) - பெலிஸ்திய தேவதை. ஈக்களின் தெய்வம். (2இராஜா 1:2) யூதர்கள் இதை பீல்சிபப் என்று மாற்றினார்கள். குப்பை மேட்டுத் தெய்வம். பிசாசுகளின் தலைவன். (மத் 12:24-32; மாற்கு 3:22; லூக்கா 11:15-19)

(10) மாய்மாலத்திற்கு எதிரான எச்சரிப்பு - (லூக் 12:1-3)

மத் 10:26 அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை.

மத் 10:27 நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள்.

"அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை" - மனுஷனுக்குப் பயப்படக்கூடாது. சத்தியத்தை மறைக்கக்கூடாது. சத்தியத்தை வெளிச்சத்திலும், வீட்டின் கூரைமீதும் தைரியமாகப் பேசவேண்டும். (மத் 10:26-27; லூக்கா 12:1-3)

"வீடுகளின்மேல்" - கிழக்கு தேசங்களில் வீடுகளில் கூரை தட்டையாக இருக்கும். ஜனங்கள் அதன்மீது குடும்ப விழாக்களைக் கொண்டாடுவார்கள். முக்கியமான அறிவிப்புகளையும், வீட்டின் மேல்மாடியில் கூறுவார்கள். (உபா 22:8; யோசு 2:6; நியா 16:27; நெகே 8:16; 2சாமு 11:2; 2இராஜா 23:12; ஏசா 15:3; அப் 10:9)

(11) மனுஷ பயத்திற்கு எதிரான எச்சரிப்பு - (லூக் 12:4-12)

மத் 10:28 ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிற வர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.

10 அதிகாரம்

மத் 10:29 ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது.

மத் 10:30 உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.

மத் 10:31 ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

மத் 10:32 மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.

மத் 10:33 மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்" - மனுஷருக்குப் பயப்படவேண்டாம் என்று கூறும் இரண்டாவது கட்டளை. மனுஷனால் நமது சரீரத்தை மாத்திரமே கொல்ல முடியும். நமது ஆத்துமாவை ஒன்றும் செய்ய முடியாது. (லூக்கா 2:4-12).

அழி (destroy) - **ἀπόλλυμι** - **apollymi** - 622

வினைச்சொல் - கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி - கொல் (**to kill**) (மத் 2:13; மத் 12:14); அழி (**torment**) (மத் 8:29; மாற்கு 1:24); அழி (மஹழ்) (மாற்கு 2:22); இழந்து போகச்செய் (**lose**) (மத் 10:6,39,42); இழந்துபோ கூஷங் ப்ர்ள்ற் (யோவான் 17:12; 2கொரி 4:3); அழிந்துபோ (**perish or die**) (மத் 8:25); அழித்துப்போடு (**to ruin**) (மத் 9:17)

நரகம் (**hell**) - **γέεννα** - **geenna** - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம் (லூக்கா 12:5) - நரகத்தில் துன்மார்க்கனின் சரீரங்களும், ஆத்துமாக்களும் பாடுகளை அனுபவிக்கும்.

காசு **ἀσσάριον** - **assarion** - 787

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - காசு - ரோமருடைய நாணயம்

"உங்கள் பிதாவின் சித்தமில்லாமல்" - பரலோகப் பிதாவிற்குத் தெரியாமல் (மத் 10:29-30)

"பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" - இந்த அதிகாரத்தில் 3 இடங்களில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. (மத் 10:26-31)

தீர்க்கதரிசன எண் - 10

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ............" (மத் 10:32-36) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

(12) சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பு பற்றி மறுபடியும் முன்னறிவிக்கப் படுதல் - (வசனம் 16-33; லூக் 12:11,49)

மத் 10:34 பூமியின்மேல் சமாதானத்தை அனுப் பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்.

மத் 10:35 எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்.

மத் 10:36 ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.

10 அதிகாரம்

"பட்டயம்" - (மத் 10:21; லூக்கா 12:49-53)

"மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்" - மேசியா வரும்போது பூமியில் சமாதானம் இராது. குடும்பத்தில் ஒற்றுமையிராது. பிரிவினை உண்டாயிருக்கும் என்று யூதமார்க்கத் தலைவர்கள் நம்பினார்கள். கிறிஸ்து இந்த வசனத்தில் இவ்வாறு கூறுவதினால் தாமே மேசியா என்பதை வலியுறுத்துகிறார். (மீகா 7:5-6, லூக்கா 5:32)

(13) சீஷர்களின் பரிசோதனை - (8:18; 16:24)

மத் 10:37 தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

மத் 10:38 தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

மத் 10:39 தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.

"என்னிலும் அதிகமாய்" - முதலாவது கற்பனை மீறப்படுகிறது. (மத் 19:29; மத் 22:37; லூக்கா 14:26-27)

"எனக்குப் பாத்திரன் அல்ல" - இந்த வாக்கியம் 3 முறை வலியுறுத்தி கூறப் பட்டிருக்கிறது. (மாற்கு 10:37-38)

இயேசு கிறிஸ்துவின் சீஷருக்குப் பரீட்சைகள்

1. உலக உபத்திரவம் (மத் 10:25; யோவான் 15:18)
2. பயமில்லாமல் பிரசங்கம் பண்ணுதல் (மத் 10:26-27)
3. பயமில்லாமல் பிரதிஷ்டை பண்ணுதல் (மத் 10:28)
4. பயமில்லாத விசுவாசம் (மத் 10:29-31; எபி 11)
5. கிறிஸ்துவைக் குறித்துத் தைரியமாகச் சாட்சி பகருதல் (மத் 10:32-33)
6. குடும்பத்தில் உபத்திரவம் (மத் 10:34-36; மத் 19:29)
7. தேவனுக்கு முதலிடம் கொடுத்தல் (மத் 10:37; மத் 22:37)
8. அனுதினமும் சிலுவையைச் சுமத்தல் (மத் 10:38; லூக்கா 9:23)
9. கிறிஸ்துவைப் பின்பற்றுதல் (மத் 10:38; யோவான் 10:27)
10. தன்னைத் தானே வெறுத்தல் (மத் 10:39; ரோமர் 8:1-13)

"தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" - (மாற்கு 8:34; லூக்கா 9:23; யோவான் 10:26)

மத்தேயு 10:39-42 ஆகிய வசனங்களில் நான்கு தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்கள் கூறப்பட்டிருக்கிறது. இவை தற்காலத்தில் நிறைவேறி வருகின்றன. கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு நாளின்போது இவை முழுவதுமாக நிறைவேறும். (ரோமர் 14:10; 2கொரி 5:10).

"தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" - தன்னுடைய சொந்த முயற்சியினால் தன் ஜீவனைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறவன் அதை இழந்துபோவான். தன்னுடைய சரீரத்தின் பாவமான காரியங்களை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறவன் தன் ஜீவனைக் காத்துக் கொள்வான். (ரோமர் 8:12-13; கலா 5:16-26)

10 அதிகாரம்

(14) சிறிய சேவைகளுக்கும் வெகுமதி அளிக்கப்படும் - (12:36; 16:27; ரோமர் 14:10; 1கொரி 3:11; 2கொரி 5:10)

மத் 10:40 உங்களை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்.

மத் 10:41 தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்.

மத் 10:42 சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

ஏற்றுக்கொள் **(receiveth)** - **δέχομαι** - **dechomai** - 1209

வினைச்சொல் - ஏற்றுக்கொள், ஏந்திக்கொள், வாங்கு, அங்கீகரி **(accept, approve, embrace, give ear to)** (2கொரி 8:17; 2கொரி 11:4)

ஜனங்கள் ஊழியக்காரரை ஏற்றுக் கொள்ளும்போது, அவர் உபதேசம் பண்ணும் சத்தியத்தையும் அங்கீகரிப்பார்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கம் பண்ணும் ஊழியக்காரரை ஜனங்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றால் அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் ஏற்றுக் கொள்வார்கள். ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லாதவர்கள் என்றால் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரரையும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

"தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்" - ஒரு கள்ளத்தீர்க்கதரிசியை நல்ல தீர்க்கதரிசி போன்று ஏற்றுக் கொள்வதினாலோ, துன்மார்க்கனை நீதிமான்போல ஏற்றுக் கொள்வதினாலோ நமக்குப் பிரயோஜனமில்லை. கள்ளத் தீர்க்கதரிசிகளையும், துன்மார்க்கரையும் ஏற்றுக் கொள்கிறவர்கள் அவர்களுடைய பாவங்களில் பங்காளிகளாக இருப்பார்கள். (2 யோவான் 1:9-11) நாம் எல்லா மார்க்கப் போதகர்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. கர்த்தருடைய மெய்யான ஊழியக்காரர்களை மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும். யாரையாவது ஏற்றுக்கொண்டு, ஆண்டவர் என்னை ஆசீர்வதிக்கவில்லையே என்று புலம்பக்கூடாது. நாம் செய்யும் தவறுகளுக்கு ஏற்ப நாம் நியாயம் தீர்க்கப்படுவோம். அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்களே என்று ஆண்டவர் நமக்கு தெளிவாகக் கூறியிருக்கிறார். (மத் 7:15-20) இயேசு கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி வருபவருக்கு பொருளாதார உதவியும், இதர வசதிகளும் செய்து கொடுப்பதற்கு முன்பாக அந்த ஊழியக்காரரைப் பற்றி நிதானித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"சிறியர்" - சிறுபிள்ளைகள், புதிய விசுவாசிகள் ஆகியோரைக் குறிக்கும். (மத் 18:1-14; மாற்கு 9:42; லூக்கா 17; யோவான் 13:33; கலா 4:19; 1யோவான் 2:1,12-18,28; 1யோவான் 3:7,18; 1யோவான் 4:4; 1யோவான் 5:21)

"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான்" - இயேசு கிறிஸ்துவின் மெய்யான ஊழியக்காரர்களுக்கு சிறிய உதவிகளை நல்ல மனதோடு செய்யும்போது ஆண்டவர் நிச்சயமாகவே நம்மை ஆசீர்வதிப்பார். (மத் 6:1)

11 அதிகாரம்

25. கலிலேயாவிற்கு நான்காவது பிரயாணம் - (லூக் 8:1; மத் 4:23)

மத் 11:1 இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்.

"இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்தார்" - இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை இக்காலத்தில் உள்ள எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும். (மத் 28:20)

26. யோவான் ஸ்நானன் இயேசுவிடம் கேட்ட கேள்வி - (லூக் 7:19-23)

மத் 11:2 அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து:

மத் 11:3 வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்.

"காவல்" - (மத் 4:12; மத் 11:2; மத் 14:1-12; மாற்கு 1:14; மாற்கு 6:17,27; லூக்கா 3:20; யோவான் 3:24)

"வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா?" - யோவான் காவலில் இருந்தபோது இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கேட்க விரும்பிய கேள்வி. சிறைச் சாலைக்குப் போவதற்கு முன்பாகவும், இப்போதும் இயேசுவைக் குறித்து அவனுடைய மனநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டதைக் காண்கிறோம். (மத் 3; லூக்கா 3; யோவான் 1:15-36; யோவான் 3:22-36)

"வருகிறவர் நீர்தானா" - பரிசுத்த வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டிக்கிறவர் நீர்தானா. (ஆதி 3:15; ஆதி 49:10; எண் 24:17-19; உபா 18:15-19; ஏசா 7:14; ஏசா 9:6-7; ஏசா 11:1; ஏசா 61:1)

27. இயேசு வார்த்தைகளால் பதில் கூறாமல் கிரியைகளால் பதில் கூறுகிறார் - (லூக் 7:21)

மத் 11:4 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்;

மத் 11:5 குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

மத் 11:6 என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.

"நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்" - யோவானுடைய கேள்விக்கு இயேசு கிறிஸ்து தமது கிரியைகளின் மூலமாகப் பதில் கூறுகிறார். மேசியாவைக்குறித்து முன்னறிவிக்கப்பட்ட காரியங்களை இயேசு கிறிஸ்து நடப்பித்தார். (ஏசா 11:2; ஏசா 35:5-6; ஏசா 61:1) இயேசுவே மேசியா என்பதை அவருடைய கிரியைகள் நிரூபித்தன. (யோவான் 5:36; யோவான் 9:3-4; யோவான் 10:25,37-38; யோவான் 14:10; யோவான் 15:24; அப் 10:38) இயேசு கிறிஸ்துவிற்காக ஊழியம் செய்யக் கூடியவர்கள் எல்லோருக்குமே கர்த்தர் இந்த சிலாக்கியங்களை அருளுகிறார். ((மத் 10:1-8; மாற்கு 6:7-13; மாற்கு 16:17-20; லூக்கா 9:6; லூக்கா 10:1-20; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12-15; யோவான் 15:16; அப் 1:1-8; அப் 2:43; அப் 3:6; அப் 4:30; அப் 5:12-16; அப் 6:3-10; அப் 8:1-17; அப் 9:17,34; அப 15:12)

11 அதிகாரம்

"பாக்கியவான்" - மத் 5:3-11 ஆகிய வசனங்களுக்குப் பின்பு "பாக்கியவான்" என்று வரும் முதலாவது வசனம். இந்த வசனம் தவிர மத்தேயு சுவிசேஷத்தில் மேலும் பல வசனங்களில் பாக்கியவானைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 13:16; மத் 14:19; மத் 16:17; மத் 21:9; மத் 23:39; மத் 24:46; மத் 25:34; மத் 26:26)

"என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன்" - இயேசு கிறிஸ்துவிடத்திலும் அவருடைய உபதேசத்திலும் இடறலடையாமல் இருக்கிறவன். பலர் இயேசு கிறிஸ்துவில் இடறலடைந்தார்கள். (லூக்கா 4:22,28; யோவான் 6:66; யோவான் 7:30-44; யோவான் 8:19-44).

28. யோவான் ஸ்நானனைப் பற்றி இயேசு கூறிய சாட்சி - (லூக் 7:24)

மத் 11:7 அவர்கள் போனபின்பு, இயேசு யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?

மத் 11:8 அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந் தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள்.

மத் 11:9 அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 11:10 அதெப்படியெனில்: இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.

மத் 11:11 ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.

மத் 11:12 யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

மத் 11:13 நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான் வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு.

மத் 11:14 நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்.

மத் 11:15 கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

"காற்றினால் அசையும் நாணலையோ?" - பாலஸ்தீன தேசத்தில் யோர்த்தான் நதிக்கரையில் நாணற்புல் அதிகமாகவும், அடர்த்தியாகவும் வளர்ந்திருக்கும். அவை 20 அடி உயரம் வரையிலும் வளர்ந்து பசுமையாக இருக்கும். மற்றப் புற்கள் கருகிப்போயிருந்தாலும், இவை எப்போதும் செழித்து வளரும். பறவைகளும், விலங்குகளும் நாணற்புற்களின் நிழலில் வந்து தங்கும். (யோபு 40:21) இந்த வசனத்தில் "காற்றினால் அசையும் நாணல்" என்பது எபிரெய வழக்குச்சொல். நிலையில்லாமல் நேரத்திற்கு ஒரு பேச்சைப் பேசும் மனுஷரைக் குறிப்பதற்கு எபிரெயர்கள் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துவார்கள். அத்துடன் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக முரண்படுவோரைக் குறிப்பதற்கும் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துவார்கள். யோவான் ஸ்நானனைப் பொருத்தவரையில் அவன் எதை விசுவாசித்தானோ அதையே கூறினான், அதையே செய்தான். தனது விசுவாசத்தில் உறுதியாக இருந்தான்.

11 அதிகாரம்

"மெல்லிய வஸ்திரம்" - கிழக்கு தேசத்தில் பட்டு நூல்களினால் செல்வந்தர்கள் மெல்லிய வஸ்திரங்களை அணிந்திருப்பார்கள். ஆனால் யோவான் ஸ்நானன் எளிமையான தோற்றமுடையவன். மெல்லிய வஸ்திரத்திற்குப் பதிலாக ஒட்டக மயிரால் ஆன கனமான முரடான வஸ்திரம் தரித்திருந்தான். (மத் 3:4)

"தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவன்" - தீர்க்கதரிசிகள் முன்குறித்த காரியங்களை யோவான் ஸ்நானன் கண்டு கிரியை செய்தான். (யோவான் 1:31-34; 1யோவான் 1:1).

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான்" - (மத் 11:10; மல் 3:1)

"யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன்" - (லூக்கா 7:28)

"பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" - (மத் 4:17, மத் 19:24)

"யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும்" - இயேசுகிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் பரலோக ராஜ்யத்தைப் பற்றி உபதேசம் பண்ணியதுபோன்று யோவான் ஸ்நானனும் பரலோகத்தைப் பற்றி உபதேசம் பண்ணும் ஊழியத்தைச் செய்தான். (மத் 3:2; மத் 4:17; மத் 10:7; மத் 11:12)

பலவந்தம்பண்ணு (suffereth) - βιάζω - biazoo - 971

வினைச்சொல் - பலவந்தம்பண்ணு (to use force, to force one's way into a thing)

யோவான் ஸ்நானன் தீர்க்கதரிசன வாக்கியங்களின் அடிப்படையில் பரலோக ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ பரலோக இராஜ்யத்தைக் குறித்து வெளியரங்கமாக பிரசங்கம் பண்ணுகிறார். இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்கும் ஜனங்கள் பரலோக இராஜ்யத்தைக் குறித்துத் தெளிவடைகிறார்கள். எப்படியாவது அந்த இராஜ்யத்தில் பங்குபெற வேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள். பலவந்தம் பண்ணியாவது பரலோகஇராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம். (மத் 11:12; லூக்கா 16:16) தங்களுடைய பாவங்களை விட்டுவிட்டு சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து விடுதலையாகி, இந்த உலகக் கவலைகளிலிருந்து பிரிந்து வந்து தேவனுடைய இராஜ்யத்தை எப்படியாவது பெற்றுக் கொள்ள வேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள். இந்தச் சுவிசேஷத்திற்குத் தங்களுடைய குடும்பத்தார் எதிர்ப்பு தெரிவிக்கும்போது தங்களுடைய விசுவாசத்தில் உண்மையான சாட்சிகளாக நிற்கிறார்கள். (மத் 10:34-39)

"யோவான் வரைக்கும்" - யோவான் ஸ்நானனின் ஊழியம் வரைக்கும் என்று பொருள்படும். தீர்க்கதரிசன ஊழியத்தின் முடிவைக் குறிப்பிடாது.

"வருகிறவனாகிய எலியா இவன்தான்" - ஆவியிலும், வல்லமையிலும் எலியாவை இயேசு கிறிஸ்து பிரதிபலித்தார். (லூக்கா 1:17) எலியாவின் ஆள்தத்துவப் பண்பை இயேசு பிரதிபலிக்கவில்லை. (யோவான் 1:21) அவன் இனிமேல் வரவேண்டும். (மல் 4:5-6; சக 4:11-14; வெளி 11:3-11)

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" - வேதாகமத்தில் இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து மட்டுமே கூறியிருக்கிறார். 15 தடவைகள் கூறியிருக்கிறார். 7 தடவைகள் பூமியில் கூறியிருக்கிறார். (மத் 11:15; மத் 13:9,43; மாற்கு 4:9,23; மாற்கு 7:16; லூக்கா 8:8; லூக்கா 14:35) 8 தடவைகள் பரலோகத்தில் கூறுகிறார். (வெளி 2:7,11,17,29; வெளி 3:6,13,22; வெளி 13:9).

11 அதிகாரம்

29. இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கூறுகிறார் - (லூக் 7:30)

மத் 11:16 இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? சந்தைவெளிகளில் உட்கார்ந்து, தங்கள் தோழரைப் பார்த்து:

மத் 11:17 உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை; உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லை என்று குறைசொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 11:18 எப்படியெனில், யோவான் போஜனபானம் பண்ணாதவனாய் வந்தான்; அதற்கு அவர்கள்: அவன் பிசாசுபிடித்திருக்கிறவன் என்றார்கள்.

மத் 11:19 மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு அவர்கள்: இதோ, போஜனப்பிரியனும் மதுபானப் பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள். ஆனாலும் ஞானமானது அதன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்றார்.

"இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்?" - யூதர்கள் முரண்டு பிடிக்கும் பிள்ளைகளைப் போன்றவர்கள். கலியாணங்கள், அடக்க ஆராதனைகள், நடனங்கள் ஆகிய எவற்றிலும் யூதர்கள் பங்குபெறவே மாட்டார்கள். (மத் 11:18) இயேசு கிறிஸ்து கூறிய எல்லா உபதேசங்களையும் அவர்கள் மறுத்தார்கள். எதிர்த்து நின்றார்கள்.

"இந்தச் சந்ததி" - சுவிசேஷங்களில் இந்த வாக்கியம் 16 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலுமே மனுஷருடைய ஆயுசு நாளை மட்டுமே இது குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட இனத்தை இந்த வாக்கியம் குறிப்பிடவில்லை. (மத் 11:16; மத் 12:41-42; மத் 23:36; மத் 24:34; மாற்கு 8:12; மாற்கு 13:30; லூக்கா 7:31; லூக்கா 11:30-32,50-51; லூக்கா 17:25; லூக்கா 21:32) இயேசு கிறிஸ்து குறிப்பிட்டிருக்கும் ஒரு சில சந்ததிகள். "விபச்சார சந்ததியார்" **(evil, adulterous)** (மத் 12:39,45; மத் 16:4; மாற்கு 8:38; லூக்கா 11:29); "விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததி" **(faithless and perverse)** (மத் 17:17; மாற்கு 9:19; லூக்கா 9:41); பேதுரு மாறுபாடுள்ள சந்தியைப் **(untoward)** பற்றிக் கூறுகிறான். (அப் 2:40).

"தோழர்" - நண்பர்கள் (மத் 20:13; மத் 22:12; மத் 26:50)

"யோவான் போஜனபானம் பண்ணாதவனாய் வந்தான்; அதற்கு அவர்கள்: அவன் பிசாசுபிடித்திருக்கிறவன் என்றார்கள்" - யோவான் ஸ்நானன் எல்லா சமுதாயக் காரியங்களிலிருந்தும் விலகியிருந்தான். (லூக்கா 1:80) இயேசு கிறிஸ்துவைப் போல பல சமுதாய நிகழ்ச்சிகளில் யோவான் கலந்து கொண்டதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. (மத் 8:15; மத் 9:10; லூக்கா 7:36; லூக்கா 22:15; யோவான் 2) ஜனங்களிடத்திலிருந்து பிரிந்து வனாந்தரத்தில் வாழ்ந்தான். அவனை யாருமே ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவோ "போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு அவர்கள்: இதோ, போஜனப்பிரியனும் மதுபானப் பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள்".

"போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்" - இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவருடைய விரோதிகள் தவறாகக் கூறிய குற்றச்சாட்டு. அவர் போஜனப்பிரியர், மதுபானப் பிரியர் என்பதற்கு வேதத்தில் சான்று எதுவுமில்லை.

11 அதிகாரம்

"ஞானமானது அதன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும்" - எது நீதியான காரியம், எது அநீதியான காரியம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்குத் தெரியும். ஆனால் இவர்களோ மாய்மாலக் காரர்கள். தேவனுடைய பிள்ளைகள் எதைச் சொன்னாலும் இவர்கள் எதிர்க்கிறார்கள். தங்களுடைய பாவமான கிரியைகளை நியாயமானவை என்று நிரூபிக்க முயற்சி பண்ணுகிறார்கள். ஆகையினால் இவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவனுடைய பிள்ளைகளோ சத்தியத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். (மத் 11:18)

30. விசுவாசியாத பட்டணங்கள்மீது வரும் நியாயத்தீர்ப்பை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (லூக் 10:12)

மத் 11:20 அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந் திரும்பாமற்போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்.

மத் 11:21 கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப் பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.

மத் 11:22 நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்,

மத் 11:23 வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்.

மத் 11:24 நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 11

"அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற்போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்........." (மத் 11:20-24) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இந்தத் தீர்க்கதரிசனம் கடைசி நியாயத்தீர்ப்பின் போது நிறைவேறும். (வெளி 20:11-15)

யாரிடத்தில் அதிகமாகக் கொடுக்கப் படுகிறதோ அவர்களிடத்தில் அதிகமாக எதிர்பார்க்கப்படும். ஒரு மனுஷனுக்கு சத்திய வசனம் அதிகமாகப் பிரசங்கம் பண்ணப்படும் போது அவன் தன் பாவக்கிரியைகளைக் குறித்து அதிகமாக கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆகையினால் இயேசு கிறிஸ்து தமது பிரசங்கங்களைக் கேட்டு தாம் செய்த அற்புதங்களைக் கண்ட பட்டணத்தார் மனந் திரும்பாமற்போனபடியினால் அவர்களைக் கடிந்து கொள்கிறார்.

"தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகள்" - இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகமாகச் செய்திருக்கிறார்.

"மனந்திரும்பாமற்போனபடியினால்" - அற்புதங்களும், நியாயத்தீர்ப்புகளும், கடின இருதயம் கொண்ட பாவிகளை அசைக்கவில்லை. அவர்கள் மனந்திரும்பாமற் போகிறார்கள். (வெளி 9:20-21)

"கோராசின்" - இந்தப் பட்டணம் எங்கிருக்கிறது என்று சரியாகத் தெரியவில்லை. இது பெத்சாயிதாவிற்கு அருகில் இருக்க வேண்டும் அல்லது கலிலேயாவின் வடகிழக்கு கடற்கரைப் பகுதியில் இருக்க வேண்டும்.

"பெத்சாயிதா" - (லூக்கா 9:10)

"தீருவும் சீதோனும்" - போனிஷியாவில் மத்தியதரைக் கடற்பகுதியில் அமைந்துள்ள இரண்டு பட்டணங்கள். (1இராஜா 5:1)

11 அதிகாரம்

"அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்" - சுவிசேஷச் செய்தியானது பல்வேறு விதமான ஜனங்களுடைய உள்ளத்தில் எவ்வாறு கிரியை செய்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

"இலகுவாயிருக்கும்" - நியாயத்தீர்ப்பினுடைய தண்டனையின் அளவு (மத் 10:15)

"நியாயத்தீர்ப்புநாள்" - (அப் 17:31 வெளி 20:11-15)

"கப்பர்நகூம்" - கலிலேயாவின் வடக்கு ஓரத்திலுள்ள பட்டணம். இயேசு கிறிஸ்துவின் முக்கியமான ஊழியஸ்தலம். (மத் 4:13; மத் 17:24-27; மாற்கு 1:21-45; மாற்கு 2:1-6; மாற்கு 9:33; லூக்கா 4:31; லூக்கா 7:1-10; லூக்கா 10:15; யோவான் 4:46-53; யோவான் 6:17-25,59)

"வானபரியந்தம் உயர்த்தப்படுதல்" - திரளான ஆசீர்வாதங்களையும், ஏராளமான செழுமையையும் குறிக்கும் வாக்கியம்.

இந்தப் பட்டணங்கள் எதுவும் தற்காலத்தில் இல்லை. ரோமப்பேரரசு இந்தப் பட்டணங்கள் எல்லாவற்றையும் அழித்துப்போட்டது.

பாதாளம் (hell) - ᾅδης - hadees - 86

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம், இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலியமாகத் தங்கும் இடம். (லூக்கா 16:23)

31. சத்தியத்தின் எளிமைக்காக இயேசு களிகூருகிறார் - (லூக் 10:21)

மத் 11:25 அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

மத் 11:26 ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.

மத் 11:27 சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்.

"பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே!" - (யோவான் 4:21,24)

"இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினீர்" - கல்விமான்கள் சுயபெருமையுடையவர்கள். தங்களுடைய அறிவு மிகுதியினால் தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாமல் மறுதலிப்பார்கள். ஆகையினால், தேவனுடைய சத்தியம் ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டது. (ரோமர் 1:18-32; 2கொரி 4:3-4; 1கொரி 1:18-21; 1கொரி 2:1-16) சுவிசேஷச் செய்தியானது அதைக் கேள்விப்பட்டு, அதை விசுவாசித்துக் கீழ்ப்படிவோருக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது. (1கொரி 3:1-3; எபி 5:12-6:1; 1பேதுரு 2:1-2) இப்படிச் செய்வது தேவனுடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருக்கிறது. (மத் 11:26; ஏசா 28:9-11; மத் 13:11-16; 1கொரி 1:18-21)

"சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது" - இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தையும், திரித்துவத்தில் அவருடைய அங்கத்தையும் இந்த வசனம் உபதேசம் பண்ணுகிறது. (யோவான் 5:17-27; வெளி 1:1; மத் 28:18; யோவான் 17:1-5; கொலோ 1:16-18)

"பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்" - பிதாவைக் குமாரனைத்தவிர வேறு யாரும் முழுமையாக அறியவில்லை. (யோவான் 1:18)

11 அதிகாரம்

32. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அழைப்பு

மத் 11:28 வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

மத் 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

மத் 11:30 என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" - இயேசு கிறிஸ்து எல்லா மனுஷருக்கும் பொதுவாக விடுக்கும் முதலாவது அழைப்பு. அவருடைய கடைசி அழைப்பு "ஆவியும், மணவாட்டியும் வா என்கிறார்கள். கேட்கிறவனும் வா என்பானாக. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன். விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்". (வெளி 22:17)

வருத்தப்படு (labour) - κοπιάω - **kopiaoo** - 2872

வினைச்சொல் - உழை, வருத்தப்பட்டு பாரஞ்சும, பிரயாசப்படு, இளைப்படை, பாடுபடு (to feel fatigue, to work hard, toil. Any weary, hard worker can find rest) (எபே 4:28)

சுமத்து (heavy laden) - φορτίζω - **phortizoo** - 5412

வினைச்சொல் - சுமத்து (to carry a load; to overburden with ceremony) (மத் 11:28; லூக்கா 11:46)

மோசேயின் பிரமாணம் ஜனங்களுக்கு மிகவும் கடினமானவை. பரிசேயர்கள் அந்தப் பிரமாணங்களின்மீது இன்னும் நூற்றுக் கணக்கான உபபிரமாணங்களைச் சேர்த்து ஜனங்களுக்கு அதை மேலும் கடினமாக்கினார்கள். பிரமாணத்தின் ஒவ்வொரு சிறு பகுதியையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.

"இளைப்பாறுதல்" - ஆத்துமாவில் வருத்தமுடையவர்கள், வியாதியஸ்தர்கள், கடினமான பாரங்களைச் சுமப்பவர்களுக்கு இளைப்பாறுதல் தேவை. இயேசு கிறிஸ்து இவர்களுக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்குப்பண்ணுகிறார். (மத் 11:28-29; ஏசா 28:9-11; எபி 3:11-14,18; எபி 4:1-11; வெளி 14:13)

விசுவாசிகள் ஏற்றுக் கொள்ளவேண்டியவை

1. கிறிஸ்துவின் நுகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். (மத் 11:29)
2. அனுதினமும் சிலுவையைச் சுமக்க வேண்டும். (லூக்கா 9:23)
3. உலகக்கவலை இருக்கக்கூடாது. (மத் 6:25)
4. என்னத்தை உடுத்துவோம் என்று கவலைப்படக்கூடாது (மத் 6:31)
5. திருவிருந்தில் பங்குபெறவேண்டும் (1கொரி 11:24)
6. சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் (எபே 6:13)
7. நம்மைப் பற்றி எச்சரிப்புடன் இருக்க வேண்டும்.

    (1) நாம் தர்மம் செய்யும் விதம் (மத் 6:1-4)

    (2) நாம் எதைக்கேட்கிறோம் (மாற்கு 4:24)

    (3) நாம் எப்படிக்கேட்கிறோம் (லூக்கா 8:18)

11 அதிகாரம்

(4) நாம் எதன்மீது ஆசைப்படுகிறோம் (லூக்கா 12:15)

(5) நாம் எப்படி மன்னிக்கிறோம் (லூக்கா 17:1-4)

(6) நாம் எவ்வளவு புசிக்கிறோம். (லூக்கா 21:34-36)

(7) நாம் சபையை எவ்வளவு பராமரிக்கிறோம் (அப் 20:28; கொலோ 4:17)

(8) நாம் கிறிஸ்துவில் எவ்வளவு கட்டப் பட்டிருக்கிறோம் (1கொரி 3:10-15; 2கொரி 5:10; ரோமர் 14:10)

(9) நமது சுதந்தரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம் (2கொரி 8:9-13; ரோமர் 14:1-15:3)

(10) விழாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (1கொரி 10:12-13)

(11) ஒருவரையொருவர் அழித்து விடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (கலா 5:15; எபே 4:31-32)

(12) பின்வாங்கிப்போகாதவாறு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (எபி 3:12)

(13) நம்முடைய தவறுகளுக்காக வரும் பாடுகளை எவ்வாறு எடுத்துக் கொள்கிறோம் (1பேதுரு 2:20-21)

(14) ஒளியில் எவ்வாறு நடக்கிறோம் (2பேதுரு 1:19; 1யோவான் 1:7)

"என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" - மத் 11:28-30 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து மூன்று கட்டளைகளைக் கூறியிருக்கிறார். அவையாவன:

1. என்னிடத்தில் வாருங்கள் (மத் 11:28)
2. என் நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் (மத் 11:29)
3. என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் (மத் 11:29)

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" - மத் 11:28-30 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி நான்கு காரியங்கள் கூறப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28)
2. நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் (மத் 11:29)
3. என் நுகம் மெதுவாயிருக்கிறது (மத் 11:30)
4. என் சுமை இலகுவாயிருக்கிறது (மத் 11:30)

விசுவாசிகள் பெற்றுக் கொள்ளும் காரியங்கள்

1. கிறிஸ்துவோடு ஐக்கியமும் நித்திய ஜீவனும் (மத் 11:28; யோவான் 17:2-3)
2. வருத்தத்திலிருந்து விடுதலை (மத் 11:28)
3. அதிகமான பாரங்களிலிருந்து விடுதலை (மத் 11:28)
4. ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் (மத் 11:28-29; எபி 4)
5. இயேசு கிறிஸ்துவிடமிருந்து கற்றுக் கொள்ளும் சத்தியம், ஞானம், அறிவு (மத் 11:29; யோவான் 14:6; 1கொரி 1:30)
6. மெதுவான நுகம் அல்லது பொறுப்பு (மத் 11:29-30; அப் 15:10; கலா 5:1)
7. இலகுவான சுமை (மத் 11:30; சங் 55:22)

12 அதிகாரம்

33. இயேசு ஓய்வுநாட்களுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (மத் 2:23; லூக் 6:1-5)

மத் 12:1 அக்காலத்திலே, இயேசு ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள்.

மத் 12:2 பரிசேயர் அதைக்கண்டு, அவரை நோக்கி: இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே என்றார்கள்.

மத் 12:3. அதற்கு அவர்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது செய்ததை நீங்கள் வாசிக்க வில்லையா?

மத் 12:4 அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே.

மத் 12:5 அன்றியும், ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலை நாளாக்கினாலும், குற்ற மில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா?

மத் 12:6 தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 12:7 பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள்.

மத் 12:8 மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்.

"அக்காலத்திலே, இயேசு ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள்" - இயேசு கிறிஸ்து ஜெபாலயத்திற்குப் போய்க்கொண்டிருந்தார். (மத் 12:9) தோட்டத்தின் வழியாகப் போவதற்கு அனுமதியுள்ள பாதைகள் அக்காலத்தில் இருந்தன. அத்துடன் அவர்களுக்குப் பசி இருந்தால், தோட்டத்துப் பயிர்களைச் சாப்பிடும் அனுமதியும் அவர்களுக்கு உண்டு. (உபா 23:24,25)

"ஓய்வுநாள்" - (அப் 15:24)

"கதிர்" - கோதுமைக் கதிர் (யோவான் 12:24, சங் 65:13)

"பரிசேயர் அதைக்கண்டார்கள்" - இயேசு கிறிஸ்துவிடம் ஏதாவது தவறு கண்டுபிடிக்க வேண்டும் என்பதுதான் பரிசேயருடைய எண்ணம். ஆகையினால் அவர் போகும் இடங்களிலெல்லாம் அவரையும், அவருடைய சீஷர்களையும் கூர்ந்து கவனித்து வந்தார்கள். அவரைக் குற்றப்படுத்துவதற்கு ஏதாவது காரணம் கிடைக்குமா என்று அவருடைய பிரசங்கத்தையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே" - யூதருக்கு ஓய்வுநாள் பிரமாணம் மிகவும் கடுமையானது. இந்தப் பிரமாணத்தின் பிரகாரம் ஜனங்களுக்குப் ஏராளமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. ஓய்வுநாள் பிரமாணத்தில் 39 உபபிரிவுகள் உள்ளன. ஒருவன் ஓய்வுநாளுக்கு ஊழியக்காரன் ஆகிவிட்டால், அவனுடைய ஜீவியம் ஓய்வுநாளுக்கு அடிமையாகிவிடும். இயேசு கிறிஸ்து ஓய்வுநாளை விட மனுஷருடைய தேவைகளைச் சந்திப்பது மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்தினார். பரிசேயர் இதைத் தேவதூஷணம் என்று கூறினார்கள். (மத் 23:23)

"தேவனுடைய வீடு" - (யாத் 25:30; லேவி 24:5; மாற்கு 2:26)

"ஆசாரியர்" - மற்ற நாட்களை விட ஓய்வுநாட்களில் யூதர்கள் அதிகமான பலிகளைச் செலுத்தினார்கள். (எண் 28:9-10) யூதர்களின் விருத்தசேதனமும், மற்ற முக்கியமான சடங்குகளும் ஓய்வுநாளிலேயே நடைபெற்றன. (யோவான் 7:22-23; லூக்கா 13:15)

12 அதிகாரம்

"ஒய்வுநாளை வேலை நாளாக்கினாலும், குற்றமில்லாதிருக்கிறார்கள்" - ஒய்வுநாளை மற்ற நாளைப்போல ஒரு சாதாரணமான நாளாகவே கருதவேண்டும். (அப் 24:6)

"தேவாலயத்திலும் பெரியவர்" - மத் 12:41-42 ஆவது வசனங்களில் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறுவதுபோலவே இங்கும் தம்மைப் பற்றிக் கூறுகிறார்.

அறிந்திரு (known) - γινώσκω - ginooskoo - 1097

வினைச்சொல் - அறிந்திரு, உணர்ந்திரு, தெரிந்துகொள் (to know by experience or effort)

"பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" - (மத் 9:13)

"மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" - ஆண்டவராக இருக்கிற இயேசு கிறிஸ்துவிற்கு எந்தப் பிரமாணத்தையும் அகற்றவோ, அல்லது சேர்க்கவோ அதிகாரம் உண்டு.

34. ஒய்வுநாளில் இயேசு சூம்பின கையையுடைய மனுஷனை சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 3:1; லூக் 6:6)

மத் 12:9 அவர் அவ்விடம் விட்டுப்போய், அவர்களுடைய ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார்.

மத் 12:10 அங்கே சூம்பின கையையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான். அப்பொழுது, அவர்மேல் குற்றஞ்சாட்டும் படிக்கு: ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள்.

மத் 12:11 அதற்கு அவர்: உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ?

மத் 12:12 ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மைசெய்வது நியாயந்தான் என்று சொன்னார்.

மத் 12:13 பின்பு அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான்; அது மறுகையைப்போல் சொஸ்தமாயிற்று.

"ஒய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா" - ஒய்வுநாளின் நோக்கத்தை யூதர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவும் இல்லை. அதைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு விருப்பமும் இல்லை. (மத் 12:12; மாற்கு 2:27; மாற்கு 3:4).

35. இயேசுவைக் கொலைசெய்யும்படி நடைபெற்ற முதலாவது ஆலோசனை - (மத் 26:3)

மத் 12:14 அப்பொழுது, பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்.

"பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்" - பரிசேயர் ஏரோதியரோடு சேர்ந்து கொண்டு இயேசுவை எவ்வாறு கொலை பண்ணலாம் என்று ஆலோசனை பண்ணினார்கள். (மாற்கு 3:6; மத் 26:3)

36. திரளான ஜனங்களைச் சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 3:7; லூக் 6:17; 13:58)

மத் 12:15 இயேசு அதை அறிந்து, அவ்விடம் விட்டு விலகிப்போனார். திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்; அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கி,

மத் 12:16 தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

12 அதிகாரம்

மத் 12:17 ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. அவன் உரைத்ததாவது:

மத் 12:18 இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்; என் ஆவியை அவர்மேல் அமரப் பண்ணுவேன், அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார்.

மத் 12:19 வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை.

மத் 12:20 அவர் நியாயத்திற்கு ஜெயங் கிடைக்கப் பண்ணுகிறவரைக்கும், நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்.

மத் 12:21 அவருடைய நாமத்தின்மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்பதே.

"அவ்விடம் விட்டு விலகிப்போனார்" - இயேசு கோழைத்தனத்தினால் விலகிப்போக வில்லை. ஜனங்களை இரட்சிக்க வேண்டுமென்னும் தமது நோக்கம் நிறைவேற வேண்டுமென்பதற்காகவே அவ்விடம் விட்டு விலகிப்போனார்.

"அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கினார்" - (மத் 13:58)

"தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்" - (மத் 8:4)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்..............." (மத் 12:17-21; ஏசா 42:1-4)

மேசியாவைப் பற்றி நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்

1. தேவனுடைய தாசன் (மத் 12:18)
2. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் (மத் 12:18)
3. தேவன் இவர்மீது பிரியமாக இருந்தார் (மத் 12:18)
4. தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் (மத் 12:18)
5. நீதியான நியாயாதிபதி (மத் 12:18)
6. வாக்குவாதம் செய்யமாட்டார், கூக்குரலிட மாட்டார் (மத் 12:19)
7. வெற்றியுள்ள ஊழியம் (மத் 12:20-21)

"வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை" - தமக்கு ஆதாரவாக இயேசு கிறிஸ்து கூட்டத்தைக் கூட்டி, தம்மைப் பாதுகாத்துத் தமது விரோதிகளை எதிர்க்க மாட்டார். கலகத்தைத் தூண்டிவிட மாட்டார்.

"நெரிந்த நாணலை முறிக்காமலும்...... இருப்பார்" - இந்த வாக்கியம் நாணல் புல்லினால் செய்த கிராமத்து இசைக்கருவியைக் குறிக்கும். இது எளிதில் முறிந்துபோகும். மேய்ப்பர்கள் இதுபோன்ற இசைக்கருவிகளை அழித்துப் போடாமல், பழுதுபார்த்துப் பயன்படுத்துவார்கள்.

"அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப் பண்ணுகிறவரைக்கும் மங்கியெரிகிற திரியை அணைக்காமல் இருப்பார்" - எண்ணெய் ஊற்றப்பட்ட விளக்கில் திரி எரிந்து கொண்டிருக்கும். எண்ணெய் தீர்ந்தபிறகு, திரி எரியாமல் புகைய ஆரம்பிக்கும். மறுபடியும் எண்ணெய் ஊற்றினால் மட்டுமே அந்தத் திரி எரியும். தேவைப்பட்டால் மட்டுமே இயேசு கிறிஸ்து தமது விரோதிகளை அழிப்பார். தமது ஊழியத்தை நிறைவேற்றும் வரையிலும், அவர் தமது முயற்சியைக் கைவிடுவதுமில்லை, தோல்வியுறுவதுமில்லை.

12 அதிகாரம்

37. குருடும் ஊமையுமான ஒருவனைச் சொஸ்தமாக்குகிறார்

மத் 12:22 அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார்.

மத் 12:23 ஜனங்களெல்லாரும் ஆச்சரியப் பட்டு: தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள்.

"தாவீதின் குமாரன் இவர்தானோ?" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து 9 இடங்களில் தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார். (மத் 1:1)

38. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான இரண்டாவது தூஷணம் - (மத் 9:32) **பிரிந்த ராஜ்யம்** (மாற்கு 3:22; லூக் 11:15)

மத் 12:24 பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானே யல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள்.

மத் 12:25 இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது.

மத் 12:26 சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?

மத் 12:27 நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்.

மத் 12:28 நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிற படியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.

மத் 12:29 அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக் கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்.

மத் 12:30 என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.

"பெயெல்செபூல்" - (மத் 10:25)

"இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்தார்" - அறிவை உணர்த்தும் வரத்தையும், ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தையும் இயேசு கிறிஸ்து பயன்படுத்தினார். (1கொரி 12:10; அப் 5:1-11; யோவான் 2:25; மத் 9:4)

"சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே" - சாத்தான் பிசாசுகளின் மூலமாக மனுஷருக்கு வியாதியைத் தருகிறான். (அப் 10:38; லூக்கா 13:11-16) ஆகையினால் மனுஷரில் உள்ள வியாதிகளை அவன் சொஸ்தமாக்க மாட்டான். அவ்வாறு சொஸ்தமாக்கினால் அவன் தன்னைத்தானே துரத்துவதுபோல இருக்கும்.

புறஜாதி மார்க்கங்களிலுள்ள வாக்குத் தத்தங்களைச் சிலர் நம்பி, அந்நிய தெய்வங்கள் தங்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கும் என்று நினைக்கிறார்கள். சாத்தான் இப்படிப்பட்ட அந்நிய மார்க்கங்களோடு பங்காளியாக இருக்கிறான். மனுஷரை வஞ்சிப்பதற்காக சாத்தானே அந்நிய மார்க்கங்களை ஸ்தாபித்தவன். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமலும், கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை அறிவிக்காமலும் சாத்தான் வியாதியைச் சொஸ்தமாக்குகிறான். இவ்வாறு சொஸ்தமானவர்கள் சாத்தானின் உபதேசம்

12 அதிகாரம்

சரியானது என்று நினைத்து அந்நிய மார்க்கங்களைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் இயேசுவை மறுதலிக்கிறார்கள். பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டிய அவசியமில்லையென்று தங்களுடைய ஆத்தும இரட்சிப்பை அசட்டைபண்ணுகிறார்கள்.

இப்பேர்ப்பட்டவர்களுடைய ஆத்துமாவைச் சாத்தான் வஞ்சிக்கிறான். அவர்களுடைய ஆத்துமா சீரழிந்துபோகும். இவர்களுடைய சரீரங்களுக்குள் பிசாசு தங்களுக்கு இஷ்டமானபடி புகுந்துகொள்ளும். வெளியேறும். (மத் 12:43-45) கடைசி நாட்களில் சாத்தான் பிசாசுகளுக்கு அதிகாரம் கொடுத்து, மனுஷரை வஞ்சிப்பான். (மத் 24:24; 2தெச 2:8-12; வெளி 13:2; வெளி 16:13-16; வெளி 19:20)

"உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்?" - பரிசேயர்கள் பிசாசுகளைத் துரத்தினார்கள். யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் பரிசேயரைப் பற்றி இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார். (அப் 19:13) தம்மைப் பற்றிக் குற்றம்சுமத்துபவர்களை அமைதிப்படுத்துவதற்காக இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தினார். பரிசேயர்களும், அவர்களுடைய சீஷர்களும் பிசாசுகளைத் துரத்தினால் அவர்களும் பிசாசுகளின் பிள்ளைகளாகத்தானே இருப்பார்கள். (மத் 12:27-28)

இயேசு கிறிஸ்து தேவனுடைய ஆவியினாலேயே பிசாசுகளைத் துரத்தினார் என்பதற்கு ஆதாரங்கள்

1. சாத்தானுடைய இராஜ்ஜியம் பிரிந்திருக்க வில்லை. இயேசு கிறிஸ்து அவனுடைய இராஜ்ஜியத்தை அழிக்கிறார் என்றால் அது சாத்தானுடைய வல்லமையினால் நடைபெறும் காரியமல்ல. தேவனுடைய ஆவியினாலே நடைபெறும் காரியம். (மத் 12:25-26)

2. இயேசு சாத்தானைப் பிசாசுகளின் ஆவியினால் துரத்துவதாகப் பரிசேயர்கள் குற்றம்சுமத்துகிறார்கள். அதே பரிசேயர்களும் பிசாசுகளைத் துரத்துகிறார்கள். அவர்களுடைய குற்றச்சாட்டுகளின்படி பரிசேயர்களும் பிசாசுகளின் ஆவியினாலேயே சாத்தானைத் துரத்துகிறார்கள். (மத் 12:27)

3. தன்னைவிடப் பலவீனமானவன் தன்னை மேற்கொள்வதற்கு சாத்தான் அனுமதிக்க மாட்டான். இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக சாத்தானுக்கு ஒரு அதிகாரமும் இல்லை. சாத்தான் பலவீனமானவனாகவும், உதவியற்றவனாகவும் இருக்கிறான். இயேசு கிறிஸ்து தேவனிடமிருந்து வந்திருக்கிறவராகையினால், அவர் சாத்தானைவிட வல்லமையானவர். (மத் 12:28-29)

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" - இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறேன் என்று சொல்கிறவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பரீட்சை. (மத் 10:37) தேவனும், சாத்தானும் ஒத்துப்போகமுடியாது. ஒரு மனுஷனால் தேவனுக்கும், சாத்தானுக்கும் ஊழியம் செய்ய முடியாது. (மத் 6:24; ரோமர் 6:16-23)

"என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" - ஆடுகளுக்கு உதவி புரிய விரும்புகிறவன் ஆடுகளைக் கூட்டிச்சேர்ப்பான். ஆடுகளைச் சிதறடிக்கிறவன் திருடன். அவன் தன்னுடைய சொந்த ஆதாயத்திற்காக ஆடுகளைத் திருடவும், அழிக்கவும் வந்திருக்கிறான். (மத் 7:15-20; அப் 20:28-30; ரோமர் 16:17; கலா 1:6-9; பிலி 1:14-18; பிலி 3:17-19; 2பேதுரு 2)

39. மனுஷருக்கு மன்னிக்கப்படாத பாவம் - (மாற்கு 3:28; லூக் 12:10; எபி 6:4; 10:26)

மத் 12:31 ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப் படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப் படுவதில்லை.

12 அதிகாரம்

மத் 12:32 எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப் படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.

"ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப் படுவதில்லை" - மனுஷருடைய எல்லாப் பாவங்களையும், எல்லாத் தூஷணங்களையும் இயேசு கிறிஸ்து மன்னிப்பார். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக யாராவது கிரியை செய்தாலும், தூஷண வார்த்தை பேசினாலும் அவர்களுக்கு மன்னிப்பில்லை. (மத் 1:21; மத் 12:31; 1யோவான் 1:7-9; 1யோவான் 3:5)

பாவம் (sin) - ἁμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம், தோல்வி

(அ) பாவச் செயல் (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில் மூங்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா. 1:21), (ரோம. 3:1, யோவான் 1:29)

தூஷணம் (blasphemy) - βλασφημία - blaspheemia - 988

பெண்பால் பெயர்ச்சொல் - தூஷணம்

தூஷணம் (blasphemy) - βλάσφημος - blaspheemos - 989

பெயரடை - தூஷணம், தூஷிக்கிற

1. தூஷணமான வார்த்தைகளைப் பேசுதல். (Speak evil of) (யூதா 1:8; எபே 4:31)

2. தர்க்கம் பண்ணுதல் (Rail) (1தீமோ 6:4; 2பேதுரு 2:11)

3. தூஷித்தல் (Revile) (மத் 27:39)

4. தூஷித்தல் (Defame) (1கொரி 4:13)

5. புறங்கூறுதல் (Slander) (ரோமர் 3:8)

6. அவமதித்தல் (Insult by blasphemy) (மத் 12:31)

"எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப் படுவதில்லை" - தேவதூஷணம் என்பதற்குத் தெளிவான விளக்கம் இங்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைச் சாத்தானுடைய கிரியைகளோடு ஒப்பிட்டுப் பேசுவதே தேவதூஷணம். பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளை அவமதித்துப் பேசுவதும் தேவதூஷணமே. ஆகையினால் யாராவது தெரிந்தும், வேண்டுமென்றும், பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பேசுவது தேவதூஷணமாக இருக்கும். அதற்கு இம்மையிலும் மன்னிப்பில்லை,மறுமையிலும் மன்னிப்பில்லை. (எபி 6:4-9; எபி 10:26-31; 1தீமோ 1:13)

இம்மை (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - இம்மை, காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32; மாற். 10:30

இயேசு கிறிஸ்துவின் முதல்வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலம். (மத் 24:14,29-31; வெளி 19:11-21) ஆயிர வருஷ அரசாட்சியின் காலம். (வெளி 19:11-20:15; சக 14; தானி 2:44-45; தானி 7:13-27; எபே 1:10)

12 அதிகாரம்

40. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் - (யாக் 3; 1பேதுரு 3:10)

மத் 12:33 மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்.

மத் 12:34 விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.

மத் 12:35 நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்.

மத் 12:36 மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 12:37 ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.

"மரமானது அதின் கனியினால் அறியப்படும்" - நல்லமரம் நல்ல கனியைக் கொடுக்கும். கெட்ட மரம் கெட்ட கனியைக் கொடுக்கும். நல்ல தீர்க்கதரிசி நல்ல உபதேசங்களைக் கூறுவார். கள்ளத்தீர்க்கதரிசி கள்ள உபதேசங்களைக் கூறுவார். அவர்களுடைய கனிகளினால் நாம் அவர்களை அறிந்து கொள்ளலாம். (மத் 7:16)

"விரியன்பாம்புக் குட்டிகளே" - விரியன்பாம்பு விஷமுள்ளது. பொல்லாதவர்கள் விஷமுள்ள பாம்புகளையும், அவற்றின் குட்டிகளையும் போன்றவர்கள். பாம்புக் குட்டிகளும் விஷமுள்ளவை. (மத் 3:7; மத் 23:33; லூக்கா 3:7, யாக் 3:8-18)

"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" - இருதயம் தீமையினால் நிறைந்திருக்கும்போது துன்மார்க்கனுடைய வாயின் வழியாகத் தீமையான காரியங்களும், பொல்லாங்கான காரியங்களும் நிரம்பிவழியும். நல்ல மனுஷனுடைய இருதயத்திலிருந்து நல்லவைகள் வெளிவரும். பொல்லாத மனுஷனுடைய இருதயத்திலிருந்து பொல்லாதவைகள் வெளிவரும்.

தீர்க்கதரிசன எண் - 12

"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும்..............." (மத் 12:36-37) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (வெளி 20:11-15)

வீணான **(idle)** - **ἀργός** - **argos** - 692

பெயரடை - வீணான, சும்மா, சோம்பேறி, சோம்பலுள்ள **(unprofitable, useless)** (மத் 12:36; மத் 20:3,6; 1தீமோ 5:13); மெதுவாக **(slow)** (தீத்து 1:12); வெறுமையாக **(barren)** (2பேதுரு 1:8).

"நியாயத்தீர்ப்பு நாள்" - (அப் 17:31; வெளி 20:11-15)

வார்த்தைகள் **(words)** - **λόγος** - **logos** - 3056

ஆண்பால் பெயர்ச்சொல் - சொல், சொல்லுதல், வார்த்தை, கணக்கு, காரியம், புத்தி, ஞானம், வசனம், சங்கதி, பேச்சு, உபதேசம், கீர்த்தி, யோசனை, வாக்கியம் (அப் 1:1) வார்த்தைகள் மிகவும் முக்கியமானவைகள். அவை நமக்கு வெகுமதியைக் கொடுக்கும். அல்லது நம்மைக் குற்றவாளியாகத் தீர்க்கும். (யாக் 3:2)

12 அதிகாரம்

41. யோனாவின் அடையாளம் - (லூக் 11:29)

மத் 12:38 அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள்.

மத் 12:39 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

மத் 12:40 யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்.

"உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம்" - சுவிசேஷங்களில் 6 இடங்களில் இயேசு கிறிஸ்துவிடம் ஜனங்கள் அடையாளங்களைக் கேட்பதாக நாம் வாசிக்கிறோம். (மத் 12:38; மத் 16:1; மத் 24:3; லூக்கா 11:16; யோவான் 2:18; யோவான் 6:30)

தீர்க்கதரிசன எண் - 13

"இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்.............." (மத் 12:39-42) - மத் 12:39-40 ஆகிய வசனங்களில் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மத் 12:41-42 ஆகியவை நியாயத்தீர்ப்பு நாளில் நிறைவேறும். (வெளி 20:11-15; அப் 17:31)

"பொல்லாத விபசாரச் சந்ததியார்" - (மத் 11:16)

"யோனா தீர்க்கதரிசியின் அடையாளம்" - இயேசு கிறிஸ்து யோனா தீர்க்கதரிசியின் வரலாற்றை அங்கீகரித்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு சான்று. (யோனா 1:17)

"பெரியமீனின் வயிறு" - திமிங்கலத்தின் வயிறு 100 அடி நீளமும், 40 அடி சுற்றளவும் உடையது. சில திமிங்கலங்களின் எடை ஒரு லட்சம் கிலோ வரையிலும் இருக்குமாம்.

"பூமியின் இருதயம்" - பாதாளம் (எபே 4:7-11) (சங் 16:10; அப் 2:27; 1பேதுரு 3:19; எபி 2:14-15, லூக்கா 16:23,26)

42. இயேசு யூதர்களைக் கடிந்து கூறுகிறார் - (லூக் 11:31; மத் 11:20)

மத் 12:41 யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந் திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவார்கள்.

மத் 12:42 தென்தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்.

"நினிவே பட்டணத்தார் குற்றஞ் சுமத்துவார்கள்" - (யோனா 3:1-10; யோனா 4:11; லூக்கா 11:32)

"யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்" - இயேசு கிறிஸ்து பெரியவர்.

1. தேவாலயத்திலும் பெரியவர் (மத் 12:6)
2. யோனாவிலும் பெரியவர் (மத் 12:41; லூக்கா 7:28; லூக்கா 11:32)
3. சாலொமோனிலும் பெரியவர் (மத் 12:42; லூக்கா 11:31)

12 அதிகாரம்

"தென்தேசத்து ராஜஸ்திரீ" - (1இராஜா 10:1-13; 2கொரி 9:1-12; லூக்கா 11:31)

43. இஸ்ரவேலைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (லூக் 11:24)

மத் 12:43 அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்:

மத் 12:44 நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப் பட்டதாகவும் இருக்கக்கண்டு,

மத் 12:45 திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்.

"அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்" - அசுத்த ஆவியை இயேசுவின் நாமத்தில் துரத்தவில்லையென்றால் அது தனக்கு இஷ்டம்போல ஒரு மனுஷனுக்குள் வரும். தன் இஷ்டம்போல அவனை விட்டுப் புறப்பட்டுபோகும். பல இடங்களுக்கு அலைந்து திரியும். மறுபடியும் அவனுக்குள் வரும். (மத் 12:29)

"நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன்" - இந்த வசனத்தில் அசுத்த ஆவிக்கு ஆள்தத்துவப் பிரதிச் சுட்டுப்பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிசாசுகளின் குணங்களை இது விளக்குகிறது.

தீர்க்கதரிசன எண் - 14

"அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும்" - (மத் 12:45) இந்தத் தீர்க்கதரிசனம் அப் 2:23; அப் 4:17; அப் 5:17; அப் 7:54; அப் 13:45; அப் 14:19; 1தெச 2:13-16 ஆகிய வசனங்களில் நிறைவேறியிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, பின்பு, பின்மாறிப் போனவனுடைய நிலைமையும் பரிதாபமாக இருக்கும். (2பேதுரு 2:20-22)

44. இயேசுவின் உறவினர்கள் - (மாற்கு 3:31; லூக் 8:19)

மத் 12:46 இப்படி அவர் ஜனங்களோடே பேசுகையில், அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் பேச வேண்டுமென்று வெளியே நின்றார்கள்.

மத் 12:47 அப்பொழுது, ஒருவன் அவரை நோக்கி: உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான்.

மத் 12:48 தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி,

மத் 12:49 தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே!

மத் 12:50 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

"அவருடைய சகோதரர்" - (லூக்கா 8:19)

"வெளியே நின்றார்கள்" - வீட்டிற்கு வெளியே நின்றார்கள். (மத் 13:1)

"உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்து அவரைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து கொண்டு போக வந்திருந்தார்கள். (மாற்கு 3:21-31)

மத்தேயு – தொகுப்புரை

12 அதிகாரம்

"சகோதரனும் சகோதரியும் தாயும்" - உறவினர்கள் **(relatives)** (ஆதி 14:16; ஆதி 29:12); பிறர் **(neighbors)** (உபா 23:7); இஸ்ரவேலர் **(any Israelite)** (லேவி 19:17; உபா 22:1-4; எரே 34:9); எந்த மனுஷனும் **(any man)** (ஆதி 9:5; 1யோவான் 3:15); உடனாளி **(a companion)** (2சாமு 1:26). விசுவாசிகள் ஒருவரையொருவர் அழைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தும் வாக்கியம் **(It is a fraternal epithet among Christians)** (அப் 9:17; அப் 21:20; 1கொரி 7:12; 2கொரி 2:13; எபி 2:11-12; 1பேதுரு 1:22)

13 அதிகாரம்

45. பிரசங்கம் - பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் - (மத் 13)

(1) இடம் - கலிலேயாக்கடல்

மத் 13:1 இயேசு அன்றையதினமே வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார்.

மத் 13:2 திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் படவில் ஏறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கரையிலே நின்றார்கள்.

"வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார்" - மத் 13:1-35 ஆகிய வசனங்களை எல்லா ஜனங்களுக்கும் கடலோரத்தில் பொதுவாக உபதேசம் பண்ணினார். மத் 13:36-52 ஆகிய வசனங்களை வீட்டில் தம்முடைய சீஷர்கள் மத்தியில் தனிமையாகப் பேசினார். (மத் 4:13; மத் 9:28)

(2) விதைக்கிறவனைப் பற்றிய உவமை (மாற்கு 4:1; லூக் 8:4)

மத் 13:3 அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்: கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.

மத் 13:4 அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.

மத் 13:5 சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது.

மத் 13:6 வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று.

மத் 13:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது.

மத் 13:8 சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.

மத் 13:9 கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

உவமைகளைப் பற்றிய விளக்கம்

1. கிரேக்க மொழியில் "பேரபோல்" **(parabole)** என்னும் சொல் தமிழில் உவமை என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இந்தச் சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. ஒப்புமை **(a comparison)** (மாற்கு 4:30); அடையாளம் **(figure)** (எபி 9:9; எபி 11:19); பழமொழி **(proverb)** (லூக்கா 4:23); விளக்கம் **(illustration)** (மத் 13:3,10,13,18,24,31-36,53; மத் 15:15; மத் 21:33,45; மத் 22:1; மத் 24:32)

2. உவமைகள் சத்தியத்தை விளக்கும். ஏற்கெனவே ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கும் காரியங்களோடு ஒப்பிட்டு இந்த உவமை கூறப்படும். இதன் மூலமாக ஜனங்கள் சத்தியத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

3. மற்றவர்களைக் கடிந்து கொள்ளும்போது வார்த்தைகளை நேரடியாகப் பேசினால் அவர்களுடைய மனது புண்படும். உவமை மூலமாக மற்றவர்களைக் கடிந்து கொள்ளும்போது அவர்களுக்கு அதிக பாதிப்பு இராது. (2சாமு 12)

4. உவமைகளால் ஒரு காரியத்தை விளக்கும்போது கேட்போருக்கு ஆர்வம் மிகுதியாகும். இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பம் அதிகரிக்கும். (மத் 13:10-17; 2சாமு 12)

மத்தேயு - தொகுப்புரை

13 அதிகாரம்

5. ஒரு சத்தியத்தை உவமையின் மூலமாக விளக்கும்போது உவமைக்கு அதிக முக்கியத்துவம் தராமல் சத்தியத்திற்கே முக்கியத்துவம் தரவேண்டும். சத்தியம் உண்மையானது. உவமை சத்தியத்தை விளக்கும் விளக்கவுரை மட்டுமே.

6. ஒரு சத்தியத்தை உவமைகளால் விளக்கும்போது அந்த உவமைகளின் வரலாற்றுப் பின்னணிகள், சூழ்நிலைகள், கூறப்படும் காலம், ஆகிய அனைத்தையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவற்றையும் புரிந்து கொள்ள வேண்டும்.

7. உவமையாகக் கூறப்படும் வார்த்தைகளுக்கு ஆவிக்குரிய வியாக்கியானம் தரக்கூடாது. உவமையால் விளக்கப்படும் சத்தியத்திற்கு மட்டுமே ஆவிக்குரிய வியாக்கியானம் தரவேண்டும்.

8. உவமைக்கும், சத்தியத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

9. ஒரு சத்தியம் உவமையால் விளக்கப்படுவது தேவைப்படும்போது மட்டுமே உவமையைப் பயன்படுத்த வேண்டும். பல சத்தியங்கள் உவமை இல்லாமலேயே தெளிவாக விளங்கும்.

10. இயேசு கிறிஸ்து தாமே வியாக்கியானம் பண்ணுவதற்குரிய வழிமுறைகளை வகுத்துத் தந்திருக்கிறார். வேத வாக்கியத்திற்கு முரணாக வியாக்கியானம் பண்ணுவது எப்போதுமே தவறு.

உவமை (parables) - παραβολή - **parabolee** - 3850

பெண்பால் பெயர்ச்சொல் - உவமை, ஒப்பனை, பழமொழி, பாவனை

உவமை எண் - 1

"விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்" - மத் 13:18-23 ஆகிய வசனங்களில் விதைக்கிறவனைப் பற்றிய உவமை விளக்கப்பட்டிருக்கிறது. இது கிருபையின் காலத்தை வர்ணிக்கிறது. தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிற ஜனங்களுடைய இருதயங்கள் பல்வேறு விதமானவை. இருதயங்களில் வித்தியாசம் இருப்பதுபோலவே, அவர்கள் மூலமாக வெளிவரும் ஆவியின் கனியிலும் வித்தியாசம் இருக்கும். (மத் 13:24-30, 36-43)

"வழியருகே" - வேலியில்லாத தோட்டத்திற்கு அருகேயுள்ள நடைபாதை. எல்லோரும் அதில் நடந்து செல்வதினால் அந்த நிலமே இறுகிப்போய்க் கடினமாக இருக்கும்.

"நல்ல நிலம்" - கற்களும், முற்களும் அகற்றப்பட்ட விளைநிலம். நன்றாக உழுது ஆயத்தம் பண்ணப்பட்ட நிலம். விதை விதைத்தவுடன் அது வளர்வதற்கு நிலம் பக்குவமாக இருக்கிறது.

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" - (மத் 11:15)

(3) இயேசு உவமைகளாகப் பேசியதற்கு காரணம் - (மாற்கு 4:10; லூக் 8:9)

மத் 13:10 அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள்.

மத் 13:11 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை.

மத் 13:12 உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

13 அதிகாரம்

மத் 13:13 அவர்கள் கண்டும் காணாதவர் களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிற படியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்.

மத் 13:14 ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள்.

மத் 13:15 இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும் படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்பதே.

மத் 13:16 உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்.

மத் 13:17 அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இயேசு கிறிஸ்து உவமைகளைப் பயன் படுத்தியதற்குக் காரணங்கள்

1. ஜனங்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தி, சத்தியத்தை வெளிப்படுத்துவதற்காக (மத் 13:10-11,16)
2. ஆர்வத்தோடு கேட்பவர்களுக்கு புதிய சத்தியத்தை அறிவிப்பதற்காக (மத் 13:11-12, 16-17)
3. ஏற்கெனவே தெரிந்து வைத்திருக்கும் காரியங்களோடு ஒப்பிட்டு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காக (மத் 13:11)
4. கலகக்காரர்களுக்குச் சத்தியத்தை அவர்கள் புரிந்து கொள்ளாதவாறு மறைப்பதற்காக (மத் 13:11-15)
5. சத்தியத்தை நேசிக்கிறவர்களுக்கும், இன்னும் அதிகமாக சத்தியத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கும் அதிகமான சத்தியங்களை உபதேசம் பண்ணுவதற்காக (மத் 13:12)
6. சத்தியத்தை விரும்பால், அதை விரோதிக்கும் ஜனங்களிடமிருந்து சத்தியத்தைத் தனியே பிரித்துச் செல்வதற்காக (மத் 13:12)
7. தீர்க்கதரிசத்தை நிறைவேற்றுவதற்காக (மத் 13:14-17,35)

“இரகசியங்கள்” - முன்பு இரகசியமாகவும், மறைபொருளாகவும் இருந்தவை இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளுக்குத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு எதுவுமே மறைபொருளாயிராது. (மத் 13:19; 2கொரி 4:3-4)

“பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி அவர்களுக்கு அருளப்படவில்லை” - நாம் ஜீவிக்கும் காலத்தில் களையும், பயிரும் சேர்ந்திருக்கிறது. நல்ல நிலமும், மோசமான நிலமும் சேர்ந்தேயிருக்கிறது. நீதிமான்களும், துன்மார்க்கரும் சேர்ந்தேயிருக்கிறார்கள். இக்காலத்தின் முடிவில் இவர்கள் பிரிக்கப்படுவார்கள். துன்மார்க்கர் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள். நீதிமான்களோ தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (மத் 13:40-43,49-50; மத் 25:31-46; மத் 4:17; மத் 19:24; வெளி 20; சக 14)

13 அதிகாரம்

"உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்" - விசுவாசிகள் அறிவிலும், ஞானத்திலும் விருத்தியடைவார்கள். தேவனைப் பற்றிய இரகசியங்கள் விசுவாசிகளுக்கு அதிகமாக வெளிப்படுத்தப்படும். அவர்கள் வெளிச்சத்தைக் கண்டடைந்து, வெளிச்சத்தில் நடப்பார்கள். அவிசுவாசிகளோ அறியாமையில் மூழ்கி, இருளில் நடப்பார்கள். (ரோமர் 1:18-32; தீத்து 1:15; 1யோவான் 1:7; 1யோவான் 3:16-20)

"இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்" - மனுஷனுடைய அவிசுவாசத்தினாலும், இருதயத்தின் கலகக் குணத்தினாலும், இவர்களுக்கு இப்படிப்பட்ட பரிதாபமான சூழ்நிலை வரும். இது சாத்தானின் கிரியை. (மத் 13:15,19; 2கொரி 4:3-4)

"அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறார்கள்" - அவர்களால் காண முடியும். ஆனால் காண மறுக்கிறார்கள். அவர்களால் கேட்க முடியும். ஆனால் கேட்க மறுக்கிறார்கள். அவர்களால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் சத்தியத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். தங்களுடைய சொந்த மார்க்கங்களையும், பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் விட்டுவெளியேவர அவர்களுக்கு மனமில்லை. ஒளியில் நடந்து புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு ஆர்வம் இல்லை. (மத் 13:11)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

"காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள்..............." (மத் 13:14-15; ஏசா 6:9-10; யோவான் 12:39-40; அப் 28:25)

"இருதயம் கொழுத்திருக்கிறது" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கக் கூடாதவாறு அவர்கள் இருதயம் கொழுத்து அடைப்பட்டுக் கிடக்கிறது. தங்கள் கண்களினால் அவர்கள் காணவில்லை. காதுகளினால் கேட்கவில்லை. இருதயத்தினால் உணரவில்லை. ஆகையினால் மனந்திரும்பவில்லை. (மத் 13:13)

கொழுத்திரு (waxed gross) - **παχύνω - pachynoo** - 3975

வினைச்சொல் - கொழுத்திரு **(to make fat, stupid, insensible, inattentive, dull, and callous)** (மத் 13:15; அப் 28:27)

விசுவாசிக்கிறவர்களுக்குத் தேவனுடைய ஆசீர்வாதங்கள்

1. மனந்திரும்புதலும், புதிய சிருஷ்டியும், கர்த்தரோடு நடப்பதும் (சங் 19:7; சங் 51:13; மத் 18:3; லூக்கா 22:32; அப் 3:19; யாக் 5:19-20)
2. சரீர சுகமாதல், இயேசு கிறிஸ்துவிற்குள் புதிய ஆரோக்கியம் (சங் 91; சங் 103:3; மத் 8:17; ஏசா 53; ரோமர் 8:11; 1பேதுரு 2:24; 3 யோவான் 1:2; யாக் 5:14-16; மாற்கு 16:17-18; யோவான் 14:12-15; யோவான் 15:7,16)

"உங்கள் கண்கள் காண்கிறதினால் அவைகள் பாக்கியமுள்ளவைகள்" - (மத் 5:3; மத் 11:6)

"உங்கள் காதுகள் கேட்கிறதினால் அவைகள் பாக்கியமுள்ளவைகள்" - (மத் 11:15)

இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களை நாம் ஆர்வத்தோடு கேட்கவேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது வார்த்தையைக் கேட்பதைப் பல வசனங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். (மத் 13:9, 13-23)

13 அதிகாரம்

(4) விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (மாற்கு 4:13; லூக் 8:11)

மத் 13:18 ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்.

மத் 13:19 ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.

மத் 13:20 கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்;

மத் 13:21 ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்.

மத் 13:22 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிற வனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்.

மத் 13:23 நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனு மாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

"பொல்லாங்கன்" - பிசாசு (மத் 13:38-39)

"உடனே" (anon) விரைவாக, அதிசீக்கிரமாக.

"கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்" - இரட்சிக்கப்பட்டவன் பின்மாறிப்போவதற்கு வாய்ப்புள்ளது என்பதை விளக்கும் வசனம். (லூக்கா 8:13; யோவான் 15:1-6; ரோமர் 8:12-13; கலா 1:6-8; கலா 5:4,19-21; கலா 6:7-8; 2கொரி 11:3-4; 1தெச 3:8; 1தீமோ 5:11-15; 2தீமோ 2:12; யாக் 5:19-20; 1யோவான் 3:8; எபி 3:6,12-14; எபி 6:4-12; எபி 10:26-29; எபி 12:15; 2பேதுரு 2:20-22; வெளி 3:5; வெளி 22:18-19)

"உபத்திரவம்" (tribulation) - (அப் 14:22; ரோமர் 5:3; 2தீமோ 3:12)

"துன்பம்" (persecution) - (சங் 10:2)

"உலகக்கவலை" (care of this world) - (லூக்கா 21:34)

" ஐசுவரியத்தின் மயக்கம்" (deceitfulness of riches) - (லூக்கா 18:24)

"நல்ல நிலம்" - (மத் 13:8)

"பலன் தருவான்" - தேவனுடைய பிள்ளைகள் கனிதரவேண்டும். கனி தருவது நிலத்தின் தன்மையைப் பொருத்தும், அது முறையாக பராமரிக்கப்படும் விதத்தைப் பொருத்தும் அமையும். (யோவான் 15:1-8)

(5) கோதுமை, களைகள் ஆகியவற்றின் உவமை

மத் 13:24 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 13:25 மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்து விட்டுப் போனான்.

மத் 13:26 பயிரானது வளர்ந்து கதிர்விட்ட போது, களைகளும் காணப்பட்டது.

13 அதிகாரம்

மத் 13:27 வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்.

மத் 13:28 அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள்.

மத் 13:29 அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்.

மத் 13:30 அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்.

"வேறொரு" - இதுவரையிலும் மத் 13:3-35 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து கூறிய மூன்று உவமைகளும் வீட்டிற்கு வெளியே எல்லா ஜனங்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்டவை.

தீர்க்கதரிசன எண் - 15

"பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது...." (மத் 13:24-30,36-43) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது முழுவதுமாக நிறைவேறும். (மத் 25:31-46, மத் 4:17; மத் 19:24)

உவமை எண் - 2

"பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது...." (மத் 13:24)

"சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்" - கிழக்கு தேசங்களில் இப்பேர்ப்பட்ட பழக்கம் உள்ளது. ஒருவர் வயலில் நன்றாக விதை விதைத்திருக்கும்போது அவனுடைய விரோதியானவன் இரவு வேளையிலே அவனுடைய நிலத்தில் களைகளை விதைத்துவிட்டுப் போய்விடுவான். நல்ல பயிர் வளரும்போது களைகள் அதிகமாக வளர்ந்து, நிலத்தைப் பாழாக்கிவிடும். நல்ல பயிர்களையும் வளரவிடாது. இவ்வாறு பாழாக்கப்பட்ட நிலத்தைத் திருத்துவதற்கு பல வருஷங்கள் ஆகும்.

களை (tares) - **ζιζάνιον** - **zizanion** - 2215

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - களை

"போனான்" - களைகளை விதைத்த சத்துருவிற்குத் தான் விதைத்த களை முளைக்குமா என்னும் சந்தேகமே அவனுடைய உள்ளத்தில் இல்லை. களைகள் நிச்சயமாக முளைக்கும். நிலம் பாழாகும் என்று தன்னுடைய துர்க்கிரியைக் குறித்து நம்பிக்கையோடே போனான். சத்திய வசனம் என்னும் நல்ல விதையை விதைக்கும் நமக்கும் நாம் விதைத்த விதை முளைக்கும் என்னும் நம்பிக்கை நம்முடைய இருதயங்களில் உறுதியுடன் இருக்க வேண்டும்.

"இரண்டையும் அறுப்புமட்டும் வளர விடுங்கள்" - கோதுமையும், களையும் சேர்ந்தே வளரும். காலத்தின் முடிவு வரையிலும் நீதிமான்களும், துன்மார்க்கரும் இந்த உலகத்தில் சேர்ந்தேயிருப்பார்கள். (மத் 13:39-43,49-50) பின்பு இருவரும் பிரிக்கப்படுவார்கள். (மத் 24:29 - 51; மத் 25:31-46)

13 அதிகாரம்

(6) கடுகு விதையின் உவமை - (மாற்கு 4:30; லூக் 13:18)

மத் 13:31 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்.

மத் 13:32 அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

தீர்க்கதரிசன எண் - 16

"பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்...." - (மத் 13:31-33) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறி வருகிறது.

உவமை எண் - 3

"பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்...." - (மத் 13:31)

கடுகு விதை பரலோக இராஜ்யத்தைக் குறிக்கிறது. சிறிய ஆரம்பமாக இருந்தாலும் அது அதிக வளர்ச்சி பெற்று, பலருக்கும் அடைக்கலம் தரும் ஸ்தலமாக இருக்கும். (மாற்கு 4:31; லூக்கா 13:19; லூக்கா 17:6; மத் 13:32; மத் 17:20, மத் 13:4,19,32,39,47; மத் 24:24)

(7) புளித்தமாவின் உவமை - (லூக் 13:20)

மத் 13:33 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள் என்றார்.

உவமை எண் - 4

"பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது......" (மத் 13:33)

"புளித்தமா" - புளித்தமா என்பதற்குப் பல்வேறு அர்த்தங்கள் உள்ளன. பாவம் **(sin)** (1கொரி 5:6-8; கலா 5:9);, துர்உபதேசம் **(false doctrines)** (மத் 16:6-12; மாற்கு 8:15-21), மாய்மாலம் **(hypocrisy)** (லூக்கா 12:1).

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற ஸ்திரீக்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம்

1. அசுத்தம், அவிசுவாசம், துன்மார்க்கம், ஆகியவற்றிற்கு அடையாளமானவள். (புல 1:17) இது தவிர வேறு பல பொருள்களும் இந்தப் பிரிவில் கூறலாம். வேசித்தனம் **(harlotry)** (எசே 16:15,22,26,28-59; எசே 23:1-49; எசே 36:17; ஓசி 1:2; ஓசி 2:2-17; ஓசி 3:1; வெளி 17), துன்மார்க்கம் **(wickedness)** (சக 5:5-11; வெளி 17:5), கள்ளமார்க்கம் **(false religion)** (வெளி 17)

2. ஸ்திரீக்கு நல்லவள், நீதிமான் என்றும் பொருள் கூறலாம். இஸ்ரேல் **(Israel)** (ஆதி 37:9-10- வெளி 12; எசே 16), இரண்டு உடன்படிக்கைகள் **(two covenants)** (கலா 4:21-31), நீதியும், பரிசுத்தமும் **(righteousness and purity)** (2கொரி 11:2; வெளி 19:7-8). மாவு என்பது தேவனுடைய வார்த்தையைக் **(the Word of God)** குறிக்கும். (மத் 4:4; யோவான் 6:47-63)

13 அதிகாரம்

பரலோகராஜ்யத்தைப் பற்றிய உபதேசங்களிலும், திட்டங்களிலும் கள்ள உபதேசங்களும், வேத வசனங்களுக்குப் புறம்பான திட்டங்களும் கலந்துவிட்டன. (லூக்கா 18:8; 1தீமோ 4:1-8; 2தீமோ 3:5; 2தீமோ 4:3-4; 2பேதுரு 3:3-4)

"முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள்" - கள்ள உபதேசங்கள், கள்ளமார்க்கங்கள், துன்மார்க்கர்கள் எல்லோருமே தேவனுடைய வார்த்தைக்குப் பின்னால் ஒழிந்துகொள்ளப் பார்ப்பார்கள்.

படி (measures) - σάτον - saton - 4568

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - படி (ஆதி 18:6)

(8) இயேசு உவமைகளாகப் பேசியதற்குக் காரணம் - (மத் 13:10; மாற்கு 4:10; லூக் 8:9)

மத் 13:34 இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமை களினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை.

மத் 13:35 என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்றமுதல் மறை பொருளானவைகளை வெளிப் படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை" - இயேசு கிறிஸ்து இந்தக் குறிப்பிட்ட சம்பாஷணையில் இந்த உவமைகளைப் பேசினார். மற்ற இடங்களில் அவர் மேலும் பல உவமைகள் கூறியதை நாம் வாசிக்கிறோம்.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 12

"என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன்" - (மத் 13:35; சங் 78:2)

உலகத்தோற்றம் (foundation) - καταβολή - katabolee - 2602

பெண்பால் பெயர்ச்சொல் - உலகத்தோற்றம், உண்டாதல், அஸ்திபாரம்

தோற்றம் (to cast) - καταβάλλω - kataballoo - 2598

வினைச்சொல் - தோற்றம், தள்ளு, போடு

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்

பூமி (earth) - γῆ - gee - 1093

பெண்பால் பெயர்ச்சொல் - தேசம், நாடு, பூமி, நிலம், தரை, பூலோகம், கரை, மண்

அஸ்திபாரம் போடு (founding) - θεμελιόω - themeliooo - 2311

வினைச்சொல் - அஸ்திபாரம் போடு, நிலைபெறு, நிலைநிறுத்து

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (2கொரி 4:9; வெளி 12:10, மத் 13:35; மத் 25:34; லூக்கா 11:50; யோவான் 17:24; எபே 1:4; எபி 4:3; எபி 9:26; எபி 11:10; 1பேதுரு 1:20; வெளி 13:8; வெளி 17:8, ஆதி 1:2; 2பேதுரு 3:5-7; சங் 104:5-9; எரே 4:23-26; ஏசா 14:12-14; எசே 28:11-17; லூக்கா 10:18)

மத்தேயு - தொகுப்புரை

13 அதிகாரம்

(9) கோதுமை, களைகள் ஆகியவற்றின் உவமை பற்றிய விளக்கம் - (மத் 13:18)

மத் 13:36 அப்பொழுது இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போனார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நிலத்தின் களைகளைப்பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்.

மத் 13:37 அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்;

மத் 13:38 நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்;

மத் 13:39 அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்.

மத் 13:40 ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

மத் 13:41 மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து,

மத் 13:42 அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

மத் 13:43 அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

"பிசாசு" - சத்துரு (மத் 13:25,28,39; லூக்கா 10:19; அப் 13:10)

உலகம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32; மாற். 10:30

உலகத்தின் முடிவு (மத் 12:32; மத் 13:39-40,49; மத் 24:3; மத் 28:20) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இந்தக் காலம்முடிவுபெறும். (மத் 24:29-31; மத் 25:31-46; வெளி 19:11-21; சக 14:1-5) அதைத் தொடர்ந்து வரும் காலம். (ஆதி 8:22; ஆதி 9:12; பிர 1:4; சங் 104:5; ஏசா 9:6-7; தானி 7:13-14; வெளி 11:15; வெளி 21:3-22:5)

"களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்" - இந்த வசனம் தேசங்களின் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. (மத் 25:31-46; தானி 7:9) களைகள் சுட்டெரிக்கப்படும். அதே சமயத்தில் இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்திராத கிளைகளும் எரிக்கப்படும். (மத் 8:12; மத் 13:40-43,49-50; மத் 24:31; மத் 25:41,46; யோவான் 15:6)

"அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" -நரகத்தைப் பற்றிய ஒரு வர்ணனை. பற்கடிப்பு என்பது தாங்கமுடியாத வேதனையைக் குறிக்கும். (மத் 13:42,50; வெளி 9:2, மத் 13:50; மத் 8:12; மத் 22:13; மத் 24:51; மத் 25:30; லூக்கா 13:28)

"நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" - நீதிமான்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (வெளி 1:5-7; வெளி 5:10; வெளி 11:15; வெளி 20:4-6; வெளி 22:4-5; மத் 25:31-46; சக 14). சூரியன் எவ்வளவு பிரகாசமாக இருக்கிறதோ அதைப்போன்று நீதிமான்களும் பிரகாசிப்பார்கள். (மத் 5:5; மத் 25:35; லூக்கா 12:32; ரோமர் 8:17; தானி 7:18,22,27; வெளி 21:7)

13 அதிகாரம்

(10) புதைத்திருக்கிற பொக்கிஷத்தின் உவமை

மத் 13:44 அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.

தீர்க்கதரிசன எண் - 17

"அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்" - (மத் 13:44) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருக்கிறது, இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

உவமை எண் - 5

"பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது........" (மத் 13:44)

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

இஸ்ரவேல் ராஜ்யம் பொக்கிஷத்தைப் போன்றது. (சங் 135:4; யாத் 19:5; மல் 3:17) தன்னுடைய அழைப்பின்பிரகாரம் நடந்து கொள்ளாததினால் பூமியில் புதைக்கப் பட்டிருக்கிற பொக்கிஷத்தைப் போல இருக்கிறது. (ரோமர் 9-11) இந்த உலகமே நிலம். (மத் 13:38) இயேசு கிறிஸ்துவே பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்கிற மனுஷர் (மத் 13:34,37, யோவான் 1:11-12; மத் 23:37-39) அவர் தமது பரலோக மேன்மையை விட்டுவிட்டு பாவிகளை இரட்சிப்பதற்காக இவ்வுலகத்திற்கு மனுஷனாக வந்தார். பிலி 2:5-8; 2கொரி 8:9; தீத்து 2:14; எபி 12:1-2) பொக்கிஷம் கண்டுபிடிக்கப்பட்டாலும், இன்னும் பூமிக்குள்ளேயே இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் இந்த பொக்கிஷத்தைப் பற்றிக்கொள்வார். (ரோமர்11:25-29; லூக்கா 21:24; லூக்கா 1:32-33; ஏசா 9:6-7)

(11) விலையுயர்ந்த ஒரு முத்தின் உவமை

மத் 13:45 மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 13:46 அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.

தீர்க்கதரிசன எண் - 18

"பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" - (மத் 13:45-46) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருக்கிறது, இன்னும் நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

உவமை எண் - 6

"பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது" - (மத் 13:45)

பொக்கிஷத்தைப் பற்றிய உவமையில் நிலம் கொள்ளப்படுகிறது. பொக்கிஷம் கொள்ளப்பட்ட நிலத்திற்குள் மறைந்திருக்கிறது. அதைப் பூமியிலிருந்து வெளியே எடுக்க வேண்டும். முத்தைப் பற்றிய உவமையிலோ முத்து கொள்ளப்படுகிறது.

(12) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் வலையின் உவமை

மத் 13:47 அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.

13 அதிகாரம்

மத் 13:48 அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 19

"பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது..." (மத் 13:47-50) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது நிறைவேறும். (மத் 25:31-46)

உவமை எண் - 7

"பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது" - (மத் 13:47)

"சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலை" - உலகம் முழுவதும் சுவிசேஷ ஊழியம் நடைபெற்று வருகிறது. பரலோக இராஜ்யத்தில் ஆத்துமாக்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். வலைகளில் மீன்கள் இருப்பதுபோல ஆத்துமாக்கள் வருகிறார்கள். ஆனாலும், அந்த வலைக்குள் நல்ல மீன்களும், ஆகாத மீன்களும் இருக்கும். நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். களைகளும், கோதுமையும் சேர்க்கப்பட்டு இறுதியில் களைகள் சுட்டெரிக்கப்படுவது போன்று இக்காரியம் நடைபெறும். இதுபோலவே நீதிமான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படுவார்கள். துன்மார்க்கர் நரகத்திற்குத் தள்ளப்படுவார்கள். (மத் 13:36-43,49-50)

(13) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் வலையின் உவமையின் விளக்கம் - (மத் 13:18,36)

மத் 13:49 இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து,

மத் 13:50 அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.

(14) வீட்டெஜமானாகிய மனுஷனின் உவமை

மத் 13:51 பின்பு, இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் அறிந்து கொண்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்து கொண்டோம், ஆண்டவரே, என்றார்கள்.

மத் 13:52 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால், பரலோகராஜ்யத்துக் கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும்எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.

"பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன்" - இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை வேதபாரகராக வர்ணிக்கிறார். (மத் 2:4)

உவமை எண் - 8

"தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்" - பரலோகராஜ்யத்தைப் பற்றிய உவமையில் பழையவைகளையும், புதியவைகளையும் பார்க்கிறோம். விசுவாசிகள் மத்தியிலே பழைய உபதேசங்களும், புதிய உபதேசங்களும் கலந்திருக்கின்றன. கிறிஸ்துவே வீட்டெஜமான். (மத் 13:3,24,31,37-45)

13 அதிகாரம்

"புதியவைகளையும், பழையவைகளையும்" - இது யூதர்களுடைய வழக்குச்சொல். அதிகம், ஏராளம், தாராளம் ஆகிய பொருளைத் தரும் வழக்குச் சொல். இயேசு கிறிஸ்துவின் ஊழிக்காரர்கள் சத்தியத்தில் தெளிவாக இருக்க வேண்டும். எல்லா சத்தியங்களையும் அறிந்திருக்க வேண்டும். மற்றவர்களுக்கு சத்தியத்தை எடுத்துக்கூறும் ஆற்றல் இருக்க வேண்டும்.

46. நாசரேத்தில் இயேசு - இந்த ஊரிலுள்ள ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் - (மாற்கு 6:1; லூக் 4:16)

மத் 13:53 இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு, அவ்விடம் விட்டு,

மத் 13:54 தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெபஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?

மத் 13:55 இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா?

மத் 13:56 இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி,

மத் 13:57 அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்.

மத் 13:58 அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.

மத்தேயு 13-ஆவது அதிகாரத்தில் பரலோகராஜ்யத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறியிருக்கிற உவமைகள்

1. கேட்கிறவர்களின் பிரிவுகள் (மத் 13:3-9,18-23)
2. நல்லதும் கெட்டதும் கலந்திருப்பது (மத் 13:24-30,37-43)
3. அதிக வளர்ச்சி (மத் 13:31-32)
4. சத்தியத்தில் கலப்பு (மத் 13:33)
5. இஸ்ரவேலின் தற்கால நிலைமை (மத் 13:44)
6. தேவனுடைய இராஜ்யத்தில் சபை (மத் 13:45)
7. சத்தியத்தினால் உலகம் முழுவதும் ஏற்படும் விளைவு (மத் 13:47)
8. பழைய, புதிய சத்தியங்கள் (மத் 13:52)

"தாம் வளர்ந்த ஊரிலே" - நாசரேத் (மத் 2:23; மாற்கு 6; லூக்கா 4:16)

"பலத்த செய்கைகள்" - இயேசு கிறிஸ்துவின் வல்லமை. 11 இடங்களில் இயேசு கிறிஸ்துவின் வல்லமையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 11:20-23; மத் 13:54-58; மத் 14:2; மாற்கு 6:2-14; லூக்கா 10:13; லூக்கா 19:37)

"தச்சனுடைய குமாரன்" - இயேசு கிறிஸ்து தச்சனுடைய குமாரன் அல்ல. தேவகுமாரன். (மத் 1:18-25; லூக்கா 1:33-35; யோவான் 3:16).

"மரியாள்" - புதிய ஏற்பாட்டில் ஆறு மரியாள்களைப் பற்றி வாசிக்கிறோம்.

1. இயேசுவின் தாயார்
2. மகதலேனா மரியாள் (லூக்கா 8:2; லூக்கா 24:10)
3. லாசருவின் சகோதரி (மத் 26:7; லூக்கா 10:39-42; யோவான் 11; யோவான் 12:3)
4. யாக்கோபுவின் தாயார் (யோவான் 19:25; மத் 27:56; மாற்கு 15:40)

13 அதிகாரம்

5. மாற்குவின் தாயார் (அப் 12:12);

6. பவுலின் உதவியாள் (ரோமர் 16:6)

இவர்களைத்தவிர பழைய ஏற்பாட்டில் இரண்டு பேருக்கு மரியாள் (மிரியாம்) என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. (யாத் 15:20; 1நாளா 4:17)

வேதாகமத்தில் "யோசே" (Joses) என்னும் பெயருடையவர்கள்

1. இயேசுவின் சகோதரன் (மத் 13:55; மாற்கு 6:3)
2. அல்பேயு-மரியாள் ஆகியோரின் குமாரன், இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி (மத் 27:56; மாற்கு 15:40,47)
3. பர்னபா (அப் 4:36)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற சீமோன்கள்

1. சீமோன் பேதுரு (மத் 10:2)
2. கானானியனாகிய சீமோன் (மத் 10:4; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப் 1:13
3. இயேசுவின் சகோதரன் (மத் 13:55; மாற்கு 6:3)
4. நாயீன் ஊரானாகிய சீமோன் (லூக்கா 7:36-50)
5. பெத்தானியாவிலுள்ள குஷ்டரோகி (மத் 26:6)
6. யூதாஸ்காரியாத்தின் தகப்பன் (யோவான் 6:71; யோவான் 12:4; யோவான் 13:2,26)
7. சிரேனே ஊரானாகிய சீமோன் (மத் 27:32; மாற்கு 15:21; லூக்கா 23:26)
8. மாயவித்தைக்காரனாகிய சீமோன் (அப் 8:9-24)
9. தோல்பதனிடுகிறவனாகிய சீமோன் (அப் 9:43; அப் 10:6-32)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற "யூதா"க்கள்

1. இயேசுவின் சகோதரன், யூதா நிருபத்தை எழுதியவன் (மத் 13:55; மாற்கு 6:3; யூதா 1:1)
2. யாக்கோபின் சகோதரன், லபேயு, ததேயு என்னும் மறுநாமம் கொண்ட அப்போஸ்தலன் (லூக்கா 6:16; மத் 10:3; மாற்கு 3:18; யோவான் 14:22; அப் 1:13)
3. யூதா ஸ்காரியாத் (யோவான் 6:71)
4. கலிலேயா ஊரானாகிய யூதா (அப் 5:37))
5. தமஸ்கு ஊரானாகிய யூதா (அப் 9:11)
6. பர்னபா (அப் 15:22-32)

"சகோதரிகள்" - இயேசு கிறிஸ்துவிற்கு நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். இரண்டுக்கும் மேற்பட்ட சகோதரிகள் இருந்திருக்கலாம். (லூக்கா 8:19)

இடறலடை (offended) - σκανδαλίζω - skandalizoo - 4624

வினைச்சொல் - இடறலடை, இடறலுண்டாக்கு (scandalized, stumbled) (மத் 13:41,57)

"தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்" - (மாற்கு 6:4; லூக்கா 4:24; யோவான் 4:44)

13 அதிகாரம்

"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை" - ஜனங்களுக்கு அவிசுவாசம் இருந்தால் இயேசுவிற்கு அற்புதம் செய்யும் வல்லமை குறைந்துபோகும் என்று பொருள்கூறக்கூடாது. அவர்களுக்கு அவிசுவாசம் இருந்ததினால் இயேசு கிறிஸ்துவிடம் வியாதியஸ்தர்களை விசுவாசத்தோடு கொண்டு வரவில்லை. இயேசு கிறிஸ்துவால் குணமாக்கமுடியாத எந்த வியாதியும் இல்லை. ஜனங்கள் அவிசுவாசமாக இருக்கும் பொழுது இயேசு கிறிஸ்துவின் குணமாக்கும் வல்லமை குறைந்து போகாது. எல்லோரையும் குணப்படுத்தினார் என்னும் வாக்கியத்தை நாம் பல வசனங்களில் வாசிக்கிறோம்.

(மத் 4:23-24; மத் 8:14-18; மத் 9:35; மத் 11:5; மத் 12:15; மத் 14:14, 35-36; மத் 15:30; மத் 19:2; மத் 21:14; மாற்கு 1:32-35,39; மாற்கு 3:10; மாற்கு 6:5,56; லூக்கா 4:40; லூக்கா 5:15,17; லூக்கா 6:17-19; லூக்கா 7:21-23; லூக்கா 9:11; லூக்கா 17:17; அப் 10:38)

"அநேக அற்புதங்கள்" - (மத் 9:8, 13:54)

14 அதிகாரம்

47. ஏரோதுவின் குற்ற மனச்சாட்சி – யோவான் ஸ்நானனின் சிரச்சேதம் – (மாற்கு 6:14; லூக் 9:7-9)

மத் 14:1 அக்காலத்தில், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு,

மத் 14:2 தன் ஊழியக்காரரை நோக்கி: இவன் யோவான்ஸ்நானன்; இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்; ஆகையால், இவனிடத்தில் பலத்த செய்கைகள் விளங்குகிறது என்றான்.

மத் 14:3 ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளினிமித்தம் யோவானைப் பிடித்துக் கட்டி காவலில் வைத்திருந்தான்.

மத் 14:4 ஏனெனில்: நீர் அவளை வைத்துக்கொள்வது நியாயமல்லவென்று யோவான் அவனுக்குச் சொல்லியிருந்தான்.

மத் 14:5 ஏரோது அவனைக் கொலைசெய்ய மனதாயிருந்தும், ஜனங்கள் அவனைத் தீர்க்கதரிசியென்று எண்ணின படியால் அவர்களுக்குப் பயந்திருந்தான்.

மத் 14:6 அப்படியிருக்க, ஏரோதின் ஜென்மநாள் கொண்டாடப்படுகிறபோது, ஏரோதியாளின் குமாரத்தி அவர்கள் நடுவே நடனம்பண்ணி ஏரோதைச் சந்தோஷப்படுத்தினாள்.

மத் 14:7 அதினிமித்தம் அவன்: நீ எதைக்கேட்டாலும் தருவேன் என்று அவளுக்கு ஆணையிட்டு வாக்குக் கொடுத்தான்.

மத் 14:8 அவள் தன் தாயினால் ஏவப்பட்டபடியே: யோவான்ஸ்நானனுடைய தலையை இங்கே ஒரு தாலத்திலே எனக்குத் தாரும் என்று கேட்டாள்.

மத் 14:9 ராஜா துக்கமடைந்தான். ஆகிலும், ஆணையினிமித்தமும், பந்தியில் கூட இருந்தவர்களினிமித்தமும், அதைக் கொடுக்கக் கட்டளையிட்டு,

மத் 14:10 ஆள் அனுப்பி, காவற்கூடத்திலே யோவானைச் சிரச்சேதம்பண்ணுவித்தான்.

மத் 14:11 அவனுடைய சிரசை ஒரு தாலத்திலே கொண்டுவந்து, சிறு பெண்ணுக்குக் கொடுத்தார்கள்; அவள் அதைத் தன் தாயினிடத்தில் கொண்டுபோனாள்.

மத் 14:12 அவனுடைய சீஷர்கள் வந்து உடலை எடுத்து அடக்கம்பண்ணி, பின்பு போய் அந்தச் சங்கதியை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.

"ஏரோது" - ஏரோது அந்திப்பா (மத் 2:3)

"காற்பங்கு தேசாதிபதி" - ஒரு தேசத்தின் நான்கில் ஒரு பகுதியை ஆளுகிறவர். பிற்காலத்தில் ஆளுநர்களுக்கு காற்பங்கு தேசாதிபதி என்னும் பெயர் வழக்கத்தில் வந்தது.

காற்பங்கு தேசாதிபதி (tetrarch) - τετράρχης - tetrarchees - 5076

ஆண்பால் பெயர்ச்சொல் - காற்பங்கு தேசாதிபதி

நாலாம் (fourth) - τέταρτος - tetartos - 5067

பெயரடை - நாலாம்

அதிபதி (ruler) - ἀρχή - archee - 746

பெண்பால் பெயர்ச்சொல் - அதிபதி, ஆதி, ஆதிமுதல், ஆரம்பம், முதல், அதிகாரமுள்ளவர்கள், அதிகாரம், துரைத்தனம், துவக்கம், மூலஉபதேசம், உலகமுண்டானது முதல், உலகத்தை சிருஷ்டித்தது முதல்

"இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்" - குற்ற உணர்வுடைய ஏரோது கூட யோவானைப் பற்றி நல்ல எண்ணம் கொண்டிருந்தான்.

14 அதிகாரம்

"ஏரோதியாள்" - இவள் முதலாவதாக பிலிப்புவின் மனைவி. பின்பு ஏரோதின் மனைவியானாள். ஏரோது இராஜாவின் மகனான அரிஸ்தோபுலஸ் (Aristobulus) என்பவனின் குமாரத்தி. ஏரோதியாளுக்கும், பிலிப்புவிற்கும் ஒரு குமாரன் பிறந்தான். அவன் பெயர் சாலோமே (Salome). அதன்பின்பு ஏரோதியாள் பிலிப்புவை விட்டுவிட்டு அவன் சகோதரனான ஏரோதைத் திருமணம் செய்து கொண்டாள். ஏற்கெனவே ஏரோது அராபிய தேசத்து இராஜவான அரிதாசின் (Aretas) குமாரத்தியைத் திருமணம் செய்திருந்தான். ஏரோது தற்போது இவளைத் தள்ளிவைத்து விட்டு ஏரோதியாளைத் திருமணம் செய்து கொண்டான். இதனால் கோபமடைந்த அராபிய தேசத்து இராஜவான அரிதாஸ் ஏரோதின்மீது படையெடுத்து, அவனுடைய இராணுவத்தை முழுவதுமாகச் சங்காரம் பண்ணினான். யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணியதற்காக ஏரோதின்மீது விதிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பினாலேயே இவ்வாறு நடைபெற்றது என்று யோசபஸ் (Josephus) என்னும் வரலாற்று ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

"நீர் அவளை வைத்துக்கொள்வது நியாயமல்ல" - ஏனெனில் ஏரோதியாள் பிலிப்புவின் மனைவி. பிலிப்பு ஏரோதின் சகோதரன். ஒருவனுடைய சகோதரனின் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்ல. (லேவி 18:6,16; லேவி 20:21)

இராஜாக்கள்மீது குற்றஞ்சுமத்திய தேவனுடைய ஊழியக்காரர்கள்

1. ஆபிரகாம் பார்வோன்மீது குற்றம் சுமத்தினான் (ஆதி 12:10-20)
2. ஆபிரகாம் அபிமெலேக்கின்மீது குற்றம் சுமத்தினான் (ஆதி 20)
3. ஈசாக்கு அபிமெலேக்கின்மீது குற்றம் சுமத்தினான் (ஆதி 26:6-16)
4. மோசே பார்வோன்மீது குற்றம் சுமத்தினான் (யாத் 10:24-29)
5. பிலேயாம் பாலாக்மீது குற்றம் சுமத்தினான் (எண் 24:10-11)
6. ஒரு தீர்க்கதரிசி யெரொபெயாம்மீது குற்றம் சுமத்தினான் (1இராஜா 13:4)
7. மிகாயா ஆகாப்மீது குற்றம் சுமத்தினான்
8. எலிசா நாகமான்மீது குற்றம் சுமத்தினான் (1இராஜா 22:6-28)
9. அனானி ஆசாவின்மீது குற்றம் சுமத்தினான் (2நாளா 16:7-11)
10. சகரியா யோவாஸ்மீது குற்றம் சுமத்தினான் (2நாளா 24:20-22)
11. அசரியா உசியாமீது குற்றம் சுமத்தினான் (2நாளா 26:16-21)
12. ஊரியா யோயாக்கீம்மீது குற்றம் சுமத்தினான் (எரே 26:20-24)
13. எரேமியா சிதேக்கியாமீது குற்றம் சுமத்தினான் (எரே 32:1-5)
14. யோவான் ஸ்நானன் ஏரோதின்மீது குற்றம் சுமத்தினான் (மத் 14:3)

"அவர்களுக்குப் பயந்திருந்தான்" - ஏரோதுவிற்கு இரண்டு பக்கங்களிலிருந்து பிரச்சனை. யோவான் ஸ்நானனுடைய பிரசங்கத்தைக் கேட்டிருந்ததினால் அவன் தேவனுக்குப் பயந்தான். அதே சமயத்தில் தனது பதவி போய்விடுமோ என்று ஜனங்களுக்கும் பயந்தான். முடிவில் தேவனைவிட ஜனங்களுக்கே அதிகமாகப் பயந்து யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணினான்.

"ஏரோதின் ஜென்மநாள் கொண்டாடப் படுகிறபோது" - இராஜாக்களுக்குப் பிறந்தநாளும், ஆட்சியில் அமர்ந்த நாளும் ஜென்மநாளாகவே கொண்டாடப்பட்டது. (ஓசி 7:5; 1சாமு 13:1) ஜென்மநாளைச் சந்தோஷமாகக் கொண்டாடுவார்கள். இந்நன்னாளில் பெர்சிய இராஜாக்கள் தங்களிடம் யார் எதைக்கேட்டாலும் அன்பளிப்பாகத் தருவார்கள். (எஸ் 5:3; எஸ் 7:3)

"நீ எதைக்கேட்டாலும் தருவேன் என்று அவளுக்கு ஆணையிட்டு வாக்குக்கொடுத்தான்" - இப்பேர்ப்பட்ட கொண்டாட்டமான நாட்களில் இராஜாக்கள் தருவேன் என்று கூறுவதை ஆணையிட்டு வாக்குக்கொடுப்பது வழக்கம்.

14 அதிகாரம்

"அவள் தன் தாயினால் ஏவப்பட்டபடியே: யோவான்ஸ்நானனுடைய தலையை இங்கே ஒரு தாலத்திலே எனக்குத் தாரும்" என்று கேட்டாள். - ஏரோதின் மனச்சாட்சியை யோவான் ஸ்நானனின் பிரசங்கம் கலக்கிற்று. யோவான் ஸ்நானனிடமிருந்து தானும், ஏரோதும் விடுதலை பெறவேண்டுமென்று ஏரோதியாள் நினைத்தாள். ஆகையினால் யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணுவதற்குச் சதிபண்ணினாள். யோரோம் **(Jerome)** என்னும் வரலாற்று ஆசிரியர் இதைப் பற்றி எழுதும்போது யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்ட பிறகு, அவனுடைய நாக்கை ஏரோதியாள் தனியாக வெளியே இழுத்து, அதைக் கத்தியால் குத்தினாள் என்று எழுதியிருக்கிறார்.

தாலம் **(charger)** - **πίναξ** - **pinax** - 4094

- தாலம், பாத்திரம் - ஆண்பால் பெயர்ச்சொல் **(a wooden platter)** (மத் 14:8,11; மாற்கு 6:25,28; லூக்கா 11:39)

"ராஜா துக்கமடைந்தான்" - தரியு இராஜாவின் துக்கத்தை ஒப்பிட்டு வாசிக்கவும். (தானி 6:14-16)

"ஆள் அனுப்பி, காவற்கூடத்திலே யோவானைச் சிரச்சேதம் பண்ணுவித்தான்" - யோவான் 18 மாதங்கள் சிறைச்சாலையில் இருந்தான். யோவான் கூறிய பல காரியங்களை ஏரோது கேட்டு, அவற்றிற்குக் கீழ்ப் படிந்திருந்தான். (மாற்கு 6:20)

"அவள் அதைத் தன் தாயினிடத்தில் கொண்டுபோனாள்" - தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை என்னும் பழமொழிக்கேற்ப நடந்து கொண்டாள்.

48. இயேசு மறுபடியும் கலிலேயாவின் வழியாகப் பிரயாணம் செய்கிறார் - வியாதியஸ்தராயிருந்தவர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (லூக் 9:11)

மத் 14:13 இயேசு அதைக் கேட்டு, அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார். ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்.

மத் 14:14 இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களா யிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.

"இயேசு அதைக் கேட்டு, அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார்" - யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்டதினால் ஜனங்கள் மத்தியில் குழப்பம் உண்டாயிருந்திருக்கும். யோவானின் சீஷர்கள் ஏரோதுவிற்கு எதிராகக் கலகம் பண்ணியிருந்திருப்பார்கள். தங்களுடைய கலகத்தில் அவர்கள் இயேசுவையும் இணைத்துக் கொள்ள விரும்பியிருக்கலாம். இந்தக் கலகத்தில் தம்மை இணைத்துக் கொண்டால் தமது விரோதிகளுக்குத் தம்மீது குற்றம் சுமத்துவதற்கு ஒரு காரணம் கிடைக்கும் என்பது இயேசுவிற்கு நன்றாக தெரியும். தமக்கு எதிராக அவர்கள் அதைப் பயன்படுத்தி தமது ஊழியத்தைத் தடைபண்ணக்கூடாது என்பதில் இயேசு கிறிஸ்து மிகுந்த அக்கறையோடு இருந்தார். ஆகையினால் யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு, இயேசு கிறிஸ்து அவ்விடம்விட்டு வேறொரு இடத்திற்குச் சென்றார். வெகுதூரம் செல்லவில்லை. அருகிலுள்ள வனாந்தரமான இடத்திற்குச் சென்று அங்கு தமது ஊழியத்தைத் தொடர்ந்தார்.

"ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்" - இயேசு படவில் ஏறிப்போனார். ஆனால் ஜனங்களோ பாசானிலுள்ள அந்தக் கடலின் கிழக்குப் பகுதியிலிருந்து வடக்குப்பகுதி வரைக்கும் கரையைச் சுற்றி நடந்தே போனார்கள்.

14 அதிகாரம்

"இயேசு அவர்கள்மேல் மனதுருகினார்" - (மத் 9:36, மத் 2:6; லூக்கா 10:33; லூக்கா 15:20; எபி 5:2; 1யோவான் 3:17)

49. இயேசு ஐயாயிரம்பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (மாற்கு 6:32; லூக் 9:11; யோவான் 6:1)

மத் 14:15 சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்கு போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள்.

மத் 14:16 இயேசு அவர்களை நோக்கி: அவர்கள் போகவேண்டுவதில்லை; நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார்.

மத் 14:17 அதற்கு அவர்கள்: இங்கே எங்களிடத்தில் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல், வேறொன்றும் இல்லை என்றார்கள்.

மத் 14:18 அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.

மத் 14:19 அப்பொழுது, அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்.

மத் 14:20 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.

மத் 14:21 ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.

"சாயங்காலம்" - யூதருக்கு இரண்டு சாயங்காலங்கள் உண்டு. ஒன்று மாலை 3 மணி. அது அந்திப்பலி செலுத்தும் நேரம். மற்றொன்று மாலை 6 மணி. சூரியன் அஸ்தமிக்கும் நேரம். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற சாயங்காலம் என்பது மாலை 3 மணியாகும். மத் 14:23-இல் இந்நாளின் இரண்டாவது மாலைப்பொழுது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

"நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள்" - எலிசா 100 பேருக்குப் போஜனம் கொடுத்தான். (2இராஜா 4:42-43) இயேசு கிறிஸ்துவோ ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்தார். (மத் 14:21; மத் 15:38; லூக்கா 9:10-17; யோவான் 6:6-10)

"அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" - அதிகாரத்தோடு கூறப்பட்ட கட்டளை (மத் 17:17; மத் 21:2)

"வானத்தை அண்ணாந்துபார்த்து" - கண்களை மூடி இயேசு கிறிஸ்து ஜெபம் பண்ணியதாக வேதவசனங்களில் ஆதாரம் எதுவும் இல்லை. 6 இடங்களில் அவர் தமது கண்களைத் திறந்தவாறே ஜெபம் பண்ணினார். (மத் 14:19; மாற்கு 6:41; மாற்கு 7:34; லூக்கா 9:16; யோவான் 11:41; யோவான் 17:1).

"ஆசீர்வதித்தார்" - ஒவ்வொரு முறை போஜனம் பண்ணுவதற்கு முன்பாகவும், கர்த்தரை ஸ்தோத்தரிப்பது யூதருடைய வழக்கம். (மத் 15:36; மாற்கு 6:41; மாற்கு 8:6; யோவான் 6:11; 2கொரி 10:16)

"அப்பங்களைப் பிட்டார்" - எபிரெய தேசத்தில் அப்பம் மெல்லியதாகச் சுடப்பட்டிருக்கும். அதைப் பிட்டுப் பங்கிடவேண்டும். அப்பத்தைப் பிட்டல் என்பதற்குப் போஜனம்பண்ணுதல் என்னும் பொருளும் உண்டு. (லூக்கா 24:35; அப் 2:42,46; அப் 20:7; அப் 27:35; 2கொரி 10:16; 2கொரி 11:24)

"கூடை நிறைய" - யூதர்கள் எங்கு சென்றாலும் தங்களோடு கூடைகளை எடுத்துச் செல்வது வழக்கம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்த இடத்தில் போதுமான அளவு கூடைகள் இருந்திருக்கும். (மத் 16:9)

14 அதிகாரம்

50. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - பேதுருவால் தண்ணீரின்மீது நடக்க முடியவில்லை - (மாற்கு 6:45; யோவான் 6:16)

மத் 14:22 இயேசு ஜனங்களை அனுப்பி விடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப் படுத்தினார்.

மத் 14:23 அவர் ஜனங்களை அனுப்பி விட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமான போது அங்கே தனிமையாயிருந்தார்.

மத் 14:24 அதற்குள்ளாக படவு நடுக் கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்த படியால் அலைகளினால் அலைவுபட்டது.

மத் 14:25 இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

மத் 14:26 அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.

மத் 14:27 உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்.

மத் 14:28 பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்.

மத் 14:29 அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான்.

மத் 14:30 காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்.

மத் 14:31 உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.

மத் 14:32 அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது.

மத் 14:33 அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.

"இயேசு ஜனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரித்தப்படுத்தினார்" - சீஷர்கள் படவில் ஏறி, அக்கரைக்குச் செல்ல வேண்டும். அக்கரையில் தான் ஏரோது யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணினான். இதனால் ஏற்பட்ட குழப்பமும், கலகமும் அக்கரையில் அதிகமாக இருந்தது. ஆகையினால் இயேசு இல்லாமல் தனியாகப் போவதற்கு சீஷர்கள் கலக்கமுற்றிருக்கலாம். ஏற்கெனவே சீஷர்கள் நடுக்கடலில் பெருங்காற்றில் சிக்கி, அவதிப் பட்டிருக்கிறார்கள். (மத் 8:23-26) அதைப் பற்றிய நினைவு அவர்களுக்கு மனச்சோர்வைத் தந்திருக்கலாம்.

"தனித்து" - உலகக்காரியங்களை விட்டு தேவனோடு தனித்து ஜெபம் பண்ணுவதும், வேதவாக்கியங்களைத் தியானிப்பதும் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமான அனுபவமாக இருக்கும். இயேசு கிறிஸ்து பல முறை தனித்து ஜெபம் பண்ணினார். (மாற்கு 4:10; மாற்கு 6:47; லூக்கா 9:18,36; யோவான் 6:15)

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் தெய்வீக வல்லமை அதிகமாக வெளிப்பட்டதற்கு தேவனோடு அவர் தனித்து ஜெபம் பண்ணியதே காரணம். இந்த வல்லமையினால்தான் அவர் சாத்தானை ஜெயித்தார். ஜெபத்தின் மூலமாகவே அவர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டார். (லூக்கா 3:21) தம்முடைய அன்றாட கிரியைகளுக்குத் தேவைப்படும்

14 அதிகாரம்

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை ஜெபத்தின் மூலமாகவே பெற்றுக் கொண்டார். விசுவாசிகளும், இதே முன்மாதிரியைக் கையாண்டு, தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசம். (லூக்கா 11:13; லூக்கா 24:49; அப் 1:14; அப் 8:15; எபே 6:10-18; யூதா 1:20-24).

"இரவின் நாலாம் ஜாமத்திலே" - யூதருடைய முறைமையின்படி இது அதிகாலை 3 மணி முதல் 6 மணிக்கு உட்பட்ட நேரம்.

"இயேசு கடலின்மேல் நடந்தார்" - இது ஒரு முக்கியமான அற்புதம். இதற்கு முன்பு எந்த மனுஷனும் கடலின்மீது நடந்ததில்லை.

தண்ணீர் அற்புதங்கள்

1. தண்ணீர்களின் சிருஷ்டிப்பு (யோபு 38:8-30)
2. பர்வதங்களின்மேல் தண்ணீர் நின்றது (ஆதி 1:2; சங் 104:5-6; 2பேதுரு 3:5-7)
3. தண்ணீரைப் பிரித்தல் (ஆதி 1:6-10; சங் 104:7-9)
4. நோவாவின் ஜலப்பிரளயம் (ஆதி 6-8)
5. ஆகாருக்கு வனாந்தரத்தில் தேவன் தண்ணீர் அளித்தார். (ஆதி 21:14-21)
6. தண்ணீர் இரத்தமாக மாறுதல் (யாத் 7:17-25)
7. தண்ணீர்கள்மேல், ஆரோன் கையை நீட்டி தவளைகளை வரச்செய்தான். (யாத் 8:1-5)
8. தவளைகள், தண்ணீர்களில் மட்டும் இருக்கும்படிச் செய்தல் (யாத் 8:6-11)
9. சிவந்த சமுத்திரம் உறைந்துபோதல் (யாத் 14:21-15:8)
10. சிவந்த சமுத்திரம் உருகி ஓடியது (யாத் 14:26-31)
11. தண்ணீரை மதுரமாக மாற்றுதல் (யாத் 15:23-26)
12. கன்மலையிலிருந்து தண்ணீர் வரப் பண்ணுதல் (யாத் 17:1-6)
13. மறுபடியும் கன்மலையிலிருந்து தண்ணீர் வரப்பண்ணுதல் (எண் 20:7-11)
14. யோர்தானைக் கடக்க, தண்ணீரைக் குவியலாகச் செய்து, உலர்ந்த தரையாக மாற்றுதல் (யோசு 3)
15. சிம்சோனுக்கு, பள்ளத்தைப் பிளக்கப் பண்ணி தண்ணீரை வரவழைத்துக் கொடுத்தல் (நியா 15:19)
16. கர்த்தரிடத்திலிருந்து வந்த அக்கினி வாய்க்காலிலிருந்த தண்ணீரை நக்கிப்போட்டது (1இராஜா18:38)
17. எலியா, தன் சால்வையினால் தண்ணீரை அடித்து, அதை இரண்டாகப் பிரித்து, உலர்ந்த தரையாக மாற்றுதல் (2இராஜா 2:8)
18. எலிசா, எலியாவின் சால்வையினால், தண்ணீரைப் பிரித்து, உலர்ந்த தரையாக மாற்றுதல் (2இராஜா 2:14)
19. தண்ணீரை உப்புப் போட்டு ஆரோக்கிய மாக்குதல் (2இராஜா 2:19-22)
20. யோசபாத்திற்குப் பள்ளத்தாக்கிலே தண்ணீர் அளித்தல் (2இராஜா 3:16-20)
21. மோவாபியர்கள், தண்ணீரை இரத்தம்போல் சிவப்பாகக் காணுதல் (2இராஜா 3:21-27)
22. யோர்தான் நதியின் தண்ணீரால் நாகமான் குணமாதல் (2இராஜா 5:1-19)
23. இரும்புக் கோடாரியைத் தண்ணீரில் மிதக்கப்பண்ணுதல் (2இராஜா 6:1-7)

14 அதிகாரம்

24. பிசாசுகள் நுழைந்த பன்றிக் கூட்டங்கள் கடலிலே பாய்ந்து ஜலத்தில் மாண்டுபோதல். (மத் 8:32)

25. இயேசு கடலின்மேல் நடந்து வருதல் (மத் 14:22-33)

26. கடலிலிருந்து பிடித்த மீனின் வாயிலிருந்து வெள்ளிப்பணத்தை எடுத்தல் (மத் 17:24-27)

27. காற்றை நிற்கப் பண்ணி அமைதல் உண்டாக்குதல் (மாற்கு 4:35-41)

28. வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தல் (லூக்கா 5:1-11)

29. தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றுதல் (யோவான் 2:1-11)

30. பெதஸ்தா குளத்து தண்ணீரினால் வியாதியஸ்தர்கள் குணமாக்கப்படுதல் (யோவான் 5:1-4)

31. படவு, உடனடியாகக் கரையைச் சேருதல் (யோவான் 6:21)

32. மறுபடியும், திரளான மீன்கள் அகப்படுதல் (யோவான் 21:3-11)

33. சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாக மாறுதல் (வெளி 8:8-9)

34. தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாக மாறுதல் (வெளி 8:10-11)

35. சமுத்திரம் முழுவதும் இரத்தமாக மாறுதல் (வெளி 16:3)

36. ஆறுகள், இரத்தமாக மாறுதல் (வெளி 16:4-7)

37. ஐபிராத் நதி வற்றிப்போதல் (வெளி 16:12)

38. ஆயிர வருஷ நதியின் சிருஷ்டிப்பு (எசே 47)

"அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்" - கிரேக்க மொழியில் "பேந்தாம்" **(phantom)** என்னும் சொல் தமிழில் "ஆவேசம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை இந்த வசனத்திலும் மாற்கு 6:49-ஆவது வசனத்தில் மட்டுமே வருகிறது. பல தேசங்களில் இரவு வேளைகளில் கடல்தேவதைகள் வரும் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை. இது வரும்போது கப்பல் உடைந்துபோகும் என்பதற்கு ஓர் அறிகுறி என்று புறஜாதியார் பயத்தில் அலறுவார்கள்.

ஆவேசம் **(phantom)** - **φάντασμα** - **phantasma** - 5326

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆவேசம்

"இயேசுவினிடத்தில் போக பேதுரு ஜலத்தின் மேல் நடந்தான்" - இயேசுவின்மீது தனது பார்வை இருந்த வரையிலும் அவன் கடலின்மீது நடந்தான். தன் பார்வையை இயேசுவைவிட்டு அகற்றிவிட்டுப் பெருங்காற்றைப் பார்த்தபோது அவனுக்குப் பயம் உண்டாயிற்று. தண்ணீரில் அமிழ்ந்துபோனான்.

பலமாயிருக்கிற **(boisterous)** - **ἰσχυρός** - **ischyros** - 2478

பெயரடை - வல்லவராயிருக்கிற, பலவானுடைய, பலமாயிருக்கிற, பலமுள்ள, பலத்த, வல்லமையுள்ள (மத் 12:29; லூக்கா 11:22)

அமிழ்ந்துபோ **(sink)** - **καταποντίζω** - **katapontizoo** - 2670

வினைச்சொல் - அமிழ்ந்துபோ (மத் 18:6)

"இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்தார்" - இயேசு தண்ணீரின்மீது நிற்கிறார். தண்ணீரின்மீது நிற்பதே ஓர் அதிசயம். தண்ணீரில் நின்றுகொண்டு பேதுருவைப் பிடிப்பது மற்றும் ஒரு அதிசயம்.

"அற்பவிசுவாசியே" - (மத் 6:30)

14 அதிகாரம்

"ஏன் சந்தேகப்பட்டாய்" - சந்தேகப்படுதல் என்பதைக் குறிப்பதற்குக் கிரேக்க மொழியில் பல சொற்கள் உள்ளன.

சந்தேகப்படு (doubt) - διστάζω - **distazoo** - 1365

வினைச்சொல் - சந்தேகப்படு (மத் 28:17)

இருமனமுள்ள (double-minded) - δίψυχος - **dipsychos** - 1374

பெயரடை - இருமனமுள்ள (யாக் 1:8; யாக் 4:8))

தயங்கு (hesitate) - διακωλύω - **diakoolyoo** - 1254

வினைச்சொல் - தயங்கு, சந்தேகப்படு, தடைசெய் (மத் 21:21; மாற்கு 11:23; ரோமர் 4:20; ரோமர் 14:23; யாக் 1:6; அப் 10:20; அப் 11:12)

நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் நமக்குப் பதில் கொடுப்பாரா அல்லது கொடுக்கமாட்டாரா என்று சந்தேகப்படக்கூடாது. கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நாம் நம்பவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஜெபிக்க வேண்டும். சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் நமது விண்ணப்பங்களை ஏறெடுக்கும்போது அவர் நமக்கு நிச்சயமாகவே பதில் கொடுப்பார்.

"காற்று அமர்ந்தது" - மற்றும் ஒரு அற்புதம். படவிலிருந்த சீஷர்களுக்கு இயேசுவே மேசியா, தேவனுடைய குமாரன் என்பதை இந்த அற்புதங்களெல்லாம் நிரூபித்துக் காண்பித்தன.

"மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள்" - ஜனங்கள் தம்மை ஆராதிப்பதை இயேசு கிறிஸ்து பல இடங்களில் அங்கீகரித்திருக்கிறார். இது அவருடைய தெய்வத்துவத்தை நிரூபிக்கிறது. (மத் 2:2,11; மத் 8:2; மத் 9:18; மத் 14:33; மத் 15:25; மத் 18:26; மத் 28:9,17; மாற்கு 5:6; லூக்கா 24:52; யோவான் 9:38) மனுஷருடைய ஆராதனையை அவர் அங்கீகரிக்கவில்லை என்றால் அவர் சிருஷ்டிகராக இல்லாமல், ஒரு சிருஷ்டியாகவே இருப்பார். (வெளி 19:10; வெளி 22:8-9)

"நீர் தேவனுடைய குமாரன்" - இரண்டாம் முறையாக மனுஷர் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று அங்கீகரிக்கிறார்கள். (யோவான் 1:49) பிசாசுகளும் இயேசுவைத் தேவகுமாரன் என்று அறிக்கையிட்டன. (மத் 8:29; மத் 16:16; மத் 27:54)

51. இயேசு கெனேசரேத்து நாட்டில் பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 6:53)

மத் 14:34 பின்பு, அவர்கள் கடலைக் கடந்து, கெனேசரேத்து நாட்டில் சேர்ந்தார்கள்.

மத் 14:35 அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து,

மத் 14:36 அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

"கெனேசரேத்து நாடு" - நல்ல விளைச்சல் நிலம் உள்ள தேசம். கலிலேயாவின் வடக்குப் பகுதியிலும், யோர்தான் நதியின் மேற்குப் பகுதியிலும் அமைந்துள்ள நாடு. இது 4 மைல் நீளமும், 2 மைல் அகலமும் உடையது. நல்ல பழவர்க்கங்கள் இந்தப் பூமியில் விளையும்.

14 அதிகாரம்

"அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்தார்கள்" - அவர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய தெய்வீக வல்லமையையும் அறிந்தார்கள். ஆகையினால் சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

"வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி" - (மத் 8:3, 9:20)

"சொஸ்தமானார்கள்" - முழுவதுமாகக் குணமடைந்தார்கள். பூரணமாக இரட்சிக்கப் பட்டார்கள். இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச்சொல் டையோசோசோ **(diasozo).** இந்தச் சொல்லுக்கு "பூரணமாதல்" என்று பொருள். 8 இடங்களில் இச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலுமே இது சரீர வியாதி சொஸ்தமாவதையே குறிக்கும். (மத் 14:36; லூக்கா 7:3; அப் 23:24; அப் 27:43; அப் 28:1,4; 1பேதுரு 3:20)

சாதாரண முழுமையாதல் அல்ல. பரிபூரணமான முழுமையாதல். இயேசு கிறிஸ்து ஒருவனைச் சொஸ்தமாக்கும்போது அவனை அரைகுறையாகச் சொஸ்தமாக்கமாட்டார். பரிபூரணமாகச் சொஸ்தமாக்குவார். இந்த விசுவாசம் நமக்குள் ஆழமாய்ப் பதிந்திருக்க வேண்டும். நமது விசுவாசத்தின்படி நமக்கு ஆகக்கடவது என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். (மத் 8:13) நம்மிடத்தில் அரைகுறை விசுவாசம் காணப்படுமாயின், நமது சுகமாதலும் அரைகுறையாகவே இருக்கும்.

சொஸ்தமாக்கு **(healed)** - διασώζω - **diasoozoo** - 1295

விளைச்சொல் - சொஸ்தமாக்கு, குணமாக்கு, பத்திரமாய் கொண்டுபோ, காப்பாற்று, தப்புவி **(to be saved throughout or completely healed)**

15 அதிகாரம்

52. இயேசு வேதபாரகரையும் பரிசேயரையும் கடிந்து கொள்கிறார் – (மாற்கு 7:1)

மத் 15:1. அப்பொழுது, எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து:

மத் 15:2 உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்; கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள்.

மத் 15:3 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்;

மத் 15:4 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே.

மத் 15:5 நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற் போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து,

மத் 15:6 உங்கள் பாரம்பரியத்தினலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்.

மத் 15:7 மாயக்காரரே, உங்களைக் குறித்து:

மத் 15:8 இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது;

மத் 15:9 மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.

“வேதபாரகர்” - (மத் 2:4)

“பரிசேயர்” - (மத் 3:7)

“எருசலேம்” - (யோசுவா 18:28)

“முன்னோர்களின் பாரம்பரியம்” - நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் ஆகியவற்றைவிட வேதபாரகருடைய எழுத்துக்கள் யூதருக்கு முக்கியமானவை. முன்னோர்களின் வார்த்தைகள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைவிட முக்கியமானவை என்பது யூதருடைய உபதேசம். யூதருடைய இலக்கியங்களில் இப்பேர்ப்பட்ட உபதேசங்கள் ஏராளமாக உள்ளன.

“கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே” - எந்த மார்க்கத்திலும் இது சாதாரண குற்றம்தான். ஆனால் இயேசுவைக் குற்றப்படுத்துவதற்காக வேதபாரகரும், பரிசேயரும் இந்தச் சிறிய காரியத்தைக்கூட பெரிது பண்ணினார்கள். (மத் 15:1-9)

“நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்” - இயேசுவின் சீஷர்கள் முன்னோரின் பாரம்பரியத்தை மீறி நடந்தார்கள் என்பது வேதபாரகர், பரிசேயர் ஆகியோரின் குற்றச்சாட்டு. இயேசு கிறிஸ்து அவர்களுக்குப் பிரதியுத்தரமாக அவர்களும் தேவனுடைய கற்பனையை மீறி நடப்பதாகக் குற்றம் சுமத்துகிறார். அவர்கள் தேவனுடைய வார்த்தையைவிட மனுஷருடைய பாரம்பரியத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். (மத் 16:6-12; மத் 23:1-36; மாற்கு 3:1-6; மாற்கு 7:1-13; யோவான் 5:10-16) யூதர்களுடைய இந்தத் தவற்றை பவுலும் கடிந்து கூறுகிறார். (கலா 1:13-14; கொலோ 2:8; 1தீமோ 1:4; 1தீமோ 6:20; 2தீமோ 2:14-16; தீத்து 1:14; தீத்து 3:9).

“உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக” - பெற்றோருக்கு மரியாதை கொடுத்து, அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அத்துடன் அவர்களை ஆதரித்துப் பராமரிக்க வேண்டும். (யாத் 20:12; யாத் 21:17; உபா 5:16; உபா 27:16; சங் 23:22; 1தீமோ 5:17)

15 அதிகாரம்

“தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும்” - (யாத் 21:17; லேவி 20:9; உபா 27:16).

“அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன்” - இது யூதருடைய பழக்கம். பிள்ளைகள் பெற்றோரைப் பராமரிக்க வேண்டும். இது யூதருடைய பிரமாணம். அவ்வாறு பராமரிக்கவில்லையென்றால், அது பிரமாணத்தை மீறும் செயலாகும். இது ஒரு பாவம். இந்தப் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக அவர்கள் இதற்குரிய காணிக்கையை ஆசாரியரிடம் செலுத்தலாம். சிறிய தொகையைக் காணிக்கையாகச் செலுத்திவிட்டு, பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பிலிருந்து விடுதலை பெறலாம். அதன்பின்பு பெற்றோர் படும் கஷ்டங்களுக்குப் பிள்ளைகள் பொறுப்பாக மாட்டார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து இந்த முறைமையை அங்கீகரிக்கவில்லை. பிள்ளைகள் பெற்றோருக்கு மரியாதை கொடுத்து, கீழ்ப்படிந்து, அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்பது இயேசுவின் உபதேசம்.

காணிக்கை (gift) - δωρον - dooron - 1435

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - காணிக்கை, ஈவு, வெகுமதி (மத் 5:23-24; மத் 8:4; மத் 23:18-19; மாற்கு 7:11; லூக்கா 21:4; எபி 5:1; எபி 8:3-4; எபி 9:9; எபி 11:4)

“மாயக்காரர்” - (யோபு 27:8, மத் 6:2)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 13

“இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது” - (மத் 15:8; ஏசா 29:13).

“மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்” - இன்றைய உலகத்தில் ஏராளமான மார்க்கங்கள் உள்ளன. அவற்றில் பல மனுஷருடைய கற்பனைகளே. அந்த மார்க்கங்களில் தங்கள் சொந்த கற்பனையையே உபதேசம் பண்ணுகிறார்கள். ஆகையினால் அந்த மார்க்கமும் வீணானது, அவர்களுடைய ஆராதனையும் வீணானது.

53. மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (மாற்கு 7:14; கலா 5:19)

மத் 15:10 பின்பு அவர் ஜனங்களை வரவழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டு உணருங்கள்.

மத் 15:11 வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

மத் 15:12 அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா என்றார்கள்.

மத் 15:13 அவர் பிரதியுத்தரமாக: என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.

மத் 15:14 அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்.

மத் 15:15 அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இந்த உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்றான்.

மத் 15:16 அதற்கு இயேசு: நீங்களும் இன்னும் உணர்வில்லாதவர்களா யிருக்கிறீர்களா?

மத் 15:17 வாய்க்குள்ளே போகிறதெல்லாம் வயிற்றில் சென்று ஆசனவழியாய்க் கழிந்துபோம் என்பதை நீங்கள் இன்னும் அறியவில்லையா?

15 அதிகாரம்

மத் 15:18 வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.

மத் 15:19 எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்.

மத் 15:20 இவைகளே மனுஷனைத் தீட்டுப் படுத்தும் கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்.

"நீங்கள் கேட்டு உணருங்கள்" - தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரே காரியம் இதுதான். வேதவாக்கியம் தெளிவாக உள்ளது. கேட்கிறவன் உணர்ந்துகொள்வான். நாம் வேதவாக்கியங்களை நமது காதுகளினால் கேட்டு நமது இருதயங்களில் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

"வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" - எந்தப் போஜனமும் மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. (ரோமர் 14:1-6,17-23; கொலோ 2:14-17; 1கொரி 8:8; 1தீமோ 4:1-8) மதுபானங்கள், போதைப் பொருட்கள் ஆகியவை சரீரத்தைப் பாதிக்கும். ஆத்துமாவையும் அழித்துப்போடும். (மத் 15:17, 19-20)

தீர்க்கதரிசன எண் - 20

"என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுக்கப்படும்" - (மத் 15:13) கள்ளத்தீர்க்கதரிசிகளின் நியாயத்தீர்ப்பைப் பற்றி இந்த வசனம் கூறுகிறது. (மத் 7:21; வெளி 20:11-15)

"வேரோடே பிடுக்கப்படும்" - புறஜாதி மார்க்கத்தலைவர்களும், அவர்களுடைய உபதேசங்களும் அழிக்கப்படும். (மத் 7:21)

"அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" - பரிசேயர்களும், அவர்களுடைய சீஷர்களும் தேவனுடைய பிரமாணங்களுக்கு வேண்டுமென்றே தங்களுடைய கண்களை மூடிக்கொள்கிறார்கள். ஜனங்கள் தங்களைப் போற்றவேண்டும், புகழவேண்டும் என்பதற்காகத் தேவனுடைய பிரமாணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மனுஷரைப் பிரியப்படுத்தும் பிரமாணங்களை உபதேசம் பண்ணுகிறார்கள். இதனால் இவர்களும் அழிந்துபோவார்கள், இவர்களைப் பின்பற்றுகிறவர்களும் அழிந்து போவார்கள். (மத் 15:12-14; மத் 23:16-26; லூக்கா 6:39; யோவான் 12:40; ரோமர் 2:19; ரோமர் 11:7,25; 2கொரி 3:14; 2கொரி 4:4; ஏசா 56:10)

ஆசனவழி (draught) - ἀφεδρών - **aphedroon** - 856

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆசனவழி **place for physical waste, sewer** (மத் 15:17; மாற்கு 7:19)

மனுஷரைத் தீட்டுப்படுத்தும் காரியங்கள்

1. பொல்லாத சிந்தனைகள் - மனுஷருடைய தர்க்கங்கள் (லூக்கா 9:46) கற்பனைகள் (ரோமர் 1:21) சந்தேகப்படுதல் (ரோமர் 14:1, 1தீமோ 2:8) விவாதம் பண்ணுதல் (பிலி 2:14) சிந்தனைகள் (மத் 15:19; மாற்கு 7:21; லூக்கா 2:35; லூக்கா 5:22; லூக்கா 6:8; லூக்கா 9:47; லூக்கா 24:38; 1கொரி 3:20; யாக் 2:4)

2. கொலைபாதகங்கள் (மத் 15:19; மாற்கு 7:21; மாற்கு 15:7; லூக்கா 23:19-25; ரோமர் 1:29; அப் 9:1; கலா 5:21; வெளி 9:21)

3. விபச்சாரங்களும், வேசித்தனங்களும் (மத் 5:32)

4. களவுகள் (மத் 15:19; மாற்கு 7:21)

5. பொய்ச்சாட்சிகள் (மத் 15:19; மத் 26:59; மாற்கு 10:19; ரோமர் 13:9; அப் 6:13; 1கொரி 15:15)

15 அதிகாரம்

6. தூஷணங்கள் (மாற்கு 7:19-21; ரோமர் 1:29-32; 1கொரி 6:9-11; கலா 5:19-21; எபே 4-5; கொலோ 3:5-10)

சிந்தனை **(imagination)** - **διαλογισμός** - **dialogismos** - 1261

ஆண்பால் பெயர்ச்சொல் - சிந்தனை, யோசனை, தர்க்கம், குற்றமாய் நிர்ணயித்தல் **(evil thoughts, reasonings, debatings, and other intellectual rebellions against God)**

54. சீரோபேனிக்கேயா ஸ்திரீயின் குமாரத்தியை இயேசு குணப்படுத்துகிறார் - (மாற்கு 7:24)

மத் 15:21 பின்பு, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார்.

மத் 15:22 அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள்.

மத் 15:23 அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

மத் 15:24 அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பட்டேனேயன்றி, மற்றபடியல்லவென்றார்.

மத் 15:25 அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்.

மத் 15:26 அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.

மத் 15:27 அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்.

மத் 15:28 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

“திசைகள்” - எல்லை, இது கடற்கரையைக் குறிக்காது. யூதருடைய தேசத்தின் எல்லையைக் குறிக்கும்.

திசை **(coasts)** - **μέρος** - **meros** - 3313

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - திசை, பங்குபுறம், கண்டம்

“கானானிய ஸ்திரீ” - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் 24 ஸ்திரீகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. (மத் 8:14; மத் 9:18,20; மத் 12:42; மத் 13:33; மத் 14:6; மத் 15:22; மத் 18:25; மத் 20:20; மத் 25:1-13; மத் 26:7,69,71; மத் 27:55) 8 ஸ்திரீகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டிருக்கிறது. (மத் 1:3,5-6,18; மத் 14:6; மத் 27:56; மத் 28:1)

“தாவீதின் குமாரன்” - (மத் 1:1)

“கொடிய வேதனைப்படுகிறாள்” - பிசாசின் பிடியினால் மிகவும் அவதிப்படுகிறாள். பிசாசு வலுவாகப் பிடித்திருக்கிறது. (மத் 15:22; மத் 17:15; மத் 21:41) இந்தக் காரியமும் மத் 8:6-இல் கூறப்பட்டிருக்கிற காரியமும் வெவ்வேறானவை.

வேதனைப்படுகிறாள் **(vexed)** - **δαιμονίζομαι** - **daimonizomai** - 1139

15 அதிகாரம்

வினைச்சொல் - பிசாசு பிடித்திரு, பிசாசினால் வேதனைப்படு **(to be controlled by a demon, demonized)** (மத் 4:24; மத் 8:16,28,33; மத் 9:32; மத் 12:22; மாற்கு 1:32; மாற்கு 5:15-18; லூக்கா 8:36; யோவான் 10:21)

"அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை" - இந்த வேளையில் அந்த ஸ்திரீக்கு அவளுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கும், அவளுடைய விண்ணப்பத்தை முழுமையாக வேண்டிக்கொள்வதற்கும் அவளுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கலாம்.

"அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்" - தேவனுடைய ஊழியம் என்பது கிருபை நிறைந்தது. மனதுருக்கமுள்ளது. தேவனுடைய இரக்கத்தையும், கிருபையையும் மனதுருக்கத்தையும் ஜனங்களுக்கு அறிவிப்பதே தேவனுடைய ஊழியம். தேவஊழியம் செய்கிறவர்களிடம் இப்பேர்ப்பட்ட பண்பு காணப்படவேண்டும். (மத் 8:17; யோவான் 10:10; 1யோவான் 3:8; 1பேதுரு 2:24)

"காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றபடியல்ல" - தேவனுடைய திட்டத்தின் பிரகாரம் இரட்சிப்பு புறஜாதியாருக்கு வருவதற்கு முன்பாக யூதருக்கே முதலாவது வருகிறது. (யோவான்1:11; மத் 10:6; ரோமர் 1:16) தேவன் இதே ஆசீர்வாதத்தைப் புறஜாதியாருக்கும் திட்டமிட்டு வைத்திருக்கிறார். (மத் 21:43; யோவான் 10:16; ரோமர் 1:16; ரோமர் 9:24-33; அப் 15:13-18; எபே 3:1-11)

"காணாமற்போன ஆடுகள்" - தேவனை விட்டுப் பிரிந்து பாவத்தில் சிக்கியிருப்பவர்கள். (மத் 10:6)

"ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்" - இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் கானானிய ஸ்திரீ விழுந்து, அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சுகிறாள்.

கானானிய ஸ்திரீ ஏறெடுத்த ஜெபத்தின் அம்சங்கள்

1. சுருக்கமானது
2. தாழ்மையானது
3. பக்தியுள்ளது
4. தேவையுள்ளது
5. ஆர்வமுள்ளது
6. மரியாதையுள்ளது
7. ஆராதனையுள்ளது
8. விடாமுயற்சியுடையது
9. தீர்மானம் உடையது
10. கிறிஸ்துவில் முழு விசுவாசம் உடையது

நல்லது **(good)** - **καλός** - **kalos** - 2570

பெயரடை - நல்ல, நலமாயிருக்கிற, நன்மை, யோக்கியமான, சிறந்த **(right, good, proper)** (மாற்கு 7:27; கலா 4:18; ரோமர் 14:21).

"பிள்ளைகளின் அப்பம்" - தேவனுடைய இராஜ்யத்தில் யூதர்களே முதலாவது புத்திரர். (மத் 8:12) அவர்களுடைய அப்பம் என்பது மேசியாவின்மூலமாக வரும் ஆசீர்வாதங்கள். சரீரம், ஆத்துமா, ஆவி, ஆகியவற்றின் இரட்சிப்பு, பாவம், வியாதி, பிசாசுகள், சாத்தானின் அந்தகார சக்திகள், ஆகியவற்றிலிருந்து விடுதலை. இவை இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களாகும். இந்த ஆசீர்வாதங்கள் யூதருக்குச் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:1-13; லூக்கா 18:1-14; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:14-15)

15 அதிகாரம்

"நாய்குட்டிகள்" - 4 இடங்களில் மட்டுமே இந்தச்சொல் வருகிறது. (மத் 15:26,27; மாற்கு 7:27,28) யூதர்கள் புறஜாதியாரை நாய்க்குட்டிகள் என்று அழைத்தார்கள். இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தாமல் அவர்களுடைய வழக்குச்சொல்லைக் கூறுகிறார். (1சாமு 17:43; 2சாமு 3:8; 2சாமு 9:8; 1இராஜா 8:13; மத் 7:6) கிழக்குத் தேசத்தில் நாய்கள் வீடுகளில் பராமரிக்கப்படுவதில்லை. நாய்க்குட்டிகள் என்னும் சொல் யாருடைய மனதையும் புண்படுத்தக்கூடிய சொல் அல்ல. புறஜாதியார்கள் தேவனுடைய உடன்படிக்கைக்குப் புறம்பானவர்கள் என்னும் கருத்தைக் கூறும் யூதருடைய வழக்குச்சொல் ஆகும்.

நாய்க்குட்டி (little dog) - κυνάριον - kynarion - 2952

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - நாய்க்குட்டி

"மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" - தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்குப் பிரமாணத்தின்படி தான் தகுதியற்றவள் என்பதைக் கானானிய ஸ்திரீ அங்கீகாரம் பண்ணுகிறாள். ஒரு எஜமான் தன் பிள்ளைகளுக்கு அப்பத்தைக் கொடுப்பார். அப்போது கீழே விழும் அப்பத்தின் துணிக்கைகளை அங்குள்ள நாய்கள் தின்னும். அதுபோல தனக்கும் இரங்கி, எப்படியாவது தன் மகளைக் குணப்படுத்த வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவிடம் மன்றாடுகிறாள். நாய்க்குட்டிகள் கீழேவிழும் துணிக்கைகளைச் சாப்பிடுவதினால் பிள்ளைகளுக்கு அப்பம் கிடைக்காமல் போகாது. அவர்களுக்கும் ஏராளமாக அப்பம் உள்ளது.

"ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" - கானானிய ஸ்திரீயின் விண்ணப்பத்தை இயேசு கிறிஸ்துவால் ஒதுக்கி வைக்க முடியவில்லை. அவளுடைய விண்ணப்பத்திற்குப் பதில் கொடுத்தார். இந்த விவாதத்தின் இறுதியில் கானானிய ஸ்திரீயின் மகள் ஆரோக்கியமடைந்தாள். அவள் சொஸ்தமானாள். தேவனுடைய பிள்ளைகளும் சொஸ்தமாக முடியும். (மத் 7:9-11). மத் 6:30; மத் 14:31; மத் 16:8) உன் விசுவாசம் பெரியது என்று இயேசு இரண்டு இடத்தில் மட்டுமே கூறியிருக்கிறார். (மத் 8:10-13; மத் 15:28)

"நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" - இந்த வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது. நாம் விசுவாசிக்கிறபடி தேவன் நமது தேவைகளைச் சந்திப்பார். (மத் 15:26)

55. கலிலேயாவில் இயேசு வியாதியஸ்தர்கள் அனைவரையும் சொஸ்தப்படுத்துகிறார் - (மாற்கு 7:31)

மத் 15:29 இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாக் கடலருகே வந்து, ஒரு மலையின்மேல் ஏறி, அங்கே உட்கார்ந்தார்.

மத் 15:30 அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக் கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்.

மத் 15:31 ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

15 அதிகாரம்

"அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்" - வியாதியஸ்தன் தான் சொஸ்தமாகுமாறு செய்யவேண்டிய காரியம் இதுதான். ஜெபத்திற்குப் பதில் கிடைக்க வேண்டுமென்றால் நாமும் இதைத்தான் செய்ய வேண்டும். நாம் இயேசு கிறிஸ்துவின் பாதத்தருகே வரவேண்டும். (1பேதுரு 5:7) இயேசுவின் பாதத்திற்கு வந்தவர்கள் யாருமே தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறாமல் திரும்பிப் போனதில்லை.

"அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்" - (மத் 13:58)

"இஸ்ரவேலின் தேவனை மகிமைப் படுத்தினார்கள்" - வியாதியஸ்தர்கள் பரிபூரணமாகக் குணமானார்கள். அவர்களுடைய கவலைகள், கண்ணீர்கள், எல்லாம் தீர்ந்துபோயிற்று. உள்ளத்தில் சந்தோஷமும், சமாதானமும், சரீரத்தில் ஆரோக்கியமும் உண்டாயிற்று. ஆகையினால் அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள். (அப் 10:38; யோவான் 10:10; லூக்கா 13:16) தேவன் குணமாக்கும்போது பரிபூரணமாகக் குணமாக்குகிறார். அவர் யாரையும் அரைகுறையாகவோ, தவணைமுறையிலோ சொஸ்தமாக்குவதில்லை.

56. நான்காயிரம் பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (மாற்கு 8:1; மத் 14:15)

மத் 15:32 பின்பு, இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து: ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில் மூன்றுநாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லா திருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்து போவார்களே என்றார்.

மத் 15:33 அதற்கு அவருடைய சீஷர்கள்: இவ்வளவு திரளான ஜனங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் என்றார்கள்.

மத் 15:34 அதற்கு இயேசு: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள்: ஏழு அப்பங்களும் சில சிறு மீன்களும் உண்டு என்றார்கள்.

மத் 15:35 அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியிருக்கக் கட்டளையிட்டு,

மத் 15:36 அந்த ஏழு அப்பங்களையும் அந்த மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள்.

மத் 15:37 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடைநிறைய எடுத்தார்கள்.

மத் 15:38 ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள்.

மத் 15:39 அவர் ஜனங்களை அனுப்பிவிட்டு, படவில் ஏறி, மகதலாவின் எல்லைகளில் வந்தார்.

"ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன்" - (மத் 9:36)

"ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு" - (மத் 14:19)

கூடை (basket) - σπυρίς - spyris - 4711

பெண்பால் பெயர்ச்சொல் - கூடை, பெரியகூடை (மத் 16:10; மாற்கு 8:8,20; அப் 9:25)

"மகதலா" - கலிலேயா கடற்கரையிலுள்ள ஒரு பட்டணம். கப்பர்நகூமிலிருந்து தெற்கு திசையில் 10மைல் தூரத்திலுள்ளது.

16 அதிகாரம்

57. இயேசு பரிசேயரைக் கடிந்து கொள்கிறார் - (மாற்கு 8:10; லூக் 12:54)

மத் 16:1 பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து: வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

மத் 16:2 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: அஸ்தமனமாகிற போது, செவ்வானமிட்டிருக்கிறது, அதினால் வெளிவாங்கும் என்று சொல்லுகிறீர்கள்.

மத் 16:3 உதயமாகிற போது, செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது, அதினால் இன்றைக்குக் காற்றும் மழையும் உண்டாகும் என்று சொல்லுகிறீர்கள். மாயக்காரரே, வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா?

மத் 16:4 இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, அவர்களை விட்டுப் புறப்பட்டுப்போனார்.

மத் 16:5 அவருடைய சீஷர்கள் அக்கரை சேர்ந்தபோது, அப்பங்களைக் கொண்டுவர மறந்துபோனார்கள்.

"பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து: வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டும் என்று கேட்டார்கள்" - இயேசு கிறிஸ்துவை ஏதாவது ஒரு குற்றத்தில் சிக்கவைத்துப் பிடிக்க வேண்டுமென்பதே பரிசேயர், சதுசேயர் ஆகியோருடைய நோக்கம்.

"வானத்திலிருந்து ஓர் அடையாளம்" - (மத் 12:38, யோவான் 2:11)

"உதயமாகிறபோது, செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது" - வானம் மந்தாரமாக இருந்தால் மழை வரும் என்று நிதானிக்கிறோம். வானத்தைப் பரிசேயராலும், சதுசேயராலும் நிதானிக்க முடிகிறது. ஆனால் தீர்க்கதரிசன அடையாளங்களை அவர்களால் நிதானிக்க முடியவில்லை. மேசியாவின் காலம், மேசியாவின் ஊழியம், அவர் செய்யும் அற்புதங்கள் ஆகியவற்றை அவர்களால் நிதானிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்துவிலும் யோவானிலும், பல தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிற்று. இந்தக் காலங்களின் அடையாளங்களைப் பரிசேயரும், சதுசேயரும் நிதானிக்கவில்லை.

"மாயக்காரர்" - (யோபு 27:8; மத் 6:2)

"வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை" - (மத் 11:16)

தீர்க்கதரிசன எண் - 21

"யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை" - (மத் 16:4) இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 12:40; 1கொரி 15:3-8)

"யோனா தீர்க்கதரிசியின் அடையாளம்" - இரண்டாம் முறையாக இந்த அடையாளம் கூறப்பட்டிருக்கிறது. (மத் 12:40)

16 அதிகாரம்

58. பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைப் பற்றிய விளக்கம் - (மாற்கு 8:1)

மத் 16:6 இயேசு அவர்களை நோக்கி: பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார்.

மத் 16:7 நாம் அப்பங்களைக் கொண்டுவராதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக் கொண்டார்கள்.

மத் 16:8 இயேசு அதை அறிந்து: அற்பவிசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டுவராததைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறதென்ன?

மத் 16:9 இன்னும் நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்பதையும்;

மத் 16:10 ஏழு அப்பங்களை நாலாயிரம் பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்பதையும் நீங்கள் நினைவு கூராமலிருக்கிறீர்களா?

மத் 16:11 பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று நான் சொன்னது அப்பத்தைக்குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார்.

மத் 16:12 அப்பொழுது, அவர் அப்பத்தின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று சொல்லாமல், பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக்குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்து கொண்டார்கள்.

“புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” - (மத் 7:15-16)

“பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவு” - அவர்களுடைய தவறான உபதேசங்கள் ((மத் 16:12; மத் 13:33))

“அற்பவிசுவாசிகளே”- (மத் 6:30)

கூடை (basket) - **κόφινος** - **kophinos** - 2894

ஆண்பால் பெயர்ச்சொல் - கூடை **(handbasket)** (மத் 14:20; மத் 16:9; மாற்கு 6:43; மாற்கு 8:19; லூக்கா 9:17; யோவான் 6:13) இரண்டு விதமான கூடைகள். இந்தக் கூடை வேறு. மத் 15:37-ஆவது வசனத்தில் கூறப் பட்டிருக்கிற கூடை வேறு.

59. பேதுருவின் அறிக்கை - (மாற்கு 8:27; லூக் 9:18; யோவான் 6:67)

மத் 16:13 பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

மத் 16:14 அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

மத் 16:15 அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.

மத் 16:16 சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.

16 அதிகாரம்

"பிலிப்புச் செசரியாவின் திசைகள்" - கப்பர்நகூமிற்கு 25மைல் தூரத்திலுள்ள பட்டணம். இந்தப் பட்டணத்திற்கு "பனேயாஸ்" (Paneas) என்று வேறொரு பெயரும் உண்டு. ஏனெனில் இங்கு புறஜாதி தெய்வமான "பான்" (Pan) தெய்வத்திற்கு ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. ஏரோது ராஜா இந்தக் கோயிலை மறுபடியும் புதுப்பித்துக் கட்டினான். அத்துடன் சீசருக்கும், இங்கு ஒரு கோயில் கட்டினான். இத்துரேயாவின் காற்பங்கு தேசாதிபதியாகிய பிலிப்பு இந்தக் கோயிலை விஸ்தாரம்பண்ணி, இந்தப் பட்டணத்திற்கு செசரியா என்று பெயர் கொடுத்தான். தன்னுடைய பெயரையும், சீசருடைய பெயரையும் இணைத்து, பிலிப்பி செசரியா என்று இந்தப் பட்டணத்திற்குப் பெயர் சூட்டினான். இந்தப் பட்டணத்தின் பழங்காலப்பெயர் தாண் (Dan) (ஆதி 14:14) லாயீஷ் (Laish) (நியா 18:7)

"மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்" - தமது சீஷர்கள் தம்மைக் குறித்து என்ன நினைக்கிறார்கள், என்ன கூறுகிறார்கள் என்று இயேசு கிறிஸ்து தெரிந்து கொள்ள விரும்பினார். (மத் 16:15; லூக்கா 9:18) விசுவாசிகளிடத்தில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து தெளிவான சிந்தை இருக்க வேண்டும். ஏனெனில் இக்காலத்தில் பல்வேறு விதமான மார்க்கப்பிரிவினைகள் உள்ளன. அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து பல்வேறு விதமான உபதேசங்களைக் கூறுகிறார்கள். நாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும்போது "ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து முழு மனதோடும், முழு பலத்தோடும், முழு இருதயத்தோடும் கூறவேண்டும்.

"யோவான்ஸ்நானன்" - (மத் 3, மத் 14:1-12)

"எலியா" (Elias) - எலியா, எரேமியா ஆகியோரின் கிரேக்கச்சொல்

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" - இதுஒரு விசுவாச வாக்கியம். நாம் மறுபடியும் இயேசு கிறிஸ்துவில் பிறந்திருக்கிறோம், புதிய ஜீவனைப் பெற்றிருக்கிறோம் என்பதை இந்த விசுவாச அறிக்கை உறுதிபண்ணும். (1யோவான் 5:1)

"குமாரன்" - பிதாவுடன் இயேசு கிறிஸ்துவிற்குள்ள உறவைக் காண்பிக்கிறது. திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்பதை இந்த வசனம் விவரிக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்திற்குச் சாட்சிகள்

1. தேவன் "என் நேசகுமாரன்" - "My beloved Son" (மத் 3:17; மத் 17:5).

2. இயேசு "தேவகுமாரன்" "I am the Son of God" (யோவான் 10:36).

3. பிசாசுகள் (மத் 8:29; லூக்கா 4:41);

4. காபிரியேல் (லூக்கா 1:32-35);

5. சீஷர்கள் (மத் 14:33);

6. நூற்றுக்கதிபதி (மத் 27:54);

7. பேதுரு (மத் 16:16; யோவான் 6:69);

6. யோவான் ஸ்நானன் (யோவான் 1:34);

7. மார்த்தாள் (யோவான் 11:27);

8. மாற்கு (மாற்கு 1:1);

9. எகிப்திய அதிகாரி (அப் 8:26-38);

10. நாத்தான்வேல் (யோவான் 1:49);

11. பவுல் (அப் 9:20; கலா 2:20);

12. யோவான் (யோவான் 20:31)

13. அனைவரும் "தேவகுமாரன்" என்றார்கள். "The Son of God."

16 அதிகாரம்

14. யோவான் "ஒரேபேறான குமாரன்" **"the only begotten Son"** "பிதாவின் குமாரன்" **"the Son of the Father"** (யோவான் 1:18; யோவான் 3:16-18; 1யோவான் 4:9; 2யோவான் 1:3).

சாத்தான், பரிசேயர் மேலும் அநேகர் இயேசு கிறிஸ்துவைத் தேவகுமாரன் என்று புரிந்து வைத்திருந்தார்கள். (மத் 4:3-6; மத் 27:40-43; யோவான் 19:7).

"தேவகுமாரன்" என்னும் வாக்கியம் 47 இடங்களிலும், "ஒரேபேறான குமாரன்" என்னும் வாக்கியம் 5 இடங்களிலும், "என் குமாரன்" என்னும் வாக்கியம் 8 இடங்களிலும், "குமாரன்" என்னும் வாக்கியம் 34 இடங்களிலும், "அவருடைய குமாரன்" என்னும் வாக்கியம் 24 இடங்களிலும் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற ஜீவனுள்ள நபர்களும், காரியங்களும்

1. தேவன் (உபா 5:26; தானி 6:20,26; மத் 16:16)
2. கிறிஸ்து (எபி 7:25; வெளி 1:18)
3. வார்த்தை (1பேதுரு 1:23)
4. சிருஷ்டிகள் - விலங்குகள் ஆதி 1:21-28; ஆதி 2:19)
5. சிருஷ்டிகள் - கேரூபீன்கள் (எசே 1)
6. ஆத்துமா (ஆதி 2:7; 1கொரி 15:45)
7. ஜந்துகள் (ஆதி 7:4,23)
8. அப்பம் (யோவான் 6:51)
9. பலி (ரோமர் 12:1-2)
10. வழி (எபி 10:20; யோவான் 14:6)
11. கற்கள் (1பேதுரு 2:4-5)
12. ஊற்றுக்கள் (வெளி 7:17)
13. நம்பிக்கை (1பேதுரு 1:3)
14. தண்ணீர்கள் (யோவான் 4:10-11; யோவான் 7:37-39)

60. புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து இயேசுவின் அறிவிப்பு -

மத் 16:17 இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

மத் 16:18 மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

"மாம்சமும் இரத்தமும்" - ஆவிக்குரிய காரியங்களை மாம்சத்தால் புரிந்து கொள்ள முடியாது. பரலோகக் காரியங்கள் ஆவிக்குரியவை. பரலோகப் பிதாவினால் மட்டுமே ஆவிக்குரிய காரியங்களை வெளிப் படுத்திக் காண்பிக்க முடியும். (1கொரி 15:50; கலா 1:16; எபே 6:12; எபி 2:14)

தீர்க்கதரிசன எண் - 22

"மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அதுபரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" - (மத் 16:18-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

பேதுரு (Peter) - Πέτρος - Petros - 4074

ஓர் ஆணின் பெயர் - பேதுரு

16 அதிகாரம்

"இந்தக்கல்" - இது கிறிஸ்துவைக் குறிக்கும். யோவான் 2:19; யோவான் 6:53,58 பேதுருவைக் குறிக்காது. இயேசு கிறிஸ்து மட்டுமே சபையின் அஸ்திபாரமாக இருக்கிறார். அவர் அசைக்க முடியாத கல். (1கொரி 3:11; ஏசா 28:16; சங் 118:22) பேதுரு கிறிஸ்துவின் சபையைக் கட்டுகிற ஊழியக்காரர்களில் ஒருவர். (எபே 2:20-22; 1பேதுரு 2:4-5; 1பேதுரு 5:1-8) பேதுருவின் கிரேக்கச்சொல் பெத்ரோஸ் (Petros) இங்கு கூறப்பட்டிருக்கிற கல் பெத்ரா (petra) என்பது கன்மலை.

கல் (rock) - πέτρα - petra - 4073

பெண்பால் பெயர்ச்சொல் - கன்மலை, கல், கற்பாறை

"கட்டுவேன்" - கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டுதல். சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுத்தல். விசுவாசிகளைச் சீஷர்களாக்குதல். சபையைக் கட்டி எழுப்புதல். (எபே 1:20-23; எபே 2:20-22; எபே 4:13; எபே 5:25- 32; 1கொரி 3:9; 1கொரி 12:13-31; கொலோ 1:18,24; 1பேதுரு 2).

கட்டு (build) - οἰκοδομέω - oikodomeoo - 3618

வினைச்சொல் - பக்தி, விருத்தியடை, துணிவுகொள், கட்டு

"என் சபை" - ஒரே ஒரு சபை. இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. இரட்சிக்கப்பட்ட எல்லா விசுவாசிகளும் இந்தச் சபையில் இருக்கிறார்கள். (1கொரி 12:13; எபே 2:20-22; எபே 4:13; அப் 15:13-18)

61. பரலோக இராஜ்ஜியத்தின் திறவு கோல்களைப் பேதுரு பெறுகிறான் - (மத் 18:18)

மத் 16:19 பரலோகராஜ்யத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.

மத் 16:20 அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" - இந்த வாக்குத்தத்தம் பேதுருவிற்கு மட்டும் என்று கூறப்படாமல் எல்லா விசுவாசிகளுக்கும் வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 17:20; மத் 18:18; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; லூக்கா 10:19; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; 1கொரி 12)

"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்கள்" - திறவுகோல்கள் என்பது அதிகாரத்தின் அடையாளம். (ஏசா 22:22; வெளி 3:7) இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு அதிகாரமும், வல்லமையும் என்று பொருள்படும். (மத் 18:18; மத் 16:15-20; யோவான் 14:12-15).

கட்டப்படும் காரியங்கள்

1. சங்கிலிகளால் மனுஷர் (மத் 12:29; மத் 14:3; மத் 22:13; மாற்கு 5:3; அப் 9:2,14,21)
2. களைகள் கட்டுகளாகக் கட்டப்படும் (மத் 13:30)
3. சாத்தானின் வல்லமையினால் மனுஷர் (லூக்கா 13:16)

16 அதிகாரம்

4. பொறுப்புகளினால்மனுஷர்(அப் 20:22)

5. திருமண உடன்படிக்கையில் மனுஷர் (ரோமர் 7:2; 1கொரி 7:27,39)

6. சங்கிலிகளால் சாத்தானும் அவனுடைய தூதர்களும் (வெளி 9:14; வெளி 20:2)

7. சங்கிலிகளால் மிருகங்கள் (மத் 21:2)

8. தேவனுடைய வல்லமையினால் மனுஷர் (மத் 16:19; மத் 18:18)

கட்டவிழ்க்கப்படும் காரியங்கள்

1. பலவீனங்கள் (லூக்கா 13:12-16; மாற்கு 7:35)

2. சங்கிலிகளிலிருந்து சாத்தானும், அவனுடைய தூதர்களும் (வெளி 9:14; வெளி 20:3,7)

3. சங்கிலிகளிலிருந்தும் சிறைச் சாலைகளிலிருந்தும் மனுஷர்கள் (அப் 16:26; அப் 22:30; அப் 24:26)

4. பாவத்திலிருந்து மனுஷர் (வெளி 1:5)

5. கட்டுகளிலிருந்து மனுஷர் (அப் 2:24)

6. திருமண உடன்படிக்கைகள் (1கொரி 7:27)

7. சாத்தானுடைய வல்லமைகள் (1யோவான் 3:8)

8. விலங்குகள் (மாற்கு 11:2-4)

9. சாபத்திலிருந்து பூமி (2பேதுரு 3:10-13; ரோமர் 8:21)

10. தேவனுடைய வல்லமையினால் மனுஷர் (மத் 16:19; மத் 18:18)

62. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன் குறித்துக் கூறுகிறார் - (17:22; 20:17; 26:1; மாற்கு 8:31; 10:32; லூக் 9:22,44; 18:31)

மத் 16:21 அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்.

தீர்க்கதரிசன எண் - 23

"தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவேண்டும்" - (மத் 16:21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் மேசியா ஏற்றுக் கொள்ளப்படாமல் மறுதலிக்கப்படுவது ஒரு பகுதி. இயேசு கிறிஸ்து மறுதலிக்கப்படுவதைக் குறித்து, 4 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (மத் 16:21; மத் 17:22; மத் 20:17,28)

63. இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள்- (மாற்கு 8:32-33)

மத் 16:22 அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

மத் 16:23 அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்.

16 அதிகாரம்

"எனக்குப் பின்னாகப்போ, சாத்தனே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" - இயேசு இதைப் பேதுருவிடம் கூறுகிறார். அதே சமயத்தில் இதைச் சாத்தானிடமும் கூறுகிறார். இதேபோன்ற எடுத்துக்காட்டுக்கள் வேதத்தில் மேலும் சில இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 3:15; ஏசா 14:4-27; எசே 28:11-19)

64. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - ஆத்துமாவின் மதிப்பு - (மாற்கு 8:34-38; லூக் 9:23)

மத் 16:24 அப்பொது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

மத் 16:25 தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.

65. இரண்டாம் வருகையை முற்குறித்துக் கூறுகிறார் - (மத் 24:3-25; 46; வெளி 19:11)

மத் 16:26 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

மத் 16:27 மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.

தீர்க்கதரிசன எண் - 24

"மனுஷ குமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்ஜியத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" - (மத் 16:27-28) மத் 16:27 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை. மத் 16:28-ஆவது வசனம் நிறைவேறிற்று.

"தம்முடைய பிதாவின் மகிமை" - மகிமைக்கு முன்பாகப் பாடுகளைப் பற்றிப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். (மத் 16:21-27; ரோமர் 8:18; கொலோ 3:4; 1பேதுரு 1:11) கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் பாடுகளோடு வராமல் மகிமையோடு வருவார். (தானி 7:13-14; சக 14; மத் 24:29-31; மத் 25:31-46; வெளி 19:11-21)

"தம்முடைய தூதரோடுங்கூட வருவார்" - (மத் 13:41; மத் 24:31; மத் 25:31; 2தெச 1:7)

"அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேசங்கள் நியாயந்தீர்க்கப்படும். (மத் 25:31-46) மரித்துப்போன நீதிமான்கள் இதற்கு முன்பாகவே நியாயந்தீர்க்கப்படுவார்கள். (1கொரி 3:11-15; ரோமர் 14:10; 2கொரி 5:10) துன்மார்க்கர் இதற்கு ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு நியாயந்தீர்க்கப்படுவார்கள். (வெளி 20)

"கிரியைக்குத்தக்கதாக" - ஆண்டவர் நம்மை நம்முடைய வயசுக்குத்தக்கதாகவோ, நமது கல்வி, செல்வம், அந்தஸ்து, புகழ்ச்சி ஆகியவற்றிற்குத் தக்கதாகவோ, நியாயந்தீர்க்க மாட்டார். நமது கிரியைக்குத்தக்கதாக நம்மை நியாயந்தீர்ப்பார்.

16 அதிகாரம்

66. மறுரூபமாதலை முற்குறித்துக் கூறுகிறார் - (மாற்கு 9:1; லூக் 9:27; 2பேதுரு 1:16)

மத் 16:28 இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்ஜியத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

“இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்ஜியத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை” - இயேசு கிறிஸ்து மறுரூபமடைந்ததைக் கண்ட சீஷர்களை இது குறிக்கும். (மத் 17:1-8; 2பேதுரு 1:16-18)

17 அதிகாரம்

67. மறுரூபமாதல் - வரப்போகும் இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (மாற்கு 9:1; லூக் 9:27; 2பேதுரு 1:16)

மத் 17:1 ஆறுநாளைக்குப்பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின் மேல் போய்,

மத் 17:2 அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.

மத் 17:3 அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

மத் 17:4 அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்.

மத் 17:5 அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன்,இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

மத் 17:6 சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்.

மத் 17:7 அப்பொழுது, இயேசு வந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள் பயப்படாதேயுங்கள் என்றார்.

மத் 17:8 அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத் தவிரவேறொருவரையும் காணவில்லை.

மத் 17:9 அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.

"ஆறுநாளைக்குப்பின்பு" - மத் 16:28 ஆவது வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள காரியத்தின் நிறைவேற்றம்.

"இயேசு பேதுருவையும் யாக்கோபுவையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போனார்" - ஒய்வு எடுப்பதற்காக இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை இவ்வாறு தனியாக அழைத்துச் செல்வது வழக்கம். (மத் 26:37; மாற்கு 5:37)

"மறுரூபமானார்" - உருவத்தை மாற்றுதல் என்பது இதன் பொருள். **(to change the form)** இந்த வாக்கியம் இந்த வசனத்திலும் இத்துடன் மாற்கு 9:2; ரோமர் 12:2; 2கொரி 3:18 ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது தவிர மோசே (யாத் 34:29-35) ஸ்தேவான் (அப் 6:15) ஆகியோரின் மறுரூபமாதலையும் நாம் ஒப்பிட்டு வாசிக்கலாம்.

மறுரூபமாகு **(transfigured)** - **μεταμορφόω** - **metamorphooo** - 3339

விணைச்சொல் - மறுரூபமாகு, மறுரூபப்படு

"மோசே" - இந்த நாளுக்கு 1,700 வருஷங்களுக்கு முன்பாகவே மோசே மரித்து விட்டார். அவருடைய சரீரம் அழிந்து போயிருக்கும். (உபா 34; யூதா 1:9) பரதேசிலிருந்து அவர் அழைத்து வரப்பட்டிருக்கலாம். (லூக்கா 16:21-31) மரணமடைந்தபின்பு உயிர்த்தெழுதல் வரையிலும் ஆத்துமா பாதாளத்தில் இருக்கும். அது முழு உணர்வோடும், வஸ்திரங்கள் அணிந்தவையாகவும் இருக்கலாம். (வெளி 6:9-11; எபி 12:23; சங் 16:10) இயேசு கிறிஸ்துவே மரித்தோரில் முதற்பலனானவர். ஆகையினால் இந்த இடத்தில் மோசே உயிர்த்தெழுந்த சரீரத்தில் வந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. (1கொரி 15:20-23)

17 அதிகாரம்

மோசேயும், எலியாவும் மறுரூபமலையில் இயேசுவோடு பேசுகிறவர்களாக காணப்பட்டதனால் விளங்கும் சத்தியங்கள்

1. நியாயப்பிரமாணம் ஒழிந்துபோயிற்று. (மத் 11:11-13; லூக்கா 16:16; கலா 3:19-25; கலா 4:21-31; 2கொரி 3:6-15; கொலோ 2:14-17)
2. மேசியாவின் பாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிற்று. (லூக்கா 24:25-27,44-45; யோவான் 1:45; அப் 13:29-41)
3. கிறிஸ்துவே மேசியா. தேவனிடமிருந்து வந்தவர். தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையில் ஒரே மத்தியஸ்தர். (அப் 3:22-23; எபி 1:1-2; 1தீமோ 2:5)
4. மரித்துப்போன ஆத்துமாக்கள் உண்மையானவை, உணர்வுடையவை. (லூக்கா 16:19-31; வெளி 6:9-11; எபி 12:23; எபே 4:8-10)
5. ஆத்துமா மரிக்காது (1பேதுரு 3:4; 1பேதுரு 4:6; சங் 16:10; லூக்கா 20:38)
6. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, வெகுமதிகள், தண்டனைகள் (மத் 16:27; மத் 24:29-25:46)
7. சரீர உயிர்த்தெழுதல் (மத் 17:9; யோவான் 5:28-29; 1கொரி 15; வெளி 20:4-15)
8. வருங்கால நித்திய இராஜ்ஜியம் உண்மையானது (மத் 16:28; மத் 17:1-9; வெளி 5:10; வெளி 11:15; வெளி 20:1-10)

"எலியா" - எலியா இன்னும் மரிக்கவில்லை. மானிட சரீரத்தில் பரலோகத்தில் சுமார் 1000 வருஷங்களாக உயிரோடு ஜீவிக்கிறான். (2இராஜா 2; மல் 4:5-6; சக 4:11-14; வெளி 11:3-11)

கூடாரம் (abernacles) -σκηνή - **skeenee** - 4633

பெண்பால் பெயர்ச்சொல் - கூடாரம், வீடு, வாசஸ்தலம் **(shade, booth, tabernacle)** (மத் 16:4; லூக்கா 9:5; லூக்கா 9:33; அப் 7:43-44).

"ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது" - தேவனுடைய பிரசன்னத்தைக் காணும்படியாக ஒரு காணக்கூடிய அடையாளம். (யாத் 13:21-22; யாத் 14:19-24; யாத் 16:10; யாத் 19:9,16; யாத் 24:15-18; யாத் 34:5)

பரிசுத்த வேதாகமத்தில் "சத்தம்" என்ற சொல்லின் பயன்பாடுகள்

1. கர்த்தருடைய சத்தம் (ஆதி 3:8-10; சங் 29; வெளி 10:3-4). மனுஷருக்குக் கர்த்தருடைய சத்தம் தெளிவாகக் கேட்டது (ஆதி 3:8-10; யாத் 19:19; உபா 4:12; 1இராஜா 19:12-13; ஏசா 6:4-8; எசே 1:24-28; எசே 8:18; எசே 9:1; எசே 10:5; எசே 43:2; தானி 10:6-9; மத் 3:17; மத் 17:5; யோவான் 12:28; அப் 10:13; வெளி 1:10-18; வெளி 10:3-8)
2. உன் மனைவியின் வார்த்தை (ஆதி 3:17)
3. உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் (ஆதி 4:10)
4. எக்காள சத்தம் (யாத் 19:19)
5. ஜெயதொனியின் சத்தம் (யாத் 32:18)
6. அபஜெயதொனியாகிய சத்தம் (யாத் 32:18)
7. ஆணையின் சத்தம் (லேவி 5:1)
8. இஸ்ரவேலின் சத்தம் (எண் 21:3)
9. தகப்பன் சொல் (உபா 21:18)
10. தாயின் சொல் (உபா 21:18)
11. யூதாவின் சத்தம் (உபா 33:7)
12. மனிதனுடைய சொல் (யோசு 10:14)

மத்தேயு - தொகுப்புரை

17 அதிகாரம்

13. ஒடுக்குகிறவனுடைய சத்தம் (யோபு 3:18)

14. சிங்கத்தின் கெர்ச்சிப்பு (யோபு 4:10)

15. அழுகிறவர்களின் ஓலம் (யோபு 30:31)

16. களிப்பும் துதியுமான சத்தம் (சங் 42:4)

17. தூஷிக்கிறவனுடைய சத்தம் (சங் 44:16)

18. கெம்பீரசத்தம் (சங் 47:1)

19. சத்துருவினுடைய கூக்குரல் (சங் 55:3)

20. பாம்பாட்டிகள் ஊதும் சத்தம் (சங் 58:5)

21. ஜெபத்தின் சத்தம் (சங் 66:19)

22. கீதசத்தம் (சங் 98:5)

23. பெருமூச்சின் சத்தம் (சங் 102:5)

24. வார்த்தையின் சத்தம் (சங் 103:20

25. குமுறலின் சத்தம் (சங் 104:7)

26. இரட்சிப்பின்கெம்பீரசத்தம் (சங் 118:15)

27. போதகரின் சொல் (நீதி 5:13)

28. குருவியின் சத்தம் (பிர 12:4)

29. காட்டுப்புறாவின் சத்தம் (உன் 2:12)

30. கூக்குரலின் சத்தம் (ஏசா 65:19)

31. பிள்ளை பெறுகிற குமாரத்தியின் சத்தம் (எரே 4:31)

32. களிப்பின் சத்தம் (எரே 7:34)

33. மகிழ்ச்சியின் சத்தம் (எரே 7:34)

34. மணவாளனின் சத்தம் (எரே 7:34)

35. மணவாட்டியின் சத்தம் (எரே 7:34)

36. கர்த்தருடைய நாளின் சத்தம் (செப் 1:14)

37. தீர்க்கதரிசிகளின் சத்தம் (அப் 13:27)

38. பிரதான தூதனுடைய சத்தம் (1தெச 4:16)

39. தூதர்களுடைய சத்தம் (வெளி 5:11)

40. பெரு வெள்ளத்து இரைச்சலைப் போன்ற சத்தம் (வெளி 1:15; வெளி 14:2; வெளி 19:6)

41. பலத்த இடிமுழக்கம் (வெளி 14:2; வெளி 19:6; வெளி 10:3-4)

42. சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசை (வெளி 14:2)

43. பாடகர்களின் சத்தம் (வெளி 14:2)

44. திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரம் (வெளி 19:1)

45. திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் (வெளி 19:6)

தேவனுடைய சப்தத்தைக் கேட்டவர்களுக்குளடுத்துக்காட்டானவர்கள்

1. ஆதாம் (ஆதி 3:8-10)
2. ஆபிரகாம் (ஆதி 18; ஆதி 22:18; ஆதி 26:5)
3. மோசே (யாத் 3; அப் 7:31)
4. இஸ்ரவேல் (யாத் 19:19; உபா 4:12,33,36; (உபா 5:23-28)
5. எலியா (1இராஜா 19:12-13)
6. ஏசாயா (ஏசா 6:4-6)
7. எசேக்கியேல் (எசே 1:24; எசே 8:18; எசே 9:1; எசே 10:5; எசே 43:2)
8. தானியேல் (தானி 10:6-9)
9. பேதுரு (அப் 10:13; 2பேதுரு 1:17-18)
10. யாக்கோபு (மத் 17:5)

17 அதிகாரம்

11. யோவான் (வெளி 1:10-12; வெளி 4:1; வெளி 10:3-8; வெளி 21:3)

12. பவுல் (அப் 9:3-7)

மனுஷருடைய சத்தத்தைத் தேவன் கேட்டதற்கு எடுத்துக்காட்டுகள்

1. இஸ்மவேல் (ஒரு பிள்ளையின் சத்தத்தையே தேவன் முதன்முதலாகக் கேட்டார்) (ஆதி 21:17)
2. இஸ்ரவேல் (எண் 20:16; எண் 21:3; உபா 26:7)
3. யோசுவா (யோசு 10:14)
4. மனோவா (நியா 13:9)
5. எலியா (1இராஜா 17:22)
6. யோனா (யோனா 2:2)
7. இயேசு (யோவான் 12:28)

"சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்" - தேவனைச் சந்திக்கும் மனுஷர்கள் எல்லோருமே செய்யக்கூடிய காரியம் இதுதான். (யோபு 42:5-6; ஏசா 6; தானி 8:18; தானி 10:5-11; அப் 9:4; வெளி 1:17)

"மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும்" - இந்த வசனத்தில் "எக்" (ek) என்னும் கிரேக்கச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவும், அவருடைய பரிசுத்தவான்களும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுவதை மட்டுமே இந்த முன்னிடைச்சொல் குறிக்கும். மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அதன்பின்பு, ஆயிர வருஷ அரசாட்சி இருக்கும். மரித்த துன்மார்க்கர் ஆயிர வருஷ அரசாட்சிக்காலம் முழுவதிலும் மரித்தவர்களாகவே இருப்பார்கள். (வெளி 20:4-6,11-15)

புதிய ஏற்பாட்டில் பல வசனங்களில் மரித்தோர் உயிர்த்தெழுதல் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. (மத் 17:9; மாற்கு 6:14,16; மாற்கு 9:9-10; மாற்கு 12:25; லூக்கா 9:7; லூக்கா 16:31; லூக்கா 20:35; லூக்கா 24:46; யோவான் 2:22; யோவான் 12:1,9,17; யோவான் 20:9; யோவான் 21:14; அப் 3:15; அப் 4:2,10; அப் 10:41; அப் 13:30,34; அப் 17:3,31; ரோமர் 4:24; ரோமர் 6:4,9,13; ரோமர் 7:4; ரோமர் 8:11; ரோமர் 10:7,9; ரோமர் 11:15; 1கொரி 15:12,20; கலா 1:1; எபே 1:20; எபே 5:14; கொலோ 1:18; கொலோ 2:12; 1தெச 1:10; 2தீமோ 2:8; எபி 11:19; எபி 13:20; 1பேதுரு 1:3,21)

இயேசு கிறிஸ்துவே மரித்தோரிலிருந்து முதலாவது உயிர்த்தெழுந்தவர். இனிமேல் நாம் எல்லோருமே மரித்த பின்பு உயிர்த்தெழுவோம். (வெளி 20:4-6)

இதிலிருந்து (from) - ἐκ - ek - 1537

முன்னிடைச்சொல் - இல், ஆல், இதிலிருந்து, விட்டு, இடத்தில், முதல், தரம் இல்லாமல், ஆறாம் வேற்றுமையுடன் உடைய, இன், கொண்டு, புறம்பே, முதற்கொண்டு, ஒடு, வழியாய், தொடங்கி

68. யோவான் ஸ்நானனும், எலியாவும் - (மாற்கு 9:11-13; மத் 11:14; லூக் 1:17; யோவான் 1:17-21; மல் 4:5-6)

மத் 17:10 அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: அப்படியானால் எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள்.

மத் 17:11 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான்.

மத் 17:12 ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார்.

17 அதிகாரம்

மத் 17:13 அவர் யோவான் ஸ்நானனைக்குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்துகொண்டார்கள்.

"அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி...கேட்டார்கள்" - இயேசுவோடு மறுரூபமலைக்குச் சென்ற மூன்று சீஷர்கள் மட்டுமே இயேசுவிடம் இந்தக் கேள்விகளைக் கேட்டார்கள். (மத் 17:1)

தீர்க்கதரிசன எண் - 25

"எலியா முந்திவந்து எல்லாவற்றைம் சீர்படுத்துவது மெய்தான். ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 17:11-12) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்" - இது யோவான்ஸ்நானனைக் குறிக்கும் காரியம். அவன் எலியாவின் ஆவியோடும், வல்லமையோடும் வந்தான். (மத் 17:13; லூக்கா 1:17; ஏசா 40:3; மல் 3:1)

69. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்லமையுள்ள கிறிஸ்துவும் - (மாற்கு 9; லூக் 9)

மத் 17:14 அவர்கள் ஜனங்களிடத்தில் வந்தபோது, ஒரு மனுஷன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு:

மத் 17:15 ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்.

மத் 17:16 அவனை உம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டுவந்தேன்; அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற்போயிற்று என்றான்.

மத் 17:17 இயேசு பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்.

மத் 17:18 இயேசு பிசாசை அதட்டினார்; உடனே அது அவனை விட்டுப் புறப்பட்டது; அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான்.

"அவர்கள் ஜனங்களிடத்தில் வந்தபோது" - கிறிஸ்து, பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய நால்வரும் மறுநாள் மறுரூபமலையிலிருந்து வந்தபோது. (மத் 17:1,10, லூக்கா 9:37)

"ஒரு மனுஷன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டான்" - இது பழங்காலத்துப் பழக்கம். ஒருவருடைய தயவு நமக்கு தேவையென்றால் அவர் முன்பாக முழங்கால்படியிட்டு, நமது தாழ்மையை வெளிப்படுத்தி, நமது கோரிக்கையைப் பணிவோடு கேட்கும் வழக்கம். (யாத் 9:29)

"சந்திரரோகி" - இதுபோன்ற வியாதி அமாவாசையிலும், பௌர்ணமியிலும் வரும். சந்திரரோகி வியாதியுடையவர்கள் இவ்விரண்டு நாட்களிலும் அதிக வேதனைகளை அனுபவிப்பார்கள். சந்திரனுடைய தோற்றத்தினாலும், மறைவினாலும் ஏற்படக் கூடிய காலமாறுதலால் இந்த வியாதி வருவதாக ஜனங்கள் பொதுவாக நினைக்கிறார்கள். ஆனால் இது சாத்தானின் தந்திரம். இந்த வியாதி பிசாசின் கிரியையே. அவன் ஜனங்களைத் திசை திருப்பி, இந்த வியாதிக்கு சந்திரனே காரணம் என்று ஜனங்களைப் பொய்யாக நம்ப வைத்திருக்கிறான். (மத் 17:18; மாற்கு 9:17; லூக்கா 9:38)

சந்திரரோகி (lunatick) - σεληνιάζομαι - **seleeniazomai** - 4583

பெயர்ச்சொல் - சந்திரரோகம்

"கொடிய வேதனைப்படுகிறான்" - (மத் 15:22)

17 அதிகாரம்

"அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்" - பிசாசு இந்தச் சிறுவனைக் கொல்வதற்கு முயற்சி பண்ணிற்று. அவனைத் தீயிலும், ஜலத்திலும் தள்ளிற்று. அந்தக் குடும்பத்தில் அவனைப் பற்றிய மரணபயம் உண்டாயிற்று.

"உம்முடைய சீஷர்கள்" - ஒன்பது சீஷர்கள் - மறுரூபமலையின் அடிவாரத்தில் இருந்த சீஷர்கள் (மத் 17:1)

"அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற்போயிற்று" - இயேசு கிறிஸ்துவிற்கு பிசாசுகளின்மீது அதிகாரம் உண்டு. அந்த அதிகாரத்தை அவர் தமது பிள்ளைகளுக்கும் கொடுத்திருக்கிறார். நாம் இந்த அதிகாரத்தை விசுவாசத்தோடு பயன்படுத்த வேண்டும். (மாற்கு 16:17-18; லூக்கா 10:19; யோவான் 14:12).

"விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்?" - இந்த வசனம் சீஷர்களையும் குறிக்கும். (மத் 17:20) அந்தச் சிறுவனின் தந்தையையும் குறிக்கும். (மாற்கு 9:17-24) சீஷர்களைக் குற்றப்படுத்திய வேதபாரகரையும் குறிக்கும். (மாற்கு 9:16)

"அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" - இது இயேசு கிறிஸ்துவின் அதிகாரமுள்ள வார்த்தை. தேவனிடத்தில் அவர் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார்.

"இயேசு பிசாசை அதட்டினார்" - இயேசு பிசாசை அதட்டினார். சந்திரனை அதட்டவில்லை. இந்தச் சிறுவனுக்கு இந்த பிரச்சனையைக் கொடுப்பது பிசாசுதானே தவிர சந்திரன் அல்ல. (மத் 4:23-24; மத் 10:1-8; யோவான் 10:10; அப் 10:38)

70. ஜெபமும் உபவாசமும் - (மாற்கு 9:28)

மத் 17:19 அப்பொழுது, சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்துவந்து: அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற் போயிற்று என்று கேட்டார்கள்.

மத் 17:20 அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலே தான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 17:21 இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே யன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

"அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று" - சீஷர்கள் தங்களுடைய உண்மையான நிலைமையைப் புரிந்து கொள்கிறார்கள். தங்களுடைய தோல்விக்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்க மனப்பூர்வமாக முன்வருகிறார்கள்.

"உங்கள் அவிசுவாசத்தினாலேதான்" - இயேசுவின் பதில் எளிமையானது. அதே சமயத்தில் முழுமையானது. நம்முடைய ஊழியங்களில் தோல்விகள் வருவதற்கும், பிசாசுகளைத் துரத்தமுடியாமற்போவதற்கும், ஜெபத்திற்கு பதில் கிடைக்காமல் இருப்பதற்கும் அவிசுவாசமே காரணம். தேவனுடைய வாக்குத்தத்தம் எல்லோருக்கும் உரியது. இதில் நிபந்தனை என்னவென்றால், நாம்கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். நம்மிடத்தில் தேவனைப் பற்றியும், அவருடைய வல்லமையைப் பற்றியும் அவிசுவாசம் இருக்கக்கூடாது. (மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; எபி 11:6; யாக் 1:5-8)

"விசுவாசம் உங்களுக்கு இருந்தால்" - நம்மிடத்தில் விசுவாசம் இருந்தால் நமக்குக் காரியம் வாய்க்கும். விசுவாசம் இல்லையென்றால் ஒரு காரியமும் வாய்க்காது.

17 அதிகாரம்

"கடுகுவிதையளவு" - கடுகுவிதை அளவில் சிறியது. ஆனால் சுத்தமானது. ஆற்றல் உடையது. கலப்படம் இல்லாதது. நமது விசுவாசமும் கலப்படமில்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட விசுவாசம் மலையைக்கூட அப்புறம்போக வைக்கும்.

"இந்த மலை" - மறுரூபமலை - (மத் 17:17; மாற்கு 11:22-24; லூக்கா 17:6; 1கொரி 13:2)

"உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது" - தம்முடைய பிள்ளைகளின் நன்மைக்காக தேவன் தமது வார்த்தையின் மூலமாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் காரியங்கள். (சங் 34:10; சங் 84:11; மத் 7:11; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16)

"இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ் விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது" - பிசாசுகள் பலவிதம். அவைகளின் வல்லமையும் பலவிதம். அவற்றை விரட்டும்போது நாம் ஜெபத்தோடும், உபவாசத்தோடும் விரட்ட வேண்டும். (யோவான் 3:34)

71. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (16:21; மாற்கு 9:30; லூக் 9:44)

மத் 17:22 அவர்கள் கலிலேயாவிலே சஞ்சரிக்கும்போது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார்.

மத் 17:23 அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார். அவர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள்.

தீர்க்கதரிசன எண் - 26

"மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்" - (மத் 17:22-23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த இரண்டாவது அறிவிப்பும், அவர் காட்டிக் கொடுக்கப்படப்போவதைப் பற்றிய முதலாவது குறிப்பும். (மத் 16:21).

72. வரிப்பணம் - மீனின் வாயில் வெள்ளிப்பணம் - (22:15; மாற்கு 12:13; லூக் 20:19)

மத் 17:24 அவர்கள் கப்பர்நகூமில் வந்தபோது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள்; செலுத்துகிறார் என்றான்.

மத் 17:25 அவன் வீட்டிற்குள் வந்தபோது, அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ, யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார்.

மத் 17:26 அதற்குப் பேதுரு: அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள் என்றான். இயேசு அவனை நோக்கி, அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லையே.

மத் 17:27 ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப்போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

"அவர்கள் கப்பர்நகூமில் வந்தபோது" - மறுரூபமலையிலிருந்து கப்பர்நகூமிற்கு.

மத்தேயு - தொகுப்புரை

17 அதிகாரம்

வரிபணம் (tribute) - δίδραχμον - didrachmon - 1323

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வரிபணம் - ஒவ்வொரு யூதரும் ஒவ்வொரு வருஷமும் தேவாலயத்திற்குச் செலுத்த வேண்டிய வரி. (யாத் 30:13; 2இராஜா 12:4; 2நாளா 24:6-9)

"செலுத்துகிறார்" - கிறிஸ்து யூதமார்க்க முறைமையின்படி செலுத்த வேண்டிய எல்லா வரிகளையும் செலுத்தினார். அரசாங்கத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து ஜீவித்தார். இது நமக்கு ஒரு முன்மாதிரியான காரியம். (ரோமர் 13:1-8).

"அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி" - பேதுரு என்ன பேசப்போகிறான் என்று இயேசுவிற்கு தெரியும். ஆகையினால் அவன் கேட்பதற்கு முன்பாகவே இயேசு பதில் கூறுகிறார்.

வரி (tribute) - κῆνσος - keensos - 2778

ஆண்பால் பெயர்ச்சொல் - வரி

"அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லையே" - இந்த வரி தேவாலயத்திற்காக வசூலிக்கப்பட்டது. ஜனங்கள்தான் இந்த வரியைச் செலுத்த வேண்டும். தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த வரியைச் செலுத்த வேண்டியதில்லை. தம்மைப்போலவே தம்முடைய சீஷர்களும் தேவாலயத்தின் ஆசாரியர்களைப்போல இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களும் வரி செலுத்தவேண்டியதில்லை. இவ்வாறு இயேசு கூறிவிட்டு, தாமும், தம்முடைய சீஷர்களும் அவர்களுக்கு இடறலாய் இருக்கக்கூடாது என்று கூறி வரிசெலுத்துவதற்குச் சம்மதம் தெரிவித்தார். (மத் 17:26 - 27)

"வெள்ளிப்பணம்" - இது ஒரு அற்புதம். மீனின் வாயில் ஏற்கெனவே வெள்ளிப்பணம் இருந்தாலும் அந்தப் பணம் அந்த மீனின் வாயில் இருக்கிறது என்பதைக் கூறுவதும் ஒரு அற்புதம்தான். கர்த்தர் நமது தேவைகளைச் சந்திப்பார். நம்மைப் பராமரிப்பார். தம்மையே சார்ந்திருக்கும் தமது பிள்ளைகளை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16). ஆவியின் வரங்கள் மூலமாக இயேசு கிறிஸ்து ஏற்கெனவே செய்த காரியங்களை விசுவாசிகள் செய்கிறார்கள். இயேசு கிறிஸ்துவும் அவற்றை ஆவியின் வரங்களினாலேயே நடப்பித்தார். (1கொரி 1:7; 1கொரி 12:1-11; 1கொரி 13:1-3; யோவான் 14:12)

வெள்ளிப் பணம் (piece of money) - στατήρ - stateer - 4715

ஆண்பால் பெயர்ச்சொல் - வெள்ளிப் பணம்

18 அதிகாரம்

73. சீஷத்துவத்தைப் பற்றிய உபதேசம்

(1) மாம்சமான மனுஷனின் பிரதான கேள்வி - (மத் 20:20,24; மாற்கு 9:33; லூக் 9:46; 22:24)

மத் 18:1 அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோக ராஜ்ஜியத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள்.

"பரலோகராஜ்ஜியத்தில் எவன் பெரியவனாயிருப்பான்" - இந்தக் கேள்வி ஊழியர்கள் மத்தியில் இன்றும் பிரபலியமாக இருக்கிறது. ஊழிய ஸ்தாபனங்களின் வளர்ச்சி, பணபலம், அதிகாரம், கூட்டங்களுக்கு ஆள் சேர்வது, ஆகியவற்றை அடிப்படையாக வைத்து, எந்த ஊழியக்காரர் பெரியவர் என்று ஜனங்கள் ஒருவரையொருவர் எடைபோட்டுப் பார்க்கிறார்கள். நாம் மனந்திரும்பி, பிள்ளைகளைப்போல ஆகவேண்டும். அப்போது தான் பரலோகராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியும். (மத் 18:3-4; மத் 20:20-28; மத் 23:8-11,மாற்கு 9:34-37; லூக்கா 9:46-48; லூக்கா 22:24-27) இவ்வுலக ராஜ்ஜியத்தில் பெரியவனாக இருக்க வேண்டுமென்றால் அதற்குத் தேவைப்படும் தகுதிகள் வேறே. பரலோக ராஜ்ஜியத்தில் நுழைவதற்கு தேவைப்படும் தகுதிகள் வேறே. உலக ராஜ்ஜியத்தைப் பார்ப்பதுபோல நாம் பரலோக ராஜ்ஜியத்தைப் பார்க்கக்கூடாது. (மத் 4:17)

(2) இயேசுவின் பதிலுரை - (மாற்கு 9:33; லூக் 3:1; 4:5-10; லூக் 9:46; 22:24; யோவான் 13:3-17)

மத் 18:2 இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி:

மத் 18:3 நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 18:4 ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.

"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" - முதலாவது உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிறவர்கள் மட்டுமே இயேசு கிறிஸ்து இந்த பூமியை ஆளுகை செய்யும்போது இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருப்பார்கள். (ரோமர் 8:17-18; 1கொரி 4:8,1கொரி 6:2-3; 2தீமோ 2:12; வெளி 1:6; வெளி 5:10; வெளி 20:4-6; வெளி 22:4-5) ஆயிர வருஷ அரசாட்சியில் இரட்சிக்கப் படாதவர்கள் இருப்பார்கள். அவர்கள் ஆளுகை செய்வதில்லை. தேவனுடைய ராஜ்யத்தை அவர்கள் சுதந்தரிக்கவும் மாட்டார்கள். (ஏசா 2:2-4; ஏசா 65:20; ஏசா 66:19-21; சக 8:23; சக 14:16-21; வெளி 20:7-10)

"மனந்திரும்பி" - செல்லும் பாதையிலிருந்து முழுவதுமாக திரும்புதல். தேவனோடு புதிய பாதையில் நடத்தல். (சங் 19:7; சங் 51:13; லூக்கா 22:32; அப் 3:19; யாக் 5:19)

"பிள்ளைகளைப் போல்" - சிறுபிள்ளைகளுக்கு உலக ஆசையோ, பண ஆசையோ, பதவி ஆசையோ இராது. விசுவாசிகளும், சிறுபிள்ளைகளைப்போல உலக ஆசைகளில் சிக்கிக்கொள்ளாதவாறு இருக்க வேண்டும். (மத் 23:5-12)

"பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" - இந்த உலக ராஜ்ஜியத்தில் துன்மார்க்கரும், நீதிமான்களும் கலந்திருக்கிறார்கள். வயலில் கோதுமையும், களையும் சேர்ந்திருப்பதுபோல இருக்கிறார்கள். ஆனால் பரலோக ராஜ்ஜியத்திலோ நீதிமான்கள் மட்டுமே இருப்பார்கள். பரலோக ராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கு முதலாவது தகுதி இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தன் பாவங்களுக்காக மனந்திருந்தி, இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (மத் 13:11, யோவான் 3:3)

18 அதிகாரம்

"எவனோ" - யாரெல்லாம் (Whosoever). வேதாகமத்தில் 183 இடங்களில் இந்தச் சொல்லை வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் 73 தடவைகளும், புதிய ஏற்பாட்டில் 110 தடவைகளும் இந்தச் சொல் வருகிறது. மனுஷனுடைய சுயாதீன சித்தத்திற்கு இந்த வாக்கியம் முக்கியத்துவம் தருகிறது. மனுஷன் தான் செய்யும் காரியத்திற்குத் தானே பொறுப்பு வகிக்கிறான்.

தன்னுடைய சுயாதீன சித்தத்தின் பிரகாரம் ஒரு நபரை அல்லது ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ மனுஷனுக்கு அதிகாரம் உள்ளது. கீழே கொடுக்கப்பட்டிருக்கிற காரியங்களில் மனுஷன் தன் சுயாதீன சித்தத்தைப் பயன்படுத்தித் தீர்மானம் பண்ணுகிறான்.

1. தேவன் (மத் 12:50; மாற்கு 3:35)
2. கிறிஸ்து (மாற்கு 8:34; 1யோவான் 3:6,10; 1யோவான் 4:15; 1யோவான் 5:1; 2யோவான் 1:9)
3. பரிசுத்த ஆவியானவர் (மத் 12:31-32)
4. வார்த்தை (மத் 5:19; 1யோவான் 2:5)
5. சாத்தான் (ரோமர் 6:16-23)
6. பாவம் (யோவான் 8:34; 1யோவான் 3:4-15)
7. சட்டங்கள் (ரோமர் 13:2)
8. இரட்சிப்பிற்குத் தேவனுடைய நிபந்தனைகள் (யோவான் 3:15லி20; யோவான் 4:14; அப் 2:21; அப் 10:43; ரோமர் 9:33; ரோமர் 10:9லி13; வெளி 22:17)

"இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" - இந்த உலகராஜ்ஜியத்தில் தன்னை உயர்த்துகிறவனே பெரியவனாயிருப்பான். ஆனால் சுவிசேஷம் உலகக்காரியங்களுக்கு நேர்எதிரானது. சுவிசேஷம் தாழ்மையை வலியுறுத்துகிறது. உலகம் பெருமையை மதிக்கிறது. பரலோக ராஜ்ஜியத்தில் தன்னைத் தாழ்த்துகிறவனே பெரியவனாயிருப்பான். (லூக்கா 14:11; லூக்கா 18:14; யாக் 4:6,10; 1பேதுரு 5:3-7; பிலி 2:1-3)

(3) விசுவாசிகளுக்கு உலகத்திலிருந்து இடறல்கள் - (மாற்கு 9:42; லூக் 17:1; யோவான் 15:18)

மத் 18:5 இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்.

மத் 18:6 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

மத் 18:7 இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!

"இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" - ஒரு விசுவாசிக்குச் செய்யப்படும் நல்ல உதவிகள் கர்த்தருக்கே செய்யப்படும் காரியமாக இருக்கும். கர்த்தர் அவர்களுக்குப் பலனளிப்பார். கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனைக் கர்த்தர் தண்டிப்பார்.

18 அதிகாரம்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன்" - ஒரு விசுவாசிக்கு இடையூறு பண்ணுகிறவன், இரட்சிக்கப் பட்டிருக்கும் ஒரு விசுவாசி பின்வாங்கிப் போவதற்குக் காரணமாக இருக்கிறவன்.

"இந்தச் சிறியர்" - சிறியர் என்பது எல்லா விசுவாசிகளையும் குறிக்கும். சிறுபிள்ளைகள் என்பது பக்குவப்பட்ட விசுவாசிகளைக் குறிக்கும்.

"ஏந்திரக்கல்" - 18 அங்குலம் விட்டமும், 3 அங்குலம் கனமும் உடைய கல். சீரியர், கிரேக்கர், எகிப்தியர் ஆகியோர் குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுப்பதற்காக அவர்கள் கழுத்தில் இந்தக் கல்லைக்கட்டி நடுக்கடலில் போட்டு விடுவார்கள். குற்றவாளி மூச்சுதிணறி இறந்துபோவான். (லூக்கா 17:2)

தீர்க்கதரிசன எண் - 27

"இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ...." (மத் 18:7-9) இந்தத் தீர்க்கதரிசனத்தில் மத் 18:7 ஆவது வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. மத் 18:8-9 ஆவது வசனங்கள் நியாயத்தீர்ப்பின் போது நிறைவேறும். (வெளி 20:11-15; அப் 17:31)

"எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ" - இடறல் கொடுக்கிற மனுஷன் துன்மார்க்கன். கெட்ட ஊற்று நல்ல தண்ணீரைத் தராது. (யாக் 3:11)

(4) இடறல் உண்டாக்கும் சரீர உறுப்புக்கள் - (மத் 5:29; மாற்கு 9:43-48)

மத் 18:8 உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மத் 18:9 உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

எரிநரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம் (மத் 5:22,29,30; மத் 7:19; மத் 8:12; மத் 10:28,மத் 11:23,மத் 13:30, 40-42, 49-50; மத் 16:18; மத் 18:8-9; மத் 22:13 23:15; மத் 24:51; மத் 25:30-46)

(5) எல்லோருக்கும் எச்சரிப்பு - (மத் 5:23; 38-42; லூக் 17:1)

மத் 18:10 இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"தேவதூதர்கள்" - ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவதூதர்கள் ஊழியம் செய்கிறார்கள். (எபி 1:14; சங் 34:7)

18 அதிகாரம்

"அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்" - சமூகத்தைத் தரிசிப்பது என்பது அவருடைய சமூகத்தில் நிற்பது என்னும் பொருளைத்தரும் வழக்குச் சொல். (எஸ் 1:14; 2இராஜா 14:8) எல்லா விசுவாசிகளும், ஒரு காலத்தில் தேவனுடைய சமூகத்தில் நித்திய காலமாக இருந்து அவரைத் தரிசிப்பார்கள். (வெளி 22:4-5)

(6) காணாமல்போன ஆடு - (லூக் 15:3; 19:10)

மத் 18:11 மனுஷகுமாரன் கெட்டுப் போனதை ரட்சிக்க வந்தார்.

மத் 18:12 உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிலிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் சிதறிப் போனதைத் தேடாமலிருப்பானோ?

மத் 18:13 அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்துச் சந்தோஷப்படுகிறதைப் பார்க்கிலும், அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 18:14 இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.

"மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார்" - (லூக்கா 5:32)

"இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" - எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். (1தீமோ 2:4; 2பேதுரு 3:9; யோவான் 3:16) இரட்சிக்கப்படுவதற்கு தேவன் வகுத்துள்ள நியதிகளைப் பின்பற்றுவோர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். (யோவான் 3:16-20; ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபே 2:8-9; 1யோவான் 1:9)

(7) விசுவாசிகளின் ஒழுக்கக் கட்டுப்பாடு - (மத் 5:23; 1கொரி 5:1; 1தீமோ 5:20)

மத் 18:15 உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்.

மத் 18:16 அவன் செவிகொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோ.

மத் 18:17 அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக.

"சகோதரன்" - சக விசுவாசி.

சபையில் கட்டுப்பாடு பண்ணும் விதம்

1. நமக்கு நாமே எல்லா பிரச்சனைகளையும் தீர்த்துக் கொள்ள வேண்டும். (மத் 18:15; மத் 5:23-26; லூக்கா 17:3-4; லேவி 19:17)
2. இரண்டு அல்லது மூன்று சாட்சிகளினால் நம்முடைய காரியம் உறுதிபண்ணப் படவேண்டும். (மத் 18:16; 2கொரி 13:1; உபா 17:6; உபா 19:15)

18 அதிகாரம்

3. சபையில் தீர்மானம் பண்ணும் போது, அது கண்டிப்புடனும், நீதியாகவும் இருக்க வேண்டும். மனந்திரும்புவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். மனந்திரும்பாத பட்சத்தில் சபையை விட்டுவிலக்கி வைக்கலாம். (மத் 18:17) மனுஷர் மன்னிக்கவில்லையென்றால் கர்த்தரும் மன்னிக்க மாட்டார். (மத் 6:14-15; மத் 18:21-35; மாற்கு 11:25-26; ரோமர் 16:17)

புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் பிரகாரம் ஒரு விசுவாசியைச் சபையை விட்டு தள்ளிவைக்கும் சூழ்நிலைகள்

1. பாவம் (யோவான் 1:29, மத் 18:15-17)

2. வேதவாக்கியத்திற்கு மாறான கள்ள உபதேசம் (ரோமர் 16:17)

3. கிறிஸ்துவை வெறுத்தல் (1கொரி 16:22)

4. கீழ்ப்படியாமையும், தாறுமாறான நடத்தையும் (2தெச 3:6,14-15)

5. தேவதூஷணம் (1தீமோ 1:19-20; 1தீமோ 4:1-8; 2தீமோ 3:5; 2தீமோ 4:1-4)

6. துர்உபதேசம் (தீத்து 3:10; 1தீமோ 6:3-5)

7. ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள் (1கொரி 5:1-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; மாற்கு 7:21-23; ரோமர் 1:18-32; கொலோ 5:5-10; 1தீமோ 6:3-5)

பாவம் **(sin)** - ἁμαρτία - **hamartia** - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம், தோல்வி

(அ) பாவச் செயல் (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா. 1:21), (ரோம. 3:1)

"அஞ்ஞானி" - புறஜாதியான். இந்த வசனத்திலும் மத் 6:7 ஆவது வசனத்திலும் மட்டுமே இந்த வாக்கியம் வருகிறது. இவர்களிடத்தில் தேவஅன்பை வெளிப்படுத்த வேண்டும். இந்த நபரைக் கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்துவதற்கு அவரிடத்தில் ஆவிக்குரிய காரியங்களைக் கூறலாம். ஆயினும் அவர் மனந்திரும்பி வரவேண்டும். அப்போது நாம் அவரை மன்னித்து ஏற்றுக்கொள்ளலாம். (மத் 6:14-15; மத் 18:21-35; 2கொரி 2:6-11; கலா 6:1).

அஞ்ஞானி **(heathen)** - ἐθνικός - **ethnikos** - 1482

பெயரடை - அஞ்ஞானியான

"ஆயக்காரன்" - (மத் 5:46)

(8) விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் வல்லமை - (மத் 17:20; 21:22; மாற்கு 9:23; லூக் 24:49; யோவான் 14:12; 15:5,16; 20:23; அப் 1:8; 1கொரி 12:7-11)

மத் 18:18 பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(9) ஒன்றுகூடி ஜெபிப்பதின் வல்லமை - (மாற்கு 11:22; யோவான் 15:7,16; 16:23)

மத் 18:19 அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப் பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

18 அதிகாரம்

"அல்லாமலும்" - மறுபடியும். **"again" means "once more"** மத் 18:18 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற சத்தியம் திரும்பவும் வலியுறுத்தப்படுகிறது. "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" இந்த வசனத்தில் இந்தக் காரியம் "உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்" என்று வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

(10) ஸ்தலசபைகளின் எளிமையும் கிறிஸ்தவ ஆராதனையும் -

மத் 18:20 ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.

"இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" - இரண்டு சாட்சிகள் அல்லது மூன்று சாட்சிகள் சேர்ந்து ஒருவனுடைய குற்றத்தை உறுதி பண்ணலாம். (மத் 18:16-17) அதேவேளையில் இருவர் அல்லது மூன்றுபேர் தேவனுடைய சமூகத்தில் ஒருமித்து ஜெபம்பண்ணி, தேவனுடைய பதிலைப் பெற்றுக் கொள்ளலாம். இரண்டுபேர் அல்லது மூன்றுபோர் ஒருமனப்பட்டு இருக்கும்போது அதுவே சபையாகிறது. அங்கே தேவனுடைய பிரசன்னம் இருக்கிறது.

"அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" - இயேசு கிறிஸ்துவின் சர்வவியாபகத்தையும், சர்வ வல்லமையையும், சர்வஞானத்தையும் குறிக்கிறது. அவருடைய தேவதத்துவத்தை இந்த வாக்கியம் வலியுறுத்துகிறது.

(11) மன்னிப்பின் பிரமாணம் - *(6:14; மாற்கு 11:25; லூக் 17:4)*

மத் 18:21 அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்.

மத் 18:22 அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

"நான் மன்னிக்க வேண்டும்" - (மாற்கு 11:25; ரோமர் 12:19; எபே 4:32)

"ஏழெழுபதுதரமட்டும்" - 490 தடவைகள் அல்லது எண்ணிலடங்காத தடவைகள்.

(12) மன்னிப்பு - இரக்கமில்லாத ஊழியக்காரனைப் பற்றிய உவமை

மத் 18:23 எப்படியெனில், பரலோக ராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 18:24 அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

மத் 18:25 கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாத படியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்.

மத் 18:26 அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்.

18 அதிகாரம்

மத் 18:27 அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி,அவனை விடுதலை பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்.

மத் 18:28 அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத்தீர்க்க வேண்டும் என்றான்.

மத் 18:29 அப்பொழுது அவனுடைய உடன்வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக் கொண்டான்.

மத் 18:30 அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்.

மத் 18:31 நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்.

மத் 18:32 அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்.

மத் 18:33 நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ என்று சொல்லி,

மத் 18:34 அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.

மத் 18:35 நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் உவமைகள்

இந்த சுவிசேஷத்தில் 48 உவமைகள் உள்ளன. இந்த உவமைகளில் "இரண்டு" என்னும் எண்ணிற்கு முக்கியத்துவம் உண்டு. பழைய வஸ்திரம் புதிய வஸ்திரம் என்னும் இரண்டு வஸ்திரங்கள். பழைய துருத்தி புதிய துருத்தி என்னும் இரண்டு துருத்திகள்.

1. சாரம் (மத் 5:13)
2. விளக்கு (மத் 5:14-15)
3. பொக்கிஷம் (மத் 6:19-21)
4. சிருஷ்டி (மத் 6:26)
5. உடை (மத் 6:28-29)
6. கண் இடையூறு (மத் 7:3-5)
7. மிருகம் (மத் 7:6)
8. தந்தை (மத் 7:7-11)
9. வழி (மத் 7:13-14)
10. மரமும் கனிகளும் (மத் 7:15-20)
11. அஸ்திபாரம் (மத்7:24-29)
12. பிரிவு (மத் 9:11-13)
13. மணவாளன் (மத் 9:15)
14. வஸ்திரம் (மத் 9:16)

18 அதிகாரம்

15. துருத்தி (மத் 9:17)
16. உபதேசம் பண்ணுகிறவர் (மத் 10:16)
17. குருவி (மத் 10:29-31)
18. ஜனங்கள் (மத் 11:7-9)
19. பிள்ளைகள் (மத் 11:16-19)
20. ஞானிகள் (மத் 11:25)
21. வல்லமையின் ஆதாரம் (மத் 12:29)
22. அடையாளம் (மத் 12:40; மத் 16:1-5)
23. பிசாசு பிடித்தல் (மத் 12:43-45)
24. விதை (மத் 13:24-43)
25. மீன் (மத் 13:47-50)
26. சத்தியம் (மத் 13:52)
27. நாற்று (மத் 15:13-14)
28. தீட்டு (மத் 15:11-20)
29. உபதேசங்கள் (மத் 16:6-12)
30. சிறுபிள்ளை (மத் 18:1-10)
31. ஆடு (மத் 18:11-14)
32. ஊழியக்காரன் (மத் 18:23-35)
33. வேலையாள் (மத் 20:1-16)
34. குமாரன் (மத் 21:28-32)
35. வீட்டெஜமான் (மத் 21:33-46)
36. விருந்தினர் (மத் 22:1-14)
37. மார்க்கம் (மத் 23:25-28)
38. சர்ப்பம் (மத் 23:33)
39. வயது (மத் 24:37-39)
40. மனுஷர் (மத்24:43-44)
41. வேலைக்காரன் (மத் 24:45-51)
42. சுபாவம் (மத் 25:1-13)
43. வியாபாரி (மத் 25:14-30)

வேதாகமத்தில் உவமை என்பது பொதுவான பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உவமையின் வெவ்வேறு பயன்பாடுகள்.

1. சாதாரண ஒப்பீடு (**simple comparison**) (மத் 24:31-32)
2. ஒப்புமை, எதிரிணை (**obscure similitude or dark saying**) (மத் 15:11-15; சங் 78:2; நீதி 1:6)
3. தொடர் உருவகம் (**simple allegory**) (மத் 13)
4. மூதுரை, சால்புரை (**a maxim or wise sentence**) (1இராஜா 4:32)
5. உபதேசம் (**a discourse**) (யோபு 27:1; யோபு 29:1)
6. முதுமொழி (**an adage**) (லூக்கா 4:23; லூக்கா 6:39)
7. உருவகம் (**a type**) (எபி 9:9; எபி 11:19).

கணக்குப்பார் (**take account**) - **συναίρω** - **synairoo** - 4868

வினைச்சொல் - கணக்குப்பார், கணக்குக்கேள் (மத் 18:24; மத் 25:19)

தாலந்து (**talents**) - **τάλαντον** - **talanton** - 5007

18 அதிகாரம்

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தாலந்து - பொன்னையும், வெள்ளியையும் அளக்கும் அளவு. கிரேக்கருடைய முறைமையின் பிரகாரம் ஒரு தாலந்து வெள்ளி அல்லது பொன் என்பது பல லட்சரூபாய் மதிப்புடையதாகும்.

காசு (pence) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு - ஒரு நாள் சம்பளம்.

"உபாதிக்கிறவர்கள்" - சிறைச்சாலைக் காரர்கள். கைதிகளை அடைத்து வைத்து அவர்களைச் சித்திரவதை பண்ணுகிறவர்கள்.

"நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" - இந்த உவமை மன்னிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக நம்மைத் தண்டியாமல், நம்மை மன்னித்திருக்கிறார். அதுபோலவே, மற்றவர்கள் செய்யும் பாவங்களை நாமும் மன்னிக்க வேண்டும்.

இந்த உவமையில் நான்கு காரியங்கள் உள்ளன

1. இராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும்
2. ஊழியக்காரனும், ஊழியக்காரனுடைய ஊழியக்காரனும்
3. இராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும்
4. ஆவிக்குரிய வியாக்கியானம்

1. இராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும் (மத் 18:23-27)

(1) கணக்குப்பார்த்தல் (மத் 18:23-24)

(2) பெரிய கடன்தொகை (மத் 18:24)

(3) திருப்பிச் செலுத்த நிர்வாகம் இல்லை (மத் 18:25)

(4) தண்டனை அறிவிக்கப்படுதல் (மத் 18:25)

(5) மன்னிப்பு கோரப்படுவதும், மன்னிக்கப் படுவதும் (மத் 18:26)

(6) இராஜாவின் மனதிரக்கம் (மத் 18:27)

(7) கடன் மன்னிக்கப்படுதல் (மத் 18:27)

2. ஊழியக்காரனும், ஊழியக்காரனுடைய ஊழியக்காரனும் (மத் 18:28-30)

(1) புதிய விடுதலை (மத் 18:28)

(2) கணக்குப்பார்த்தல் (மத் 18:28)

(3) சிறிய கடன்தொகை (மத் 18:28)

(4) கடனைத் திருப்பிச் செலுத்த நிர்வாகம் இருந்தது (மத் 18:28)

(5) நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுதல் (மத் 18:30)

(6) இரக்கம் கோரப்படுதல் (மத் 18:29)

(7) இரக்கம் காண்பிக்கப்படவில்லை. (மத் 18:28-30)

3. இராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும்

(1) உடன் ஊழியக்காரரின் அறிவு

(2) உடன் ஊழியக்காரரின் மனதுருக்கம்

(3) உடன் ஊழியக்காரரின் அறிக்கை (மத் 18:31)

(4) கணக்குப்பார்த்தல் (மத் 18:32)

(5) இரக்கமில்லாத குணத்திற்குத் தண்டனை (மத் 18:32-33)

(6) இராஜாவின் கோபம் (மத் 18:34)

(7) தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது (மத் 18:34)

18 அதிகாரம்

4. ஆவிக்குரிய வியாக்கியானம்

(1) தேவன் பாவிகளை மனதிரங்கி இரட்சிக்கிறார். (மத் 18:23-27,35; மத் 12:31-32; 1யோவான் 1:9)

(2) இரட்சிக்கப்பட்டவர்கள் மற்ற விசுவாசிகளுடைய தவறுகளை மன்னிக்க வேண்டும். (மத் 18:26-30,35; மத் 5:38-48; மத் 7:12; ரோமர் 12:9-21; 1கொரி 13)

(3) நமது சகோதரரை நாம் மன்னிக்கவில்லையென்றால் நமது ஆண்டவர் நம்மை மன்னிக்க மாட்டார். (மத் 18:35; மத் 6:14-15; மாற்கு 11:25-26; எபே 4:32)

“மனப்பூர்வமாய்” - பாவம் செய்யும் ஆசையும், நீதிமானாக இருக்க வேண்டும் என்னும் ஆர்வமும் நமது இருதயத்திலிருந்தே வருகிறது. (மத் 15:18-19; மாற்கு 7:21-23; அப் 8:37; ரோமர் 10:6-10; 2தீமோ 2:22; எபி 4:12)

19 அதிகாரம்

74. இயேசு திரளான ஜனங்களைச் சுத்தமாக்குகிறார் -

மத் 19:1 இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்த பின்பு, அவர் கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அக்கரையான யூதேயாவின் எல்லைகளில் வந்தார்.

மத் 19:2 திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள்; அவ்விடத்தில் அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

"இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்த பின்பு" - மத் 17:24-18:35 ஆகிய வசனங்களிலுள்ள வார்த்தைகளைக் கூறிய பின்பு.

"யூதேயாவின் எல்லைகள்" - யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள யூதேயாவின் எல்லைகள். இயேசு கிறிஸ்து எருசலேமிலே இந்த உலகத்தின் பாவங்களுக்காகப் பாடுபடவும், மரிக்கவும், பிரயாணம் செய்கிறார். அதற்காக அவர் எரிகோ வழியாக எருசலேமிற்குப் பிரயாணம் பண்ணுகிறார். (மத் 20:17)

"யோர்தானுக்கு அக்கரை" - யோர்தான் நதிக்கரையிலுள்ள பிரதேசம். இது யூதேயாவிற்கும், பெரேயாவிற்கும் இடையிலுள்ள எல்லைப்பகுதி.

"அவர்களைச் சொஸ்தமாக்கினார்" - (மத் 13:58)

75. மனைவியைத் தள்ளிவிடுவது, மறுவிவகாரம் பண்ணுவது ஆகியவை பற்றிய பிரமாணம் -

(மத் 5:31; மாற்கு 10:1; லூக் 16:18; ரோமர் 7:1-3; 1கொரி 7)

மத் 19:3 அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளி விடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

மத் 19:4 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும்,

மத் 19:5 இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?

மத் 19:6 இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.

மத் 19:7 அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளி விடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்.

மத் 19:8 அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயகடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை.

மத் 19:9 ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப் பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று" - இயேசு கிறிஸ்துவை ஏதாவது ஒரு கண்ணியில் சிக்கவைக்க வேண்டுமென்று பரிசேயர் முயற்சி பண்ணினார்கள். ((மத் 26:3)

"தள்ளிவிடுவது" - புருஷன் தன் மனைவியை விவகாரத்து பண்ணுவது. (மத் 5:31)

19 அதிகாரம்

"எந்த முகாந்தரத்தினாலாகிலும்" - பரிசேயர் தாங்கள் கேட்கும் கேள்வியை மிகவும் வினயமாகக் கேட்கிறார்கள். பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் பிரகாரமாக வேசித்தனம் மட்டுமே புருஷன் மனைவியைத் தள்ளி விடுவதற்கு முகாந்தரமாக இருந்தது. (உபா 24:1-4) ஆனால் இங்கு பரிசேயர் "எந்த முகாந்தரத்தினாலாகிலும்" புருஷன் மனைவியைத் தள்ளிவிடலாமா என்று கேள்வி கேட்கிறார்கள். இன்றைய தினமும் யூதர்கள் மத்தியில் இது மிகப்பெரிய பிரச்சனையாக இருக்கிறது. யூதமார்க்கத் தலைவர்கள் உபா 24:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். தற்காலத்தில் ஏராளமான முகாந்தரங்களுக்காக புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடுவதற்கு அனுமதி கொடுக்கிறார்கள்.

"ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்" - (ஆதி 1:26-28; ஆதி 2:21-25). இது தேவனுடைய வார்த்தை. ஆனால் ஒரு சிலர் தங்களை அறிஞர்கள் என்று கூறிக்கொண்டு மனுஷன் குரங்கிலிருந்து தோன்றியவன் என்று குழறுபடி பண்ணுகிறார்கள்.

"அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்" - திருமணம் செய்யும் புருஷனையும், மனைவியையும் கர்த்தரே இணைப்பதாக பலர் கூறுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் தங்களுக்கு நியமித்து வைத்திருக்கும் புருஷனையோ, அல்லது மனைவியையோ விவாகம் பண்ணுவதற்குத் தங்களுக்கு உரிமை இருக்கிறது என்று விவாதம் பண்ணுகிறார்கள். சட்டப்படியாக நடைபெறும் எல்லா திருமணங்களையுமே தேவன் அங்கீகரிக்கிறார். அதேசமயத்தில் திருமண வேளையில் புருஷனும், மனைவியும் கூறும் வாக்குறுதிகளுக்கு அவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும். (ரோமர் 13: 1-10)

"தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்" - (மத் 5:31, மாற்கு 10:4)

"உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்" - தள்ளுதற்சீட்டைப் பற்றி மோசே கூறியுள்ள பிரமாணம் இதுதான். " " (உபா 24:1-4) வேசித்தன முகாந்தரத்தினால் தள்ளுதற்சீட்டைக் கொடுக்கலாம். மோசே இதை அனுமதிக்கவில்லையென்றால் ஆண்களுடைய துன்மார்க்கமான ஜீவியங்களினாலும், கொடுமைகளினாலும் பெண்கள் துன்புறுத்தப் படுவார்கள். கொடுமைப்படுத்தப்படுவார்கள். ஆகையினால்தான், மோசே தள்ளுதற்சீட்டை அனுமதித்தார்.

"ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" - பரிசேயருடைய கேள்விக்கு இயேசு கிறிஸ்து மிகவும் நேர்த்தியாய்ப் பதில் கூறினார். மோசேயின் பிரமாணத்தை இயேசு மேற்கோளாகக் காட்டினாரே தவிர, தமது காலத்தில் இருந்த யூதமார்க்கத்து பிரமாணங்களைத் தமக்கு ஆதாரமாகக் கூறவில்லை. இருதயக்கடினமும், தள்ளுதற்சீட்டும் தேவனால் உண்டானவை அல்ல. இயேசு கிறிஸ்துவினுடைய இராஜ்ஜியத்தில் இருதயக் கடினமுடையவர்கள் பங்குபெறமாட்டார்கள். அவருடைய நித்திய ஆளுகையிலும் இப்பேர்ப் பட்டவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை. (ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 59:20; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5; தானி 7:13-14).

"எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்" - ஒரு ஸ்திரீ வேசித்தனம் செய்தாள் என்று நிரூபிக்கப் பட்டால் அவளைத் தள்ளிவிடலாம். அவ்வாறு நிரூபிக்கப்படாமலேயே அவளுடைய புருஷன் வேறொருத்தியை விவாகம் பண்ணினால் புருஷன்மீதுதான் குற்றம். அவன் விபச்சாரம் செய்கிற குற்றம் புரிகிறான். பிரச்சனை இத்துடன் முடியவில்லை. தள்ளிவிடப்பட்டவளை யாராவது விவாகம் பண்ணினால் அவன்மீதும் குற்றம் சுமருகிறது. அவனும் விபச்சாரம் செய்கிற குற்றம் புரிகிறான்.

19 அதிகாரம்

இது கர்த்தருடைய பிரமாணம். பரிசேயருக்கு இது மகிழ்ச்சியான பதில் அல்ல. அவர்களுக்கு மட்டுமல்ல, எப்படியும் வாழலாம், எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்னும் ஆசை உடையவர்களுக்கும் இயேசுவின் பிரமாணம் மகிழ்ச்சியானதல்ல. "எந்த முகாந்தரத்தினாலாகிலும்" ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது.

"தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" - காரணங்கள்

1. திருமணம் தெய்வீக நியமனம் (மத் 19:4,6,8)
2. திருமணம் தெய்வீக கட்டளையின்படி நடைபெறுகிறது (மத் 19:5-6)
3. ஆதாமும், ஏவாளும் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு முன் மாதிரியானவர்கள் (மத் 19:8)
4. திருமணம் ஒரு புருஷனையும், ஒரு ஸ்திரீயையும் ஒரே மாம்சமாக்குகிறது. இதனால் தங்களுடைய சந்தோஷம், வருத்தம், எல்லாவற்றிலும் இவர்கள் பங்காளிகளாக இருக்கிறார்கள். (மத் 19:5-6)
5. திருமணம் முறிந்துபோகும்போது அவர்களுடைய பிள்ளைகளுக்குப் பல பிரச்சனைகள் வரும். இதனால் அந்தப் பிள்ளைகளும் பெற்றோருடைய கவனிப்பு இல்லாமல் பாவஜீவியத்தில் விழும் வாய்ப்பு அதிகரிக்கிறது. (மத் 19:9;மாற்கு 7:21;ரோமர் 1:29-32)
6. திருமணம் முறிவதினால் பல தீய விளைவுகள் உண்டாகும். இதனால் ஆக்கினைத்தீர்ப்புக்கள் வரும் (மத் 19:9; கலா 5:19-21; 1கொரி 6:9-11)
7. இருதயக்கடினத்தைச் சுவிசேஷம் ஏற்றுக் கொள்ளவில்லை. பிறர்மீது அன்புகூர வேண்டுமென்பதே தேவனுடைய பிரமாணம். (2கொரி 5:17-18; எபே 4:24; கலா 5:24)

தள்ளுதற்சீட்டைக் கொடுப்பதற்குப் புதிய ஏற்பாடு அங்கீகரிக்கும் காரணங்கள்

1. வேசித்தனம் (மத் 19:9; மத் 5:32, நீதி 2:16-20; நீதி 6:24-26; நீதி 7:5-23; நீதி 9:13-18; நீதி 11:22; நீதி 30:20-23)
2. கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் வேண்டுமென்றே விலக்கிவிட்டுப் பிரிந்துபோதல். (1கொரி 7:12-15)

"தள்ளிவிட்டு விவாகம் பண்ணுகிறவன் அல்லது விவாகம் பண்ணுகிறவள் விபச்சாரம் செய்கிறார்கள்" - வேசித்தன முகாந்தரத்தினால் மட்டுமே தள்ளுதற்சீட்டைத் தரவேண்டும். வேறு எந்தக் காரணத்திற்காகத் திருமண உறவை முறித்தாலும் அது குற்றமே. அவ்வாறு வேறு காரணங்களுக்காகத் திருமண உறவை முறித்துவிட்டு அதன் பின்பு வேறு திருமணம் செய்கிறவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவர் விபச்சாரம் பண்ணுகிறார். (மத் 5:32; 1கொரி 7:12-15)

76. மனைவியைத் தள்ளி விடுவதினால் ஏற்படும் விளைவுகள் - (மத் 5:31; மாற்கு 10:10; லூக் 16:18)

மத் 19:10 அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல என்றார்கள்.

மத் 19:11 அதற்கு அவர்: வரம் பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மத் 19:12 தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு;

19 அதிகாரம்

மனுஷர்களால் அண்ணகர்களாக்கப் பட்டவர்களும் உண்டு; பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு; இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக் கொள்ளக்கடவன் என்றார்.

"மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல" - திருமண வாழ்வு சந்தோஷமானதாக இருக்க வேண்டும். ஏதாவது சில காரணங்களுக்காக அவர்களுடைய மணவாழ்வில் சந்தோஷமும், சமாதானமும் இராது. அவர்களுக்கு அதிருப்தியே இருக்கும் என்ற சூழ்நிலை இருக்குமென்றால் அவர்கள் திருமணம் செய்து பின்பு பிரிந்துபோவதற்குப் பதிலாகத் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது நலம்.

"வரம்பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" - திருமணம் செய்து கொள்வது ஆசீர்வாதம். திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது குற்றமல்ல.

"அண்ணகர்கள்" - அலிகள், ஆண்மையற்றவர்கள், காயடிக்கப்பட்டவர்கள்

அண்ணகர்களின் பிரிவுகள்

1. பிறவிலேயே ஆண்மையற்றவர்களாக பிறந்தவர்கள். (மத் 19:12; உபா 23:1)
2. அரண்மனையின் அந்தப்புரங்களில் ராணிகளுக்கும், அரண்மனை ஸ்திரீகளுக்கும் காவல் காப்பதற்காகக் காயடிக்கப்பட்டவர்கள் (மத் 19:12; 2இராஜா 20:18; எரே 29:2; எரே 34:19; எரே 41:16; ஏசா 56:4; அப் 8:27-39)
3. தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக அறுவை சிகிச்சை மூலமாகத் தங்களை அண்ணகர்களாக ஆக்கிக் கொண்டவர்கள். (மத் 19:12)

"இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக் கடவன்" - அண்ணகர்களாக வாழமுடியும் என்று தீர்மானம் பண்ணுகிறவர்கள் அண்ணகர்களாக வாழலாம்.

77. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (மாற்கு 10:13; லூக் 18:15)

மத் 19:13 அப்பொழுது, சிறு பிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம் பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள்.

மத் 19:14 இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி,

மத் 19:15 அவர்கள்மேல் கைகளை வைத்து, பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்.

"சிறு பிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்" - இது யூதருடைய பழக்கம். யூதமார்க்கத்தலைவர்கள் தங்கள் பகுதிக்கு வரும்போது தங்களுடைய சிறுபிள்ளைகளைப் பெற்றோர், அவர்களிடம் அழைத்துச் சென்று தங்கள் பிள்ளைகள்மீது கைகளை வைத்து, ஆசீர்வதிக்கும் படியாகவும், அவர்களுக்காக ஜெபம் பண்ணும்படியாகவும் கொண்டு வருவார்கள்.

"சீஷர்கள் அதட்டினார்கள்" - இயேசு கிறிஸ்துவின் காரியங்களில் சீஷர்கள் மறுபடியுமாகத் தலையிடுகிறார்கள். (மத் 15:23; மத் 16:22; லூக்கா 9:49-50,53-56). ஆனால் இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் என்று சொன்னார்.

19 அதிகாரம்

"பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" - கணக்கு ஒப்புவிக்கக்கூடிய பக்குவம் இல்லாதவர்களே சிறுபிள்ளைகள். எந்த வயதில் அவர்களுக்குப் பொறுப்பு வரும் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆகையினால் சிறுவர்களும் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்ஜியத்தில் சுதந்தரிக்கமுடியும்.(மத் 18:1-10; மத் 19:14)

"அவர்கள்மேல் கைகளை வைத்தார்" - ஒரு நபரை ஆசீர்வதிப்பதற்கு அவர்கள்மீது கைகளை வைத்து, ஆசீர்வதிக்க வேண்டும். இது இரண்டு ஏற்பாடுகளிலும் காணப்படுகிற பழக்கம். (மாற்கு 16:18)

78. மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - (மாற்கு 10:17; லூக் 18:18)

மத் 19:16 அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டு என்று கேட்டான்.

மத் 19:17 அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்.

மத் 19:18 அவன் அவரை நோக்கி: எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக;

மத் 19:19 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார்.

மத் 19:20 அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான்.

மத் 19:21 அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.

மத் 19:22 அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்த படியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்.

"நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" - எந்த நன்மையும் செய்து யாரும் நித்திய ஜீவனை அடையமுடியாது. இரட்சிப்பு தேவன் நமக்குத் தரும் இலவசமான ஈவு. நமது பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது அவர் நமது பாவங்களை மன்னிக்கிறார். நாம் நித்திய ஜீவனை அடைவோம். இது மட்டுமே வழி. வேறு வழி இல்லை. நன்மை செய்வதில் தவறில்லை. அது நல்லதுதான். ஆனால் நன்மை செய்வதினால் நித்திய ஜீவனை அடையலாம் என்று எண்ணக்கூடாது. (யோவான் 3:16-20; எபே 2:8-9; 1தீமோ 3:5; 1யோவான் 1:9; ரோமர் 10:9-10)

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு **(teacher)** (லூக்கா 9:38)

"நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா" - பூரண சற்குணனாய் இருக்க விரும்புகிறவர்கள் முதலாவதாக இந்த உலகத்தின்மீதுள்ள ஆசையை விட்டுவிட வேண்டும். உலக நீதியையும் விட்டுவிட வேண்டும்.

19 அதிகாரம்

நமது நம்பிக்கை தேவன்மீதும், அவருடைய நீதியின்மீதுமே இருக்க வேண்டும். இந்த உலகத்திலுள்ள நமது சம்பத்துக்கள் எல்லாவற்றையும் தேவையுள்ளோருக்குக் கொடுத்துவிட்டு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும்.

79. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (6:19; மாற்கு 10:23; லூக் 18:24)

மத் 19:23 அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 19:24 மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 19:25 அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு: அப்படியானால், யார் ரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள்.

மத் 19:26 இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.

"ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிது" - (லூக்கா 12:15, 18:24) அரிது என்றால் பிரவேசிக்க முடியாது என்று பொருளல்ல. பிரவேசிப்பது கடினம் என்றே பொருள்படும்.

"ஒட்டகம்" - தன் முதுகின்மீது சுமையான பாரத்தை ஏற்றியிருக்கும் ஒட்டகம்.

"ஊசியின் காது" - இது யூதருடைய வழக்குச்சொல். மிகவும் கடினமான செயல் அல்லது நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்னும் பொருளைத் தரும் வாக்கியம். பட்டணத்து மதில்களில் பெரிய வாயில்கள் இருக்கும். ஒவ்வொரு பெரிய வாயிலிலும் ஒரு சிறிய வாசல் இருக்கும். அதற்கு ஊசியின் காது என்று பெயர். அந்தச் சிறிய வாசல் வழியாகச் சுமையை ஏற்றிச்செல்லும் ஒட்டகம் நுழையும்போது மிகவும் சிரமப்பட்டுத்தான் உள்ளே போகும். ஒட்டகத்தின்மீதுள்ள சுமையை இறக்கி வைத்துவிட்டால், ஒரு வேளை அது குனிந்து, முழங்கால்படியிட்டு, தவழ்ந்து இந்த சிறிய வாசல் வழியாக உள்ளே போகமுடியும்.

தேவனுடைய ராஜ்யமும், பரலோகராஜ்யமும்

தேவனுடைய ராஜ்யம் என்பது இந்த உலகத்தின்மீதும் தேவனுடைய தெய்வீக அதிகாரத்தைக் குறிப்பிடும். இதில் பரலோக ராஜ்யமும் அடங்கும். வேதாகமத்தில் தேவனுடைய ராஜ்யம் என்னும் வாக்கியம் 70 இடங்களிலும், பரலோகராஜ்ஜியம் என்னும் வாக்கியம் 33 இடங்களிலும் வருகிறது. தேவனுடைய ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியே பரலோகராஜ்ஜியம். ஆகையினால் இவ்விரண்டிற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. ஆனாலும் இவ்விரண்டிற்குமிடையே சில வேற்றுமைகளும் உண்டு.

பரலோகராஜ்ஜியத்திற்கும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்

1. மேசியா ராஜாவாக இருக்கிறார்..............தேவன் ராஜாவாக இருக்கிறார் (யோவான் 18:37; வெளி 20:6) (1கொரி 15:28)

2. பரலோகத்திலிருந்து ஆளுகை செய்கிறார்......வானத்திலும் பூமியிலும் ஆளுகை செய்கிறார் (யோவான் 18:36; தானி 7:13) (சங் 103:19)

3. பூமியின்மீதும் மட்டும்.....பரலோகத்திலும் வானத்திலும் (யோவான் 18:37; வெளி 5:10) (1கொரி 15:28)

19 அதிகாரம்

4. வரையறைக்குட்பட்ட வாய்ப்புக்கள்...... வாய்ப்புக்களுக்கு வரையறையில்லை (சக 14:9) (வெளி 4:11; வெளி 5:11)

5. அரசியல் ரீதியானது......ஆவிக்குரியது (ஏசா 9:7; தானி 7:14) (ரோமர் 14:17)

6. வருங்காலத்திற்குரியது......கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலத்திற்குரியது (மத் 6:10; 2தீமோ 4:1) (சங் 90:2)

7. கிறிஸ்துவின்கீழ் ஆளுகை நடை பெறுகிறது......தேவனே சர்வ ஆளுநர் (சங் 103:19)(சங் 2:6;லூக்கா 1:32-33)

8. கிறிஸ்துவிற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது......கொடுக்கப்படவில்லை (சங் 10:16) (தானி 7:13-14; லூக்கா 1:32)

9. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் ஆரம்பமாகிறது......இப்பொழு து நடைபெறுகிறது (சங் 90:2) (சக 14; 2தீமோ 4:1)

10. பரலோகத்தின்கீழ் மட்டும்......எல்லா இடங்களிலும் (சங் 103:19) (தானி 7:27; வெளி 11:15)

11. பூமிக்குரிய யூதமுறைமை...... பரலோகத்திற்குரிய தேவமுறைமை (தானி 9:7; லூக்கா 1:33) (வெளி 5:11)

12. பூமியில்......எல்லா கிரகங்களிலும் (வெளி 11:15) (வெளி 5:13)

13. பூமிக்குரிய தலைநகரம்...... பரலோகத்திற்குரிய தலைநகரம் (தானி 2:3; சக 14) (எபி 12:22)

14. குறிப்பிட்ட வருஷத்திற்கு மட்டும்...... நித்தியகாலம் (2கொரி 15:24-28) (எபே 3:11)

15. துவக்கமுண்டு...... நித்தியமானது, முடிவில்லை (2தீமோ 4:1; மத் 6:10) (சங் 90:2)

16. இப்போது இரட்சிக்கப்படாதவர்கள் இருக்கிறார்கள்....இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே இருப்பார்கள் (மத் 13:38-50) (யோவான் 3:5)

17. வெளிப்படையான அடையாளங்களுடன் வரும்...... அமைதியாக வரும். (மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 1:14; சக 14:1-5; தானி 7:13-14; வெளி 19:11-21) (லூக்கா 17:20; ரோமர் 14:17; 1கொரி 4:20)

18. மாம்சமும், இரத்தமும் உடையவர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள்...... உயிர்த்தெழுந்த மகிமையடைந்த பரிசுத்தவான்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள் (சங் 37:11; மத் 5:5; மத் 25:34; தானி 7:18,28; எபே 4:3:7) (ரோமர் 8:17; 1கொரி 15:50-58; வெளி 21:7)

“மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்” - மனுஷனால் ஒரு ஏழையையோ அல்லது ஒரு ஐசுவரியவானையோ இரட்சிக்க முடியாது. ஆனால் தேவனால் இரு பிரிவினரையும் இரட்சிக்க முடியும். ஐசுவரியவான்களும் இரட்சிக்கப்படமுடியும். ஆயினும் அவர்களுக்கு இரட்சிப்பு கடினமாயிருக்கும். ஏனெனில் அவர்கள் தங்களுடைய இருதயங்களை உலக ஐசுவரியங்களின்மீது பதித்து வைத்திருப்பார்கள். உலக ஆடம்பரங்களை விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றி வருவது ஐசுவரியவான்களுக்குக் கடினமான காரியம். (கொலோ 3:1; 1தீமோ 6:9-10,17; 1யோவான் 2:15).

80. நித்திய இராஜ்ஜியத்தில் அப்போஸ்தலர்களுக்கு உரிய இடம் - (லூக் 22:28)

மத் 19:27 அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றார்.

19 அதிகாரம்

மத் 19:28 அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

தீர்க்கதரிசன எண் - 28

"மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசங்களின்மேல் வீற்றிருப்பீர்கள்...." (மத் 19:28-30) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. மத் 19:27 ஆவது வசனத்தில் பேதுரு அவரை நோக்கி: "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்" என்று ஒரு கேள்வி கேட்டான். இதற்குரிய பதில் மத் 19:28-30 ஆகிய வசனங்களிலும் மத் 20:1-16 ஆகிய வசனங்களிலும் உள்ளது.

மறுஜென்மம் (regeneration) - παλιγγενεσία - palingenesia - 3824

பெண்பால் பெயர்ச்சொல் - மறுஜென்மம் (renewing again, the restitution of all things) (தீத்து 3:5)

"மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது" - இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். (மத் 24:29-31; மத் 25: 31-46).

"என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசங்களின் மேல் வீற்றிருப்பீர்கள்" - இயேசு கிறிஸ்துவோடு அப்போஸ்தலர்களும், (லூக்கா 22:30) எல்லா பரிசுத்தவான்களும் (வெளி 20:4-6) ஆளுகை செய்வார்கள்.

81. முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்களுக்குவெகுமதிகள் - (மாற்கு 10:28; லூக் 18:28-30)

மத் 19:29 என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரி களையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது,நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்;

மத் 19:30 ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்.

"அவன் நூறத்தனையாய் அடைவான்" - (மாற்கு 10:30; லூக்கா 18:30)

"நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்" - (யோவான் 6:27)

"முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்" - (மத் 20:16)

20 அதிகாரம்

82. தாழ்மை - திராட்சைத்தோட்டத்து வேலையாட்களைப் பற்றிய உவமை

மத் 20:1 பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷருக்கு ஒப்பாயிருக்கிறது; அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான்.

மத் 20:2 வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி, அவர்களைத் தன் திராட்சத் தோட்டத்துக்கு அனுப்பினான்.

மத் 20:3 மூன்றாம் மணிவேளையிலும் அவன் புறப்பட்டுப்போய், கடைத்தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு:

மத் 20:4 நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான்; அவர்களும் போனார்கள்.

மத் 20:5 மறுபடியும், ஆறாம் ஒன்பதாம் மணிவேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான்.

மத் 20:6 பதினோராம் மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான்.

மத் 20:7 அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான்.

மத் 20:8 சாயங்காலத்தில், திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்தி வந்தவர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு என்றான்.

மத் 20:9 அப்பொழுது பதினோராம் மணிவேளையில் வேலையமர்த்தப் பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்.

மத் 20:10 முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்.

மத் 20:11 வாங்கிக்கொண்டு, வீட்டெஜமானை நோக்கி:

மத் 20:12 பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள்.

மத் 20:13 அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா?

மத் 20:14 உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டுபோ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்திவந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம்.

மத் 20:15 என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா: நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனா யிருக்கலாமா என்றான்.

மத் 20:16 இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

20 அதிகாரம்

உவமை எண் - 9

"பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷருக்கு ஒப்பாயிருக்கிறது" - (மத் 18:23) நம்மை நாமே தாழ்த்த வேண்டும். நமக்குத் தேவன் கொடுத்திருக்கும் ஆசீர்வாதத்தில் திருப்தியாக இருக்க வேண்டும் ஆகிய சத்தியங்கள் இந்த உவமையில் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. (மத் 19:29-30; மத் 20:16)

"அதிகாலை" - யூதருடைய முறைமையில் ஒரு நாளை அதிகாலை, மூன்றாம்மணி வேளை என்று சில பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அந்தப் பிரிவின் விவரம்.

அதிகாலை - 6.00 மணி - காலை

மூன்றாம்மணி வேளை - 9.00 மணி - காலை

ஆறாம்மணி வேளை - 12.00 மணி - மதியம்

ஒன்பதாம் மணிவேளை - 3.00 மணி - மாலை

பதினொறாம் மணிவேளை - 5.00 மணி - மாலை

பணம் (penny) - δηνάριον - **deenarion** - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

"கடைத்தெரு" - வேலையில்லாத மனுஷர் இங்கு கூடிவருவார்கள். வேலை கொடுப்பவர்கள் இங்கு வந்து தங்களுடைய வேலைக்குத் தேவையான ஆட்களைத் தெரிந்தெடுத்து, அழைத்துச் செல்வார்கள்.

"நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள்" - காலை 6.00 மணி வேளையில் மட்டுமே வேலை செய்வதற்கு ஒரு பணம் கூலி என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மற்ற நேரங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு "நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள்" என்றே கூறப்பட்டது. மத் 19:27 ஆவது வசனத்தில் பேதுருவின் கேள்விக்கு இந்த வசனம் பதில் கூறுகிறது.

"சாயங்காலம்" - மாலை 6.00 மணி. அந்த நாளுக்குரிய கூலி மாலை 6.00 மணி அளவில் எல்லா வேலையாட்களுக்கும் வழங்கப்படும். (லேவி 19:13; உபா 24:14-15)

"பதினோராம் மணிவேளை" - மாலை 5.00 மணிக்கு வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கும் ஒரு பணம் கூலியாகக் கொடுக்கப்பட்டது. (மத் 20:2) ஆனால் இவர்களுக்கு ஒரு பணம் கூலியாக கொடுக்கப்படும் என்று எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை. நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்று மட்டுமே கூறி இவர்களை வேலைக்கு அமர்த்தினார்கள்.

"முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள்" - மாலை 5.00 மணிக்கு வேலைக்கு வந்தவர்களுக்கு ஒரு பணம் கூலியாகக் கிடைத்தது. இவர்கள் அதிகாலையில் காலை 6.00 மணிக்கே வேலைக்கு வந்தவர்கள் ஆகையினால் தங்களுக்கு ஒரு பணத்தை விட அதிகமாகக் கூலி கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இவர்களுக்கும் ஒரு பணம் மட்டுமே கூலியாகக் கிடைத்தது.

"வீட்டெஜமானை நோக்கி.......... முறுமுறுத்தார்கள்" - ஒரு பணத்திற்கு வேலைக்கு வருவதாக இவர்கள் ஏற்கெனவே சம்மதித்திருந்தார்கள். ஆனால் இந்த ஒப்பந்தத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள். பிந்தி வந்தவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப் பட்டதினால் தங்களுக்கும் அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் வீட்டெஜமான் தான் ஏற்கெனவே கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பிரகாரம் அவர்களுக்கு ஆளுக்கு ஒரு பணம் மட்டுமே கொடுத்தான்.

20 அதிகாரம்

இதில் அவர்களுக்குத் திருப்தியில்லை. ஆகையினால் அவர்கள் வீட்டெஜமானனைப் பார்த்து "பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலைசெய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே" என்று முறுமுறுத்தார்கள்.

தீர்க்கதரிசன எண் - 29

"பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்" - ((மத் 20:16) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

"பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்" - மத் 20:15; மத் 19:30; மத் 23:12; லூக்கா 14:11 ஆகிய வசனங்கள் "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்னும் வசனத்தின் கருத்தோடு ஒத்திருக்கிறது. இந்த உவமைக்கு பல விளக்கங்கள் கொடுக்கிறார்கள்.

திராட்சைத்தோட்டம் - சபை

வேலைக்காரர்கள் - விசுவாசிகள்

வெவ்வேறு வேளைகள் - விசுவாசிகளின் திறமை, வயது மற்றும் பல வேற்றுமைகள்

ஒருபணம் கூலி - இரட்சிப்பு

இந்த உவமைக்கு வேதபண்டிதர்கள் வேறொரு வியாக்கியானமும் தருகிறார்கள். முந்தினோர் என்பது யூதர்களையும், பிந்தினோர் என்பது புறஜாதியாரையும் குறிக்கும் என்பது வேறொரு வியாக்கியானம்.

"அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" - எல்லோருமே இரட்சிக்கப்படுமாறு அழைக்கப் படுகிறார்கள். (மத் 11:28; யோவான் 3:16; வெளி 22:17) ஆனால் ஒருசிலர் மட்டுமே இரட்சிக்கப் படுகிறார்கள். (மத் 7:13-14; லூக்கா 13:23-30)

83. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21; மாற்கு 10:32; லூக் 18:31)

மத் 20:17 இயேசு எருசலேமுக்குப் போகும் போது, வழியிலே பன்னிரண்டு சீஷரையும் தனியே அழைத்து:

மத் 20:18 இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து,

மத் 20:19 அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 30

"இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" - (மத் 20:18-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் பாடுகளை அறிவிக்கக்கூடிய வசனம்.

20 அதிகாரம்

இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்து அனுபவிக்கப்போகிற பாடுகளை முன்னறிவிக்கிறது. மத் 16:21; மத் 17:22 ஆகிய வசனங்களில் பத்து பாடுகள் முன்னறிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்த வசனம் மேலும் நான்கு பாடுகளை முன்னறிவிக்கிறது.

1. அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படுவார்
2. அவரைப் பரியாசம் பண்ணுவார்கள்
3. அவரை வாரினால் அடிப்பார்கள்
4. அவரைச் சிலுவையில் அறைவார்கள்

"அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்" - இயேசு கிறிஸ்து பல பாடுகளை அனுபவித்து, சிலுவையில் மரித்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தப்பழி யூதர்களின்மீதும், புறஜாதியார் மீதும் சுமரும். (அப் 2:23,36; அப் 3:14-15; அப் 4:27)

"மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" - (லூக்கா 9:22)

84. யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச சுபாவம் - (மத் 18:1; மாற்கு 10:35)

மத் 20:20 அப்பொழுது செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடு கூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்துகொண்டு: உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றாள்.

மத் 20:21 அவர் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்: உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என்றாள்.

மத் 20:22 இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள். கூடும் என்றார்கள்.

மத் 20:23 அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்.

"செபெதேயுவின் குமாரருடைய தாய்" - சலோமே (மத் 27:56 - மாற்கு 15:40)

"உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும்" - சலோமே தன்னுடைய இரண்டு குமாரர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் உயர்ந்த இடம் வேண்டுமென்று விரும்புகிறாள். (மத் 20:21-22; மாற்கு 10:35). ராஜாக்களுடைய அரண்மனையில் விசேஷமானவர்களுக்கு இவ்வாறு உயர்ந்த ஆசனங்கள் கொடுக்கப்படும். (1இராஜா 2:19; சங் 45:9; சங் 80:17) ஆனால் இயேசு கிறிஸ்துவோ பிதாவின் வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். (மாற்கு 14:62; மாற்கு 16:19; அப் 2:34; எபி 1:3; எபி 12:2; 1பேதுரு 3:22)

"நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை" - இன்று அநேகர் இப்படித்தான் ஜெபம் பண்ணுகிறார்கள். தாங்கள் என்ன கேட்கிறோம் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசம். ஆனால் அவரிடமே போய் தன்னுடைய பிள்ளைகளை உயர்த்துமாறு இந்தத் தாய் கேட்கிறாள். (மத் 18:1-10; மத் 20:16; மத் 20:24-28; மத் 23:12; லூக்கா 22:24-27)

20 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பன்னிரெண்டு விதமான பாத்திரங்கள்

1. துன்மார்க்கன் மீதான நியாயத்தீர்ப்பான பாத்திரம் (சங் 11:6; சங் 73:10; சங் 75:8; எரே 49:12)
2. இரட்சிப்பு, ஆசீர்வாதத்தின் பாத்திரம் (சங் 16:5; சங் 23:5; சங் 116:13)
3. தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரம் (ஏசா 51:17-22; எரே 25:15-28; வெளி 14:10; வெளி 16:19)
4. தேற்றரவின் பாத்திரம் (எரே 16:7)
5. பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் (எரே 51:7; வெளி 18:6)
6. புறஜாதியர்களால், இஸ்ரவேல் மீதான அடக்குதலான பாத்திரம் (புல 4:21; எசே 23:31-33; ஆப 2:16; சக 12:2)
7. அசுத்தம், ஏமாற்றுதலின் பாத்திரம் (மத் 23:25-26; லூக்கா 11:39)
8. மேசியாவின் பாடுகளாகிய பாத்திரம் (மத் 20:22; மாற்கு 10:38; யோவான் 18:11)
9. மரணமாகிய பாத்திரம் - மேசியா சிலுவையில் மரிப்பதற்கு முன் தோட்டத்தில் இயேசுவை கொல்ல சாத்தான் முயற்சி பண்ணினான். (மத் 26:39,42; மாற்கு 14:36; லூக்கா 22:42)
10. கிறிஸ்துவின் இரத்தமாகிய போஜன விருந்தின் பாத்திரம் - ஆசீர்வாதத்தின் பாத்திரம் (மத் 26:27-28; மாற்கு 14:23; லூக்கா 22:20; 1கொரி 10:16,21; 1கொரி 11:25-28)
11. பேய்களுடைய பானபாத்திரம் - சாபத்தின் பாத்திரம் (1கொரி 10:21)
12. அசுத்தம் நிறைந்த பாத்திரம் (வெளி 17:4)

இவைதவிர, 21 இடங்களில் சாதாரண பாத்திரங்களைப் பற்றி குறிப்பு உள்ளது. (ஆதி 40:11-21; ஆதி 44:2,12-17; 2சாமு 12:3; 1இராஜா 7:26; 1நாளா 28:17; 2நாளா 4:5; நீதி 23:31; ஏசா 22:24; எரே 35:5; எரே 52:19; மத் 10:42; மாற்கு 7:4-8; மாற்கு 9:41)

"நான் பெறும் ஸ்நானம்" - ஆவியானவரின் ஞானஸ்நானம். (ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2; மத் 3:16; மத் 12:28; லூக்கா 3:21; லூக்கா 4:18; யோவான் 1:31-33; யோவான் 3:34; அப் 10:38) இந்த வாக்கியம் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்காது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து இனிமேல் பல பாடுகள் வழியாகக் கடந்து செல்வார். அது பாடுகளின் ஞானஸ்நானம். (லூக்கா 12:50) இந்த வாக்கியம் பாடுகளின் ஞானஸ்நானத்தையும் குறிக்காது.

"அவர்கள். கூடும் என்றார்கள்" - அந்தஸ்திற்காகவும், சுய பெருமைக்காகவும், சுய கௌரவத்திற்காகவும் தங்களால் கூடுமென்று இக்காலத்தில் அநேகர் கூறுகிறார்கள். இதேபோலத்தான் அன்று சீஷர்கள் கூறினார்கள்.

தீர்க்கதரிசன எண் - 31

"என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல" (மத் 20:23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"பிதாவினால் ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிறது" - குமாரனுக்கு இல்லாத ஒரு சில உரிமைகள் பிதாவிற்கு உண்டு. (மாற்கு 13:32; அப் 1:7; யோவான் 8:28)

20 அதிகாரம்

85. மற்ற பத்துப் பேரின் மாம்ச சுபாவம் - (மத் 18:1; மாற்கு 10:41)

மத் 20:24 மற்றப் பத்துப்பேரும் அதைக் கேட்டு, அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள்.

மத் 20:25 அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

மத் 20:26 உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக் கடவன்.

மத் 20:27 உங்களில் எவனாகிலும் முதன்மையானவனா யிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

மத் 20:28 அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

"மற்றப் பத்துப்பேரும் அதைக் கேட்டு, அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள்" - சகோதரர் மத்தியில் எரிச்சலையும், விரோதத்தையும், கோபத்தையும், பொறாமையையும் உண்டாக்குவது சாத்தானுடைய கிரியை. இதுவரையிலும் சீஷர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள். இப்போது பத்து சீஷர்களுக்கு இரண்டு சீஷர்கள்மீது எரிச்சல் வந்துவிட்டது. சாத்தான் அப்போஸ்தல ஊழியத்தின் ஒற்றுமையைப் பிளவுபடுத்தப் பார்க்கிறான்.

"புறஜாதியாருடைய அதிகாரிகள் இறுமாப்பாய் ஆளுகிறார்கள்" - புறஜாதியாருடைய அதிகாரிகள் கொடுமைப்படுத்துவார்கள். சர்வாதிகாரிபோல நடந்துகொள்வார்கள். இவை பரிசுத்த ஆவியானவரின் கிரியை அல்ல. (பிலி 2:1-2; 1பேதுரு 5:1-9)

"உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கடவன்" - தேவனுடைய ராஜ்ஜியத்தில் இது மிகவும் முக்கியமான உபதேசம். எக்காலத்திற்கும் பொருந்தும் உபதேசம்.

"பணிவிடைக்காரன்" - ஒருவருடைய கட்டளையை நிறைவேற்றுகிறவன். பல்வேறு பணிவிடைக்காரர்களைப் பற்றி நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

1. இராஜாவின் பணிவிடைக்காரர்கள் (மத் 22:13)
2. பந்திகளில் பணிவிடைக்காரர்கள் (யோவான் 2:5,9)
3. அரசாங்கத்து அதிகாரிகள் (ரோமர் 13:4)
4. சபைகளில் சேவைபுரிகிறவர்கள் (மத் 23:11; மாற்கு 9:35; ரோமர் 16:1)
5. சபையின் மூப்பர்கள் (பிலி 1:1; 1தீமோ 3:10-13; அப் 6:1-7)
6. ஊழியம் செய்யும் இயேசு கிறிஸ்து (ரோமர் 15:8; கலா 2:17; மத் 4:23-24; மத் 9:35; அப் 10:38)
7. சபைகளின் ஊழியக்காரர்கள் (மத் 20:26; மாற்கு 10:43)
8. சுவிசேஷப் பிரசங்கியார்கள் (1கொரி 3:5; 2கொரி 3:6; எபே 3:7; கொலோ 1:23,25; 1தெச 3:2)
9. தேவனுடைய ஊழியக்காரர்கள் (யோவான் 12:26; 2கொரி 6:4-10; 2கொரி 11:23; எபே 6:21; கொலோ 1:7; கொலோ 4:7; 1தீமோ 4:6)

20 அதிகாரம்

10. சாத்தானுடைய ஊழியக்காரர்கள் (2கொரி 11:15)

பணிவிடைக்காரன் (minister) - **διάκονος - diakonos** - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பணிவிடைக்காரன், ஊழியக்காரன், வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவர், உதவிக்காரர்

"ஊழியக்காரன்" - மற்றவருடைய சித்தத்திற்குத் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டவன். வேதாகமத்தில் பல்வேறு ஊழியக்காரர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது இதன்பொருள் சுயாதீன அடிமை என்பதாகும்.

1. மனுஷருடைய அடிமைகள் (கலா 3:28; எபே 6:8; கொலோ 3:11; வெளி 6:15)
2. இராஜாவின் வேலைக்காரர்கள் (மத் 18:23-26; மத் 23:1-14, லூக்கா 15:17-22)
3. அதிகாரிகள் (யோவான் 18:18)
4. பாவத்திற்கு அடிமையாக இருக்கும் பாவிகள் (யோவான் 8:34; ரோமர் 6:16-22; 2பேதுரு 2:19)
5. கிறிஸ்துவின் சீஷர்கள் (மத் 10:24-25; ரோமர் 6:16-22; வெளி 19:5)
6. தேவனுடைய ஊழியக்காரரான கிறிஸ்து (பிலி 2:7; ஏசா 42:1; ஏசா 52:11)
7. மோசேயும், எல்லாத் தீர்க்கதரிசிகளும் (எபி 3:5; வெளி 10:7; வெளி 11:18; வெளி 15:3)
8. எல்லா ஊழியக்காரர்களும், மூப்பர்களும் (மத் 20:27; மாற்கு 10:44; ரோமர் 1:1; கலா 1:10; யாக் 1:1; 2பேதுரு 1:1; யூதா 1:1)

ஊழியக்காரன் (servant) - **δοῦλος - doulos** - 1401

பெயரடை - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற

ஒருவர் தேவனுடைய ஊழியக்காரராக இருந்தாலும் பணிவிடைக்காரராக இருந்தாலும் அவர் தன்னைத் தானே தாழ்த்தி கிறிஸ்துவிற்காக ஊழியம் செய்ய வேண்டும். தேவனுடைய பிள்ளைகளை அதிகாரம் செலுத்தக்கூடாது. தேவ அன்போடும், மனதுருக்கத்தோடும், தேவனுடைய பிள்ளைகளுக்கு ஊழியம் செய்ய வேண்டும். (1பேதுரு 5:1-9, மாற்கு 9:35)

தீர்க்கதரிசன எண் - 32

"மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" - (மத் 20:28) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மீட்கும் பொருள் (ransom) - **λύτρον - lytron** - 3083

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மீட்கும் பொருள் **(redeeming price of man)**

இயேசு கிறிஸ்து நம்மை மீட்பதற்காக மீட்பின் கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். இதனால் நாம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிற காரியங்களிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம்.

1. மரணம் (யாத் 21:30; சங் 49:7-9; ஓசி 13:14; 1கொரி 15:51-58)
2. வியாதி (யாத் 30:12-16; யோபு 33:14-30; 2கொரி 6:19)
3. பாவம் (மத் 20:28; மத் 26:28; மாற்கு 10:45; 1பேதுரு 2:24; எபே 1:7)
4. சத்துரு (எரே 31:11; ஏசா 35:10; ஏசா 51:10; 1தீமோ 2:6)

20 அதிகாரம்

"அநேகர்" - இயேசு கிறிஸ்து அநேகரை மீட்கும்படியாக அவரே மீட்கும்பொருளானார். (ஏசா 53; மத் 26:28; யோவான் 6:51; யோவான் 10:11,15; யோவான் 11:50-52; ரோமர் 4:25; ரோமர் 5: 6-11; ரோமர் 14:15; 1கொரி 5:7; 1கொரி 8:11; 1கொரி 15:3; 2கொரி 5:14-21; கலா 1:4; கலா 2:20-21; எபே 5:2,25; 1தெச 5:9; 1தீமோ 2:6; எபி 2:9-18; எபி 9:15,16,28; எபி 10:5-23; 1பேதுரு 2:21-24; 1பேதுரு 3:18; 1பேதுரு 4:1; 1யோவான் 3:16; வெளி 5:8-10)

இரட்சிப்பின் உபதேசம்

ஒருவர் நியாயப்பிரமாணத்தை மீறும்போது அவர் பாவம் செய்கிறார். பாவத்தின் சம்பளம் மரணம். தாம் செய்த பாவத்தின் நிமித்தமாக அவர் மரணம் அடையவேண்டும். இதிலிருந்து இந்த நபர் தனது சொந்த முயற்சியினால் விடுதலை பெற முடியாது. ஆகையினால் தனது விடுதலைக்காக உதவி செய்யக்கூடிய ஒருவருடைய தயவு அவருக்குத் தேவைப்படுகிறது. அவ்வாறு இந்தப் பாவியை மீட்கக்கூடியவரையே இரட்சகர் என்கிறோம். தன் பாவத்திலிருந்து இந்தப் பாவி மீட்கப்படுவது இரட்சிப்பு எனப்படுகிறது.

பாவியை மீட்பதற்காக இரட்சகர் கிரயம் செலுத்த வேண்டும். இது இரட்சிப்பின் கிரயம் அல்லது மீட்கும் பொருள் (ransom) எனப்படுகிறது. நியாயப்பிரமாணத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற கிரயத்தைச் செலுத்த வேண்டும்.

சாத்தான் மனுஷனைத் தேவனுக்கு எதிராகக் கலகம்பண்ண வைத்தான். இதன்மூலமாக மனுஷன் தேவனுடைய பிரமாணத்தை மீறினான். இதற்காக பாவத்தின் சம்பளமாக மரணதண்டனை அவனுக்குக் கொடுக்கப்பட்டது. மரணதண்டனை அனுபவிக்கும் மனுஷனால் இந்தத் தண்டனையிலிருந்து விடுதலை பெறுவதற்குத் தேவையான கிரயத்தைச் செலுத்த முடியாது. பாவத்திலிருந்து அவனால் விடுதலை பெற்றுசந்தோஷமாக வாழமுடியாது.

தேவன் எந்த நோக்கத்திற்காக மனுஷனைச் சிருஷ்டித்தாரோ அந்த நோக்கம் மனுஷனில் நிறைவேறவில்லை. தேவனே தமது தயவினாலும், தெய்வீகத் திட்டத்தினாலும் இவனுடைய பாவத்திலிருந்து இவனை மீட்க வேண்டும்.

பாவத்தில் விழுந்துவிட்ட மனுஷனை மீட்பதற்காக தேவன் தெய்வீகத் திட்டம் ஒன்றை வைத்திருக்கிறார். தேவனோடு மனுஷன் ஒப்புரவாவதற்கு ஓர் உபாயத்தை உண்டுபண்ணியிருக்கிறார். இதன் மூலமாக தேவனுடைய பரிசுத்தமும், நியாயப்பிரமாணமும் எதிர்பார்க்கும் நிபந்தனைகளை தேவதயவினால் மனுஷனால் நிறைவேற்ற முடிகிறது.

மனுஷனை மீட்பதற்காகத் தேவன் தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவர் மனுக்குலத்தின் பாவத்திற்காக மரித்தார். மூன்றாம்நாளில் தேவன் இயேசு கிறிஸ்துவை உயிரோடு எழுப்பினார். இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண மரணத்தின் மூலமாக மனுஷனுக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது.

பாவநிவாரண பலிக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. பழைய ஏற்பாட்டின் எல்லா பலிகளும். (எபி 9:7-28; எபி 10:5-23; எபி 11:4; ஆதி 22:8-13; யாத் 12:3; லேவி 1:4; லேவி 16:21-22)
2. முதலாவது பிறந்த பிள்ளைகளுக்காக லேவியர்கள் (எண் 3:12,41,45; எண் 8:18)
3. பெனாதாத்திற்காக ஆகாப் (1இராஜா 20:42)
4. இயேசு கிறிஸ்து

86. இயேசு இரண்டு குருடரை சொஸ்தமாக்குகிறார் - (9:27; மாற்கு 10:46; லூக் 18:35)

மத் 20:29 அவர்கள் எரிகோவிலி ருந்து புறப்பட்டுப்போகையில், திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

மத்தேயு - தொகுப்புரை

20 அதிகாரம்

மத் 20:30 அப்பொழுது வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர், இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

மத் 20:31 அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள். அவர்களோ: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்.

மத் 20:32 இயேசு நின்று, அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து: நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றார்.

மத் 20:33 அதற்கு அவர்கள்: ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்றார்கள்.

மத் 20:34 இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.

21 அதிகாரம்

87. வெற்றிப்பவனி - (மாற்கு 11:1; லூக் 19:28; யோவான் 12:12;சக 9:9)

மத் 21:1 அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது, இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி:

மத் 21:2 உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள்.

மத் 21:3 ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்.

மத் 21:4 இதோ, உன் ராஜா சாந்த குணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று,

மத் 21:5 தீர்க்கதரிசியினால் உரைக்கப் பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.

மத் 21:6 சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து,

மத் 21:7 கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை ஏற்றினார்கள்.

மத் 21:8 திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்.

மத் 21:9 முன் நடப்பாரும் பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

மத் 21:10 அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார்? என்று விசாரித்தார்கள்.

மத் 21:11 அதற்கு ஜனங்கள்: இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்கள்.

"அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்தார்கள்" - இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு இரண்டு முறை வந்தார். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற காரியம் மாற்கு 11:1-3; லூக்கா 19:28-31; யோவான் 12:12-15 ஆகிய வசனங்களுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்றது.

"பெத்பகேயு" - அத்திப்பழங்களின் வீடு என்று பொருள். பெத்தானியாவிலிருந்து எருசலேம் செல்லும் பாதையில் ஒருமைல் தூரத்தில் உள்ள பட்டணம்.

தீர்க்கதரிசன எண் - 33

"உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான்" (மத் 21:2-3) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 14

"உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்" - (மத் 21:4; சக 9:9)

21 அதிகாரம்

"திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்" - வஸ்திரங்களை வழியில் விரிப்பதும், மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்புவதும் யுத்தகாலத்தில் வெற்றி பெற்ற இராஜாவிற்கும், அவனுடைய சேனைக்கும் கொடுக்கப்படும் வரவேற்பு. ஜனங்கள் இராஜாவையும், அவனுடைய வெற்றியையும் கொண்டாடும் விதமாக இவ்வாறு செய்வது வழக்கம்.(2 இராஜா 9:13)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 15

"தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா" - (சங் 118:25-26; மத் 21:9)

ஓசன்னா என்பது எபிரெயச்சொல். இதற்கு இரட்சியும், இப்பொழுது உதவி புரியும் என்று பொருள். கூடாரப்பண்டிகை ஏழுநாட்கள் அனுசரிக்கப்படும். அப்பொழுது அனுதினமும் ஒருமுறை "ஓசன்னா" என்று ஜனங்கள் கூறுவார்கள். பலிபீடத்தைச் சுற்றிலும் ஜனங்கள் மரக்கிளைகளைக் கைகளில் ஏந்திய பிரகாரமாக சுற்றி வந்து "ஓசன்னா" என்று கூறுவார்கள். இவ்வாறு ஏழு நாட்களுக்குத் தினமும் ஒருமுறை சுற்றிவருவார்கள். எட்டாவது நாளில் ஜனங்கள் ஏழு முறை பலிபீடத்தைச் சுற்றுவார்கள். அது "மஹா ஓசன்னா" என்று அழைக்கப்படுகிறது. இந்த வசனத்தில் ஜனங்கள் ஓசன்னா என்று ஓலமிடுகிறார்கள். தங்கள் விரோதிகளிடமிருந்து இயேசு கிறிஸ்து தங்களை இரட்சிப்பார் என்று எதிர்பார்த்து, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா" என்று ஆர்ப்பரித்தார்கள். ஆனால் இதே ஜனங்கள் ஐந்து நாட்களுக்குப் பின்பு "இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையும்" என்று ஆர்ப்பரித்தார்கள்.

ஆச்சரியப்படு (moved) - σείω - seioo - 4579

வினைச்சொல் - அதிர், திடுக்கிடு, அசையப்பண்ணு, அசைக்கப்படு (be agitated) அதிர்ச்சி (quake) (மத் 27:51) குலுக்கு shake (மத் 28:4; எபி 12:26; வெளி 6:13)

"இவர் யார்?" - என்று விசாரித்தார்கள். இந்தக் கேள்விக்கு அவர்களுக்குப் பதில் தெரிந்திருந்தால் சிலுவையில் மரிக்கப்போகிறவர் இவர்தான் என்பதைப் புரிந்திருப்பார்கள்.

88. தேவாலயத்தின் சுத்திகரிப்பு - (மாற்கு 11:15; லூக் 19:45)

மத் 21:12 இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து:

மத் 21:13 என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.

மத் 21:14 அப்பொழுது, குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

மத் 21:15 அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்து,

மத் 21:16 அவரை நோக்கி: இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்.

21 அதிகாரம்

"காசுக்காரர்" - ஆதார் மாதம் (Adar) (மார்ச் மாதம்) பதினைந்தாம் தேதி ஒவ்வொரு யூதரும் தேவாலயத்திற்கு வரிப்பணம் செலுத்த வேண்டும். (மத் 17:24-27) ஒவ்வொரு பட்டணத்திலும் இந்த வரியை வசூலிப்பதற்கு ஆயக்காரர்கள் இருப்பார்கள். பண்டிகைக்குப் பலதேசங்களிலிருந்து யூதர்கள் வருவார்கள். அந்தந்த தேசங்களிலிருந்து கொண்டுவரும் பணத்தை யூதருடைய பணமாக மாற்றித் தருகிறவர்கள் "காசுக்காரர்" என அழைக்கப்பட்டார்கள். புறதேசத்துக் காசுகளில் புறஜாதி தெய்வங்களின் உருவங்கள் பதிக்கப்பட்டிருக்கும். ஆகையினால் அவற்றை யூதர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அந்தக் காசுகளைக் கொடுத்து யூதருடைய நாணயமாக கட்டாயம் மாற்றியே ஆகவேண்டும். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் காசுக்காரர்கள் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள்.

"புறா விற்கிறவர்கள்" - புறாக்களைக் காணிக்கையாக செலுத்தும் வழக்கம் இருந்தது. (லேவி 14:22) தேவாலயத்தில் புறாக்களை விற்கிறவர்கள் இருந்தார்கள்.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 16

"என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும்" - (ஏசா 56:7; எரே 7:11; மத் 21:13)

"அவர்களைச் சொஸ்தமாக்கினார்" - தேவாலயத்தில் யூததேசத்து ஜனங்களும், புறதேசத்து ஜனங்களும் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு நடுவே இயேசு கிறிஸ்து தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தினார். தாமே மேசியா என்பதை வலியுறுத்து வதற்காக இந்த அற்புதங்களை யெல்லாம் செய்தார். தேவாலயத்தில் தவறான காரியங்கள் நடக்கக்கூடாது என்பதை ஜனங்களுக்குக் காண்பிப்பதற்காகக் காசுக்காரர் களையெல்லாம் துரத்தினார். அதேசமயத்தில் தேவனுடைய ஆலயத்தில் தெய்வீக வல்லமை வெளிப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இயேசு கிறிஸ்து குருடர்களையும், சப்பாணிகளையும் சொஸ்தமாக்கினார்.

"அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்தார்கள்" - இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களை அவருடைய சத்துருக்கள் கண்டார்கள். யூதர்கள் மேசியாவை மறுதலிக்கப்போகிறார்கள். (லூக்கா 19:41-44) இது மிகப்பெரிய பாவம். இந்தப் பாவத்தை யூதர்கள் சீக்கிரமாகவே செய்யப்போகிறார்கள். இயேசு கிறிஸ்து செய்த இந்த அற்புதம் தாமே மேசியா என்பதை இஸ்ரவேலருக்குக் காண்பிப்பதற்காக அவர் எடுத்துக் கொண்ட கடைசி முயற்சி.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 17

"குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்"-(சங் 8:2; மத் 21:16)

89. கனிகொடாத அத்திமரத்தை இயேசு சபிக்கிறார் - (மாற்கு 11:12; லூக் 13:6)

மத் 21:17 அவர்களை விட்டு நகரத்திலிருந்து புறப்பட்டு, பெத்தானியாவுக்குப் போய், அங்கே இராத்தங்கினார்.

மத் 21:18 காலையிலே அவர் நகரத்துக்குத் திரும்பி வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று.

மத் 21:19 அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதினிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று.

மத் 21:20 சீஷர்கள் அதைக் கண்டு: இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப்போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.

"பெத்தானியாவுக்குப் போனார்" - தேவன் தெரிந்தெடுத்த இடத்திற்கு மட்டுமே இயேசு கிறிஸ்து போனார். (1இராஜா 9:3; 2இராஜா 21:7)

"அங்கு இராத்தங்கினார்" - ஒருவேளை லாசருவோடு தங்கியிருந்திருக்கலாம். அங்கு அவர் ஓய்வுநாளை ஆசரித்திருக்கலாம்.

"காலையிலே" - பெத்தானியாவில் ஓய்வுநாளுக்குப் பின்பு. (மத் 21:17; யோவான் 12:1-11)

"அவர் நகரத்துக்குத் திரும்பி வருகையில்" - எருசலேமிற்கு இரண்டாம் முறையாக வருகிறார். (லூக்கா 19:45)

21 அதிகாரம்

"அவருக்குப் பசியுண்டாயிற்று" - இயேசு கிறிஸ்துவின் மனுஷ தத்துவத்திற்கு அடையாளம். (மத் 4:2; மத் 21:18; மாற்கு 2:25; மாற்கு 11:12; லூக்கா 4:2)

"அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்" - அத்திப்பழங்களைப் பறிக்கவில்லையென்றால் இரண்டு பழக்காலங்களுக்கு நடுவில்கூட அத்திமரத்தில் அத்திப்பழங்கள் இருக்கும். (மாற்கு 11:13)

"இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது" - விசுவாசத்தினால் என்ன செய்ய முடியும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. (மத் 17:20; மாற்கு 11:23)

"உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று" - பட்டுப்போன அத்திமரத்தை மறுநாள் கண்டுபிடித்தார்கள். (மாற்கு 11:20) தாம் சொன்னதைச் செய்யக்கூடிய வல்லமை கிறிஸ்துவிற்கு உண்டு. விசுவாசிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்து இந்த வல்லமையை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். (மத் 21:21-22; மாற்கு 11:22-24; யோவான் 14:1-15; யோவான் 15:7,16)

90. சந்தேகப்படாமல் விசுவாச முள்ளவர்களாக இருக்க வேண்டும் - (மாற்கு 11:20; எபி 11:6; யாக் 1:5; மத் 17:20)

மத் 21:21 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர் களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்கு செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 21:22 மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.

"நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால்" - மூன்று இடங்களில் இந்தக் காரியம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. (மத் 17:20; மத் 21:21; மாற்கு 11:23; லூக்கா 17:6) பொதுவாக நமக்கு மலையை அகற்றக்கூடிய தேவையோ அல்லது மரங்களைச் சபிக்கக்கூடிய தேவையோ இருக்காது. ஆனாலும் நம்மிடம் சந்தேகப்படாத விசுவாசம் வேண்டும். விசுவாசம் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும். (மத் 17:20; மாற்கு 9:23; 1கொரி 13:2)

"இந்த மலை" - ஒருவேளை இது ஒலிவமலையாக இருக்கலாம். இயேசு கிறிஸ்து தமது கடைசி நாட்களில் அனுதினமும் இந்த மலையின் வழியாக நடந்துபோனார். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையோடு தொடர்புபடுத்தி 12 இடங்களில் இந்த மலை குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மத் 21:1; மத் 24:3; மத் 26:30; மாற்கு 11:1; மாற்கு 13:3; மாற்கு 14:26; லூக்கா 19:29,37; லூக்கா 21:37; லூக்கா 22:39;யோவான் 8:1) இயேசு கிறிஸ்து பரமேறிய மலையும் இதுதான். (அப் 1:12) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம்வருகையின் போது சகரியா 14:4-இல் ஒலிவமலையைப் பற்றி நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம். அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்". ஒலிவமலை எருசலேமின் கிழக்குப் பகுதியில் இருக்கிறது. இதன் வழியாக கிழக்கு தேசத்திலிருந்து பெரும்பாதை செல்கிறது. ஒலிவமலைக்கு "நாசமலை" **(Mount of Corruption)** (2இராஜா 23:13) என்னும் மறுபெயரும் உண்டு.

"இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும்" - ஒரு விசுவாசி தேவனிடத்தில் விசுவாசமாக இருக்கும்பொழுது அவருடைய விசுவாச வார்த்தைக்கு அதிக வல்லமை உண்டு. தேவனும் அவர் மூலமாக கிரியை நடப்பிப்பார்.

21 அதிகாரம்

தேவனிடம் ஜெபத்திலே கேட்க வேண்டிய காரியங்கள்

1. தேவனுடைய உதவி (2நாளா 20:4)
2. வரப்போகிற காரியங்கள் (ஏசா 45:11)
3. பழைய வழிகள் (எரே 6:16)
4. ஆவிக்குரிய மழை (சக 10:1)
5. தேவைகள் (சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; மத் 6:8)
6. நற்காரியங்கள் (மத் 7:7-11)
7. எதையாகிலும் (மத் 18:19; யோவான் 14:14; 1யோவான் 5:14)
8. எதுவும் (மத் 21:22; யோவான் 14:13; யோவான் 15:16; யோவான் 16:23; 1யோவான் 3:22)
9. பரிசுத்த ஆவியானவர் (லூக்கா 11:9-13)
10. உமக்குச் சித்தமானது (மாற்கு 11:24; யோவான் 15:7)
11. ஞானம் (யாக் 1:5-8)
12. ஜீவன் (1யோவான் 5:16)

91. இயேசுவின் அதிகாரத்தை குறித்துக் கேட்கப்பட்ட கேள்வி - (மாற்கு 11:27; லூக் 20:1)

மத் 21:23 அவர் தேவாலயத்தில் வந்து, உபதேசம் பண்ணுகையில், பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து: நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? என்று கேட்டார்கள்.

மத் 21:24 இயேசு பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்லுவீர்களானால், நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன்.

மத் 21:25 யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேட்டார். அதற்கு அவர்கள்: தேவனால் உண்டாயிற்றென்றுசொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்க வில்லை என்று நம்மைக் கேட்பார்;

மத் 21:26 மனுஷரால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்படுகிறோம், எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று, தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணி,

மத் 21:27 இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக:எங்களுக்குத்தெரியாது என்றார்கள். அப்பொழுது, அவர்: நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்.

"அவர் தேவாலயத்தில் வந்து, உபதேசம் பண்ணுகையில், பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்தார்கள்" - இவர்கள் இயேசுவிடம் தவறான நோக்கத்தில் வந்தார்கள். இப்பேர்ப்பட்ட நோக்கத்தோடு மனுஷர் யாரும் இயேசு கிறிஸ்துவிடம் வரக்கூடாது. (மத் 11:28-30)

"எங்களுக்குத் தெரியாது" - பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசு கிறிஸ்துவின் கேள்விக்கு இவ்வாறு பதில் கூறினார்கள். பொய் சொன்னார்கள். ஆகையினால், இயேசு கிறிஸ்து இவர்களுக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை. யோவான் ஸ்நானனை இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாக ஏற்றுக் கொண்டால் இயேசு கிறிஸ்துவையும் மேசியாவாக ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் வரும். ஆகையினால் அவர்கள் இந்தப் பிரச்சனையில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை.

92. இரண்டு குமாரர்களைப் பற்றிய உவமை -

மத் 21:28 ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலைசெய் என்றான்.

21 அதிகாரம்

மத் 21:29 அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்.

மத் 21:30 இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை.

மத் 21:31 இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 21:32 ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார்.

உவமை எண் - 10

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்" - இந்த உவமை இரண்டு குமாரர்களைப் பற்றியது. பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் சுய நீதி யுடையவர்கள். மார்க்கச்சடங்குகளில் தேறின வர்கள். ஆயினும் இவர்களுக்கு முன்பாகவே பாவிகள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 21:23,31)

"மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப்போனான்" - இந்த வசனம் பாவிகளைக் குறிக்கிறது. இவர்கள் சத்தியத்தை முதலாவது ஏற்க மறுக்கிறார்கள். ஆயினும் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டு மனந்திரும்பி பின்பு தேவனுடைய சித்தத்தைச் செய்கிறார்கள். (மத் 21:31)

"போகிறேன் ஐயா, என்று சொல்லி யும்,போகவில்லை" - இது மாயக்காரரைக் குறிக்கிறது. பரிசேயர்கள் சுயநீதியுடையவர்கள். தேவனுக்காக எல்லாவற்றையும் செய்வோம் என்கிறார்கள். ஆனால் அவருக்காக இவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்கள். (மத் 21:31)

தீர்க்கதரிசன எண் - 34

"ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள்" - (மத் 21:31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மத் 21:28-30 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற உவமையின் விளக்கம் இதுதான்.

"ஆயக்காரர்" - (மத் 5:46)

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 19:24)

"யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தான்" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் யோவான் ஸ்நானன் 24 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறான். (மத் 3:1-14; மத் 4:12; மத் 9:14; மத் 11:2-18; மத் 14:1-10; மத் 16:14; மத் 17:13; மத் 21:25-32)

"நீதிமார்க்கம்" - நீதியை அறிவித்து இயேசு கிறிஸ்துவிற்கு வழியை ஆயத்தம் பண்ணும் மார்க்கம். (மத் 3:3-15; மத் 14:4; லூக்கா 1:15-17; லூக்கா 3:1-18)

93. வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (மாற்கு 12:1; லூக் 20:9)

மத் 21:33 வேறொரு உவமையைக் கேளுங்கள்: வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்.

மத் 21:34 கனிகாலம் சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கிக்கொண்டு வரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்.

21 அதிகாரம்

மத் 21:35 தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப் பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனைக் கொலைசெய்து, ஒருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

மத் 21:36 பின்னும் அவன் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களையும் அப்படியே செய்தார்கள்.

மத் 21:37 கடைசியிலே அவன்: என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

மத் 21:38 தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி; இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக் கொள்வோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு;

மத் 21:39 அவனைப் பிடித்துத் திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்.

மத் 21:40 அப்படியிருக்க, திராட்சத் தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான் என்று கேட்டார்.

மத் 21:41 அதற்கு அவர்கள்: அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக் காரரிடத்தில் திராட்சத் தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள்.

மத் 21:42 இயேசு அவர்களை நோக்கி: வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?

மத் 21:43 ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.

மத் 21:44 இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 21:45 பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து,

மத் 21:46 அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசியென்று எண்ணின படியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்.

உவமை எண் - 11

“வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான்” - தேவனுடைய இராஜ்யத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் ஊழியத்தைக் கர்த்தர் யூதரிடம் ஒப்படைந்திருந்தார். ஆனால் அவர்கள் அதைச் சரியானபடி செய்யவில்லை. ஆகையினால், அந்த ஊழியத்தைத் தேவன் அவர்களிடமிருந்து எடுத்து புறஜாதியாரிடம் கொடுத்துவிட்டார். (மத் 21:43-46) இந்த வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உவமை இந்தக் கருத்தையே வெளிப்படுத்துகிறது.

“கோபுரம்” - காவல்காரர்கள் காவல்காக்கும் உயர்ந்த மேடை (ஏசா 1:8; ஏசா 5:2)

“குத்தகை” - குத்தகைக்கு விடுவது மூன்று வகைப்படும். அவையாவன:

1. வேலையாட்களுக்கு விளைச்சலில் ஒரு பகுதி கொடுக்கப்படும்.
2. வேலையாட்களுக்கு சம்பளம் பணமாகக் கொடுக்கப்படும்.
3. எஜமானுக்கு விளைச்சலில் ஒரு பகுதி பொருளாகவோ அல்லது பணமாகவோ கொடுக்கப்படும்.

21 அதிகாரம்

குத்தகை ஒவ்வொரு வருஷமும் விடப்படலாம். சில குத்தகை ஆயுட்காலத் திற்கும் உரியது. சில குத்தகை பரம்பரை பரம்பரையாகத் தொடரும்.இந்த வசனங்களில் கூறப்பட்டிருக்கிற குத்தகை யானது பரம்பரையாகத் தொடர்ந்து வருகிறது.

“அதற்கு அவர்கள்: அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக் காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள்” - இவர்கள் கூறிய பதில் இந்த உவமையை அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்கள் என்பதைக் காண்பிக்கிறது. தேவன் இந்தப் பூமிக்குத் தம்முடைய ஊழியக்காரர்களில் பலரை அனுப்பினார். யூதர்கள் அவர்களைக் கொன்றுபோட்டார்கள். கடைசியாகத் தேவன் தமது ஒரேபேறான இயேசு கிறிஸ்துவையே அனுப்பினார். இந்த உவமையின் பிரகாரம் அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் கொன்று போடுவார்கள் என்பது தெரியவருகிறது. வீட்டெஜமான் தோட்டக்காரரை அழித்துப் போடுவார். அதோடு ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பார். (மத் 21:42-46)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 18

“வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று” -(சங் 118:22,மத் 21:42) இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். யூதர்கள் அவரை ஆகாதவர்கள் என்று தள்ளிவிட்டார்கள். அதன்பின்பு, அவரைத் தங்கள் மேசியா என்று ஏற்றுக்கொள்வார்கள்.(மத் 23:37-39; ரோமர் 11:25-29)

“அது கர்த்தராலே ஆயிற்று” - இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் கர்த்தர் முன்னறிந்து இருந்தார். இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தைக் கர்த்தரே ஆளுகை செய்கிறார். (யோவான் 3:16; ரோமர் 8:32)

“அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது” - கர்த்தருடைய மீட்பின் திட்டம் மிகவும் ஆச்சரியமானது. (ரோமர் 11:33; எபே 3:16-19; 1பேதுரு1:10-12)

தீர்க்கதரிசன எண் - 35

“தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலி ருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்” - (மத் 21:43-44) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

ஜனங்கள் (nation) - ἔθνος - ethnos - 1484

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஜனங்கள், அஞ்ஞானிகள், புறஜாதியார் ராஜ்யம், புறதேசத்தார் (race), சுவிசேஷ ஊழியத்தில் யூதருடைய இடங்களை எடுத்துக் கொள்ளும் புறஜாதி ஜனங்கள். (அப் 13:46-49; அப் 15:13-18; ரோமர் 10:19-11:26)

“இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்” - இயேசு கிறிஸ்துவின் கிருபையின்மீது யாரெல்லாம் விழுகிறார்களோ அல்லது யாரெல்லாம் ஒப்புக்கொடுக்கிறார்களோ அவர்களுடைய இருதயம் நொருங்கிப்போகும். கடினமாக இராது. (சங் 34:18; சங் 51:17; சங் 147:3) இயேசு கிறிஸ்துவின் கிருபையையும், இரக்கத்தையும் மறுதலிக்கிறவர்கள் நசுங்கிப்போவார்கள். முழுவதுமாக அழிந்துபோவார்கள்.

நசுக்கிப்போடு (crushed) - λικμάω - likmaoo - 3039

வினைச்சொல் - நசுக்கிப்போடு, சிதறிப்போ. பலரைப்போல காற்றில் சிதறிப் போதல். (மத் 21:44, லூக்கா 20:18) யூதர்கள் எங்கும் சிதறிப்போனதை இந்த வார்த்தை குறிப்பிடும். (லூக்கா 21:24) நசுக்கிப்போடும் என்பது முழுவதுமாக அழித்துப்போடும், முழுமையான தோல்வியைத் தரும் என்று பொருள்படும். (ஏசா 8:9;எரே 50:2; தானி 2:35,44-45)

மத்தேயு - தொகுப்புரை

21 அதிகாரம்

"பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்தார்கள்" - இயேசு கிறிஸ்து கூறிய உவமை பிரதான ஆசாரியரையும், பரிசேயரையும் பற்றியது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகையினால் அவரைப் பிடிக்க வகைதேடினார்கள். ஆயினும் ஜனங்கள் நிமித்தம் பயந்தார்கள்.

22 அதிகாரம்

94. கலியாண விருந்தைப் பற்றிய உவமை - (லூக் 14:16-24)

மத் 22:1 இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னது என்னவென்றால்:

மத் 22:2 பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 22:3 அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள்.

மத் 22:4 அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப் பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான்.

மத் 22:5 அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள்.

மத் 22:6 மற்றவர்கள் அவன் ஊழியக் காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள்.

மத் 22:7 ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்.

மத் 22:8 அப்பொழுது, அவன் தன் ஊழியக்காரரை நோக்கி: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள்.

மத் 22:9 ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான்.

மத் 22:10 அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லோர் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது.

மத் 22:11 விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராதஒரு மனுஷனை அங்கே கண்டு:

மத் 22:12 சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்.

மத் 22:13 அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்.

மத் 22:14 அந்தப்படியே, அழைக்கப் பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

"இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னார்" - தேவாலயத்தில் இயேசு கிறிஸ்து மூன்று உவமைகளை யூதருக்குக் கூறினார். அவையாவன:

1. இரண்டு குமாரர் (மத் 21:28-32)
2. திராட்சைத்தோட்டம் (மத் 21:33-46)
3. ராஜாவின் குமாரனுடைய கலியாணம். (மத் 22:14)

உவமை எண் - 12

"தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜா" - ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தைப் பற்றி வெளி 19:7-10 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிறோம். ஆனால் இந்தக் கலியாண விருந்து ஒரு இராஜாவினுடைய மகனின் கலியாண விருந்து.

மத்தேயு - தொகுப்புரை

22 அதிகாரம்

"அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து.....கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப் பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான்" - யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் விருந்தினருக்கு இரண்டு அழைப்புக்கள் கொடுக்கப்படுவது வழக்கம். முதலாவது அழைப்பு திருமணத்திற்கு முன்பாகவே கொடுக்கப்படும். இரண்டாவது அழைப்பு திருமண விருந்து ஆயத்தமான பின்பு கொடுக்கப்படும். (எஸ் 5:8, எஸ் 6:14; லூக்கா 14:16-1)

"மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள்" - இதுபோலவே தேவனுடைய தீர்க்கதரிசிகளை இஸ்ரவேலர்கள் கொலை செய்தார்கள்.(லூக்கா 11:47-51; லூக்கா 13:34; அப் 7:51) இராஜா கொலைபாதகரை அழித்ததுபோலவே தேவன் இவர்களையும் நியாயந்தீர்ப்பார். (மத் 22:7;லூக்கா 21:20-24)

"கலியாண விருந்து ஆயத்த மாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள்" - மத் 22:5-7-ஆவது வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற கொலை பாதகர்களை இந்த வசனம் குறிக்கும். யூதமார்க்கத் தலைவர்கள் ராஜாவால் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களைப் போன்றவர்கள். அவர்கள் அழைக்கப்பட்டிருந்தும் அபாத்திரராய்ப் போனார்கள். (அப் 13:46)

"நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்" - அழைக்கப்பட்டவர்கள் அபாத்திரராய்ப் போனதினால் வழிச் சந்திகளில் காணப்படுகிற நல்லார், பொல்லார் யாவரையும் அழைத்து வருமாறு ராஜா தன் ஊழியக்காரரை அனுப்புகிறான். அது போலவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் எல்லாப் பாவிகளையுமே மனந்திரும்புமாறு அழைக்கிறார். (மத் 13:38,48) இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் யூதர்களுக்கு மட்டும் என்று வரையறுக்கப்படவில்லை. (யோவான் 1:11; மத் 10:6; மத் 15:24) இஸ்ரவேல் புத்திரர் இயேசு கிறிஸ்துவைப் புறக்கணித்ததினால் அவர்களோடு தாம் செய்துகொண்ட உடன்படிக்கையைத் தேவன் நிறைவேற்ற வேண்டியதில்லை. ஆகையினால் தற்போது இயேசு கிறிஸ்து உலகம் முழுவதிலுமுள்ள எல்லா ஜனங்களையுமே இரட்சித்து தமது ராஜ்யத்தில் சேர்த்து வருகிறார். (யோவான் 3:16; ரோமர் 1:16; 2கொரி 12:13)

"அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்" - வழியிலே போகிறவர்களுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்திருக்கும். விருந்து கொடுக்கிறவர் ராஜா. அவருடைய அரண்மனைக்கு சாதாரண நாட்களில் இவர்களால் உள்ளேயே போகமுடியாது. ராஜாவின் ஊழியக்காரர்கள் இவர்களைத் துரத்தி விடுவார்கள். ஆனால் இப்போதோ அதே ஊழியக்காரர்கள் வழியில் போகும் ஜனங்களை ராஜா ஆயத்தம்பண்ணியிருக்கும் கலியாண விருந்தில் கலந்து கொள்ளவருமாறு அழைக்கிறார்கள்.

ராஜா தனது விருந்து சாலையை விருந்தினர்களால் நிறைக்க விரும்பினார். ஏழை, பணக்காரர் வித்தியாசமில்லாமல் எல்லோரையும் விருந்திற்கு அழைத்தார். விருந்தில் பங்கு பெறுகிறவர்களுக்கு நல்ல வஸ்திரம் வேண்டும். அதையும் ராஜாவே தனது சொந்த செலவில் கொடுத்தார். தன்னுடைய வஸ்திரங்களை விருந்துக்கு வந்தவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தார். ராஜா கொடுக்கும் அன்பளிப்பை ஏற்றுக் கொண்டு, அந்த வஸ்திரத்தை அணிந்து, விருந்தில் பங்குபெறுவது ராஜாவிற்கும் கௌரவம். ராஜா கொடுக்கும் விருந்திற்கும் ஒரு கௌரவம். விருந்தில் பங்குபெறுகிற எல்லோருக்குமே கௌரவம்.

"விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தார்" - விருந்தாளிகள் விருந்து உண்ணும்போது அக்காலத்து வழக்கத்தின்படி விருந்து நன்றாக நடைபெறுகிறதா என்பதை விருந்து கொடுக்கிறவர் வந்து பார்ப்பார். (லூக்கா 14:10)

"கலியாண வஸ்திரம்" - ராஜா கலியாண விருந்துக்கு வந்திருக்கும் எல்லோருக்குமே வஸ்திரத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த வஸ்திரத்தை ஏற்க மறுப்பதும், அல்லது வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு அதை அணியாமல் இருப்பதும் ராஜாவிற்கு அவமரியாதை ஆகும். வெளி 19:7-10 ஆகிய வசனங்களில் பரிசுத்தவான்களின் மெல்லிய வஸ்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

22 அதிகாரம்

"அவன் பேசாமலிருந்தான்" - ராஜா அன்பளிப்பு கொடுத்திருக்கிறார். அதை அவன் வாங்கியிருக்கிறான். ஆனாலும் வஸ்திரத்தை இவன் தரிக்கவில்லை. ஆகையினால் இவனால் சாக்குப்போக்கு எதுவும் சொல்லமுடியவில்லை.

"இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்" - தன்னையும், தன் விருந்தையும் அவமானப்படுத்திய அந்த மனுஷனை ராஜா தண்டிக்க விரும்பினான். அவன் செய்தது ராஜாவிற்கு எதிரான குற்றம். ராஜா இலவசமாகக் கொடுத்ததை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இதுபோலவே தண்டிக்கப்படுவார்கள். (மத் 8:12; மத் 11:20-24; மத் 13:40-50; மத் 24:51; மத் 25:41-46)

"அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" - இயேசு கிறிஸ்து எல்லா ஜனங்களையுமே அழைக்கிறார். ஆனால் ஒருசிலர் மட்டுமே இரட்சிக்கப் படுகிறார்கள். (மத் 20:16)

95. வரிக்காசைப் பற்றிய உவமை - (மாற்கு 12:13; லூக் 20:19)

மத் 22:15 அப்பொழுது, பரிசேயர் போய், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனை பண்ணி,

மத் 22:16 தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து: போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முக தாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லை யென்றும் அறிந்திருக்கிறோம்.

மத் 22:17 ஆதலால், உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்.

மத் 22:18 இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்து: மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

மத் 22:19 வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார்; அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.

மத் 22:20 அப்பொழுது அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார்.

மத் 22:21 இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

மத் 22:22 அவர்கள் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப் போய்விட்டார்கள்.

"அப்பொழுது, பரிசேயர் போய், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனை பண்ணி தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள்" - இந்தச் சதித்திட்டத்தில் மூன்று பிரிவினர்கள் இருக்கிறார்கள்.

1. ஏரோதியர்
2. சதுசேயர்
3. பரிசேயர்

ஏரோதியர் - ஏரோது ராஜாவின் கொள்கைகளைப் பின்பற்றும் அரசியல் பிரிவினர். இதில் ஏரோதின் குடும்பத்தினரே அதிகமாக இருந்தார்கள். (மாற்கு 3:6) இவர்களுடைய உபதேசத்தின்படி எல்லோரும் ரோம சாம்ராஜ்ஜியத்திற்குக் கட்டுப்பட வேண்டும். தங்களுக்கு அனுகூலம் இருக்கு மென்றால் தாங்கள் பின்பற்றி வரும் மார்க்கக்கொள்கைகளுக்குக் கீழ்ப்படியாமல் அவற்றை ஒதுக்கி வைத்து விடலாம். இந்த வேளையில் ஏரோது எருசலேமில் இருந்தான். அவனுடைய வேலைக்காரர்களாகிய ஏரோதியர்களும் அங்கு அவனோடுகூட இருந்தார்கள்.

சதுசேயர் - இவர்களும் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள். ஆனால் தங்கள் கேள்விகள் மூலமாக இவர்களால் இயேசுவைக் குற்றப்படுத்த முடியவில்லை. (மத் 3:7, மத் 22:23-33)

22 அதிகாரம்

பரிசேயர் - இவர்களும் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள். ஆனால் இயேசுவோ இவர்கள் வாயை அடைத்துவிட்டார். (மத் 22:34-46) இயேசு கிறிஸ்து 23-ஆவது அதிகாரத்தில் உவமைகள் மூலமாக இவர்களைக் கடிந்து கொள்கிறார். ஆனால் இவர்களோ தங்களைத் தாழ்த்தி இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுப்பதற்கு மனதில்லாமல் இருக்கிறார்கள். தங்களுடைய சதியாலோசனையில் ஏரோதியரையும், பங்காளிகளாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். இதுவரையிலும் மார்க்கக் காரியங்களைப் பற்றி இயேசுவிடம் கேள்வி கேட்டவர்கள் இப்போது அரசியல் ரீதியாகக் கேள்வி கேட்கிறார்கள். (மத் 22:17)

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher) (லூக்கா 9:38)

பரிசேயரின் சீஷரும், ஏரோதியரும் இயேசு கிறிஸ்துவிடம் நான்கு காரியங்களைக் கூறினார்கள். அவையாவன:

1. போதகரே நீர் சத்தியமுள்ளவர்.
2. நீர் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவர்.
3. நீர் முகதாட்சிணியம் இல்லாதவர்.
4. எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லை.

சத்தியமுள்ளவர் (truthful) - ἀληθής - aleethees - 227

பெயரடை - சத்தியமுள்ள, உண்மையுள்ள, மெய்யான, நிஜம், உள்ளபடி உண்மையான, நிஜந்தர்

(அ) உண்மையான காரியங்கள் (யோவா 8:13)

(ஆ) உண்மையான நபர்கள் (மத். 22:16) (without reserve, sincere, truthful, frank, honest, genuine, and true)

சத்தியம் (truth) - ἀλήθεια - aleetheia - 225

(அ) பொய் (அல்லது) தவறு என்பதன் எதிர்மறை (மாற்கு 5:33)

(ஆ)கிறிஸ்தவ மார்க்கத்தின் சாரம் (அல்லது) உபதேசம்

(இ)உண்மையானது (பிலி. 1:18) (without pretence, falsehood, or deceit; with sincerity of mind and purpose; without hypocrisy and lust for personal gain)

வரி (tribute) - κῆνσος - keensos - 2778

ஆண்பால் பெயர்ச்சொல் - வரி

"இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்தார்" - இயேசு கிறிஸ்துவிற்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரம் உள்ளது. மனுஷன் முகத்தைப் பார்த்தாலும், கர்த்தர் அவனுடைய இருதயத்தைப் பார்த்து அவனை அறிந்து கொள்வார். (ஏசா 11:2; யோவான் 2:25; யோவான் 3:34)

ஒரு பணம் (penny) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

"இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" - இயேசு கிறிஸ்து தமது தெய்வீக ஞானத்தை இங்கு வெளிப்படுத்துகிறார். இராயனுக்குரியதை இராயனுக்குச் செலுத்த வேண்டும். அதேசமயத்தில் தேவனுக்குரியதைத் தேவனுக்குச் செலுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. இராயனுக்கு வரி செலுத்த வேண்டாம் என்று கூறியிருந்தால் ஏரோதும், ஏரோதியரும் இயேசு கிறிஸ்துவை விரோதியாகப் பாவிப்பார்கள். அதேவேளையில் இராயனுக்கு வரிசெலுத்த வேண்டும் என்பதை மட்டும் இயேசு வலியுறுத்திக் கூறினால், யூதர்கள் அவரை வெறுப்பார்கள். இயேசு ஞானமாகப் பதில் கூறினார். தேவனுடைய ஞானம் வெளிப்பட்டது. ஜனங்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப்போய் விட்டார்கள்.

22 அதிகாரம்

96. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - (மாற்கு 12:18;லூக் 20:27)

மத் 22:23 உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயர் அன்றைய தினம் அவரிடத்தில் வந்து:

மத் 22:24 போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்கவேண்டும் என்று மோசே சொன்னாரே.

மத் 22:25 எங்களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப்போனான்.

மத் 22:26 அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன் முதல் ஏழாம் சகோதரன் வரைக்கும் செய்தார்கள்.

மத் 22:27 எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள்.

மத் 22:28 ஆகையால், உயிர்த்தெழுதலில் அவ்வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம் பண்ணியிருந்தார்களே என்று கேட்டார்கள்.

மத் 22:29 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்.

மத் 22:30 உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்;

மத் 22:31 மேலும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா?

மத் 22:32 தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார் என்றார்.

மத் 22:33 ஜனங்கள் இதைக் கேட்டு, அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

"ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்கவேண்டும் என்று மோசே சொன்னாரே" - (உபா 25:5)

"எங்களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப் போனான்" - யூதமார்க்கத்தலைவர்களுடைய உபதேசத்தின் பிரகாரம் ஒரு ஸ்திரீக்கு இந்த வாழ்வில் இரண்டு புருஷர்கள் இருந்தால் அடுத்த வாழ்வில் அவளுடைய முதலாவது புருஷனே அவளுக்குப் புருஷனாக இருப்பான்.

"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" - இயேசு கிறிஸ்துவிடம் இப்போது பேசுகிறவர்கள் சதுசேயர்கள். அவர்கள் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறவர்கள். ஆனாலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் உயிர்த்தெழுதலையும், மறுவாழ்வையும் குறித்து கேள்வி கேட்டு, இயேசுவைத் தங்கள் கண்ணியில் சிக்க வைக்க முயற்சி பண்ணுகிறார்கள். (மத் 22:23) ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து அவர்களிடம் நீங்கள் வேதவாக்கியங்களையும் அறியவில்லை, தேவனுடைய வல்லமையையும் அறியவில்லை என்று கூறுகிறார். உயிர்த்தெழுதலில் ஆண்களும், பெண்களும் திருமணம் செய்து கொள்வதில்லை.

22 அதிகாரம்

"பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் தேவதூதரைப்போல மரிப்பதில்லை. ஆகையினால் தங்களுடைய வம்ச விருத்திக்காக அவர்கள் திருமணம் செய்ய வேண்டிய தேவையில்லை.

"நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்" - யாத் 3:6,16 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. மோசேயின் ஆகமங்கள் மட்டுமே வேதவாக்கியம் என்று சதுசேயர் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்து தமது தேவத்துவத்தை உறுதிபண்ணுவதற்காக இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்.

"ஜீவனுள்ளோர்" - சரீரம் மரிக்கிறது. ஆனால் ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. (ஏசா 14:9; மத் 17:3; லூக்கா 16:19-31;லூக்கா 23:43, லூக்கா 20:38; 2கொரி 4:18; 2கொரி 5:8; எபே 4:8-10; பிலி 1:21-24; எபி 12:22-23; 1பேதுரு 3:4; 1பேதுரு 4:6; வெளி 6:9-11)

97. பிரதான கற்பனையைப் பற்றிய கேள்வி - (மாற்கு 12:28;லூக் 10:27)

மத் 22:34 அவர் சதுசேயரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப் பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள்.

மத் 22:35 அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி:

மத் 22:36 போதகரே, நியாயப் பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான்.

மத் 22:37 இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக;

மத் 22:38 இது முதலாம் பிரதான கற்பனை.

மத் 22:39 இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே.

மத் 22:40 இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.

"அவர் சதுசேயரை வாயடைத்தார்" - தம்முடைய விசுவாசிகளுக்கும், இயேசு கிறிஸ்து இப்பேர்ப்பட்ட ஞானத்தைத் தருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். (லூக்கா 21:15; யோவான் 14:12; அப் 7:10; 1கொரி 12:8; யாக் 1:5)

"நியாயசாஸ்திரி" - வேதவாக்கியங்களில் வல்லவர்கள். வேதபாரகர்கள். புதிய ஏற்பாட்டில் 8 இடங்களில் இவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. (மத் 22:35; லூக்கா 7:30;லூக்கா 10:25; லூக்கா 11:45-52; லூக்கா 14:3; தீத்து 3:13)

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher) (லூக்கா 9:38)

"நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது" - வேதவாக்கியத்தில் 248 கற்பனைகள் இருப்பதாக நியாயசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். இவை நேர்மறை யானவை. இவைதவிர, 365 எதிர்மறைக் கற்பனைகள் இருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். ஆக மொத்தம் 613 கற்பனைகள் வேதவாக்கியங்களில் உள்ளன என்பது இவர்களுடைய கணக்கு. 248 என்பது ஒரு மானிட சரீரத்திலுள்ள 248 அவயவங்களைக் குறிக்கும். 365 என்பது ஒரு வருஷத்தின் 365 நாட்களைக் குறிக்கும். பத்து கற்பனைகள் எபிரெய மொழியில் எழுதப்பட்ட போது அதில் 613 எழுத்துக்கள் இருந்தன. 613 என்பது பத்து கற்பனை களிலுள்ள 613 எழுத்துக்களைக் குறிக்கும்.

இந்த 613 கற்பனைகளில் சில மிகவும் முக்கியமானவை, சில ஓரளவு முக்கியமானவை. என்று யூதர்கள் தரம் பிரித்திருந்தார்கள். யூதருடைய இந்தப் பாரம்பரிய நம்பிக்கையை இயேசு கிறிஸ்து அங்கீகரிக்கிறாரா? என்பதைச் சோதிப்பதற்காக நியாயசாஸ்திரி இயேசுவிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

22 அதிகாரம்

“உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக” - உபா 6:5; உபா 10:12; உபா 30:6 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

தேவன்மீது நாம் காண்பிக்கும் அன்பு மூன்று இடங்களிலிருந்து வரவேண்டும். அவையாவன:

1. இருதயம் - உள்ளான எல்லா பிரியங்கள்
2. ஆத்துமா - எல்லா மனச்சாட்சிகள்
3. மனது - எல்லா சிந்தனைகள்

“உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக” - லேவி 19:18 ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

“இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது”-இவ்விரண்டு கற்பனைகளும் தெய்வீக வெளிப்பாட்டின் மொத்த அம்சமாகும். இதுவே மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிற மொத்த பொறுப்பு. மனுஷர் நிறைவேற்ற வேண்டிய மொத்த கடமை.

98. இயேசு பரிசேயரிடம் கேள்வி கேட்கிறார் - (மாற்கு 12:35; லூக் 20:39)

மத் 22:41 பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி:

மத் 22:42 கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்றுகேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள்.

மத் 22:43 அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி?

மத் 22:44 நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே.

மத் 22:45 தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்.

மத் 22:46 அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 19

“நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்” - (சங் 110:1; மத் 22:44) புதிய ஏற்பாட்டில் 7 தடவைகள் இந்த வாக்கியம் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (மத் 22:44; மாற்கு 12:36; லூக்கா 20:42; அப் 2:34; 1கொரி 15:25; எபி 1:13; எபி 10:13) ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் எல்லா சத்துருக்களும் இயேசு கிறிஸ்துவின் பாதபடியில் ஆக்கிப்போடப் படுவார்கள். (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20-22)

“தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி?” - அவர் தேவன். ஆகையினால் தாவீதுடைய ஆண்டவர். அவர் தாவீதுடைய குமாரன்.ஏனென்றால் தாவீதின் வம்ச வழியில் வந்த மரியாள் மூலமாக வந்தவர்.(லூக்கா 1:34-35; லூக்கா 3:23-38)

“அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்வி கேட்கத் துணியவில்லை” - இயேசு அவர்களுடைய வாயை அடைத்தார். அவர்கள் இயேசுவின் ஜீவனுக்கு எதிராக சதியாலோசனை பண்ணினார்கள். அவர்களுடைய இருதயம் திருக்கும், கபடமும் உள்ளது. அவர்களால் இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக மாய மாலமான இருதயத்தோடு தொடர்ந்து நிற்க முடியவில்லை. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தக் காரியம் நடைபெற்றது.

23 அதிகாரம்

99. பரிசேயரின் குணங்கள் - (மத் 23:1-33; மாற்கு 12:38; லூக் 18:9; 20:45)

மத் 23:1 பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி:

மத் 23:2 வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்;

மத் 23:3 ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்.

மத் 23:4 சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின் மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்.

மத் 23:5 தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி,

மத் 23:6 விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும்,

மத் 23:7 சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்;

மாய்மாலக்காரரின் சுபாவங்கள்

1. போதகருக்குரிய மரியாதையை எதிர்பார்க்கிறார்கள் (மத் 23:2)
2. அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள் (மத் 23:3)
3. மற்றவர்களுக்குப் பெரிய வேலை கொடுக்கிறார்கள். தாங்கள் ஒரு வேலையும் செய்வதில்லை. (மத் 23:4)
4. மனுஷருடைய புகழ்ச்சியை விரும்புகிறார்கள் (மத் 23:5)
5. தங்கள் மார்க்கப் பாரம்பரியத்தின்படி நடக்கிறார்கள் (மத் 23:5)
6. விருந்துகளில் முதன்மையான இடங்களை நாடுகிறார்கள் (மத் 23:6)
7. ஜெபாலயங்களில் முதன்மையான ஆசனங்களை விரும்புகிறார்கள் (மத் 23:6)
8. மனுஷர் தங்களைப் புகழ வேண்டுமென்று விரும்புகிறார்கள் (மத் 23:7)
9. தங்களுக்குப் பெரிய பட்டங்கள் வேண்டுமென்று விரும்புகிறார்கள் (மத் 23:7)
10. சத்திய மனுஷரையும் அவர்களுடைய ஜீவனையும் கொள்ளையிடுகிறார்கள் (மத் 23:13)
11. சத்தியத்தையும், ஜீவனையும் புறக்கணிக்கிறார்கள். (மத் 23:13)
12. விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறார்கள். (மத் 23:14)
13. பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணுகிறார்கள் (மத் 23:14)
14. ஒருவனைத் தங்கள் மார்க்கத்தானாக ஆக்குவதற்கு பிரயாசப்படுகிறார்கள். ஆனால் தேவனிடத்தில் யாரையும் வழிநடத்துவதில்லை. (மத் 23:15)
15. தங்களுடைய மார்க்கத்தார் ஆனவர்களை மாய்மாலத்தில் பழக்குகிறார்கள். தேவனுடைய வார்த்தையை உபதேசிப்பதில்லை. (மத் 23:15)
16. அவர்கள் சத்தியத்திற்குக் குருடராக இருக்கிறார்கள். (மத் 23:16-22)

23 அதிகாரம்

17. தங்கள் சுய ஆதாயத்திற்காகவும், தங்கள் சுய மகிமைக்காகவும் ஊழியம் செய்கிறார்கள். (மத் 23:16-22)

18. கொசு இல்லாதபடி வடிகட்டுகிறார்கள். ஆனால் ஒட்டகத்தை விழுங்குகிறார்கள். (மத் 23:23-24)

19. வெளிப் புறத்தைச் சுத்தமாக்கு கிறார்கள். ஆனால் அவர்களுடைய உட்புறம் அசுத்தமாக இருக்கிறது. (மத் 23:25-26)

20. மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறார்கள். ஆனால் தங்கள் ஜீவியத்திலும் நடத்தையிலும், மாயமும் அக்கிரமும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். (மத் 23:27-28)

21. தங்கள் முற்பிதாக்களை விட தாங்கள் பெரிய நீதிமான்கள் என்று காண்பிக்க விரும்புகிறார்கள். (மத் 23:29-33)

"நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக் கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின் படியோ செய்யாதிருங்கள்" - தேவனுடைய வார்த்தை யாரிடமிருந்து வந்தாலும் அதற்குக் கீழ்ப்படியலாம். மாயக்காரர் தேவனுடைய வார்த்தையை உபதேசம் பண்ணினாலும் அந்த வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில் அது தேவனுடைய வார்த்தை. ஆனால் நாம் அவர்களைப்போல ஜீவிக்கக் கூடாது. அவர்கள் நன்றாகச் சொல்வார்கள். ஆனால் சொன்னபடி நடந்துகொள்ள மாட்டார்கள்.

"சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலி னாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்" - அழிவுக்கு நேரான பாதையில் மார்க்கத்தலைவர்கள் ஜனங்களை வழிநடத்துகிறார்கள். மார்க்கத்தைப் பின்பற்றுவது தவறல்ல. ஆனால் அதை ஒரு விளம்பரத்திற்காகப் பின்பற்றுவது தவறுதான். மனுஷர் காணவேண்டுமென்று நாம் நற்கிரியைகளைச் செய்யக்கூடாது. அவற்றை தேவநாம மகிமைக்காகவே செய்ய வேண்டும்.

"தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்" - மற்றவர்கள் தங்கள் கிரியைகளைக் காணவேண்டும் என்பதற்காக மாயக் காரர்கள் பல காரியங்களைச் செய்கிறார்கள். வெளிவேஷத்திற்கும்,வெளிஅலங்காரத்திற்கும் அதிக முக்கியத்துவம் தேவையில்லை. உள்ளான அலங்காரமே மகிமை பெறும்.

"காப்புநாடாக்கள்" **(phylacteries)** தோலினால் செய்த சிறிய சதுரப் பெட்டி. யாத் 13:1-10; உபா 6:4-9; உபா 11:13-21 ஆகிய வசனங்கள் இதில் எழுதப்பட்டிருக்கும். இவற்றைப் புருஷர்கள் கைகளிலும், நெற்றியிலும் அணிந்திருப்பார்கள். பொது ஜனங்கள் விசேஷித்த ஜெபநாட்கள் மட்டும் காப்பு நாடாக்களை அணிவார்கள். ஆனால், பரிசேயர்களோ காப்புநாடாக்களை எப்போதும் அணிந்திருப்பார்கள். அவற்றின் அளவும் பெரிதாக இருக்கும். மற்றவர் காண வேண்டுமென்பதாக பெரிய காப்பு நாடாக்களைச் செய்து அணிவார்கள். அவர்கள் வசனங்களை அதில் எழுதி வைத்திருந்தாலும் அவர்களுடைய நோக்கம் தவறானது. தங்களுக்குப் பெருமை சேரவேண்டுமென்பதற்காகவே இதைச் செய்கிறார்கள். தேவநாம மகிமைக்காக மட்டும் நாம் கிரியை செய்ய வேண்டும். நமது சொந்த நாமத்தை மகிமைப்படுத்த முயற்சி பண்ணக்கூடாது. பரிசேயர்கள் இதை மாய்மாலமாகவும், பிசாசுகளைத் துரத்தும் கருவியாகவும் பயன்படுத்தினார்கள்.

"வஸ்திரங்களின் தொங்கல்கள்" - (மத் 9:20)

"விருந்துகளில் முதன்மையான இடங்கள்" - மரியாதைக்குரிய இடங்கள். (மாற்கு 12:39; லூக்கா 20:46)

"ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்கள்" - உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாகப் போடப்பட்டிருக்கும் இருக்கைகள். மூப்பர்களுக்கும், வேதபாரகர்களுக்கும் இவை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. சபையாரைப் பார்க்கும் பிரகாரமாக இந்த ஆசனங்கள் இருக்கும். (மாற்கு 12:39; லூக்கா 11:43)

23 அதிகாரம்

"ரபீ" - போதகருக்குக் கொடுக்கப்படும் பட்டம். (யோவான் 3:2; லூக்கா 9:38) பரிசேயர் இந்தப் பட்டத்தை மிகவும் விரும்பினார்கள். (மத் 23:7) ஆலோசனைச் சங்கத்தார் ஒருவர்மீது தங்களுடைய கைகளை வைத்து அவரை ரபீயாக அங்கீகரிப்பார்கள். வேதவாக்கியங்களை மற்றவர்களுக்கு உபதேசம் பண்ணுவதற்கு அதிகாரம் கொடுக்கும்விதமாகவும், வேதவாக்கியங் களைத் தியானிப்பதற்காகவும் அவருக்கு ஒரு திறவுகோலும், புஸ்தகத்தோடு கூடிய மேஜையும் கொடுக்கப்படும். ரபீ அந்தத் திறவுகோலை தன்னுடைய பெருமைக்காக எப்போதும் அணிந்திருப்பார். ரபீ மரிக்கும் போது அவருடைய திறவுகோலையும், அவரோடு சேர்த்துப் புதைத்து விடுவார்கள். யூதர்கள் யோவானை ரபீ என்றார்கள். (யோவான் 3:26) அவர்கள் இயேசுவையும் ரபீ என்று அழைத்தார்கள். (யோவான் 1:38,49; யோவான் 3:2; யோவான் 6:25) ஆனால் இவர்கள் இருவருமே ரபீயாக பிரதிஷ்டை பண்ணப்படவில்லை. (யோவான் 20:16)

100. பரிசேய உபதேசத்திற்கு எதிரான எச்சரிப்புக்கள் - (மத் 5:20; 6:1-18; லூக் 18:9-14)

மத் 23:8 நீங்களோ ரபீ என்றழைக்கப் படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்.

மத் 23:9 பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலி ருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்.

மத் 23:10 நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்.

மத் 23:11 உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

மத் 23:12 தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

போதகர் (Master) - καθηγητής - **katheegeetees** - 2519

ஆண்பால் பெயர்ச்சொல் - போதகர், குரு **(leader, guide)** (மத் 23:10)

"நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக் கிறீர்கள்"- நீங்கள் எல்லோருமே ஒன்றுதான். யாரும் உயர்ந்தவன் என்றோ தாழ்ந்தவன் என்றோ இல்லை. (1பேதுரு 5:1-8)

பிதா **(father)** - προπάτωρ - **propatoor** - 3962

ஆண்பால் பெயர்ச்சொல் - தகப்பன், பிதா, முன்னோர் **(generator, nearest ancestor, founder of a race)**

ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினர் களைப் பிதாக்கள் என்று அழைத்தார்கள். (அப் 7:2; அப் 22:1) கிறிஸ்தவ விசுவாசியின் மத்தியில் இந்தப் பழக்கம் இல்லை. வேதாகமத்தில் 244 இடங்களில் தேவன் பிதா என்று அழைக்கப்படுகிறார். 140 இடங்களில் உலகப்பிரகாரமான தந்தைமார்களை இந்தச் சொல் குறிப்பிடுகிறது. விக்கிரகாராதனை செய்த ஆசாரியர்கள் பிதாக்கள் என்று அழைக்கப் பட்டார்கள். (நியா 17:10) ஆபிரகாமைப் பிதா என்று அழைத்தார்கள். (ரோமர் 4:11-18)

"குருக்கள்" **(Master)** - (மத் 23:8) இயேசு கிறிஸ்து மட்டுமே நமக்கு குரு. தேவனுக்குரிய மகிமையை நாம் மனுஷருக்குத் தரக்கூடாது. கிறிஸ்துவே சபையின் தலைவர். (எபே 1:20-23; கொலோ 1:18,24).

"உங்களில் பெரியவனாயிருக்கிறவன்" - (மத் 18:1)

ஊழியக்காரன் **(servant)** - διάκονος - **diakonos** - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பணிவிடைக்காரன், ஊழியக்காரன், வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவர், உதவிக்காரர் - (மத் 20:26)

23 அதிகாரம்

"தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப் படுவான்" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தின் பிரகாரம் மனுஷர் யாருமே தங்களை உயர்த்தக்கூடாது. தாழ்மை உடையவர்களாக இருக்க வேண்டும். தாழ்மையுள்ளவர்களுக்குத் தேவன் கிருபை அளிக்கிறார். பெருமையுள்ளவர்களுக்கோ தேவன் எதிர்த்து நிற்கிறார். (நீதி 16:18; லூக்கா 14:11; லூக்கா 18:14)

101. பரிசேயர்மீது எட்டு "ஐயோ"க்கள் - (லூக் 6:24-26; 11:42)

(1) தேவனுக்கு விரோதமாகக் கிரியை செய்து பரலோகத்தைப் பூட்டிப் போடுகிறார்கள்

மத் 23:13 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள் நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.

"மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்" - வேதபாரகரும், பரிசேயரும் மாயக்காரர்கள். அவர்கள் தவறான உபதேசங்களைப் போதிக்கிறார்கள். இதனால் அவர்களாலும், பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. மற்றவர்களையும் பிரவேசிக்க விடுவதில்லை.

(2) ஒடுக்குகிறார்கள் - மாய்மாலக் காரர்கள்

மத் 23:14 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்.

"விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்" - விதவைகளின் சொத்துக்களை அபகரித்தல், அல்லது கொள்ளையிடுதல். (2தீமோ 3:5-9)

"நீண்ட ஜெபம்" - யூதமார்க்கத்தலைவர்கள் சில வேளைகளில் மூன்று மணி நேரம் ஜெபிப்பார்கள். ஒரு நாளுக்கு மூன்று தடவை நீண்ட ஜெபம் ஏறெடுப்பார்கள். (மத் 6:5-9)

(3) ஆத்துமாக்களை அழித்துப் போடுகிறார்கள்

மத் 23:15 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும் படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்.

"ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்" - இந்த வாக்கியம் யூதருடைய வழக்குச்சொல். ஒருவனைத் தன்னுடைய மார்க்கத்தானாகும்படி எல்லா விதமான முயற்சியும் பண்ணுதல் என்பது இதன் பொருள். இவர்கள் மனுஷரைத் தேவனிடத்தில் வழிநடத்தாமல், தங்களிடமே வழிநடத்துகிறார்கள்.

மார்க்கத்தமைந்தவன் **(proselyte)** - **προσήλυτος** - **proseelytos** - 4339

பெயரடை - வேறுமார்க்கத்தான், வேறு மார்க்கத்தமைந்தவன், ஒரு மார்க்கத்தில் புதிதாகச் சேர்ந்தவன், புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவன் (அப் 2:10; அப் 6:5; அப் 13:43)

யூதமார்க்கத்தமைந்தவர்களில் இரண்டு பிரிவினர்கள் இருந்தார்கள். அவர்கள்

1. நீதியின் பிரகாரமாக யூத மார்க்கத்தமைந்தவர்கள். இவர்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொள்வார்கள். மோசேயின் பிரமாணங்களைக் கைக் கொள்ளப் பொருத்தனை செய்து கொள்வார்கள். யூதமார்க்கத்தின் எல்லா பழக்கவழக்கங்களையும் கடைப் பிடிப்பார்கள்.

23 அதிகாரம்

2. வாசல்களில் இருக்கிற யூத மார்க்கத்தமைந்தவர்கள். (யாத் 20:10; உபா 5:14; உபா 24:16-21) இவர்கள் இஸ்ரவேல் ஜாதியார் மத்தியில் வசித்து வந்தார்கள். விருத்தசேதனம் பண்ணுவதில்லை. ஆனால் நோவாவின் ஏழு ஆலோசனைகளை இவர்கள் கடைப்பிடித்தார்கள். அவையாவன: விக்கிரகாராதனை, தேவதூஷணம், கொலை பண்ணுதல், கற்பின்மை, திருடுதல், கலகம் பண்ணுதல், மாம்சத்தையும், இரத்தத்தையும் பயன்படுத்துதல்.

"நரகத்தின் மகன்" - நரகத்திற்குப் போகுமாறு நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள். (யோவான் 17:12, லூக்கா 12:5)

நரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம்

(4) பொய்யான ஆணையிடுகிறார்கள்

மத் 23:16 குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின்பேரில் சத்தியம்பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள்.

மத் 23:17 மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?

மத் 23:18 மேலும், எவனாகிலும் பலி பீடத்தின்பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் அதின்மேல் இருக்கிற காணிக்கையின் பேரில் சத்தியம் பண்ணினால், அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள்.

மத் 23:19 மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ?

மத் 23:20 ஆகையால், பலி பீடத்தின்பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதின்மேலுள்ள எல்லாவற்றின்பேரிலும் சத்தியம்பண்ணுகிறான்.

மத் 23:21 தேவாலயத்தின்பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதில் வாசமாயிருக்கிறவர்பேரிலும் சத்தியம் பண்ணுகிறான்.

மத் 23:22 வானத்தின்பேரில் சத்தியம் பண்ணுகிறவன் தேவனுடைய சிங்காசனத்தின்பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான்.

"எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?" - பொருத்தனை செய்தால் அதை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் இல்லையென்று பரிசேயர்கள் நினைத்தார்கள். (மத் 23:16,18) ஆனால் இயேசு கிறிஸ்துவோ பொருத்தனை செய்தால் அதைச் செலுத்தவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார். நாம் செய்யும் பொருத்தனையைவிட தேவாலயம் பெரியது. பலிபீடத்தின்மீது வைக்கப்படும் பலியை விட பலிபீடம் பெரியது. (மத் 23:17, 19-22)

(5) வெளிவேஷம் போடுகிறார்கள்

மத் 23:23 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே.

மத் 23:24 குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர் களாயிருக்கிறீர்கள்.

"மாயக்காரர்" - (யோபு 27:8; மத் 6:2)

23 அதிகாரம்

தசமபாகம்

மோசேயின் பிரமாணத்திற்கு முன்பாக தசமபாகம் செலுத்துதல்.

மோசேக்கு 430 வருஷங்களுக்கு முன்பாகவே தசமபாகம் செலுத்தும் வழக்கம் இருந்தது. (ஆதி 14:20; ஆதி 28:22; எபி 7:1-11)

மோசேயின் பிரமாணத்தின்பிரகாரம் தசமபாகம் செலுத்துதல்

1. கர்த்தருடைய கட்டளை (லேவி 27:30; மல் 3:10)

2. தசமபாகம் செலுத்துவதன் நோக்கம்

   (1)லேவியருக்காக(எண்18:21-24)

   (2) ஆசாரியருக்குத் தசம பாகத்தில் தசமபாகம் (எண் 18:26; நெகே 10:37; நெகே 12:44)

   (3) ஏழைகளுக்கும், ஊழியக் காரர்களுக்கும் மூன்று வருஷங்களில் ஒருமுறை தசம பாகத்தில் தசமபாகம். (உபா 14:27-29;உபா 26:12-14)

   (4) தேவனுடைய ஆலயத்தின் பண்டக சாலைக்கு (மல் 3:10)

   (5) தேவனை மகிமைப் படுத்துவதற்காக (நீதி 3:9-10)

3. ஒவ்வொரு வருஷமும் பண்டிகையின் மற்ற காணிக்கைகளோடு தசம பாகத்தையும் கொண்டு வரவேண்டும். (உபா 12:6-7; உபா 14:22-26)

4. தசமபாகம் கர்த்தருக்குரியது. (லேவி 27:30-34; மல் 3:8)

5. தசமபாகத்தை எங்கு கொண்டு வரவேண்டும். (2நாளா 31:12; நெகே 10:38; நெகே 12:44; நெகே 13:5,12; மல் 3:8)

6. தசமபாகத்திற்குக் கடன்பட்டால் அதற்கு 20 சதவீதம் கூடுதலாகச் செலுத்த வேண்டும். (லேவி 27:31)

7. தசமபாகத்தை மாற்றினால் இதையும் மாற்றப்பட்டதையும் சேர்த்துச் செலுத்த வேண்டும். (லேவி 27:33)

புதிய ஏற்பாட்டில் தசமபாகம்

1. கிறிஸ்து உபதேசம் பண்ணினார் (மத் 23:23; மத் 11:11-14;லூக்கா 11:42; லூக்கா 16:16, மத் 5:20- லூக்கா 18:11-12; மத் 10:10; லூக்கா 10:7-8)

2. பவுல் உபதேசம் பண்ணினார்

   (1)கோவில்களைக் கொள்ளை யிடக் கூடாது (லேவி 27. மல் 3:8-10, ரோமர் 2:22)

   (2) உபதேசியார்கள் செலுத்த வேண்டும். (கலா 6:6)

   (3) ஊழியர்காரர் களுக்கு ஆதாரவாக தேவன் நியமித் திருக்கிறார் (1கொரி 9:7-14; 1தீமோ 6:17-18)

   (4) தேவன் தங்களை ஆசீர்வதிப்பதற்கு விசுவாசிகள் தசமபாகம் செலுத்த வேண்டும். (1கொரி 16:2)

   (5) மெல்கிசேதேக்கின் ஆசாரி யத்துவம் நித்தியமானது. ஆபிரகாமின் பிள்ளைகள் அதனால் ஆதரிக்கப் படவேண்டும். (எபி 6:20; எபி 7:1-11,17,21)

   (6) ஆபிரகாமின் பிள்ளைகள் அவனுடைய பாதைகளில் விசுவாசத்தோடு நடக்க வேண்டும். (ரோமர் 4:12;எபி 7)

   (7) தசமபாகம் செலுத்துதல் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும் தேவனுடைய ஆசீர்வாதங் களுக்கு நன்றி சொல்வதற்கும் அடையாளம். (ரோமர் 4:12; 1கொரி 9:7-14; 1தீமோ 6:17-18; எபி 7:6-10;ஆதி 14:20; உபா 8:10-20;நீதி 3:9-10; மல் 3:8-10)

23 அதிகாரம்

தசமபாகம் செலுத்துவதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1. கீழ்ப்படிவதினால் வரும் ஆசீர்வாதங்கள்

2. தேவனுடைய பண்டகசாலை நிரம்பியிருக்கும். (மல் 3:10)

3. தேவனுடைய ஊழியக்காரர்கள் குறைவில்லாமல் இருப்பார்கள். (நெகே 13:10; மல் 3:8-10; 1கொரி 9:7-14; 1தீமோ 5:17-18).

4. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், உலக ஆசீர்வாதங்களும் வரும். (2நாளா 31; நெகே 13; நீதி 3:9-10; மல் 3:8-10)

தசமபாகம் செலுத்தியவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1. ஆபிரகாம் (ஆதி 14:20; எபி 7:1-11)

2. யாக்கோபு (ஆதி 28:22)

3. ஆபிரகாமில் லேவி (எபி 7:9)

4.எசேக்கியாவும்,இஸ்ரவேலும்(2நாளா 31)

5. நெகேமியாவும்,இஸ்ரவேலும்(நெகே 13)

6. மாயக்காரர் (மத் 23:23; லூக்கா 11:42; லூக்கா 18:12)

7 விசுவாசிகள் (1கொரி 9:7-14; 1கொரி 16:2; 2கொரி 7:11; 2கொரி 8:1-15; கலா 6:6; 1தீமோ 5:17-18; எபி 7)

தசமபாகம் செலுத்துவதற்குப் பதிலாக வேறு எதையாவது செய்யலாம் என்று புதிய ஏற்பாட்டில் எந்த வசனமும் கூறவில்லை.

"ஒற்தலாம்" - நறுமணமுள்ள செடி.

"வெந்தையம்" - சமையலுக்குப் பயன்படும் பொருள்.

"சீரகம்" - சமையலுக்குப் பயன்படும் பொருள்.

"விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள்"-மார்க்கப்பிரகாரமானசடங்குகளை விட தேவனுடைய நீதியும், இரக்கமும் விசுவாசமும்முக்கியமானவை. தசமபாகம்செலுத்தி விட்டு எப்படியும் நாம் ஜீவிக்கலாம் என்று நமக்கு இஷ்டமானபடி ஜீவிக்கக்கூடாது.

"இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும்" - தசமபாகம் செலுத்துவதை இயேசு கிறிஸ்து அங்கீகரித்திருக்கிறார். நியாயப்பிரமாணத்தில் தசமபாகத்தைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதனால் அது பழைய ஏற்பாட்டுப் பிரமாணம். புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் தசமபாகம் செலுத்த வேண்டியதில்லை என்று கருதக்கூடாது. (மத் 11:11-13; லூக்கா 16:16) ஆகையினால் நாம் தசமபாகமும் செலுத்த வேண்டும். ஆவிக்குரிய ஜீவியமும் ஜீவிக்க வேண்டும்.

"கொசுகில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்" - ஒரு பூச்சி கூட நமக்குள் போய்விடக்கூடாது என்று மிகுந்த எச்சரிப்போடு வடிகட்டு கிறோம். ஆனால் சமயம் கிடைத்தால் ஒட்டகத்தையே விழுங்கி விடுகிறோம்.

(6) தவறான சுத்திகரிப்புக்கள்

மத் 23:25 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது.

மத் 23:26 குருடனான பரிசேயனே! போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு.

"போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது" - மார்க்கச்சடங்குகளின் பிரகாரமாக பரிசேயர்கள் தங்களை வெளிப்புறமாகச் சுத்தப்படுத்தி அலங்கரித் தார்கள். அதற்கு ஏற்ற பிரகாரமாக நீண்ட அங்கிகளை அணிந்து கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய இருதயமாகிய உட்புறமோ மகா கேடுள்ளதாக இருக்கிறது. அது கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. (மத் 15:18-20; மாற்கு 7:19-21, லூக்கா 4:28)

23 அதிகாரம்

"குருடன்" - மார்க்கத்தலைவர்களின் குருட்டுத்தன்மையைக் குறிப்பதற்கு இயேசு கிறிஸ்து பத்து இடங்களில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். (மத் 15:14; மத் 23:16-26; லூக்கா 6:39; யோவான் 9:41; வெளி 3:17) இந்த அர்த்தத்தில் வேறு சிலரும் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். (ரோமர் 2:19; ரோமர் 11:7; 2கொரி 3:14; 2கொரி 4:4; 2பேதுரு 1:9) ஒளியை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருட்டில் குருடரைப் போன்று இருப்பார்கள். (1யோவான் 1:7; 1யோவான் 2:11;யோவான் 3:19-20) இவர்கள் குருடராக இருக்க வேண்டுமென்று தாங்களே தீர்மானம் பண்ணிக் கொண்டவர்கள் (யோவான் 8:39-41; யோவான் 12:40; மத் 13:14-16) பரிசேயர் குருடராக இருப்பதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் ஆவிக்குரிய குருடராக் குகிறார்கள். (மத் 8:12; மத் 25:30-46)

(7) சுயநீதி

மத் 23:27 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்.

மத் 23:28 அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத் தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.

"வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்" - பஸ்கா பண்டிகைக்கு ஒரு மாதத்திற்கு முன்பு கல்லறைகளை வெள்ளையடிப்பார்கள். அசுத்தத்தைத் தொடாமல் இருப்பதற்கு எல்லா மனுஷருக்கும் எச்சரிப்பாக கல்லறைகளுக்கு வெள்ளையடிக்கப்படும். (எண் 19:16) வெள்ளையடிப்பது தவிர மேலும் பல வழிகளில் கல்லறைகளை அழகுபடுத்தினார்கள். (மத் 23:29)

"அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத் தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" - ஒருசிலரை வெளித்தோற்றத்தை வைத்துப் பார்க்கும்போது பக்திமான் போலவும், நீதிமான் போலவும், விசுவாசிகள்போலவும் இருப்பார்கள். ஆனால் அவர்களுடைய ஜீவியத்திலோ ஆவியின் கனி வெளிப்படாது. அவர்களுடைய இருதயத்தில் துன்மார்க்கமான சிந்தனைகள் நிறைந்திருக்கும். (1சாமு 16:7; 2கொரி 10:7; 2தீமோ 3:5; 1பேதுரு 3:3)

(8) பெருமை

மத் 23:29 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து:

மத் 23:30 எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்க மாட்டோம் என்கிறீர்கள்.

மத் 23:31 ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர் களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக்குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

மத் 23:32 நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள்.

மத் 23:33 சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?

23 அதிகாரம்

"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ" - மத்தேயு 23-ஆவது அதிகாரத்தில் எட்டுவிதமான பாவங்களைச் செய்தவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து ஐயோ என்று கூறுகிறார். (மத் 23:13-29)

1. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிர வேசிக்கவிடுகிறதுமில்லை. (மத் 23:13)

2. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள். இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள். (மத் 23:14)

3. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத் தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். (மத் 23:15)

4. குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவா லயத்தின் பொன்னின்பேரில் சத்தியம் பண்ணினால் அவன் கடனாளி யென்றும் சொல்லுகிறீர்கள் (மத் 23:16-22)

5. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே (மத் 23:23-24)

6. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. (மத் 23:25-26)

7. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும் (மத் 23:27-28)

8. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து: எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப் பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம் என்கிறீர்கள் (மத் 23:29-30)

"எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டி ருக்கமாட்டோம்" - இவர்களுடைய முற்பிதாக்களைவிட இவர்கள் மிகவும் மோசமானவர்கள். இவர்கள் மேசியாவையும், அவருடைய சீஷர்களையும், அவரைப் பின்பற்றியவர்களையும் கொலை பண்ணினார்கள். (மத் 23:34-36).

"சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?" - தப்பித்துக் கொள்ள முடியாது. சர்ப்பங்களும், விரியன்பாம்புக்குட்டிகளும் நரகாக்கினைக்கு நியமிக்கப்பட்டவை. (லூக்கா 12:5)

23 அதிகாரம்

102. கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப் படுவார்கள் என்று இயேசு முன் குறித்துக் கூறுகிறார் - (10:17)

மத் 23:34 ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்.

மத் 23:35 நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவேநீங்கள் கொலை செய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்.

மத் 23:36 இவைகளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வருமென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

தீர்க்கதரிசன எண் - 36

"இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்..." - (மத் 23:34-39) இந்தத் தீர்க்கதரிசனத்தில் மத் 23:34-36 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. மத் 23:37-39 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

"பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" - தேவன் தமது ஒரேபேறான குமாரனை நமக்காக அனுப்பினார். இவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாமல் சிலுவையில் அறைந்து கொலைசெய்தார்கள். தேவனுடைய இரக்கத்தினால் வெளிப்பட்ட எல்லா அடையாளங்களையும், அற்புதங்களையும் காணாதவாறு தங்களுடைய கண்களை மூடிக்கொண்டார்கள். ஆகையினால் இவர்கள் மீது இரத்தப்பழிகள் வரும். இதுவரையிலும் இல்லாத அளவிற்கு இவர்கள் மிகவும் கடுமையாக நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

"பரகியாவின் குமாரனாகிய சகரியா" - இந்தப் பெயர் சகரியா தீர்க்கதரிசியைக் குறிக்கும். (சக 1:1) வேறொரு சகரியாவைப் பற்றிய குறிப்பு 2நாளா 24:20-21 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். இவன் யோய்தாவின் குமாரன்.

103. இயேசு எருசலேமிற்காக அழுகிறார்-(லூக் 13:34; 19:41; 21:12)

மத் 23:37 எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று.

மத் 23:38 இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்.

மத் 23:39 கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர் களைக் கல்லெறிகிறவளே....." - இஸ்ரவேலுக்காக இயேசு கிறிஸ்து தமது இருதயத்தின் ஆழத்திலிருந்து விண்ணப்பம் பண்ணுகிறார்.

"உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" - மனுஷனே தன்னுடைய முடிவிற்குக் காரணமானவன். பொறுப்புடையவன். (வெளி 22:17)

மத்தேயு - தொகுப்புரை

23 அதிகாரம்

"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" - இந்த வாக்கியம் தேவாலயத்தையும், இஸ்ரவேல் தேசத்தையும் குறிக்கும். (2சாமு 7:5,18-19) இரண்டுமே பாழாக்கிவிடப்படும். ஆனாலும் இரண்டுமே திரும்பக் கட்டப்படும். தானியேலின் 69-ஆவது வாரத்தின் முடிவில் இஸ்ரவேல் தேசம் பாழாக்கிவிடப்பட்டது. (தானி 9:27)

தேவாலயம் பாழாக்கிவிடப்பட்டதற்குக் காரணங்கள்

1. அவர்களுடைய பாவங்கள்
2. யூதமார்க்கம் தொடர்வதற்கான வாய்ப்புக்களை அகற்றுதல்
3. நியாயப்பிரமாணம் முடிவுக்கு வருதல். யூதருடைய மார்க்கம் ஒழிந்து, கிறிஸ்தவ மார்க்கம் தோன்றுதல்.

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும்" - இயேசு கிறிஸ்துவை நாம் மறுபடியும் காண்போம். யூதர்களும் காண்பார்கள். அவர்கள் சந்தோஷமாக இயேசு கிறிஸ்துவைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக் கொள்வார்கள். (சக 12:10-13:1; ஏசா 66:7-8; ரோமர் 11:25-29) யூதர்கள் ஏற்கெனவே "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று கூறியிருக்கிறார்கள். (மத் 21:9; சங் 118:26)

24 அதிகாரம்

104. இயேசு ஒலிவமலையில் கூறிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25; மாற்கு 13; லூக் 21)

(1) எருசலேமின் அழிவை முற்குறித்துக் கூறுகிறார் - (மத் 23:37,மாற்கு 13:1)

மத் 24:1 இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.

மத் 24:2 இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப் பட்டுப்போகையில்" - இயேசு கிறிஸ்து இந்தத் தீர்க்கதரிசனத்தைத் தேவா லயத்திற்கு வெளியே ஒலிவமலையில் கூறினார். (மத் 24:3) ஆனால் லூக்கா 21-ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தேவாலயத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்பாக தேவாலயத்திலேயே கூறினார். (லூக்கா 21:1,27-28)

"தேவாலயத்தின் கட்டடங்கள்" - ஏரோது ராஜாவின் தேவாலயம். சுமார் 500 சதுர கெஜம் பரப்பளவு உள்ளது. வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டது. பழங்கால அற்புதங்களில் ஏரோதுவின் தேவாலயமும் ஒன்று.

தீர்க்கதரிசன எண் - 37

"இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்" - (மத் 24:2) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ரோமர்கள் கி.பி. 70-இல் எருசலேமை அழித்தார்கள். அப்போது தேவாலயமும் அழிந்துபோயிற்று. தானி 9:26; லூக்கா 21:20-24)

"ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்" - யோசபஸ் (Josephus) என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் தேவாலயத்தின் கற்களைப் பற்றி எழுதியிருக்கிறார். அதிலுள்ள கற்களில் சில 94 அடி நீளமுள்ளவை. பத்தரை அடி உயரமும், 13 அடி அகலமும் உடையவை. அந்தத் தேவாலயத்தில் 162 தூண்கள் இருந்தன. 52 அடி உயரமுள்ள மண்டபங்களை அவை தாங்கிப் பிடித்திருந்தன. தேவாலயத்திலுள்ள எல்லா கற்களும் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராத படிக்கு இடிக்கப்பட்டது. மீகா 3:12-இல் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறிற்று. "சீயோன் வயல்வெளியைப் போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடு களாய்ப்போம். ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்ப்போம்".

(2) மூன்று முக்கியமான கேள்விகள் - (மத் 13:3; லூக் 21:7)

மத் 24:3 பின்பு, அவர் ஒலிவ மலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

"அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருந்தார்" - ஒலிவமலையின்மேல் உட்கார்ந்து பார்க்கும்போது தேவாலயத்தின் முழு வடிவமும் தெளிவாகத் தெரியும்.

"சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்தார்கள்" - லூக்கா 21 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து எல்லா ஜனங்களுக்கும் மத்தியில் பேசினார். ஆனால் இங்கோ தமது சீஷர்களிடம் மட்டும் தனித்துப் பேசுகிறார். (மத் 24:1)

சீஷர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்விகள்

1. எருசலேம் எப்போது அழிக்கப்படும்? இதற்கு மத்தேயு பதில் கூறவில்லை. இதற்குரிய பதிலை லூக்கா எழுதின சுவிசேஷத்தில் நாம் வாசிக்கலாம். (லூக்கா 21:12-24)

24 அதிகாரம்

2. உம்முடைய வருகைக்கு அடையாளம் என்ன? இதற்குரிய பதில் மத் 24:4-26, 37-39 ஆகிய வசனங்களில் உள்ளது.

3. உமது வருகையின்போது என்ன நடைபெறும்? இதற்குரிய பதில் மத் 24:27-31,40-51; மத் 25:1-46 ஆகிய வசனங்களில் உள்ளது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளங்கள்

1. வஞ்சனைகள் (மத் 24:4-5,11,24)
2. கள்ளக்கிறிஸ்துக்கள்(மத் 24:5,23-26)
3. யுத்தங்களும், யுத்தங்களைப் பற்றிய செய்திகளும் (மத் 24:6-7)
4. பஞ்சங்கள் (மத் 24:7; வெளி 6:5-6)
5. கொள்ளைநோய்கள் (மத் 24:7; வெளி 6:8)
6. பூமியதிர்ச்சிகள் (மத் 24:7; வெளி 6:12-17)
7. தேவனுடைய பிள்ளைகளுக்கு உபத்திரவங்கள் (மத் 24:9; மாற்கு 13:9,13)
8. இடறல்கள் (மத் 24:10; மத் 18:1-10)
9. காட்டிக்கொடுக்கப்படுதல் (மத் 24:9; மாற்கு 13:12)
10. பகை (மத் 24:10; 2தீமோ 3:1-9)
11. கள்ளத்தீர்க்கதரிசிகள் (மத் 24:11,24; வெளி 13)
12. அக்கிரம மிகுதி (மத் 24:12)
13. அன்பு தணிந்துபோதல் (மத் 24:12-13; 2தீமோ 3)
14. சுவிசேஷ ஊழியப் பிரபலியம் (மத் 24:14)
15. பாழாக்குகிற அருவருப்பு (தானி 9:27; மத் 24:15; 2தெச 2:4; வெளி 13)
16. யூதேயாவில் புதிய யூததேசம் (எசே 37;தானி 9:27; மத் 24:9,15-26)
17. யூதருடைய புதிய தேவாலயம் (தானி 8:9-13;தானி 9:27;தானி 11:45; மத் 24:15,26;2தெச 2:4;வெளி 11:1-2)
18. மூன்றரை வருஷங்களுக்கு மஹா உபத்திரவம் (தானி 12:1; மத் 24:21; வெளி 12:1-19:21)
19. இரத்தச்சாட்சிகள் (மத் 24:9,22; தானி 8:24; வெளி 7:9-17;வெளி 11:7; வெளி 15:2-4; வெளி 20:4-6)
20. யூதேயாவிலிருந்து யூதர்கள் ஓடிப்போதல் (சங் 60:4-8; ஏசா 16:1-5; எசே 20:33-38; தானி 11:40-45; ஓசி 2:14-16; மத் 24:16-21; வெளி 12:6,14)
21. சாத்தானுடைய வல்லமை அதிகரித்தல் (மத் 24:24; 2தெச 2:8-12; வெளி 13; வெளி 16:14; வெளி 19:20)
22. குடிவெறி (மத் 24:38; லூக்கா 17:28; லூக்கா 21:34)
23. பாலியல் பலாத்காரங்கள் (மத் 24:38; லூக்கா 17:27)
24. உணர்வின்மை (மத் 24:39)

இயேசு கிறிஸ்துவின் வருகை பரோசியா **(Parousia)** என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு கிரேக்கச்சொல். காணக்கூடிய விதத்தில் தோன்றுதல், மறுபடியும் தோன்றுதல் என்பது இதன் பொருள்.

வருகை - **παρουσία** - **parousia** - 3952

பெண்பால் பெயர்ச்சொல் - வருதல், தோற்றம், சமீபமாயிருத்தல்

24 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் வருகைகள்

1. சபை எடுத்துக்கொள்ளப்படுதல் **(Rapture)** மத்திய ஆகாயத்திற்குப் பரிசுத்தவான்களை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து வருவார். இந்த வருகையில் அவர் பூமிக்கு வராமல் மத்திய வானத்திற்கு மட்டுமே வருகிறார். (யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; 1தெச 2:19; 1தெச 3:13; 1தெச 4:13-17; 1தெச 5:23; 2தெச 2:1,7-8; யாக் 5:7-8; 1யோவான் 2:28)

2. இரண்டாம் வருகை. இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு ஆளுகை செய்வதற்காகப் பூமிக்கு வருவார். **(Second coming)** (மத் 24:3,27-51; மத் 25:31-46; யூதா 1:14; வெளி 19:11-21; சக 14:1-5)

(3) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளங்கள்

(அ) எட்டு அடையாளங்கள் - யூதர்களின் வருத்தங்கள் - (மாற்கு 13:5; லூக் 21:8; வெளி 6-9)

மத் 24:4 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள்;

மத் 24:5 ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

மத் 24:6 யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவை களெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது.

மத் 24:7 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.

மத் 24:8 இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

தீர்க்கதரிசன எண் - 38

"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்...." (மத் 24:4-25:46) இந்தத் தீர்க்கதரிசனத்தில் மத் 24:27-51; மத் 25:1-46 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும், நித்தியத்திலும் நிறைவேறும்.

"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" - விசுவாசிகள் எப்போதும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சாத்தான் தேவப்பிள்ளைகளை எப்படி வஞ்சிக்கலாம் என்று வழிபார்த்துக் கொண்டிருக்கிறான். ஆகையினால் இதற்கு எச்சரிப்பாக வேதத்தில் பல வசனங்கள் கூறப்பட்டிருக்கிறது. (மத் 24:4-5,11,24; லூக்கா 21:8; 1கொரி 6:9; 1கொரி 15:33; கலா 6:7; எபே 5:6; 2தெச 2:3)

"இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" - மத் 24:4-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற எட்டு அடையாளங்களும் வேதனைகளுக்கு ஆரம்பமேயல்லாமல் முடிவு அல்ல.

வேதனைகள் **(sorrows)** - **ὠδίν** - **oodin** - 5604

பெண்பால் பெயர்ச்சொல் - வேதனை, உபாதி. பிரசவவேதனை **(birth pangs)** (கலா 4:19,27; 1தெச 5:3; வெளி 12:2). உபத்திரவக்காலத்து வேதனை**(tribulation)**(மத் 24:15-21; ஏசா 66:7-8; எரே 30:4-7;தானி 7:21; தானி 8:9-14,24; தானி 9:27; வெளி 12).

(ஆ) இஸ்ரவேலின் வதேதங் களின்போது எட்டு அடையாளங்கள்- (மாற்கு 13:9)

மத் 24:9 அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.

24 அதிகாரம்

மத் 24:10 அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

மத் 24:11 அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

மத் 24:12 அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.

மத் 24:13 முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

மத் 24:14 ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப் படும், அப்போது முடிவு வரும்.

"என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" - புறஜாதியார் எல்லோருமே யூதர்களைப் பகைப்பார்கள்.

முடிவு **(end)** - τέλος - **telos** - 5056

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு, விலகிப்போதல். ஒரு காரியத்தின் முடிவு. (மத் 24:6,14) இரண்டு காலங்களின் இணைப்பு (மத் 13:39,40,49; மத் 24:3; மத் 28:20; எபி 9:26) டேலோஸ் **(telos)** என்னும் கிரேக்கச்சொல் ஜீவியத்தின் முடிவையும், காலத்தின் முடிவையும் குறிக்கும்.

இரட்சிக்கப்படுவான் **(saved)** - σώζω - **soozoo** - 4982

வினைச்சொல் - இரட்சி, சொஸ்தமாகு, ஆரோக்கியம் அடை, சுகமடை, தப்பிப்போ, இரட்சிக்கப்படு (மத் 1:21)

சுவிசேஷம் - εὐαγγελίζω - **euangelizoo** - 2097

வினைச்சொல் - சுவிசேஷம் பிரசங்கி, நற்செய்தி அறிவி, பிரசங்கி, சுவிசேஷம் அறிவி

செப்துவஜிந்த் பழைய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1. எந்த நற்செய்தியும் (1சாமு 31:9; 2சாமு 1:20; 1நாளா 10:9)
2. தேவனுடைய கிருபை (சங் 36:10; சங் 96:2)
3. மேசியாவின் ஆசீர்வாதங்கள் (ஏசா 40:9; ஏசா 61:1)

புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1. தேவனுடைய ராஜ்யமும், பரலோக ராஜ்யமும் (மத் 4:23; மத் 9:35; மத் 24:14; மாற்கு 1:14)
2. தேவன் (ரோமர் 1:1; ரோமர் 15:16)
3. இயேசு கிறிஸ்து (மாற்கு 1:1; ரோமர் 1:16; ரோமர் 15:29; 1கொரி 9:12-18)
4. இரட்சிப்பு (மாற்கு 16:15; லூக்கா 4:18; எபே 1:3)
5. தேவனுடைய கிருபை (அப் 20:24)
6. சமாதானம் (ரோமர் 10:15; எபே 6:15)
7. வாக்குத்தத்தங்கள்(எபே 3:6; எபி 8:6)
8. சத்தியம் (எபே 1:13; கொலோ 1:5)
9. விசுவாசம் (பிலி 1:27)
10. நம்பிக்கை (கொலோ 1:23)
11. நித்தியம் (2தீமோ 1:10)

24 அதிகாரம்

12. புதிய உடன்படிக்கையின் பொதுவான ஆசீர்வாதங்கள் (மாற்கு 16:15; கலா 1:11; கலா 3:8)

சுவிசேஷம் ஒன்றே. மத்தேயுவிலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ள செய்தியே சுவிசேஷம். இதற்கு யூதரும், புறஜாதியாரும் கீழ்ப்படிய வேண்டும். (மத் 28:20; அப் 1:1-2; ரோமர் 10:12; 1கொரி 12:13; கலா 3:28; எபே 2:11-22; எபே 3:5-11)

ராஜ்யத்தின் சுவிசேஷம் என்பது வரப்போகிற ராஜ்யத்தையும் குறிக்கும். அதேசமயத்தில் இரட்சிப்பையும் கிறிஸ்துவின் நற்செய்தியினால் வரும் எல்லா ஆசீர்வாதங்களையும் குறிக்கும். (மத் 6:33; மத் 13:11-50; மத் 18:1-35; மாற்கு 1:14-15; யோவான் 3:3-5; அப் 8:12; அப் 20:25; அப் 28:23,31; ரோமர் 14:17; 2கொரி 4:20; 2கொரி 6:9; கொலோ 1:13)

பூலோகம் (world) - οἰκουμένη - oikoumenee - 3625

பெண்பால் பெயர்ச்சொல் - பூலோகம், உலகம், பூமி, பூச்சக்கரம்

உலகம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ)என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ)ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32; மாற். 10:30

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்

"ஜாதிகள்" (nations) - ஜாதிகள் என்பது ஒவ்வொரு தேசத்திலுமுள்ள ஒவ்வொரு தனிமனிதர் என்று பொருள்படாது. ஏனெனில் ஆயிர வருஷ அரசாட்சி வரும்வரையிலும் பலர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட மாட்டார்கள். (ஏசா 2:2-4; ஏசா 11:9; ஏசா 66:19-21; சக 8:23)

"அப்போது முடிவு வரும்" - எல்லா ஜாதிகளுக்கும் ராஜ்யத்தின் சுவிசேஷம் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். இயேசு கிறிஸ்து ஆரம்பித்த சுவிசேஷ ஊழியம். பிரசங்கம் பண்ணுதல், உபதேசம் பண்ணுதல், நோய்களைக் குணமாக்குதல் ஆகியவை சுவிசேஷ ஊழியத்தில் அடங்கும். ஆதித்திருச்சபையாரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். (மத் 4:23-24; மத் 9:35; லூக்கா 4:18; 1கொரி 4:20) பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி கடைசிக் காலத்தில் தாராளமாகப் பொழியும். அப்போது புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ ஊழியம் முழுமையாக நடைபெறும். (அப் 2:16-21)

(இ) பாழாக்குகிற அருவருப்பு - (தானி 9:27; மாற்கு 13:14)

மத் 24:15 மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,

"மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே" - மத் 24:15-ஆவது வசனத்திலிருந்து வரும் தீர்க்கதரிசனம் கடைசி மூன்றரை வருஷங்களில் நடைபெறும். தானியேல் 70 ஆவது வாரத்தைப் பற்றியும், அந்திக் கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும் தீர்க்கதரிசனமாகக் கூறியிருக்கிறான். அவன் யூதேயாவிற்கு வந்து தனது தலைநகரமாக எருசலேமையும், தனது கட்டடமாக யூதருடைய தேவாலயத்தையும் கைப்பற்றிக் கொள்வான். (தானி 9:27; தானி 11:40-45; தானி 12:1-7; 2தெச 2:4; வெளி 11:1-2; வெளி 12:1-17; வெளி 13:1-18)

மத்தேயு - தொகுப்புரை

24 அதிகாரம்

"பாழாக்குகிற அருவருப்பு" - இந்தக் காலத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் எருசலேமிலுள்ள யூதருடைய தேவாலயத்தில் அந்திக் கிறிஸ்துவின் சொரூபம் இருக்கும். இதுவே பாழாக்குகிற அருவருப்பு எனப்படுகிறது. (தானி 8:9-14; தானி 9:27; தானி 11:45; தானி 12:1,7,11; வெளி 13:1-18; வெளி 14:9-11; வெளி 20:4-6)

(ஈ) அந்திக்கிறிஸ்துவிடம் இஸ்ரவேல் தோற்றுப்போதல் - (மாற்கு 13:15)

மத் 24:16 யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

மத் 24:17 வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்.

மத் 24:18 வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன்.

மத் 24:19 அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ.

மத் 24:20 நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள்.

"யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" - யூதேயாவிற்கு அந்திக் கிறிஸ்து வந்து அவன் தேவாலயத்தைக் கைப்பற்றும்போது இஸ்ரவேல் ஜனங்கள் யூதேயாவிலிருந்து ஓடிப்போவார்கள். (தானி 9:27; தானி 11:40-45)

"மலைகள்" - ஏதோம், மோவாப் ஆகிய மலைகளைக் குறிக்கும். இவை அந்திக் கிறிஸ்துவிடமிருந்து தப்பித்துக் கொள்ளும். (வெளி 12:6,14)

"வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்" - யூதேயாவிலிருந்து ஓடிப்போகிறவர்கள் காலம்தாழ்த்தாமல் விரைந்து தப்பியோடி விடவேண்டும். காலம் தாமதித்தால் அந்திக்கிறிஸ்து அவர்களை ஆட்கொள்வான். ஆகையினால் தப்பியோடும்போது தங்களுடைய பொருட்களைத் தேடி எடுத்துக்கொண்டு மெதுவாகப் போகலாம் என்று இறுமாப்பாய் இருக்கக்கூடாது.

"அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ" - இஸ்ரவேல் ஜனங்கள் யூதேயாவிலிருந்து தப்பி ஓடும்போது கர்ப்பவதிகளுக்கு மிகுந்த சிரமமாக இருக்கும். சாதாரணமாக கர்ப்பதிகளால் நடக்கக்கூடமுடியாது. அப்படிப்பட்டவர்கள் இந்தக் காலத்தில் ஓடவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பார்கள். பால்கொடுக்கிற தாய்மார்கள் கூட தங்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு அந்திக்கிறிஸ்துவிற்குத் தப்பி ஓடவேண்டும்.

"நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்" - மாரிக்காலம் என்பது குளிர்காலம். குளிர்காலத்தில் பிரயாணம் பண்ணுவதற்கு அதற்குரிய ஆயத்தம் தேவை. குளிரைத் தாங்கக்கூடிய வஸ்திரங்கள் இருந்தால்தான் அவர்களால் சமாளிக்க முடியும். குளிர்காலத்தில் பிரயாணம் பண்ணுவது மிகவும் கடினம். இதற்கு ஆயத்தம் செய்வதினால் காலம் தாமதம் ஏற்படும். அப்போது அந்திக்கிறிஸ்து இவர்களைப் பிடித்துக்கொள்ளுவான். யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம், ஓய்வுநாளில் அவர்கள் ஒரு மைல் தூரம் மட்டுமே பிரயாணம் பண்ண முடியும். அவர்கள் ஓடிப்போவது ஓய்வுநாளாக இருக்குமென்றால் அவர்கள் ஒருமைல் தூரம் மட்டுமே பிரயாணம் பண்ணுவார்கள். ஏதோம் மலைக்கும், மோவாப் மலைக்கும் அவர்களால் தப்பியோட முடியாது. (அப் 1:12) இவர்கள் ஒருமைல் தூரமே பிரயாணம் பண்ணியிருப்பார்கள் என்றால் அந்திக்கிறிஸ்து அவர்களை அங்கு பிடித்துக்கொள்வான்.

24 அதிகாரம்

(உ) மகா உபத்திரவம் - (தானி 12:1; மாற்கு 13:19; வெளி 12:19)

மத் 24:21 ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.

மத் 24:22 அந்நாட்கள் குறைக்கப் படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்துகொள்ளப் பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.

"உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" - கடைசி மூன்றரை வருஷத்தில் மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும். ஆகையினால் இக்காலம் மகா உபத்திரவக்காலம் என அழைக்கப் படுகிறது. இது மகா உபத்திரவக்காலத்தின் ஆரம்பம். (எரே 30:4-7; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:1,7,11; வெளி 7:14; வெளி 11:1-19:21)

"அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை" - மூன்றரை வருஷம் என்பது 1260 நாட்களாகும். உபத்திரவம் எல்லா நாட்களும் நடைபெறாமல் அந்த நாட்கள் குறைக்கப்படும். (தானி 12:7; வெளி 11:1-3; வெளி 12:6,14; வெளி 13:5)

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" - யூதர்கள். இந்த வாக்கியம் சபையைக் குறிக்காது என்று வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். இதற்காக அவர்கள் கூறும் காரணங்கள்:

1. இயேசு யூதருக்குப் பதில் கூறுகிறார். (மத் 24:3; மத் 25:31-46; அப் 1:6)
2. கள்ளக்கிறிஸ்துக்கள் இஸ்ரவேலில் இருந்தார்கள் (மத் 24:5,23-26)
3. யூதமார்க்கத்திற்கு எதிரான உபதேசங்கள் (மத் 24:9)
4. இஸ்ரவேலின் துன்பம் (மத் 24:8)
5. பாழாக்குகிற அருவருப்பு யூதருக்கு மட்டுமே பொருந்தும் (மத் 24:15)
6. யூதருடைய தேவாலயம் (மத் 24:15)
7. இஸ்ரவேல் ஜனங்கள் தப்பியோடுதல் (மத் 24:16)
8. யூதருடைய ஓய்வுநாள் (மத் 24:20)
9. மகா உபத்திரவம் (மத் 24:21)
10. யூதர்கள் மட்டுமே கூட்டிச்சேர்க்கப் படுவார்கள். (மத் 24:31)
11. இஸ்ரவேல் ஜனங்களை மீட்பதற்காக இயேசு கிறிஸ்து வருகிறார். (சக 14; மத் 24:29-31; மத் 25:31-46)
12. இஸ்ரவேல்மீது நடப்பித்த கிரியைகளின் அடிப்படையில் தேசங்களின் நியாயத்தீர்ப்பு இருக்கும். (மத் 25:31-46)
13. இஸ்ரவேலின் மீட்பின்போது முற்குறிக்கப் பட்ட காரியங்கள். (எசே 39:17-22; மத் 24:28; லூக்கா 17:34-37; வெளி 19:17-21)
14. இதற்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும்.

(ஊ) மகா உபத்திரவத்தின்போது நடைபெறும் ஆறு அடையாளங்கள் - (மாற்கு 13:21)

மத் 24:23 அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.

மத் 24:24 ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

மத்தேயு - தொகுப்புரை

24 அதிகாரம்

மத் 24:25 இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

மத் 24:26 ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார் களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்.

"அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்" - அப்பொழுது என்பது மத் 24:15-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மகா உபத்திரவ நாட்களைக் குறிக்கும்.

"பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" - உபத்திரவக் காலத்தில் சாத்தானின் வல்லமை வெளிப்படும். அவனும் அற்புதங்களைச் செய்வான். (தானி 8:24; 2தெச 2:7-12; வெளி 13:1-18; வெளி 16:13-16; வெளி 19:20)

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" - யூதர்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (மத் 24:22)

"வனாந்தரத்தில் இருக்கிறார்" - தன்னை கிறிஸ்து என்று கூறிக்கொள்கிறவர்கள் அங்கே இருப்பதாகவும், இங்கே இருப்பதாகவும் கூறுவார்கள். (மத் 24:23)

"அறைவீடு" - (தானி 11:45; 2தெச 2:4; வெளி 13)

(4) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும் விதமும் காலமும் - (தானி 7:13; சக 14:1-5; மத் 25:31; மாற்கு 13:24; லூக் 17:22; 21:25; 2தெச 1:7; 2:8; யூதா 14; வெளி 1:7; 19:11)

மத் 24:27 மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.

மத் 24:28 பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்.

மத் 24:29 அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.

மத் 24:30 அப்பொழுது, மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.

மத் 24:31 வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் விளக்குகிறது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் வேளை

1. உபத்திரவம் முடிந்தவுடனே(மத் 24:29; மத் 25:31; வெளி 11:1-19:21)
2. ஆயிர வருஷ அரசாட்சியின் ஆரம்பத்தில் (வெளி 19:11-21; வெளி 20:1-10)
3. மூன்றரை வருஷங்கள் அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்த பின்பு (வெளி 13:5; வெளி 19:11-21; 2தெச 2:7-8)
4. இந்தக் காலத்தின் முடிவில் (மத் 13:38-43,47-50; மத் 24:3,29-31; மத் 25:31-46)

24 அதிகாரம்

5. பத்து இராஜ்ஜியங்கள் எழும்பியிருப்பார்கள் (தானி 2:44-45; தானி 7:23-24; வெளி 13:1-18; வெளி 19:11-21)

6. லோத்தின் நாட்களிலும், நோவாவின் நாட்களிலும் இருந்ததைப் போன்று துன்மார்க்கம் பெருகியிருக்கும் நாட்களில். (மத் 24:37-51; லூக்கா 17:22-27; 2தீமோ 3:1-13; 2தீமோ 4:1-4; 2பேதுரு 2; யூதா)

7. சபைக் காலத்திற்குப் பின்பு (2தெச 2:7-8; அப் 15:13-18; யூதா 1:14; சக 14:5)

8. எருசலேம் சேனைகளால் சுற்றி வளைக்கப்பட்டு, அதன் பாதிப் பட்டணம் எடுத்துக்கொள்ளப்படும் போது.(சக 14:1-5,14-21; யோவேல் 3)

9. மரித்த நீதிமான்கள் உயிர்த்தெழுந்த பின்பு, துன்மார்க்கர் உயிர்த்தெழுவதற்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு. (வெளி 20:1-15; சக 14:5; யூதா 1:14)

10. வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கிறவை நிறைவேறிய பின்பு. (வெளி 19:11-21;வெளி 20:1-10)

11. ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பு சாத்தான் கட்டப்பட்டிருக்கிற போது. (வெளி 20:1-7)

12. இஸ்ரவேல் ஜனங்கள் கூடிச்சேர்க்கப்பட்டு இரட்சிக்கப்பட்ட பின்பு, இயேசு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து இஸ்ரவேலை நித்திய காலமாக ஆளுகை செய்ய ஆரம்பிக்கும்போது. (ஏசா 9:6-7; ஓசி 3:4-5; லூக்கா 1:32-33; எசே 36:23-28; எசே37:16-28)

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்படியிருக்கும்?

1. மின்னலைப்போல (மத் 24:27)

2. அழிவோடு (மத் 24:38-51; மத் 25:31-46; 1தெச 5:2; 2தெச 1:7-10; 2தெச 2:8; யூதா 1:14-15; சக 14; வெளி 19:11-21)

3. காணக்கூடிய விதமாக (மத் 24:29-31; 2தெச 1:7-10; வெளி 1:7; வெளி 19:11-21; சக 14)

4. வெளிச்சத்தோடும், அக்கினியோடும் (2தெச 1:7-10; 2தெச 2:8; எசே 38:17-21; மல் 4:1-6)

5. வைராக்கியத்தோடும் கோபத்தோடும் (வெளி 14:14-20; வெளி 19:11-21; யூதா 1:14-15; 2தெச 1:7-10)

6. வல்லமையோடும் மகிமையோடும் (மத் 16:27; மத் 24:27-31; மத் 25:31-46)

7. பரிசுத்தவான்களோடும் தூதர்களோடும் (சக 14:5; மத் 24:29-31; மத் 25:31-46; 1தெச 1:7-10; யூதா 1:14; வெளி 17:14; வெளி 19:14)

8. மேகங்கள் நடுவில் (மத் 24:29-31; மத் 26:64;வெளி 1:7; தானி 7:13-14)

9. நியாயாதிபதியாகவும், இராஜாவாகவும். (வெளி 19:11-21; ஏசா 11; சக 14; மத் 25:31-46)

10. திருடனைப்போல (1தெச 5:2-4; வெளி 16:15)

வருகை (coming) - παρουσία - parousia - 3952

பெண்பால் பெயர்ச்சொல் - வருதல், தோற்றம், சமீபமாயிருத்தல்

"பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" - அர்மெகேதோனில் யுத்தம் நடைபெறும். அப்போது இயேசு கிறிஸ்து தமது சத்துருக்களைச் சங்காரம் பண்ணுவார். அவர்களுடைய மரித்த சரீரங்களைப் புசிப்பதற்காக கழுகுகள் அங்கே வந்து கூடும். (யோபு 39:30; எசே 39:17-22; லூக்கா 17:34-37; வெளி 19:17-21) இந்த யுத்தத்திற்கு முன்பாகவே சபை எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது. இயேசு கிறிஸ்து இன்னும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டவராக இல்லை. அவர் உயிர்த்தெழுந்து விட்டார். அவர் இன்றும் ஜீவிக்கிறவர். இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தவான்களும், நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். அர்மெகதோனின் யுத்தம் ஆகாயத்தில் நடைபெறாது. பூமியில் நடைபெறும். (எசே 39:17; வெளி 19:11-21).

24 அதிகாரம்

"சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்"- (வெளி 6:12)

"அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும்" - மகா உபத்திரவக் காலம் முடிந்தவுடன் நடைபெறும் காரியம். (மத் 24:29-31; மத் 25:31-46)

"பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" - எருசலேமிலும், அதற்கு அருகிலுமுள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் வருகையைக் காண்பார்கள். எருசலேம் பட்டணத்தைப் பிடிப்பதற்காக அதைச் சூழ்ந்து கொண்டிருக்கும் சேனைகளும், இயேசுவைக் காண்பார்கள். (சக 14:1-5; வெளி 1:7). பலர் இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து சகல ஜாதிகளையும் ஆளுகை செய்யும் வரையிலும் அவரைக் காண்பதில்லை. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பூமி முழுவதும் சென்று இயேசு கிறிஸ்துவோடு பூமியை ஆளுகை செய்வார்கள். அப்போது ஜனங்கள் இயேசு கிறிஸ்துவிடம் வருவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 52:7; ஏசா 66:19-21; சக 8:23)

"மனுஷகுமாரன் வருவதைக் காண்பார்கள்" - இயேசு கிறிஸ்து வருவதை ஜனங்கள் தங்கள் சொந்தக் கண்களால் காண்பார்கள். அவருடைய வருகை காணக்கூடிய விதமாக இருக்கும். இது காணமுடியாத ஆவிக்குரிய காரியமல்ல. (சக 14:1-5; 2தெச 1:7-10; வெளி 19:11-21).

"வானத்தின் மேகங்கள்மேல் வருவார்" - உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து நாற்பது நாட்களுக்குப் பின்பு வானத்தின் மேகங்கள் நடுவே எடுத்துக் கொள்ளப்பட்டார். எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அப்படியே வானத்தின் மேகங்கள்மேல் திரும்பி வருவார். (தானி 7:13-14; அப் 1:9-11; வெளி 14:14,16)

"வல்லமை" - இயேசு கிறிஸ்து திரும்பி வரும்போது வல்லமையோடு வருவார். சாத்தானின் சேனைகளையும், பிசாசுகளையும், அவனுடைய தூதர்களையும் ஒரே நாளில் அழிக்கக்கூடிய வல்லமையோடு வருவார். (ஏசா 24:21-23; யோவே 2; சக 14; 2தெச 1:7-10; யூதா 1:14; வெளி 19:11-21; வெளி 20:1-3)

"மிகுந்த மகிமை" - (மத் 25:31; 2தெச 1:7-10; 2தெச 2:8)

"தூதர்கள்" - இயேசு கிறிஸ்து பூமிக்குத் திரும்பி வரும்போது அவரோடு தூதர்களும் கூடவருவார்கள். (2தெச 1:7-10) அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள். (உபா 30:4; ஏசா 11:11-12) கோதுமை மணியிலிருந்து களைகளைத் தனியாகப் பிரிப்பார்கள். (மத் 13:38-50).

"எக்காளசத்தம்" - இஸ்ரவேல் ஜனங்கள் கூட்டிச்சேர்க்கப்படும்போதெல்லாம் எக்காளம் ஊதப்படும். (யாத் 19:13-19; லேவி 25:9; 1சாமு 13:3; 2சாமு 2:28) இந்த எக்காளம் ஏசா 18:3; ஏசா 27:13; சக 9:14 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த எக்காளமும், வெளி 8:2,6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற ஏழு எக்காளங்களும் வெவ்வேறானவை. நீதிமான்கள் உயிர்த்தெழும் போது கேட்கும் எக்காள சத்தமும், இந்த எக்காள சத்தமும் வெவ்வேறானவை. (1தெச 4:16; 1கொரி 15:51-58)

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" - யூதர்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (மத் 24:22)

"நாலுதிசைகள்" - பூமியின் நான்கு திசைகள். (ஏசா 11:11-12; வெளி 7:1-3; வெளி 20:8)

(5) அத்திமரத்தைப் பற்றிய உவமை - (மாற்கு 13:28; லூக் 21:29)

மத் 24:32 அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.

மத் 24:33 அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

உவமை எண் - 13

"அத்திமரத்தினால் ஒரு உவமை" - மத் 24-25 ஆகிய அதிகாரங்களில் இயேசு கிறிஸ்து 5 உவமைகளைக் கூறியிருக்கிறார். அத்திமரத்தின் உவமை அவருடைய வருகை சமீபம் என்பதை அறிவிக்கிறது. (மத் 24:32-33)

24 அதிகாரம்

"அத்திமரம்" - அத்திமரம் யூதருடைய தேசத்தைக் குறிக்கும் என்று சிலர் கூறுகிறார்கள். அத்திமரத்தைப் பற்றிய உவமையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் காரியம் என்னவென்றால் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நடைபெறும்போது அவருடைய வருகை சீக்கிரமாக இருக்கும் என்பதே.

"அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" - இந்த வசனமும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையே குறிக்கிறது. சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இது குறிக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குத்தான் வேதாகமத்தில் நாம் அடையாளங்களை வாசிக்கிறோம். (பிலி 3:20-21; தீத்து 2:13) சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடையில் ஏழு வருஷ கால இடைவெளி இருக்குமென்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். மத்திய ஆகாயத்திலே இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களைச் சந்தித்து, தம்மோடு அவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துச்செல்வார். (1தெச 2:19;1தெச 3:13; வெளி 19:1-11) பரலோகத்திற்கு இயேசுவோடு சென்ற பரிசுத்தவான்கள் அங்கு அவரோடு சில காலம் இருப்பார்கள். அதன்பின்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் இயேசுவோடு பூமிக்குத் திரும்பி வருவார்கள். (சக 14:5; யூதா 1:14; வெளி 19:11-21)

(6) இந்தத் தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரு சந்ததியில் சம்பவிக்கும் - (மாற்கு 13:30; லூக் 21:32-33)

மத் 24:34 இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 24:35 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" - இந்தச் சம்பவங்கள் நடைபெறும்போது பூமியில் இருக்கும் சந்ததியைக் குறிக்கும். இவை எல்லாமே ஒரே சந்ததியில் தொடர்ச்சியாக நடைபெறும் என்று தெரிகிறது. (மத் 11:16)

"ஒழிந்துபோம்" - இந்த வார்த்தைக்கு இரண்டு விதமாகக் கருத்துக் கூறுகிறார்கள். ஒன்று இந்த வானமும், பூமியும் முற்றிலுமாக அழிந்துபோகும். மற்றொரு வியாக்கியானம் இந்த வானமும், பூமியும் மாற்றமடையும். அல்லது புதுப்பிக்கப்படும். இதற்கு இவர்கள் கூறும் காரணங்கள். என்னவெனில், வானமும், பூமியும் நித்தியமானவை. (சங் 72:5-17; சங் 89:3-37; சங் 104:5; பிர 1:4) அவை மாற்றமடையும். (எபி 1:10-12; எபி 12:25-28; ரோமர் 8:21-23) அக்கினியினால் புடமிடப்படும். (2பேதுரு 3:5-13), இந்தப் பூமி புதுப்பிக்கப்படும். (வெளி 21:1)

ஒழிந்துப்போம் (Pass Away) - παρέρχομαι - parerchomai - 3928

வினைச்சொல் - கடந்துப்போ, ஒழிந்துப்போ, நீங்கு, நீங்கிப்போ, விட்டுவிடு, அகன்றுபோ

(7) அவருடைய வருகையின் குறிப்பிட்ட காலம் அறிவிக்கப்படவில்லை - (மாற்கு 13 34; அப் 1:7)

மத் 24:36 அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்போது என்பது எந்த மனுஷனுக்கும் தெரியாது. தேவதூதருக்கும் தெரியாது. இயேசு கிறிஸ்துவிற்குமே தெரியாது. (மாற்கு 13:32) அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா மட்டுமே அறிவார். (அப் 1:7) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இந்த நாளில் இருக்குமென்று சிலர் ஒரு குறிப்பிட்ட நாளைக் கணிக்கிறார்கள். இதற்கு வேதவசனங்களின் அடிப்படையில் எந்தவித ஆதாரமும் இல்லை.

24 அதிகாரம்

(8) கிறிஸ்துவின் வருகை துன்மார்க்கருக்கு அழிவைக் கொண்டு வரும் - (லூக் 17:22; 1தெச 5:1; யூதா 14)

மத் 24:37 நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.

மத் 24:38 எப்படியெனில், ஜலப் பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண் கொடுத்தும்,

மத் 24:39 ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங் காலத்திலும் நடக்கும்.

"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" - (ஆதி 6:4) நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரையிலும் ஜனங்கள் பாவம் செய்துகொண்டிருந்தார்கள். அப்படியே இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் இருக்கும். ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். (வெளி 19:11-20:10) ஆயிர வருஷ அரசாட்சியிலும் பாவம் தொடரும். (ஏசா 65:20-25; எபே 1:10; வெளி 20:7-10) எல்லா பாவங்களையும் அழிப்பதும் கலகத்தை அடக்குவதுமே ஆயிர வருஷ அரசாட்சியின் நோக்கம். (1கொரி 15:24-28)

"ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" - அனைவரையும் ஜலப்பிரளயம் வாரிக்கொண்டது. (லூக்கா 17:27) அதாவது அழிக்கப்பட வேண்டியவர்கள் அழிந்து போனார்கள். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் பாதுகாக்கப்பட்டார்கள். அதுபோலவே இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது அவர் சிலரை அழித்துப் போடுவார். வேறு சிலரை ஆயிர வருஷ அரசாட்சியில் பலுகிப்பெருகுமாறு பூமியில் விட்டு விடுவார். (சக 14:16-21; ஏசா 2:2-4; ஏசா 66:19-21; வெளி 20).

(9) அர்மகெதோன் - சிலர் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் - சிலர் கைவிடப்படுவார்கள் - (எசே 39:2; சக 14:16; லூக் 17:26; 21:34; வெளி 19:21)

மத் 24:40 அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப் படுவான்.

மத் 24:41 இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.

மத் 24:42 உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிற படியினால் விழித்திருங்கள்.

"அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப் படுவான், ஒருவன் கைவிடப்படுவான்" - "அப்பொழுது" என்பது சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும். (மத் 24:29-31; மத் 25:31-46)

"இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப் படுவாள்" - ஜலப்பிரளயம் ஜனங்களை அழிப்பதுபோல இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போதும் பலர் அழிந்துபோவார்கள். (மத் 24:39; லூக்கா 17:27). அர்மெகதோன் யுத்தத்தில் மாண்டுபோனவர்களின் சடலங்களைப் புசிப்பதற்காக கழுகுகள் வட்டமிட்டு கூடிவரும். (மத் 24:28; லூக்கா 17:34-37; எசே 39:17-22; வெளி 19:17-21) ஜலப்பிரளயத்தில் எல்லோரும் அழிக்கப் படவில்லை. நோவாவும், அவனுடைய குடும்பத்தாரும் அழிக்கப்படாமல் காப்பாற்றப் பட்டார்கள். அதுபோலவே அர்மெகதோன் யுத்தத்தில் எல்லோரும் சங்காரம் பண்ணப்படமாட்டார்கள். இயேசு கிறிஸ்து பூமியை ஆளுகை செய்யும்போது ஒரு கூட்டம் உயிரோடு வைக்கப்பட்டிருப்பார்கள். (சக 14:16-21; மத் 25:34,46; ஏசா 2:2-4; ஏசா 66:19-21; வெளி 20:4-10)

24 அதிகாரம்

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிற படியினால் விழித்திருங்கள்" - விசுவாசிகள் எப்போதுமே விழித்திருக் கிறவர்களாய் இருக்க வேண்டும். அசந்து விடக்கூடாது. சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாம் என்று சுற்றிச் சுற்றிவருகிறான். (மத் 24:39-42)

(10) வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (லூக் 12:39)

மத் 24:43 திருடன் இன்ன ஜாமத்திலே வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிட வொட்டானென்று அறிவீர்கள்.

மத் 24:44 நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

உவமை எண் - 14

"திருடன் இன்ன ஜாமத்திலே வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிட வொட்டானென்று அறிவீர்கள்" - மத்தேயு 24-25 அதிகாரங்களில் நாம் வாசிக்கும் இரண்டாவது உவமை. இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது விசுவாசிகள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மத் 24:43-44)

(11) உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரனைப் பற்றிய உவமை - (லூக் 12:35,41)

மத் 24:45 ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங் கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?

மத் 24:46 எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான்.

மத் 24:47 தன் ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக் காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 24:48 அந்த உழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு,

மத் 24:49 தன் உடன்வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால்,

மத் 24:50 அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து,

மத் 24:51 அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

உவமை எண் - 15

"ஏற்றவேளையிலே தன் வேலைக் காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?" - மத்தேயு 24-25 அதிகாரங்களில் நாம் வாசிக்கும் மூன்றாவது உவமை. இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மத் 24:45-51)

"பாக்கியவான்" - (மத் 5:3)

"அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" - (மத் 13:42)

25 அதிகாரம்

(12) பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமை

மத் 25:1 அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.

மத் 25:2 அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.

மத் 25:3 புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை.

மத் 25:4 புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.

மத் 25:5 மணவாளன் வரத் தாமதித்த போது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கி விட்டார்கள்.

மத் 25:6 நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

மத் 25:7 அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப படுத்தினார்கள்.

மத் 25:8 புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில்எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்.

மத் 25:9 புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள்.

மத் 25:10 அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந் தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

மத் 25:11 பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள்.

மத் 25:12 அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 25:13 மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

"அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடைபெறும் காரியத்தை விளக்குவதற்காக இயேசு கிறிஸ்து இந்த உவமையைக் கூறுகிறார். (மத் 25:3,27-31,33,36,39-51) இந்த அதிகாரத்தில் "அப்பொழுது" **when, then** ஆகிய சுட்டுச்சொற்களை நாம் வாசிக்கிறோம். (மத் 25:15-28)

"பரலோகராஜ்யம்" **(kingdom of heaven)** - இது சபையைக் குறிக்காது.

உவமை எண் - 16

"பரலோகராஜ்யம் பத்து கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கிறது" (மத்தேயு 24-25 அதிகாரங்கள்) இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மத் 25:1-13)

"பத்துக்கன்னிகைகள்" - பத்து வாலிப ஸ்திரீகள். இவர்கள் 2000 வருஷத்திற்கு முன்பு திருமணம் செய்து கொண்ட ஒரு ஸ்திரீயின் சிநேகிதிகள். (மத் 25:1,5-10)

25 அதிகாரம்

"புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை" - இவர்கள் புத்தியில்லாதவர்கள். ஏனெனில் தங்களோடு அதிகப்படியான எண்ணெயைத் தனியாக எடுத்துச்செல்லவில்லை. தீவட்டிகளில் எண்ணெய் வற்றிப்போனால் மறுபடியும் எண்ணெய் ஊற்றினால்தான் எரியும். அதற்குரிய ஆயத்தம் இவர்களிடம் இல்லை. (மத் 25:3-4)

"புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்" - இவர்கள் புத்தியுள்ள கன்னிகைகள். தங்கள் தீவட்டிகளோடு அதிகப்படியான எண்ணெயையும், தங்களோடு எடுத்துச் சென்றார்கள்.

"மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கி விட்டார்கள்" - நடு இரவு வேளை. எல்லோருக்கும் நித்திரை மயக்கமாக இருந்தது. மற்றவர்களைப் போலவே இவர்களும் தூங்கிவிட்டார்கள்.

"நடுராத்திரி" - யூதருடைய திருமணச் சடங்குகள் மாலை வேளையில் ஆரம்பிக்கும். நடு இரவு வரையிலும் திருமணச் சடங்குகள் நடைபெறும். இந்தத் திருமணத்தில் மணவாளன் வருவதற்கு தாமதமாயிற்று. உரிய நேரத்தில் மணவாளனால் வரமுடியவில்லை. ஆகையினால் மணவாளன் நடுராத்திரியிலே வருகிறான்.

"மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று" - இதுவும் யூதருடைய திருமணச்சடங்கில் ஒரு வழக்கம். மணவாளன் தன் வீட்டிலிருந்து புறப்படும் வேளையிலிருந்தே அவனுடைய தோழர்கள் வழி நெடுக "மணவாளன் வருகிறார்" என்று சந்தோஷமாக ஆர்ப்பரித்துக் கொண்டே செல்வார்கள். மணவாட்டியின் வீடு வரையிலும் சந்தோஷமாக சத்தமிட்டுக் கொண்டே வருவார்கள். அவர்களுடைய சத்தம் தான் இந்த வசனத்தில் கேட்கிறது.

"அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்" - மணவாளனை வரவேற்பதற்காக மணவாட்டி தன்னுடைய தோழிகளில் சிலரை ஏற்கெனவே தெரிந்து வைத்திருப்பாள். அவர்கள் மணவாளனை வரவேற்பதற்காக எதிர்கொண்டு போக வேண்டும். (மத் 25:1,6,10)

"அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்" - மணவாளனுடைய தோழர்களின் சத்தத்தைக் கேட்டபோது தீவட்டிகளைப் பிடித்திருந்த கன்னிகைகள் தங்கள் தூக்கத்தை விட்டு எழுந்திருந்தார்கள். தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில் அவர்களுடைய தீவட்டிகளில் எண்ணெய் இருந்தது. இப்பொழுதோ தீவட்டிகள் தொடர்ந்து எரிய மேலும் எண்ணெய் தேவைப்படுகிறது. ஐந்து கன்னிகைகளிடம் மட்டுமே எண்ணெய் இருக்கிறது. இவர்கள் புத்தியுள்ளவர்கள். மீதி ஐந்து கன்னிகைகளிடம் எண்ணெய் இல்லை. இவர்கள் புத்தியில்லாதவர்கள்.

புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்.

"எண்ணெய்" - தீவட்டிக்கு தேவைப்படும் எண்ணெய். ஒருசிலர் எண்ணெயைப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்று கூறுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை வாங்கவோ, விற்கவோ தங்களுக்குள் விருப்பப்பட்டால் பகிர்ந்து கொள்ளவோ முடியாது. ஆகையினால் எண்ணெய் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்காது என்று சிலர் கூறுகிறார்கள். (ஆதி 28:18;2இராஜா 4:1-6; லூக்கா 7:46; லூக்கா 16:6)

"மணவாளன் வந்துவிட்டார்....கதவும் அடைக்கப்பட்டது" - யூதருடைய திருமண வீடுகளில் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். அழைக்கப்படாதவர்கள் வீட்டிற்குள் வரமுடியாது. ஒருவேளை திருடர்களுடைய பயத்தினால் இப்படி கதவுகள் அடைக்கப்பட்டிருக்கலாம்.

25 அதிகாரம்

மணவாளன், மணவாட்டி, கன்னிகைகள் - இந்த உவமையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சத்தியங்கள்

1. இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறவர்கள் அனைவருமே தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள். இரட்சிக்கப் பட்டவர்களுக்குள் வேறு பாடில்லை.(மத் 13:38-49; மத் 18:3; யோவான் 3:3-5; 2கொரி 5:17-18; ரோமர் 6:7,18,22; ரோமர் 8:1-13; கலா 5:19-24; எபே 4:24; 1யோவான் 2:29; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:1-4,18; எபி 12:14)

2. இந்த உவமையில் எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிப்பிடாது. (மத் 25:8)

3. இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். (யோவான் 3:5; ரோமர் 8:9-16) இரட்சிப்பு வேறு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வேறு. இவ்விரண்டுமே வெவ்வேறு அனுபவங்கள். (லூக்கா 11:13; யோவான்7:37-39;யோவான் 14:16-17; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; அப் 8:15-16; அப் 19:1-6)

4. உபத்திரவக் காலம் ஆரம்பமாவதற்கு முன்பாகவே சபை எடுத்துக் கொள்ளப் படும்.

5. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு தேவையான பெலனைப் பெற்றுக் கொள்வதற்காக. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் விசுவாசிகளுக்கு அருளப்படுகிறது. (லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12; அப் 1:4-8)

6. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் எல்லா விசுவாசிகளுமே பங்குபெறுவார்கள். சபை எடுத்துக் கொள்ளப்படும்போது எல்லா விசுவாசிகளும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

7. புதிய எருசலேமில் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் இருப்பார்கள். (வெளி 21:2,9-10) (எபி 11:10-16; எபி 13:14; யோவான் 14:1-3)

8. உபத்திரவக்காலத்தில்கூட கிருபையின் கதவுகள் யூதருக்கும், புறஜாதி யாருக்கும் அடைக்கப்படுவதில்லை. உபத்திரவக் காலத்திலும் திரளான ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள். (அப் 2:16-21;வெளி 7:1-17; வெளி 12:17; வெளி 15:2-4; வெளி 20:4-6).

(13) தாலந்துகளைப் பற்றிய உவமை - (மத் 16:27; லூக் 19:11)

மத் 25:14 அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது.

மத் 25:15 அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்.

மத் 25:16 ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக் கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான்.

மத் 25:17 அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்.

மத் 25:18 ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்துவைத்தான்.

மத் 25:19 வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்.

25 அதிகாரம்

மத் 25:20 அப்பொழுது, ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து: ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு, இதோ, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.

மத் 25:21 அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

மத் 25:22 இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து: ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.

மத் 25:23 அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிவேசி என்றான்.

மத் 25:24 ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன்.

மத் 25:25 ஆகையால், நான் பயந்துபோய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்.

மத் 25:26 அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில்அறுக்கிற வனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிற வனென்றும் அறிந்திருந்தாயே.

மத் 25:27 அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது; அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக் கொள்வேனே, என்று சொல்லி,

மத் 25:28 அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள்.

மத் 25:29 உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

மத் 25:30 பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான்.

உவமை எண் - 17

"அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது" - (மத்தேயு 24-25 அதிகாரங்கள்) இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது ஞானமுள்ளவர் களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மத் 25:14-30) - (மத் 4:17; மத் 19:24)

"தாலந்து" - நமது பொருளாதார வழக்கத்தின்படி இது சுமார் ஒரு இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையாகும்.

"அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்" - மத் 18:23-24 ஆகிய வசனங்களிலும் இங்கும் எஜமான் கணக்கு கேட்பதைக் குறித்து வாசிக்கிறோம்.

"ஆண்டவனே" - இந்த உவமையில் கூறப்பட்டிருக்கிற எஜமான். இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்காது.(மத் 25:14)

25 அதிகாரம்

"கடினமுள்ள மனுஷன்" - தன் எஜமானைக் குற்றப்படுத்துகிறான். தனது சோம்பற்தனத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுமாறு கூறுகிறான்.

"நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமானவர்" - சோம்பேறி மற்றவர்களைக் குறித்து இப்படித்தான் நினைக்கிறான். மற்றவர்கள் எல்லாம் திறமைசாலிகள். ஆகையினால் அவர்களுக்கு எல்லாக் காரியமும் கைகூடி வருகிறது. வாழ்வில் வளம்பெறுகிறார்கள். ஆனால் தான் மட்டும் ஒன்றுமில்லாதவனாக இருப்பதாக நினைக்கிறான். இந்தச் சோம்பேறி ஒருவேலையும் செய்வதில்லை.

"பயந்துபோனான்" - சோம்பேறி பயப்படுவான். எந்த முயற்சியும் எடுக்கமாட்டான். ஏதாவது புதிதாக ஒன்றைச் செய்தால் நஷ்டம் வருமோ என்று பயந்து ஒன்றுமே செய்யமாட்டான்.

"நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிற வனென்றும் அறிந்திருந்தாயே" - சோம்பேறி எஜமானைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறான். ஆகையினால், இவன் நம்பிக்கையோடு முயற்சி பண்ணணியிருக்க வேண்டும். ஆனால் இவனோ தனக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளைப் புதைத்து வைத்துவிடுகிறான்.

சோம்பலுள்ள ஊழியக்காரனின் சுபாவங்கள்

1. நன்றியில்லாதவன் (மத் 25:18)
2. தவறு புரிகிறவன் (மத் 25:18,24)
3. நீதியில்லாதவன் (மத் 25:18)
4. மற்றவர்களிடம் குற்றம் கண்டு பிடிப்பான், மற்றவர்கள்மீது குற்றம் சுமத்துவான் (மத் 25:24)
5. தான் செய்வது நியாயமானது என்று சாதிப்பான் (மத் 25:24)
6. பயப்படுவான் (மத் 25:25)
7. துன்மார்க்கன் (மத் 25:26)

சோம்பலுள்ள ஊழியக்காரனுக்கு தண்டனை

1. கடிந்துகொள்ளப்பட்டான் (மத் 25:26)
2. தன்வாயின் வார்த்தையினாலேயே நியாயந்தீர்க்கப்பட்டான் (மத் 25:26)
3. நம்பிக்கைக்குரியவனாக நடந்து கொள்ளாததினால் நியாயந்தீர்க்கப் பட்டான் (மத் 25:27)
4. அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த தாலந்துகள் அகற்றப்பட்டன (மத் 25:28-29)
5. தன்னுடைய எஜமானின் பணியிலிருந்து நிரந்தரமாக அகற்றப்பட்டான்.(மத் 25:30,மத் 13:42)

"பிரயோஜனமற்ற ஊழியக்காரன்" - இவனும் மற்றவர்களைப் போல ஊழியக்காரன்தான். அவர்களோ பிரயோஜனமுள்ளவர்கள். ஆனால் இவனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. பிரயோஜனமற்ற ஊழியக்காரன். (மத் 25:14,19,30)

(14) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேசங்கள்மீது நியாயத்தீர்ப்பு-(சக 14;வெளி 19:11)

மத் 25:31 அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.

மத் 25:32 அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறி யாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து,

மத் 25:33 செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்.

மத்தேயு - தொகுப்புரை

25 அதிகாரம்

மத் 25:34 அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

மத் 25:35 பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்;

மத் 25:36 வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்.

மத் 25:37 அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்?

மத் 25:38 எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்?

மத் 25:39 எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.

மத் 25:40 அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

மத் 25:41 அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.

மத் 25:42 பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை;

மத் 25:43 அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப் பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்.

மத் 25:44 அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப் பட்டவராகவும், காவலிலடைக்கப் பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள்.

மத் 25:45 அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

மத் 25:46 அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.

"மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது" - ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் நடைபெறப்போகும் காரியம். (மத் 24:29-31; வெளி 19:11-21)

25 அதிகாரம்

"மகிமை" - (மத் 24:30; 2தெச 1:7-10; 2தெச 2:8)

"சகல பரிசுத்த தூதரோடுங்கூட"- (மத் 24:31)

"தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும் காரியம். (மத் 24:29, மத் 25:31,34,37,41, 44,45, மத் 19:28; எரே 14:2)

"சகல ஜனங்களும்" - எல்லா தேசங்களிலுமுள்ள எல்லா தனிநபர்களையும் இந்த வாக்கியம் குறிக்காது. பலர் இயேசுவை அறியாமல் இருப்பார்கள்.(ஏசா 2; ஏசா 66:19-21; சக 8:23) இயேசு கிறிஸ்து தமது ராஜ்யத்தை ஸ்தாபனம் பண்ணவரும்போது இஸ்ரவேலுக்கு துன்பம் விளைவித்த ஜனங்களை நியாயந்தீர்ப்பார். (மத் 25:31-46) துன்மார்க்கரின் நியாயத் தீர்ப்பு இனிமேல் வரும். (வெளி 20:11-15)

"மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரிப்பார்" - பகலில் செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் ஒன்றாக மேயும். ஆனால் இரவு வேளையிலோ மேய்ப்பர்கள் அவற்றை வெவ்வேறாகப் பிரித்து கொட்டிகளில் அடைப்பார்கள். (மத் 13:39-50)

"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" - ராஜ்யத்தை யாரெல்லாம் சுதந்தரிப்பார்கள் என்பதை இந்த வசனம் கூறுகிறது. (தானி 7:9-14,22; வெளி 11:15) சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (சங் 37:11; மத் 5:5)

"உலகம் உண்டானது முதல்"-(மத் 13:35)

"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" - இஸ்ரவேல் தேசத்திற்கு ஜனங்கள் என்ன செய்தார்களோ அதன் அடிப்படையில் அவர்களுக்கு வெகுமதியோ அல்லது தண்டனையோ கொடுக்கப்படும். இது கர்த்தர் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கை. (ஆதி 12:1-3)

"என் சகோதரர்" - இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தின் பிரகாரமாக அவருடைய சகோதரர்கள். (மத் 10:6; யோவான் 1:11; ரோமர் 9:5)

"சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" - நித்திய ஆக்கினையை அடைவதற்காக சிலர் சபிக்கப்பட்டு, அக்கினிக்கடலுக்கு அனுப்பப் படுவார்கள். (மத் 25:41,46; மத் 13:39-50; மத் 24:51; வெளி 14:9-11; வெளி 19:20; வெளி 20:10) மரித்த துன்மார்க்கர் எல்லோருமே நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள். (வெளி 20:4-6,11-15)

"பிசாசுக்காவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி" - நித்திய அக்கினி சாத்தானுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. (யோவான் 3:16-20) மனுஷர்கள் அங்கு போகவேண்டிய கட்டாயம் இல்லை. ஆயினும் மனந்திருந்தவே மாட்டேன் என்று பாவத்தில் வைராக்கியமாக ஜீவிப்போருக்கு வேறு வழியேயில்லை. அவர்கள் நரகத்திற்குப் போவார்கள். சாத்தானோடு நித்திய காலமாக இருப்பார்கள். (மத் 25:41,46)

நித்திய (everlasting) - αἰώνιος - aioonios - 166

பெயரடை - நித்திய

(அ) துவக்கமோ அல்லது முடிவோ அல்லாத, அநாதி ரோம. 16:25

(ஆ) துவக்கம் இல்லாத ரோம. 14:25

(இ) முடிவு இல்லாத

மத்தேயு - தொகுப்புரை

25 அதிகாரம்

நித்தியமான காரியங்கள்

1. தேவன் (ரோமர் 1:20; ரோமர் 16:26)
2. பரிசுத்த ஆவியானவர் (எபி 9:14)
3. ஜீவன் (மத் 19:16,29; மத் 25:46; யோவான் 3:16,36; ரோமர் 6:22)
4. இரட்சிப்பு (எபி 5:9)
5. மீட்பு (எபி 9:12)
6. சுதந்தரம் (எபி 9:15)
7. சுவிசேஷம் (வெளி 14:6)
8. உடன்படிக்கை (எபி 13:20)
9. இராஜ்யம் (2பேதுரு 1:11)
10. மகிமையும், வல்லமையும் (1தீமோ 6:16)
11. ஆறுதல் (2தெச 2:16)
12. மகிமை (2தெச 1:10; 1பேதுரு 5:10)
13. உயிர்த்தெழுந்த சரீரங்கள்(2கொரி 5:1)
14. காணாதவைகள் (2கொரி 4:18)
15. வாசஸ்தலங்கள் (லூக்கா 16:9)
16. அழிவு (2தெச 1:9)
17. நியாயத்தீர்ப்பு (எபி 6:1-2)
18. ஆக்கினை (மாற்கு 3:29)
19. அக்கினி(மத் 18:8,மத் 25:41;யூதா 1:7)
20. தண்டனை (மத் 25:46)

26 அதிகாரம்

105. இயேசு தமது மரணத்தை மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

மத் 26:1 இயேசு இந்த வசனங்களையெல்லாம் சொல்லி முடித்தபின்பு, அவர் தம்முடைய சீஷரை நோக்கி:

மத் 26:2 இரண்டு நாளைக்குப்பின்பு பஸ்கா பண்டிகை வருமென்று அறிவீர்கள்; அப்பொழுது, மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்.

"இயேசு இந்த வசனங்களையெல்லாம் சொல்லி முடித்தபின்பு" - இத்துடன் இயேசு கிறிஸ்துவின் பொதுவான ஊழியம் நிறைவு பெறுகிறது. அவருடைய பாடுகளின் காலம் இதிலிருந்து ஆரம்பமாகிறது. (மத் 26:1-27:66)

தீர்க்கதரிசன எண் - 39

"மனுஷகுமாரன் சிலுவையில் அறையப் படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்" - (மத் 26:2) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"பஸ்கா பண்டிகை" - எகிப்தில் ஆரம்பமாயிற்று. எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகள் சங்காரம் பண்ணப்பட்டபோது யூதர்கள் தங்கள் வீடுகளில் பஸ்கா பண்டிகையை ஆசரித்தார்கள். (யாத் 12) நிசான் மாதம் 14-ஆம் தேதி பஸ்கா பண்டிகை துவங்குகிறது. இத்துடன் புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் 8 நாட்களுக்கு நடைபெறும். எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேலர்கள் விடுவிக்கப்பட்டதை நினைவுகூரும் விதமாக புளிப்பில்லா அப்பப்பண்டிகையை யூதர்கள் கொண்டாடினார்கள். (லேவி 23; யாத் 23:14)

"சிலுவையில் அறையப்படுதல்" - சிலுவை மரத்தில் ஒரு நபரை ஆணிகளால் அறைதல். புதிய ஏற்பாட்டில் 46 இடங்களில் இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழங்காலத்தில் பொனீஷியர்களிடம் (Phoenicians) குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்து கொல்லும் வழக்கம் இருந்தது. கிரேக்கரும் ரோமாபுரியாரும் அவர்களிடமிருந்து இந்தப் பழக்கத்தை தங்கள் நாடுகளுக்கும் கொண்டு வந்தார்கள். மிகவும் கொடிய குற்றவாளிகளையும் அடிமைகளையும் துன்புறுத்திக் கொல்வதற்காகச் சிலுவையில் அறையும் தண்டனையைக் கொடுத்தார்கள். கிபி. 4-ஆம் நூற்றாண்டில் கான்ஸ்டான்டைன் (Constantine) காலம் வரையிலும் சிலுவையில் அறையும் வழக்கம் இருந்தது.

சிலுவையில் அறை (crucified) - σταυρόω - staurooo - 4717

வினைச்சொல் - சிலுவையில் அறை

சிலுவையில் அறைதல்

1. உலகத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைதல் (மத் 26:2; மத் 27:22-44; 1கொரி 1:23; கலா 3:13; 1பேதுரு 2:24)

2. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவோரை சிலுவையில் அறைதல் (மத் 23:34; யோவான் 21:18)

3. நமது பழைய மனுஷனைக் கிறிஸ்துவோடு சிலுவையில் அறைதல் (ரோமர் 6:6; கலா 2:20)

4. பாவத்தைச் சிலுவையில் அறைதல் (கலா 2:20; கலா 5:24)

5. விசுவாசிகளுக்கு உலகமும், உலகத்திற்கு விசுவாசிகளும் சிலுவையில் அறையப் படுதல் (கலா 6:14)

6. மறுதலித்துப்போனவர்கள் தேவனுடைய குமாரனை மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள். (எபி 6:6)

106. இயேசுவைக் கொல்வதற்குச் சதியாலோசனை - (மத் 2:16; 12:14; மாற்கு 3:6; மாற்கு 14:1; லூக் 4:28; லூக் 22:1; யோவான் 5:16; 7:30, 44; 8:59; 10:31; 11:47,53)

மத் 26:3 அப்பொழுது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும், காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரமனையிலே கூடிவந்து,

26 அதிகாரம்

மத் 26:4 இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணினார்கள்.

மத் 26:5 ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்றார்கள்.

அரமனை (palace) - αὐλή - aulee - 833

பெண்பால் பெயர்ச்சொல் - அரமனை, முற்றம், தொழுவம், பிரகாரம் (மத் 26:58,69; மாற்கு 14:54,66; மாற்கு 15:16; லூக்கா 11:21; யோவான் 18:15). பிரகாரம் (court) (வெளி 11:2) மண்டபம் (hall) (மாற்கு 15:16; லூக்கா 22:55).

"காய்பா" - அன்னாவின் மருமகன். (யோவான் 18:13) இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தீர்க்கதரிசனம் கூறியவன். (யோவான் 11:49-51; யோவான் 18:14) இயேசு கிறிஸ்துவின் வழக்கை விசாரித்தவன். (மத் 26:2-3,57,63-65; யோவான் 18:24-28) பேதுருவின் வழக்கையும், மற்ற அப்போஸ்தலர்களின் வழக்குகளையும் விசாரித்தவன். (அப் 4:1-22) இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து இரண்டு வருஷங்களுக்குப்பின்பு விட்டேலியஸ் (Vitellius) என்பவன் சீரியாவின் ஆளுநரானான். இவன் பிலாத்துவையும், காய்பாவையும் பதவியிலிருந்து அகற்றிவிட்டான். இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ததற்காக மனச்சாட்சியில் குத்தப்பட்ட காய்பா கியி. 35-ஆவது வருஷத்தில் தற்கொலை செய்து கொண்டு மரித்துப்போனான் என்று யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

107. இயேசுவின்மீது அபிஷேகம் - (மாற்கு 14:3; லூக் 7:36; யோவான் 12:1)

மத் 26:6 இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில்,

மத் 26:7 ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அவர்போஜனபந்தியிலிருக்கும் போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.

மத் 26:8 அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு விசனமடைந்து: இந்த வீண்செலவு என்னத்திற்கு?

மத் 26:9 இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள்.

மத் 26:10 இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன்தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்.

மத் 26:11 தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்.

மத் 26:12 இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது.

மத் 26:13 இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"குஷ்டரோகி" - பெத்தானியாவில் இயேசு சொஸ்தமாக்கிய குஷ்டரோகியாக இருக்கலாம்.

வெள்ளைக்கல் பரணி (alabaster box) - ἀλάβαστρον - alapastron - 211

பால்வேறுபாடு இல்லாத பெயர்ச்சொல் - வெள்ளைக்கல் பரணி (அல்லது) வெள்ளைக்கல் பரணியால் செய்யப்பட்ட பேழை, பரணி

26 அதிகாரம்

"பரிமளதைலம்" - விலையுயர்ந்த தைலம். (யோவான் 12:3, 5)

"அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்" - கடைசி வாரத்தில் இரண்டு அபிஷேகங்கள்

1. லாசருவின் வீட்டில் - பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்பு (யோவான் 12:1-8)

2. குஷ்டரோகியாகிய சீமோனின் வீட்டில் - பஸ்காவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு (மத் 26:7-13; மாற்கு 14:3-9)

"நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்" - திருவிருந்தில் அப்பமும், ரசமும் பரிமாறப்படுகிறது. அப்பம் இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளம். இயேசு கிறிஸ்து சரீரப் பிரகாரமாக நம் மத்தியில் இப்போது இல்லை. அவர் பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது இந்தப் பூமிக்கு வருவார். (மத் 24:29-31; வெளி 19:11-21; யூதா 1:14; சக 14:1-21) திருவிருந்தில் பரிமாறப்படும் அப்பமும், ரசமும் இயேசு கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் அடையாளம். (அப் 2:42,46; அப் 20:7,11; 1கொரி 10:16-17; 1கொரி 11:23-28)

தீர்க்கதரிசன எண் - 40

"இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது..............." - (மத் 26:12-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

108. இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (மாற்கு 14:10; லூக் 22:3)

மத் 26:14 அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்:

மத் 26:15 நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்.

மத் 26:16 அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

"முப்பது வெள்ளிக்காசு" - ஒரு அடிமையின் விலை. (யாத் 21:32)

109. பஸ்காவிற்கு ஆயத்தம் - (மாற்கு 14:12; லூக் 22:7)

மத் 26:17 புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் முதல்நாளிலே, சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

மத் 26:18 அதற்கு அவர்: நீங்கள் நகரத்திலே இன்னானிடத்திற்குப் போய்: என் வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன் என்று போதகர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார்.

மத் 26:19 இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

"புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல்நாளிலே, சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்" - பஸ்கா புசிப்பதற்கான ஆயத்தம். (மத் 26:18-19) பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்குப் பஸ்கா ஆட்டுக்குட்டியோடு சென்று பஸ்கா பலி செலுத்தியிருப்பார்கள். பஸ்கா போஜனத்தில் புளிப்பில்லாத அப்பம், திராட்சரசம், கசப்பான கீரை ஆகியவை பரிமாறப்படும்.

26 அதிகாரம்

"பஸ்காவை ஆசரிப்பேன்" - இயேசு கிறிஸ்து பஸ்கா போஜனத்தைப் புசித்தார் என்பதற்கு இந்த வசனத்தை சான்றாகக் கூறலாம். பஸ்காவைப் பற்றி வேதத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் காரியங்கள்

1. பண்டிகையின் முதலாவது நாள் (மத் 26:17)

2. நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் (மத் 26:17)

3. பஸ்காவை ஆசரிப்பேன் (மத் 26:18).

4. அவர்கள் பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள் (மத் 26:19)

5. அவர்கள் அமர்ந்து பஸ்கா போஜனம் பண்ணினார்கள் (மத் 26:20-21).

6. அவர்கள் போஜனம்பண்ணுகையில் (மத் 26:26)

7. நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். (லூக்கா 22:15).

8. தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லை. (லூக்கா 22:16).

9. அவர்கள் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில் (யோவான் 13:2)

10. அவர் போஜனத்தை விட்டெழுந்தார். (யோவான் 13:4)

"உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன்" - பஸ்கா பண்டிகையின்போது எருசலேமிற்கு இஸ்ரவேல் ஜனங்கள் பல ஊர்களிலிருந்தும் வருவார்கள். எருசலேம் ஊரார் அவர்களை அன்போடு வரவேற்று, தங்களுடைய வீடுகளிலே தங்க வைப்பார்கள். அவர்களுடைய பஸ்காவைப் புசித்த பின்பு, பஸ்கா ஆட்டுக்குட்டியின் தோல்களையும், சடங்குகளில் பயன்படுத்திய பாத்திரங் களையும் அந்தந்த வீட்டுக்காரர்களிடம் இலவசமாகக் கொடுத்துச் செல்வது வழக்கம்.

"இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்" - பேதுருவும், யோவானும் பஸ்கா ஆட்டுக் குட்டியைத் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்று பலியிட்டார்கள். (லூக்கா 22:8) இந்தச் சடங்குக் காரியங்கள் மாலை 3.00 மணியளவில் நடந்திருக்கலாம். அதன்பின்பு பலியிடப்பட்ட பஸ்காவை அக்கினியில் சுட்டு கசப்பான கீரையோடு அவர்கள் புசித்தார்கள். (யாத் 12:8)

110. கடைசி பஸ்கா - (மாற்கு 14:17; லூக் 22:14; யோவான் 13)

(1) தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார்

மத் 26:20 சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங் கூட அவர் பந்தியிருந்தார்.

மத் 26:21 அவர்கள் போஜனம் பண்ணுகையில், அவர்: உங்களி லொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்.

மத் 26:22 அப்பொழுது, அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: ஆண்டவரே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள்.

மத் 26:23 அவர் பிரதியுத்தரமாக: என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்.

மத் 26:24 மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப் படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்.

மத் 26:25 அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவரை நோக்கி: ரபீ, நானோ? என்றான்; அதற்கு அவர்: நீ சொன்னபடிதான் என்றார்.

26 அதிகாரம்

"சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங் கூட அவர் பந்தியிருந்தார்" - பந்தியிருந்தார் என்பது தரையில் அமர்ந்து, போஜனம் பண்ணுவதைக் குறிக்கும். பஸ்காவை நின்று கொண்டுதான் புசிக்க வேண்டும் என்று பிரமாணம் எதுவும் இல்லை. கானானுக்குள் பிரவேசித்த பின்பு அவர்கள் பஸ்காவை நின்று கொண்டு புசிக்க வேண்டிய அவசரம் எதுவுமில்லை. தற்காலத்தில் யூதர்கள் பஸ்காவை ஆசரிக்கும்போது ஆசனங்களில் அமர்ந்து போஜனம் பண்ணுகிறார்கள். இனிமேலும் அவர்கள் அடிமைகள் அல்ல. விடுதலையாக்கப் பட்டவர்கள். ஓய்வாகவும், அமரிக்கையாகவும் இருக்கிறோம் என்பதைக் காண்பிப்பதற்காக அமர்ந்து போஜனம் பண்ணுகிறார்கள்.

"அவர்கள் போஜனம் பண்ணுகையில்" - பஸ்கா போஜனம் பண்ணும்போது பந்தியில் அமர்ந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்திரத்தில் தனித்தனியாக திராட்சரசம் பரிமாறப்படும். ஒருவர் ஆசீர்வாதம் கூறுவார். அதன்பின்பு, அனைவரும் திராட்சரசம் பருகுவார்கள். பருகிய பின்பு, புளிப்பில்லாத அப்பமும், கசப்பான கீரைகளும், பஸ்கா ஆடும், அங்கு கொண்டுவரப்படும். தங்களுடைய ஜீவியத்தில் தேவன் கொடுத்திருக்கும் ஏராளமான ஆசீர்வாதங்களுக்காகவும், ஒவ்வொரு விருந்தினருக்கும் கர்த்தர் போஜனம் கொடுத்திருப்பதற்காகவும் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுப்பார்கள். அதன்பின்பு இரண்டாம் முறையாக எல்லோரும் பாத்திரத்திலுள்ள திராட்ச ரசத்தைப் பருகுவார்கள். யாத் 12:26-27 ஆகிய வசனங்களை வாசித்து, பஸ்கா பண்டிகையின் அர்த்தத்தை ஒருவர் விளக்கிக் கூறுவார். விளக்கம் கொடுத்த பின்பு அனைவரும் சங்கீதம் 113, 114 ஆகியவற்றைப் பாடுவார்கள். மறுபடியும் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுப்பார்கள். இதன் பின்பு பஸ்கா போஜனத்தைப் புசிப்பார்கள். போஜனம் பண்ணிய பிறகு மூன்றாம் முறையாக பாத்திரத்திலுள்ள திராட்ச ரசத்தைப் பருகுவார்கள். பருகிய பின்பு, சங்கீதம் 115, 118 ஆகியவற்றை பாடுவார்கள். மத் 26:30; மாற்கு 14:26 ஆகிய வசனங்களில் இந்தக் காரியங்களே கூறப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 41

"உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்............" (மத் 26:21-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் மரணத்தைக் குறிக்கிறது. தமது மரணத்தை அவர் பலமுறை முன்னறிவித்திருக்கிறார். (மத் 16:21)

"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" - யூதாஸ்காரியாத்து நரகத்திற்குப் போவான் என்பதன் விளக்கம். (யோவான் 17:12; சங் 69:22-28; சங் 109:6-20)

(2) கர்த்தருடைய பந்தி - (மாற்கு 14:22; லூக் 22:19; 1கொரி 11:23)

மத் 26:26 அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

மத் 26:27 பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்;

மத் 26:28 இது பாவமன்னிப் புண்டாகும் படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.

மத் 26:29 இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

26 அதிகாரம்

மத் 26:30 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்.

தீர்க்கதரிசன எண் - 42

"நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது.........." (மத் 26:26-29) மத் 26:26-28 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய ராஜ்யத்தில் மத் 26:29 ஆவது வசனம் நிறைவேறும்.

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்து அப்பத்தைப் பிட்டார். அது அவருடைய சரீரத்திற்கு அடையாளம். அதுபோலவே அவருடைய சரீரமும் பிட்கப்படும். வாரினால் அடிக்கப்பட்ட பின்பு, அவருடைய சரீரத்தைப் பார்க்கும்போது, மனுஷகுமாரன் சரீரம்போல் இராது. "மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்". (ஏசா52:14) அப்பம் புளிப்பில்லாதது. அப்பத்தில் புளிப்பு இருக்கக்கூடாது. புளிப்பு பாவத்தைக் குறிக்கும். தேவகுமாரனிடத்தில் பாவமே காணப்படவில்லை. (மத் 13:33)

"புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" - திராட்சரசம் இயேசு கிறிஸ்து சிந்திய இரத்தத்திற்கு அடையாளம். திராட்சைப் பழத்திலிருந்து தண்ணீர் சேர்க்காமல் தயாரிக்கப்பட்ட திராட்சப்பழ ரசம் (மத் 26:29). இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. (எபி 9:22; லேவி 17:11) இரத்தம் இல்லாமல் உடன்படிக்கையும் இல்லை. (யாத் 24:8; எபி 9:20) கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவானவர் சிந்திய திருஇரத்தமே நமது பாவங்களுக்குப் பரிகாரம். இயேசு கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது கிறிஸ்துவின் இரத்தம் நமது சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (மாற்கு 14:24; லூக்கா 22:20; யோவான் 6:53-56; யோவான் 19:34; அப் 20:28; ரோமர் 3:24-25; ரோமர் 5:9; 1கொரி 10:16; 1கொரி 11:25; எபே 1:7; எபே 2:13-16; கொலோ 1:14-20;எபி 9:12-15; எபி 10:19-29; எபி 12:24; எபி 13:12,20; 1பேதுரு 1:2,18-23; 1யோவான் 1:7; 1யோவான் 5:6; வெளி 1:5-6; வெளி 5:9; வெளி 7:14; வெளி 12:11).

"புது உடன்படிக்கை" - இந்தப் புது உடன்படிக்கையை தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள். (ஏசா 49:8; ஏசா 55:3; ஏசா 61:8; எரே 31:31-33; எரே 32:40; எசே 37:26) மோசேயின் பிரமாணத்திற்குப் பதிலாக இந்தப் புதிய உடன்படிக்கை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (2கொரி 3:6-15; கலா 3:13-25; கலா 4:21-31; கொலோ 2:14-17; எபே2:14-15; எபி 7:11-28; எபி 8:8-13; எபி 9:1-24; எபி 10:1-23)

உடன்படிக்கை (covenant) - διαθήκη - diatheekee - 1242

பெண்பால் பெயர்ச்சொல் - உடன்படிக்கை, ஆணை, ஏற்பாடு, சாசனம்

புதிய ஏற்பாட்டில் இந்தச் சொல் உடன்படிக்கை **(covenant)** என்றும் (லூக்கா 1:72; அப் 3:25; அப் 7:8; ரோமர் 9:4; ரோமர் 11:27; கலா 3:15,17; கலா 4:24; எபே 2:12; எபி 8:6-10; எபி 9:4; எபி 10:16,29; எபி 12:24; எபி 13:20), ஏற்பாடு **(testament)** (மத் 26:28; மாற்கு 14:24; லூக்கா 22:20; 1கொரி 11:25; 2கொரி 3:6,14; எபி 7:22; எபி 9:15,17,20; வெளி 11:19) என்றும் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

"அநேகருக்காக" - அநேகருடைய பாவங்களைப் போக்குவதற்கு இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தினார். இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்கச் சொல் ஏஸ் **(eis).**

அதற்காக **(for)** - εἰς - **eis** – 1519

முன்னிடைச்சொல் - நோக்கி, மூலம்

"இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடு இயேசு கிறிஸ்து போஜனம் பண்ணுவார். (மாற்கு 14:25; லூக்கா 22:16,18,30; லூக்கா 24:42-43; வெளி 2:7,17; வெளி 19:9)

26 அதிகாரம்

(3) தம்மைப் பேதுரு மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மாற்கு 14:27; லூக் 22:31; யோவான் 13:36)

மத் 26:31 அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்.

மத் 26:32 ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்.

மத் 26:33 பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான்.

மத் 26:34 இயேசு அவனை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 26:35 அதற்கு பேதுரு: நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன் என்றான்; சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.

தீர்க்கதரிசன எண் - 43

"மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்............" (மத்26:31-32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 20

"மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்" (மத் 26:31; சக 13:7)

தீர்க்கதரிசன எண் - 44

"இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" - (மத் 26:34) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து இந்தத் தீர்க்கதரிசனத்தை மேலும்சில சமயங்களில் கூறியிருப்பார் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். (யோவான் 13:38; லூக்கா 22:34, மத் 26:30-35; மாற்கு 14:26-32)

V. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (மாற்கு 14:32; லூக் 22:39; யோவான் 18:1)

மத் 26:36 அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி;

மத் 26:37 பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டு போய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.

மத் 26:38 அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி,

மத் 26:39 சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.

மத் 26:40 பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?

26 அதிகாரம்

மத் 26:41 நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.

மத் 26:42 அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாததாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.

மத் 26:43 அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரை பண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது.

மத் 26:44 அவர் மறுபடியும் அவர்களை விட்டுப் போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்.

மத் 26:45 பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது.

மத் 26:46 என்னைக் காட்டிக் கொடுக்கிறவன், இதோ, வந்து விட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்.

"கெத்செமனே" - தோட்டம். எருசலேமிலிருந்து கீதரோன் பள்ளத்தாக்கின் அருகில் உள்ளது. பட்டணத்தின் மதில் சுவரிலிருந்து 200 கெஜம் தூரத்தில் உள்ள தோட்டம். (யோவான் 18:1) கெத்செமனே என்பதற்கு "எண்ணெய் ஆலை" என்று பொருள். இயேசு கிறிஸ்து எருசலேமில் இருக்கும்போது ஜெபம் பண்ணுவதற்காக அவர் அங்கு விரும்பிச் செல்வது வழக்கம். (லூக்கா 22:39; யோவான் 18:2) யோசேப்பு, அல்லது நிக்கொதேமு அல்லது எருசலேமில் இயேசுவைப் பின்பற்றிய ஒருவருடைய தோட்டமாக இருக்கலாம். (யோவான் 19:38-39)

"பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" - இவர்கள் இயேசு கிறிஸ்து மறுரூபமானதைக் கண்டார்கள். (மத் 17:1-8) இப்போது அவருடைய துக்கத்தையும், வியாகுலத்தையும் காண்கிறார்கள். (லூக்கா 22:44,53)

"இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிப்பதற்கு முன்பாகவே, சாத்தான் அவரைக் கொல்வதற்குச் சதி பண்ணுகிறான். ஆகையினால், இயேசு தமது சரீரத்தைப் பிதாவிடம் ஒப்புக்கொடுக்கிறார். பிதா அவருடைய ஜெபத்தைக் கேட்டு, மரணத்திலிருந்து மீட்கிறார். (எபி 5:7; லூக்கா 22:43-44) இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன்பாக அவருடைய ஜீவியத்தின் ஏதாவது ஒரு காலத்தில் அவர் மரித்திருப்பார் என்றால் தேவனுடைய மீட்பின் திட்டம் தோல்வியடைந்திருக்கும். கிறிஸ்து கல்வாரி சிலுவைக்குச் செல்ல வேண்டும். சாத்தானின் வல்லமைகளை நசுக்க வேண்டும். சாத்தானின்மீதும், அவனுடைய அந்தகார சக்திகளின்மீதும் ஜெயம்பெற வேண்டும். (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24). இந்த வியாக்கியானம் தவிர மத் 26:42 ஆவது வசனம் சிலுவையின்மீது அவருடைய மரணத்தின் பாத்திரத்தையும் குறிக்கலாம்.

"ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" - மாம்சத்தைச் சிலுவையில் அறைய வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு மாம்சத்தைக் கட்டுப்படுத்தி ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆவி உற்சாகத்தோடு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படியும். மாம்சத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம். (1கொரி 9:27; கொலோ 3:5; ரோமர் 8:12-13)

26 அதிகாரம்

"மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்" - இயேசு கிறிஸ்து தமது ஜீவியத்தில் இந்த இடத்தில் மட்டுமே ஒரே காரியத்தைத் திரும்பத்திரும்பக்கூறி ஜெபம் பண்ணுகிறார். தமது ஜீவனைக் குறித்து தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலுள்ள போராட்டத்தின் நிமித்தமாக இயேசு இந்த ஜெபத்தைத் திரும்பத்திரும்ப ஏறெடுத்திருக்கலாம். (எபி. 5:7).

தீர்க்கதரிசன எண் - 45

"இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது.........." (மத் 26:45-46) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"வேளைவந்தது" - இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்து வந்ததன் நோக்கத்தை நிறைவேற்றும் வேளை வந்துவிட்டது. மனுக்குலத்தை மீட்பதற்காகவே இரட்சகர் இயேசு வந்தார். அவருடைய நோக்கம் நிறைவேறப் போகிறது. (மாற்கு 14:41; லூக்கா 22:14; யோவான் 2:4; யோவான் 7:30; யோவான் 8:20; யோவான் 12:23,27; யோவான் 13:1; யோவான் 17:1)

2. இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - காட்டிக்கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் -

(மாற்கு 14:43; லூக் 22:)

மத்26:47 அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும்தடிகளையும் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

மத் 26:48 அவரைக் காட்டிக் கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ் செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான்.

மத் 26:49 உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ் செய்தான்.

மத் 26:50 இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்.

மத் 26:51 அப்பொழுது இயேசு வோடிருந்தவர்களில் ஒருவன் கைநீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக் காரனைக் காதற வெட்டினான்.

மத் 26:52 அப்பொழுது, இயேசு அவனை நோக்கி: உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்.

மத் 26:53 நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்ப மாட்டாரென்று நினைக் கிறாயா?

மத் 26:54 அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்.

மத் 26:55 அந்த வேளையிலே இயேசு ஜனங்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறது போல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்க வந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது, நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே.

மத் 26:56 ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறை வேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக் கிறது என்றார். அப்பொழுது, சீஷர்க ளெல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள்.

மத்தேயு - தொகுப்புரை

26 அதிகாரம்

"தடிகள்" - (மத் 26:55; மாற்கு 14:43,48; லூக்கா 22:52)

"ரபீ, வாழ்க" - சமாதானம் உண்டாவதாக என்று வாழ்த்தும் வாழ்த்துரை. (மத் 27:29; மத் 28:9; மாற்கு 15:18; லூக்கா 1:28; யோவான் 19:3; 2 யோவான் 1:10-11)

"அவரை முத்தஞ்செய்தான்" - துரோகச்செயலுக்கு "யூதாவின் முத்தம்" **(Judas kiss)** என்றொரு வழக்குச்சொல் உள்ளது. இயேசு கிறிஸ்துவின் கூடவே இருந்தவன் அவரையே காட்டிக் கொடுக்கிறான். நிற்கிறேன் என்று நினைக்கிற விசுவாசிகளுக்கு யூதாவின் செயல் ஓர் எச்சரிப்பு. (அப் 1:25; மத் 10:1-20; மாற்கு 6:7-13)

"சிநேகிதனே" - இயேசு அன்போடு அவனைச் சிநேகிதனே என்று அழைக்கிறார். அவனுடைய துரோகச்செயல் தெரிந்தும், அவன்மீது அன்பாக இருக்கிறார். சிநேகிதன் என்னும் சொல் இந்த வசனத்திலும், மேலும் சில வசனங்களில் மட்டுமே வருகிறது. (மத் 11:16; மத் 20:13; மத் 22:12) இயேசு கிறிஸ்து யூதாசை ஒதுக்கித் தள்ளிவிடவில்லை. அவன் நான்றுகொண்டு சாகாமல் இயேசு கிறிஸ்துவிடம் வந்து தன்னை மன்னித்து விடுமாறு விண்ணப்பம் பண்ணியிருந்தால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நிச்சயமாகவே அவனை மன்னித்திருப்பார். அவர் இரக்கத்தில் ஐசுவரியவான். பேதுருவும், மற்றவர்களும் தவறுகளைச் செய்து விட்டு, இயேசுவிடம் திரும்பி வந்து, மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவில்லையா. (சங் 41:9; சங் 55:12-14)

"இயேசுவோடிருந்தவர்களில் ஒருவன் கைநீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்" - இது பேதுருவைக்குறிக்கும். (யோவான் 18:10)

"பன்னிரண்டுலேகியோனுக்கு அதிகமான தூதர்" - லேகியோன் என்றால் 6000 பேர். பன்னிரெண்டு லேகியோன் என்பது 72,000 தூதரைக் குறிக்கும். ஏசாயா 37:36-இல் நாம் வாசிக்கிற பிரகாரம் ஒரு தூதன் ஒரே இரவில்185,000பேரைச் சங்காரம்பண்ணக் கூடியவன்.

"அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" - (சக 13:7; மத் 26:31)

3. இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - (மாற்கு 14:53; லூக் 22:63; யோவான் 18:12,19)

மத் 26:57 இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டு போனார்கள்; அங்கே வேதபாரகரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள்.

மத் 26:58 பேதுரு, தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும் வந்து, உள்ளே பிரவேசித்து, முடிவைப் பார்க்கும்படி சேவகரோடே உட்கார்ந்தான்.

மத் 26:59 பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள்;

மத் 26:60 ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை; கடைசியிலே இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து:

மத் 26:61 தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள்.

மத் 26:62 அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான்.

மத் 26:63 இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்.

26 அதிகாரம்

மத் 26:64 அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 26:65 அப்பொழுது பிரதான ஆசாரியன்தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே.

மத் 26:66 உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்.

மத் 26:67 அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து:

மத் 26:68 கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்.

"அங்கே வேதபாரகரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள்" - சேவகர்களும், யூதமார்க்கத்து அதிகாரிகளும் இயேசு கிறிஸ்துவை எப்படியும் பிடித்துக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின்மீது ஏதாவது பொய்க் குற்றம் சுமத்தி, அவரைக் கொலை செய்ய வேண்டுமென்பதே இவர்கள் நோக்கம்.

பேதுருவின் பின்மாற்றம்

1. பெருமைபட்டான் (மத் 26:33; நீதி 16:18)
2. இயேசுவிடம் மறுத்துப் பேசினான் (மத் 26:33-35)
3. ஜெபிப்பதற்குப் பதிலாகத் தூங்கினான் (மத் 26:40)
4. தன் மாம்சத்தை அடக்கத்தவறினான் (மத்26:41)
5. தன் மாம்சத்தின் வல்லமையை நம்பினான் (மத் 26:51)
6. கிறிஸ்துவை விட்டுவிட்டு ஓடிப் போனான். (மத் 26:56)
7. தூரத்தில் பின்தொடர்ந்தான். (மத் 26:58)
8. ஆண்டவருடைய சத்துருக்களோடு அமர்ந்தான். (மத் 26:58)
9. நம்பிக்கையை இழந்து சோர்வாக இருந்தான். (மத் 26:58)
10. மனுஷருக்குப் பயந்தான் (மத் 26:69-74)
11. பொய்கூறினான் (மத் 26:69-74)
12. சபித்தான் (மத் 26:69-74)

பேதுரு தம்மை மறுதலிப்பான் என்பதை இயேசு கிறிஸ்து முன்னறிவித்தார். அத்துடன் அவன் மறுபடியும் தம்மிடம் திரும்பி வருவான் என்றும் கூறினார். (லூக்கா 22:31-34)

பேதுரு மறுபடியும் இயேசு கிறிஸ்துவிடம் திரும்பி வந்தான் என்பதற்கு ஆதாரங்கள்

1. அவன் மறுபடியும் பிறந்தான் (1யோவான் 5:1 - மத் 16:16, யோவான் 6:68-69).
2. தன் பாவங்களிலிருந்து அவன் கழுவப் பட்டான். தேவனுடைய வார்த்தையைக் கைக்கொண்டான் (யோவான் 13:10; யோவான் 15:3; யோவான் 17:6).
3. பரலோகத்தில் அவனுடைய பெயர் எழுதப்பட்டிருக்கிறது. (லூக்கா 10:20)
4. அவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டான். (யோவான் 17:1-3).
5. அவன் ஆவிக்குரிய வெளிப் பாடுகளைப் பெற்றுக் கொண்டான். (மத் 16:16).

26 அதிகாரம்

6. அவன் கிறிஸ்துவில் இருந்தான். (யோவான் 15:1-6)

7. அவன் உலகத்திலிருந்து இரட்சிக்கப் பட்டான். (யோவான் 17:14-16).

8. அவன் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். அவன் மற்றவர்களுக்குத் தண்ணீர் ஞான ஸ்நானம் கொடுத்தான். (யோவான் 3:22; யோவான் 4:1-2).

9. பேதுரு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றிருந்தான். (மத் 10:20).

10. எல்லா வியாதிகளின்மீதும், பிசாசு களின் மீதும் அவனுக்கு அதிகாரம் இருந்தது. (மத் 10:1-8)

11. கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ணினான். வியாதிய ஸ்தர்களைக் குணப்படுத்தினான். (மாற்கு 6:7-13; லூக்கா 9:6)

12. பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருந்தான். (சங் 51:7-13; ரோமர் 11:18-24; கலா 1:6; கலா 4:19; கலா 5:4; கலா 6:1; யாக் 5:19-20; வெளி 2:4-5,16,21-26; வெளி 3:3,15-16)

அரமனை (palace) - αὐλή - aulee - 833

பெண்பால் பெயர்ச்சொல் - அரமனை, முற்றம், தொழுவம், பிரகாரம்

"பிரதான ஆசாரியர்" - 24 ஆசாரிய வகுப்பிற்குத் தலைவர்கள். (1நாளா 24:1-19; 2நாளா 8:14; 2நாளா 26:20; 2நாளா 35:4; ஏசா 43:28).

"மூப்பர்" - குடும்பத்தின் தலைவர்களும், கோத்திரங்களில் வயது முதிர்ந்தவர்களும், (யாத் 3:16-18; யாத் 4:29; யாத் 12:21; எண் 11:11,25) ஆலோசனைச் சங்கத்தில் இவர்களே ஜனங்களின் பிரதிநிதிகள்.

"சங்கத்தார்" -ஆலோசனைச் சங்கத்தில் பிரதான ஆசாரியரும், மூப்பரும் அங்கத்தினராக இருந்தார்கள். அந்த தேசத்தின் உச்சநீதிமன்றமாக ஆலோசனைச் சங்கம் செயல்பட்டது. முக்கியமான வழக்குகளை மட்டும் இங்கு விசாரிப்பார்கள். ஆலோசனைச் சங்கத்தில் 71 அங்கத் தினர்கள் இருப்பார்கள். இவர்களுக்குத் தலைவரும், உபதலைவரும் உண்டு. உபதலைவர் வழக்குகளை விசாரித்து நடத்துவார். தலைவர் ரோமாபுரி அரசுக்கு வழக்கின் விவரம் குறித்து கணக்கு ஒப்பு விப்பார்.

"அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள்" - இயேசுவிடம் அவர்களால் எந்தக் குற்றமும் காணமுடியவில்லை. ஆகை யினால் அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்து வதற்கு உண்மையான சாட்சிகள் யாரும் கிடைக்கவில்லை. ஆகையினால் பொய்ச் சாட்சியைத் தேடினார்கள். யூதருடைய ஆலோசனைச் சங்கத்தில் நீதியில்லை. நீதியில்லாத நீதிமன்றமாக செயல்பட்டது. தங்களுடைய சொந்த விருப்பங்களுக்காகக் கர்த்தருடைய பிரமாணத்தையே மாற்றிக் கூறுகிறார்கள். (யாத் 20:16).

"ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை" - பொய்ச்சாட்சிகள் யாரும் கிடைக்கவில்லை. சாட்சி சொன்னவர் களும் முரண்பட்டு சாட்சி சொன்னார்கள்.

"இயேசுவோ பேசாமலிருந்தார்" - நீதியில்லாத நீதிமன்றத்திலே இயேசு கிறிஸ்து பேசாமல் இருந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் ஞானமாகச் செயல் படுகிறார். தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்ற மாகவும், இது நடைபெற்றது. (ஏசா 53:7)

ஆணையிட்டுக்கேள் (adjure) - ἐξορκίζω - exorkizoo - 1844

வினைச்சொல் - ஆணையிட்டுக்கேள்

"தேவனுடைய குமாரன்" - மேசியா தேவனுடைய குமாரன் என்பதை ஆலோசனைச் சங்கத்தார் அங்கீகரிக்கி றார்கள். (யோவான் 8:40)

தீர்க்கதரிசன எண் - 46

"மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்" (மத் 26:64) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

26 அதிகாரம்

"சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார்" - (மாற்கு 16:19; அப் 2:33; எபி 1:3; எபி 12:2)

"வானத்தின் மேகங்கள் மேல் வருவார்" - (தானி 7:13; மத் 24:29-30; வெளி 1:7)

"அவருடைய முகத்தில் துப்பினார்கள்" - ஒருவருடைய முகத்தில் துப்புதல் அவருக்குக் கொடுக்கப்படும் மிகப்பெரிய அவமரியாதை. (எண் 12:14; உபா 25:9; யோபு 30:10, மத் 27:30; மாற்கு 15:19; யோவான் 19:3)

4. பேதுரு மறுதலிக்கிறான் - (மாற்கு 14:66; லூக் 22:54; யோவான் 18:15,25)

மத் 26:69 அத்தருணத்தில் பேதுரு வெளியே வந்து அரமணை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது, வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து: நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய் என்றாள்.

மத் 26:70 அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்.

மத் 26:71 அவன், வாசல் மண்டபத்திற்குப் போனபொழுது வேறொருத்தி அவனைக் கண்டு: இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான் என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள்.

மத் 26:72 அவனோ: அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான்.

மத் 26:73 சற்றுநேரத்துக்குப்பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள்.

மத் 26:74 அப்பொழுது அவன்: அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று.

மத் 26:75 அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்.

"பேதுரு வெளியே வந்து அரமணை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான்" - இரண்டு காரணங்களினால் முற்றத்தில் உட்கார்ந்தான். ஒன்று அவனுடைய குற்றமனச்சாட்சி. மற்றொன்று தன்னிடம் மேலும் யாரும் கேள்வி கேட்பதைத் தவிர்க்க விரும்பினான்.

"முற்றம்" - வீதியிலிருந்து நீதிமன்றத்திற்குச் செல்லும் நடைபாதை. (மாற்கு 14:68)

"வேறொருத்தி (வேலைக்காரி-**maid**) அவனைக் கண்டாள்"

வேதாகமத்தில் முக்கியமான பணிப்பெண்கள்

1. ஆகார் (ஆதி 16:1-8)
2. சில்பாள் (ஆதி 29:24; ஆதி 30:9-12)
3. பில்காள் (ஆதி 29:29; ஆதி 30:3-7)
4. எஸ்தர் (எஸ் 2:4-9)
5. மோசேக்கு உதவி புரிந்தவள் (யாத் 2:5-8)
6. நாகமானின் பணிப்பெண் (2இராஜா 5:2-4)
7. யவீருவின் மகள் (மத் 9:24-25)
8. பேதுருவின்மீது குற்றம் சுமத்திய சிறு பெண் (மத் 26:69)
9. பேதுருவின்மீது குற்றம் சுமத்திய பணிப்பெண் (மத் 26:71)

26 அதிகாரம்

சபி (curse) - καταθεματίζω - katathematizoo - 2653

வினைச்சொல் - சபி - பேதுரு தன்னைத்தானே சபிக்கிறான்.

"சத்தியம் பண்ணினான்" - இயேசு கிறிஸ்துவைத் தனக்குத் தெரியாது என்று தேவனுடைய பெயரில் சத்தியம் பண்ணினான். அந்த அளவிற்கு பேதுரு மனுஷருக்குப் பயந்து, தேவனை விட்டு பின்வாங்கிப்போனான். (மத் 26:58).

"சேவல் கூவிற்று" - இரண்டு சேவல்கள் கூவியதாக ஒரு சிலர்கூறுகிறார்கள். ஆக இவர்களுடைய வியாக்கியானத்தின் பிரகாரம் பேதுரு ஆறு முறை மறுதலிக்கிறான். முதலாவது சேவல் கூவுவதற்கு முன்பாக மூன்று முறை (யோவான் 18:17; மத் 26:70-71) வேறொரு சேவல் கூவுவதற்கு முன்பாக மூன்று முறை (மத் 26:73; மாற்கு 14:69; லூக்கா 22:59-60). எத்தனை சேவல் கூவினாலும் பேதுரு உடனே தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தி, மனங்கசந்து அழுகிறான். (மத் 26:75)

27 அதிகாரம்

5. இயேசுவைப் பிலாத்துவிடம் அனுப்புகிறார்கள் - (வசனம் 11; மாற்கு 15:1; லூக் 23:1; யோவான் 18:28; 19:8)

மத் 27:1 விடியற்காலமானபோது, சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலை செய்யும்படி, அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி,

மத் 27:2 அவரைக் கட்டி, கொண்டு போய், தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள்.

"அவரைக் கட்டினார்கள்" - ஒரு பயங்கரமான குற்றவாளியைக் கட்டுவது போல இயேசுவைக் கட்டினார்கள். தப்பித்து ஓட முயற்சி பண்ணும் குற்றவாளிகளைத்தான் கட்டுவார்கள். ஆனால் இயேசுவோ தாமாகவே மனம் உவந்து தம்மைக் கைது பண்ணுவதற்கு ஒப்புக் கொடுத்திருந்தார். இயேசு கிறிஸ்துவின் அனுமதியில்லாமல் அவரை அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. (யோவான் 18:6)

6. யூதாஸ் நான்றுகொண்டு செத்துப் போகிறான் - (மத் 26:24; அப் 1:16-25)

மத் 27:3 அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து:

மத் 27:4 குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள்.

மத் 27:5 அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.

மத் 27:6 பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து: இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாதென்று சொல்லி,

மத் 27:7 ஆலோசனை பண்ணின பின்பு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள்.

மத் 27:8 இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள்வரைக்கும் இரத்தநிலம் என்னப்படுகிறது.

மத் 27:9 இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து,

மத் 27:10 கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

"அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டதைக் கண்டான்" - யூதாஸ்காரியாத்திற்கு இப்போது தான் அவன் செய்த தவறு புரிகிறது. ஆயினும் யூதாஸ் பேதுருவைப் போல மனந்திருந்தவில்லை. இயேசு கிறிஸ்துவிடம் தன்னுடைய பாவங்களுக்காக மன்னிப்புக் கோரவில்லை. சாத்தானுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். இயேசுவை விட்டுபிரிந்து தனியாக இருந்தான். தன்னுடைய கோழைத் தனமான செயலுக்காக வெட்கப்பட்டு நான்று கொண்டு செத்தான்.

27 அதிகாரம்

"மனஸ்தாபப்பட்டான்" - இயேசு கிறிஸ்து மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டதற்காக யூதாஸ் மனஸ்தாபப்பட்டான். தான் செய்த தவறுகளுக்காக யூதாஸ் மனஸ்தாபப் படவில்லை. யூதாஸ் இயேசு வோடுகூடவே இருந்தவன். இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்திற்கு பலமுறை ஆபத்து வந்த வேளைகளில் அவர் அந்தப் பிரச்சனைகளிலிருந்து தப்பித்து அப்புறம் போனார் என்பது யூதாசிற்குத் தெரியும். அதுபோலவே இயேசு தமது வல்லமையினால் இப்போதும் தப்பித்துக் கொள்வார் என்று யூதாஸ் நினைத்திருக்கலாம். ஆனால் யூதாஸ் நினைத்ததுபோல அங்கு ஒன்றும் நடைபெற வில்லை. தமது ஜீவனைக் காப்பதற்காக அங்கிருந்து அவர் மறைந்து செல்லவில்லை. தன்னால் இயேசுவிற்கு மரண ஆக்கினை வந்துவிட்டதே என்று மனஸ்தாபப்பட்டான்.

மனஸ்தாபப்படு (repented) - μεταμέλομαι - metamelomai - 3338

வினைச்சொல் - மனஸ்தாபப்படு, மனம் மாறாமலிரு

"முப்பது வெள்ளிக்காசு" - அந்நாட்களில் ஒரு வேலையாளுக்கு 115 நாட்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்திற்கு சமமான தொகை.

"குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்" - இன்றும் பலர் இப்படித்தான் புலம் புகிறார்கள். யூதாஸ் இயேசுவிடம் பாவ அறிக்கை பண்ணு வதற்குப் பதிலாக ஆசாரியரிடத்திலும், மூப்பரிடத்திலும் வந்து புலம்புகிறான். தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளமாட்டார். ஆனால் ஆசாரியரும், மூப்பரும் பாவியை இரட்சிப் பதற்குத் திராணியற்றவர்கள். ஆகையினால் யூதாசைப் பார்த்து, "எங்களுக்கென்ன, அது உன்பாடு" என்றார்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் குற்றமில்லாதது. அவர் ஒரு பாவமும் செய்யவில்லை. அவருடைய குற்றமில்லாத இரத்தத்தைக் குறித்து பலர் சாட்சி கூறியிருக்கிறார்கள்.

1. யூதாஸ் (மத் 27:4)
2. பிலாத்துவின் மனைவி (மத் 27:19)
3. பிலாத்து (மத் 27:24)
4. ஏரோது (லூக்கா 23:15)
5. கள்ளன் (லூக்கா 23:41)
6. நூற்றுக்கதிபதி (லூக்கா 23:47)

"அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப் போய், நான்றுகொண்டு செத்தான்" - இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் ஒருவன். இப்போது தன்னுடைய ஜீவனையே முடித்துக் கொண்டான். இயேசு கிறிஸ்து விற்காகத் தனது ஜீவிய நாளெல்லாம் ஊழியம் செய்வதற்காக அழைக்கப்பட்டவன். இயேசுவிற்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண வேண்டியவன். வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்க வேண்டியவன். இப்போது நான்றுகொண்டு செத்துப் போனான்.

"இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாது" - யூதருடைய பிரமாணத்தின் படி இரத்தக் கிரயத்தைக் காணிக்கைப் பெட்டிகளில் போடக்கூடாது. ஆனால் ஆசாரியரும், மூப்பரும், மாயக்காரர்கள். இரத்தக்கிரயத்தைக் குறித்துச் சிந்திக்கி றார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைச் சிந்துவதற்கு சம்மதிக்கி றார்கள். ஒரு பாவமும் செய்யாத இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொல்வது அவர்களுக்கு நியாயமாகத் தெரிகிறது

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 21

"இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப் பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள்" (மத் 27:9-10; சக 11:12-13).

27 அதிகாரம்

7. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (மாற்கு 15:1; லூக் 23:1; யோவான் 18:18; 19:8)

மத் 27:11 இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்; தேசாதிபதி அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு இயேசு: நீ சொல்லுகிறபடிதான் என்றார்.

மத் 27:12 பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ் சாட்டுகையில், அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

மத் 27:13. அப்பொழுது, பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான்.

மத் 27:14 அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை; அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

"இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்" - நீதிபதி அமர்ந்திருப்பார். குற்றம் சுமத்தப்பட்டவர் அவர் முன்பாக நிற்க வேண்டும். இது அக்காலத்து வழக்கம். (அப் 26:6)

"அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை" - தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பது இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் அவர் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தார். (மத் 26:62; மத் 27:12,14)

8. இயேசுவிற்குத் தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (மாற்கு 15:7; லூக் 23:13; யோவான் 18:39)

மத் 27:15 காவல்பண்ணப் பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக் கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது.

மத் 27:16 அப்பொழுது காவல் பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பேர்போன ஒருவன் இருந்தான்.

மத் 27:17 பொறாமையினாலே அவரை ஒப்புக் கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து,

மத் 27:18 அவர்கள் கூடியிருக்கையில், அவர்களை நோக்கி: எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ? என்று கேட்டான்.

மத் 27:19 அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்.

மத் 27:20 பரபாசை விட்டுவிடக் கேட்டுக் கொள்ளவும், இயேசுவைக் கொலை செய்விக்கவும், பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவிவிட்டார்கள்.

மத் 27:21 தேசாதிபதி ஜனங்களை நோக்கி: இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரபாசை என்றார்கள்.

மத் 27:22 பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள்.

27 அதிகாரம்

மத் 27:23 தேசாதிபதியோ: ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான். அதற்கு அவர்கள்: அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.

மத் 27:24 கலகம் அதிகமாகிறதே யல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான்.

மத் 27:25 அதற்கு ஜனங்க ளெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்.

மத் 27:26 அப்பொழுது, அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலை யாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும் படிக்கு ஒப்புக்கொடுத்தான்.

"காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்க ளுக்காக விடுதலையாக்குவது பண்டிகை தோறும் தேசாதிபதிக்கு வழக்க மாயிருந்தது" - இந்த வழக்கம் எப்பொழுது ஆரம்பமாயிற்று. இதை யார் ஆரம்பித்தார் என்பது தெரியவில்லை. இதற்கு ஆதாரம் என்ன என்றும் தெளிவாகத் தெரியவில்லை.

"காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ" - தம்மை விடுதலை பண்ணுமாறு ஜனங்கள் கேட்க மாட்டார்கள் என்று இயேசுவிற்கு நன்றாக தெரியும். தேசாதிபதி ஜனங்களுடைய மார்க்க வைராக்கியத்தைப் பார்த்து, மிகவும் ஆச்சரியப்பட்டான்.

"பொறாமையினாலே அவரை ஒப்புக் கொடுத்தார்கள்" - யூதமார்க்கத்தின் உபதேசத்திற்குச் சம்மந்தமில்லாதவாறு யூத மார்க்கத்தலைவர்கள் நடந்து கொண்டார்கள். பொறாமைப்படக்கூடாது என்பது அவர்கள் வேதத்தில் கற்றுக்கொள்ளும் உபதேசம். ஆனால்நடைமுறையில் அவர்கள் பொறாமைப் படுகிறார்கள்.

"கிறிஸ்துஎன்னப்படுகிற இயேசுவையோ?" - இயேசுவே கிறிஸ்து, மேசியா என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த சத்தியம்.

"அவனுடைய மனைவி" - தேசாதிபதியின் மனைவி. கிலவுதியாள் புரோக்குல்லா (Claudia Procula) என்பது அவளுடைய பெயர். திபேரியாவின் இந்தப் பிரதேசத்தில் மட்டுமே தேசாதிபதியின் மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களோடு நியாயா சனத்தில் அமர்ந்திருப்பார்கள்.

"நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்" - நல்ல ஆலோசனை. ஆனால் இந்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

"அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன்" - வேதாகமத்தில் பல வசனங்கள் சொப்பனங் களைப் பற்றிக் கூறுகிறது.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற சொப்பனங்கள்

1. அபிமெலேக்கு - சாராளைக் குறித்து (ஆதி 20:3)
2. யாக்கோபு - ஏணியைக் குறித்து (ஆதி 28:12)
3. யாக்கோபு - வரியும், புள்ளியும் உள்ள ஆடுகளைக் குறித்து (ஆதி 31:10-13)
4. யாக்கோபு - எகிப்தைக் குறித்து (ஆதி 46:2)
5. லாபான் - யாக்கோபைக் குறித்து (ஆதி 31:24)
6. யோசேப்பு - சகோதரரைக் குறித்து (ஆதி 37:5)
7. யோசேப்பு - சகோதரரைக் குறித்து (ஆதி 37:9)

27 அதிகாரம்

8. பானபாத்திரக்காரரின் தலைவன் - தன்னைக் குறித்து (ஆதி 40:9)

9. சுயம்பாகிகளின் தலைவன் - தன்னைக் குறித்து (ஆதி 40:16)

10. பார்வோன் - பஞ்சத்தைக் குறித்து (ஆதி 41:1-4)

11. பார்வோன் - பஞ்சத்தைக் குறித்து (ஆதி 41:5-8)

12. மீதியானியர் - கிதியோனைக் குறித்து (நீதி 7:13)

13. சாலொமோன் - ஞானத்தைக் குறித்து (1இராஜ 3:3-15)

14. எலிப்பாஸ் - ஆவியைக் குறித்து (யோபு 4:12-21)

15. யோபு - பயங்கரத்தைக் குறித்து (யோபு 7:14)

16. நேபுகாத்நேச்சார் - ராஜ்யங்களைக் குறித்து (தானி 2)

17. நேபுகாத்நேச்சார் - தன்னைக் குறித்து (தானி 4)

18. தானியேல் - ராஜ்யங்களைக் குறித்து (தானி 7)

19. தானியேல் - ராஜ்யங்களைக் குறித்து (தானி 8)

20. தானியேல் - தேவனைக் குறித்து (தானி 10:5-9)

21. கள்ளத்தீர்க்கதரிசிகள் - பொய்யைக் குறித்து (எரே 23:27-32; எரே 29:8)

22. குறிசொல்லுகிறவர்கள் - தவறான காரியங்களைக் குறித்து (சக 10:2)

23. யோசேப்பு - மரியாளைக் குறித்து (மத் 1:20)

24. யோசேப்பு - எகிப்திற்கு ஓடிப் போவதைக் குறித்து (மத் 2:13)

25. யோசேப்பு - வீட்டிற்குத் திரும்பி வருவதைக் குறித்து (மத் 2:19)

26. யோசேப்பு - ஏரோதுவைக் குறித்து (மத் 2:22)

27. சாஸ்திரிகள் - எச்சரிப்பைக் குறித்து (மத் 2:12)

28. பிலாத்துவின் மனைவி - இயேசுவைக் குறித்து (மத் 27:19)

29. கொர்நேலியு - தூதனைக் குறித்து (அப் 10:3-6)

30. பேதுரு - மிருகங்களைக் குறித்து (அப் 10:10-16)

31. பவுல் - ஒரு மனுஷனைக் குறித்து (அப் 16:9)

32. பவுல் - ரோமாபுரிக்குப் போவதைக் குறித்து (அப் 23:11)

33. பவுல் - பாதுகாப்பைக் குறித்து (அப் 28:23-24)

34. யோவான் - இயேசுவைக் குறித்து (வெளி 1:12-18)

"பரபாசை விட்டுவிடக் கேட்டுக் கொள்ளவும், இயேசுவைக் கொலை செய்விக்கவும், பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவி விட்டார்கள்" - யூதமார்க்கத்தலைவர்கள் செய்த வெட்கக் கேடான காரியம். ஜனங்களிடத்தில் பாவம் செய்யக்கூடாது என்று உபதேசம் பண்ண வேண்டியவர்கள் இப்போது அவர்களைப் பாவம் செய்யுமாறு ஏவிவிடுகிறார்கள்.

"அதற்கு அவர்கள்: பரபாசை என்றார்கள்" - சில நாட்களுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து எருசலேமிற்குள் பவனி வந்தார். அவருக்கு "ஓசன்னா" என்று சொல்லி வரவேற்ற அதே ஜனங்கள் இப்போது பரபாசை விடுதலை பண்ண வேண்டும் இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று கூறுகிறார்கள்.

"கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்" - மானிட ஜீவியத்தில் இது முக்கியமான கேள்வி. இதற்கு நாம் என்ன பதில் கூறுகிறோம் என்பதைப் பொறுத்தே நமது நித்திய ஜீவன் அமையும்.

27 அதிகாரம்

"ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான்" - இந்த கேள்விக்கு இன்னும் யாரும் பதில் கூறமுடியவில்லை. யாராலும் பதில் கூறமுடியாது. ஏனெனில் இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர். (1பேதுரு 2:22).

"கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான்" - பிலாத்து இயேசுவை விடுதலை பண்ண மனதாக இருந்தான். ஆனால் ஜனங்களோ இயேசுவைக் கொலைசெய்ய வேண்டுமென்று வைராக்கியமாக இருந்தார்கள். தேசாதிபதியால் நீதியான காரியத்தைச் செய்ய முடியவில்லை. ஜனங்களுடைய முடிவுக்குத் தனது தீர்ப்பை ஒப்புக்கொடுக்கிறான்.

"தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவினான்" - ஏதாவது ஒரு காரியத்தில் தனக்கு எந்தவிதப் பங்கும் இல்லை, தான் ஒரு நிரபராதி என்பதை அறிவிப்பதற்கு தன்னுடைய கைகளைக் கழுவுவது அக்காலத்து வழக்கம். (உபா 21:1-9; சங் 26:6) பிலாத்துவிற்குப் போர்ச்சேவகர்கள் இருந்தார்கள். பிலாத்து விரும்பியிருந்தால் அவனால் கலகத்தை அடக்கி இயேசுவை விடுதலை பண்ணியிருக்க முடியும். ஆனால் அவனோ தனது கடமையின் பிரகாரம் செய்ய வேண்டியதைச் செய்யாமல் தன்னுடைய கைகளைக் கழுவிவிட்டான்.

"இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" - இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு யூதர்கள் உடனடியாக பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்கள். இயேசுவின் இரத்தப்பழி தங்கள்மீதும், தங்கள் பிள்ளைகளின்மீதும் இருப்பதாக என்று அவசரப்பட்டுக் கூறுகிறார்கள். அவர்கள்மீது இரத்தப்பழி வந்தது. உக்கிரமமாக வந்தது. ரோமாபுரியார் ஏராளமான யூதர்களை இயேசுவைச் சிலுவையில் அறைந்தது போலவே அறைந்து கொன்றுபோட்டார்கள். (லூக்கா 21:20-24) இதைக் குறித்து வரலாற்று ஆசிரியர்கள் எழுதும்போது அனுதினமும் 500 யூதர்களை ரோமர்கள் சிலுவையில் அறைந்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் எல்லா தேசங்களுக்கும் சிதறி ஓடினார்கள். தாங்கமுடியாத துயரத்தை அனுபவித்தார்கள். அவர்களுக்கு இன்னும் அனுபவிக்க வேண்டிய துன்பம் காத்துக்கொண்டிருக்கிறது. (மத் 24:15-22; எரே 30:3-9; எசே 20:33-38; தானி 11:40-45; தானி 12:1; சக 13:9; சக 14:1-5; வெளி 6:1-19:21)

"இயேசுவையோ வாரினால் அடிப்பித்தான்" - வாரினால் அடிப்பது குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படும் கடுமையான தண்டனை. வார் என்பது சவுக்கைக் குறிக்கும். வாரின் கைப்பிடிகளில் பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட தோல்வார்கள் இருக்கும். அதன் முனைகளில் எலும்புத் துண்டுகளோ, உலோகத் துண்டுகளோ இணைக்கப்பட்டிருக்கும். இதனால் வாரினால் அடிக்கும்போது வேதனை அதிகரிக்கும். குற்றவாளியை ஒரு மரத்தில் கட்டி வைத்து, வாரினால் அடிப்பார்கள். அவனுடைய முதுகிலும், இடுப்பிலும் சில வேளைகளில் அவனுடைய முகத்திலும் அடிப்பார்கள். ஒவ்வொரு முறை வாரினால் அடிக்கும் போதும் குற்றவாளியின் சதை பிய்ந்து போகும். தண்டனை மிகவும் கடுமையாக இருப்பதினால், சவுக்கடி தாங்கமுடியாமல் பல குற்றவாளிகள் மயக்கமடைவார்கள். பலர் அப்படியே மடிந்தும் விடுவார்கள்.

குற்றவாளிகளிடமிருந்து இரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்காகவும் அவர்களை வாரினால் அடிப்பார்கள். குற்றங்களை ஒப்புக்கொள்ள வைப்பதற்காகவும் வாரினால் அடிக்கும் வழக்கம் இருந்தது. ஒரு பாவமும் அறியாத இயேசு கிறிஸ்துவிடம் எதை எதிர்பார்த்து வாரினால் அடித்தார்களோ. தெரியவில்லை. (அப் 22:24-25) பிரமாணத்தின் பிரகாரமாக ஒருவரை 40 முறை வாரினால் அடிக்கலாம். (உபா 25:3) யூதர்கள் 39 முறை வாரினால் அடிக்கலாம் என்று அனுமதித்தார்கள். (2கொரி 11:23-25)

இயேசுவை அடித்த சவுக்கில் பன்னிரெண்டு வார்கள் இருக்குமென்றால், அவரை 39 தடவைகள் அடித்தபோது அவருடைய சரீரத்தில் 468 தழும்புகள் உண்டாயிருக்கும். பட்ட இடத்திலேயே அடி திரும்பப்பட்டால், சதைக்குள் இருக்கும் எலும்பெல்லாம் வெளியே தெரியும். (ஏசா 52:14).

27 அதிகாரம்

9. இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (மாற்கு 15:16; யோவான் 19:1)

மத் 27:27 அப்பொழுது, தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரமணையிலே கொண்டுபோய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச் செய்து,

மத் 27:28 அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி,

மத் 27:29 முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி,

மத் 27:30 அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.

மத் 27:31 அவரைப் பரியாசம் பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள்.

மத் 27:32 போகையில், சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்.

"அரமணை" - விசாரணை நடைபெறும் இடம். (மாற்கு 15:16; யோவான் 18:28,33; யோவான் 19:9). திறந்தவெளி. ரூபார்ச் சேவகர்கள் தங்கியிருக்கும் இடம். பிலாத்துவின் அரண்மனை சீயோன் மலையில் உயர்ந்த இடத்தில் கட்டப் பட்டிருந்தது. இந்த இடத்தில் பிலாத்துவின் வீடும், அவனுடைய போர்ச்சேவகரும் இருந்தார்கள். (மாற்கு 15:16)

"சிவப்பான மேலங்கி" - இது ரோமருடைய இராணுவ உடையாக இருக்கலாம். யூதருக்கு ராஜாவாக இருப்ப வரைப் பரியாசம் பண்ணுவதற்காக போர்ச் சேவகர்கள் இயேசுவிற்குச் சிவப்பான அங்கியை உடுத்தியிருக்கலாம்.

"முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்தார்கள்" - கொடூரமான முறையில் இயேசுவைப் பரியாசம் பண்ணுகிறார்கள். தம்மைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (மத் 20:17-19)

முட்கள் **(thorns) - ἄκανθα - akantha** - 173

பெண்பால் பெயர்ச்சொல் - முட்செடி, முள், முள்செடி (மத் 7:16; மத் 13:22; மத் 27:29; மாற்கு 4:7; மாற்கு 4:18; லூக்கா 6:44; லூக்கா 8:14; யோவான் 19:2; எபி 6:8) இயேசு கிறிஸ்துவின் சிரசில் வைக்கப்பட்ட முள்முடி எந்த முள்ளால் ஆனது என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் குத்தினால் இரத்தம் வரக்கூடிய கடினமான முள்ளாக இருக்க வேண்டும். (நியா 8:7,16; சங் 58:9; நீதி 15:19; பிர 7:6; ஏசா 7:23-25; ஓசி 2:6; ஓசி 9:6; ஓசி 10:8; மீகா 7:4)

"அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டு போனார்கள்" - சிலுவை மரணம் மிகவும் கொடூரமானது. அவமானத்திருக் குரியது. மிகப்பெரிய குற்றவாளிகளுக்கு மட்டுமே இந்தத் தண்டனை கொடுக்கப் பட்டது. சிலுவை மரத்தில் குற்றவாளியின் இரண்டு கைகளையும் விரித்து, ஆணிகளால் அறைவார்கள். அதன்பின்பு இரண்டு கால்களையும் சேர்த்து, ஆணிகளால் அறை வார்கள். ஒரு பள்ளம் தோண்டி, சிலுவை மரத்தை குற்றவாளியோடு தூக்கி, அந்தப் பள்ளத்தில் நிறுத்துவார்கள். இவ்வாறு செய்யும்போது சிலுவையில் தொங்கும் நபருடைய எலும்பு மூட்டுகளெல்லாம் கழன்று போகும். சிலுவையில் தொங்கும் நபருடைய முழு சரீர பாரத்தையும் கைகளிலும், கால்களிலும் அறையப் பட்டிருக்கிற ஆணிகளே தாங்குகிறது. சிலுவையில் அந்த நபரை உயிரோடு விட்டு விடுவார்கள். அவர் வேதனை தாங்க முடியாமல் சிலுவையிலேயே மரித்து விடுவார்.

27 அதிகாரம்

"சிரேனே" - வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள லிபியா தேசத்தின் தலைநகரம். மத்திய தரைக்கடலுக்கு 11 மைல் தெற்கு முகமாக உள்ளது.

10. இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள் - (மாற்கு 15:22; லூக் 23:32; யோவான் 19:16)

மத் 27:33 கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது,

மத் 27:34 கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்.

மத் 27:35 அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங் களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக் குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப்போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

மத் 27:36 அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள்.

மத் 27:37 அன்றியும் அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும் பொருட்டு, இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள்.

மத் 27:38 அப்பொழுது, அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள்.

மத் 27:39 அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி:

மத் 27:40 தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டு கிறவனே, உன்னை நீயே ரட்சித்துக் கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித் தார்கள்.

மத் 27:41 அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி:

மத் 27:42 மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்.

மத் 27:43 தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்.

மத் 27:44 அவரோடேகூடச் சிலுவை களில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப் படியே அவரை நிந்தித்தார்கள்.

"கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா" **(Golgotha, skull, calvaria)** (லூக்கா 23:33) எருசலேமிற்கு வெளியேயுள்ள இடம். (எபி 13:12) ஒரிகன் **(Origen)** (கிபி. **185-253)** என்னும் வரலாற்று ஆசிரியர் கொல்காதாவைப் பற்றிக் கூறும்போது, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் தான், ஆதாம் அடக்கம் பண்ணப்பட்டார் எனவும், அவருடைய கபாலம் அங்கு கண்டுபிடிக்கப் பட்டதாகவும் எழுதியிருக்கிறார்.

27 அதிகாரம்

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 22

"கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்" (சங் 69:21; மத் 27:34) சிலுவையில் தொங்கும் நபருக்கு தாங்க முடியாத வேதனை உண்டாகும். அந்த வேதனையைக் குறைப்பதற்காக சிலுவையில் தொங்கும் நபருக்கு போதையைக் கொடுக்கக்கூடிய காடியைக் கொடுப்பார்கள். (நீதி 31:6), ஆனால் இயேசு கிறிஸ்து அதைக் குடிக்க மனதில்லாதிருந்தார். முழுப்பாடும் அனுபவிக்க விரும்பினார். தான் அனுபவிக்க வேண்டிய பாடுகளில் எதுவும் குறையக் கூடாது என்பதில் அதிக கவனமாக இருந்தார்.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 23

"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப் போட்டார்கள்" (சங் 22:18; மத் 27:35)

"அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்" - போர்ச்சேவகர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்து அங்கு காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் சில சமயங்களில் சிலுவையில் தொங்குபவருடைய குடும்பத்தாரோ அல்லது நண்பர்களோ வந்து அந்த நபரை விடுவித்துக் கொண்டு போய் விடுவார்கள். இதற்காகவே சேவகர்கள் சிலுவையில் தொங்கும் இயேசுவைக் காவல்காத்துக் கொண்டிருந்தார்கள்.

"இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" - இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். அந்தச் சிலுவையின்மீது என்ன எழுதப் பட்டிருந்தது என்பதில் வேதபண்டிதர் களுக்குள்ளே கருத்து வேறுபாடு உள்ளது. நான்கு சுவிசேஷங்களிலும் வெவ்வேறு விதமான வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்.

1. மத் 27:37 - இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு
2. மாற்கு 15:26 - யூதருடைய ராஜா
3. லூக்கா 23:38 - இவன் யூதருடைய ராஜா
4. யோவான் 19:19 - நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

இந்த எழுத்துக்கள் கிரேக்கு, லத்தீன், எபிரெயு ஆகிய பாஷைகளின் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

"அப்பொழுது, அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப் பட்டார்கள்" - இரண்டு கள்ளர்களில் ஒருவன் இயேசுவைத் தூஷித்தான். மற்றவனோ தனக்கு இரக்கம் காண்பிக்கு மாறு கெஞ்சுகிறான். (மத் 27:38, மத் 27:44; மாற்கு 15:32, லூக்கா 23:32, லூக்கா 23:39-40)

"தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்" - இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தையை அவரிடமே திரும்பக் கூறி அவரைப் பரியாசம்பண்ணுகிறார்கள். (யோவான் 2:19-21)

"அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணினார்கள்" - இயேசுவைப் பரியாசம் பண்ணுவதற்காக மார்க்கத்தலைவர்கள் அவர் சிலுவையில் தொங்கும் இடத்திற்கே வந்து விட்டார்கள். சிலுவையில் மரிக்கும் இயேசுவின் வேதனையைக் கூட்டுவதற்காக இவர்கள் இங்கு வந்து அவரைப் பரியாசம் பண்ணினார்கள்.

"மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" - இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்காமல் தன்னை இரட்சித்துக் கொண்டால், மனுக்குலம் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப் பேயில்லை. (மத் 16:25) இயேசு சிலுவையில் மரிக்காமல் தம் ஜீவனைக் காத்துக் கொண்டால், இந்த உலகத்திற்கு அவர் வந்ததன் நோக்கமே தோல்வியடைந் திருக்கும். (யோவான் 3:14-16; கலா 3:13; கொலோ 1:20; கொலோ 2:14-17; 1பேதுரு 2:24) மனுக்குலத்தை இரட்சிக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். இதற்கு எதிராக அவர் ஒருபோதும் கிரியை செய்த தில்லை.

27 அதிகாரம்

"சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" - கல்வாரி சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கும் இயேசுவைத் தடைபண்ணுவதற்கு சாத்தான் எடுக்கும் கடைசி முயற்சி. அவர் சிலுவையில் மரித்தால் மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டு. தனக்கு அழிவு உண்டு என்பது சாத்தானுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் அவரை எப்படியாவது சிலுவையில் மரிக்கவிடாமல் தடுத்துவிட வேண்டுமென்று சாத்தான் எல்லா விதமான தந்திரங்களையும் செய்கிறான். சாத்தானின் வஞ்சக வார்த்தைகளுக்கு இயேசு கிறிஸ்து கீழ்ப்படிந்திருந்தால் மனுக்குலத்திற்கு இரட்சிப்பும் இல்லை. இயேசுவின் திட்டத்தில் ஜெயமும் இல்லை. (கொலோ 2:14-17; கலா 3:13)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 24

"தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" (சங் 22:8; மத் 27:43)

இயேசுவின் சத்துருக்கள் இயேசுவைப் பற்றிக் கூறிய இரண்டு சாட்சிகள்

1. இயேசு மற்றவர்களை இரட்சித்தார் (மத் 27:42; அப் 10:38)
2. இயேசு தேவன்மேல் நம்பிக்கையாய் இருந்தார். (மத் 27:43; சங் 22:8)

இக்காலத்தில் உலகத்தார் விசுவாசிகளைக் குறித்து இப்படிச் சாட்சி கூறினால் அது அவர்களுக்கும் ஆசீர்வாதம், சபைக்கும் ஆசீர்வாதம்.

11. இயேசுவின் மரணம் - (மாற்கு 15:33; லூக் 23:44; யோவான் 19:28)

மத் 27:45 ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும்அந்தகாரம் உண்டாயிற்று.

மத் 27:46 ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

மத் 27:47 அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள்.

மத் 27:48 உடனே அவர்களில் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்.

மத் 27:49 மற்றவர்களோ: பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம் என்றார்கள்.

மத் 27:50 இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.

மத் 27:51 அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது.

மத் 27:52 கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்த வான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது.

மத் 27:53 அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்.

மத் 27:54 நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.

மத் 27:55 மேலும், இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

27 அதிகாரம்

மத் 27:56 அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும், யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 25

"என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (சங் 22:1; மத் 27:46). இயேசு மரித்துக் கொண்டிருக்கும் வேளையில்கூட தீர்க்கதரிசன வார்த்தையை மேற்கோளாகக் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் கூறிய வார்த்தைகள்

1. என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? (சங் 22:1; மத் 27:46; மாற்கு 15:34)
2. பிதாவே, இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே (லூக்கா 23:34)
3. இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (லூக்கா 23:43)
4. பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (லூக்கா 23:46)
5. ஸ்திரீயே, அதோ உன் மகன் ......அதோ, உன் தாய் (யோவான் 19:26-27)
6. தாகமாயிருக்கிறேன் (யோவான் 19:28)
7. முடிந்தது (யோவான் 19:30)

"மகா சத்தமாய்க் கூப்பிட்டார்" - இயேசு கிறிஸ்து மரிக்கும் தருவாயில்கூட அவருக்கு முடிவு வரையிலும் பலன் இருந்தது. அவர் தாமாகவே தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். (யோவான் 10:18).

"ஆவியை விட்டார்" - இயேசு தமது ஆவியையும், ஆத்துமாவையும் விட்டார். (லூக்கா 23:46; யோவான் 10:18; யோவான் 19:30; யாக் 2:26)

"தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" - தேவாலயத்தில் இரண்டு திரைச்சீலைகள் இருக்கும். ஒன்று பரிசுத்த ஸ்தலத்தின் வாசலில் இருக்கும். மற்றொன்று பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவில் இருக்கும். மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியர் மட்டும் வருஷத்திற்கு ஒருமுறை ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பாவநிவாரண பலி செலுத்துவதற்காக உள்ளே போவார். (எபி 9:2-9) தேவாலயத்தின் திரைச்சீலை 60 அடி உயரமுள்ளது. இந்தத் திரைச்சீலை மேல்தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. யூதருக்கும், புறஜாதியாருக்கும் இடையிலுள்ள பிரிவினை அகன்றது. (எபே 2:14-18) ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடத்தில் பிரதான ஆசாரியரின் துணையில்லாமல் நேரடியாகவே சென்று தங்களுடைய விண்ணப்பங்களை ஏறெடுக்க முடியும். (எபே 2:14-18; எபி 9:8; எபி 10:19-23)

"கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது" - இயேசு கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கினார். அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார். (எபே 4:8-10; எபி 2:14-15) இப்போது விசுவாசிகள் மரிக்கும்போது தாழ்விடங்களுக்குப் போக வேண்டியதில்லை. பரதேசிற்கு சென்று அங்கு தங்களுடைய உயிர்த்தெழுந்த சரீரம் வருவதற்காக காத்திருப்பார்கள். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22; வெளி 6:9-11) துன்மார்க்கர் மரித்த பின்பு, நரகத்திற்குச் சென்று தங்களுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காக காத்துக் கொண்டிருப்பார்கள். (லூக்கா 16:19-31; வெளி 20:11-15)

"அவர் உயிர்த்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்" - இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு முன்பாக இவர்கள் உயிர்த்தெழுவதில்லை. (லூக்கா 24:39; 1கொரி 15:20-23; வெளி 1:5)

27 அதிகாரம்

"மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்" - தேவனுடைய ஒரேபேறான குமாரன். (யோவான் 1:14,18; யோவான் 3:16,18; கொலோ 1:15-18) இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறானவர். நாம் அவருடைய சுவிகார புத்திரர். (ரோமர் 8:14-16; கலா 4:5; எபே 1:5)

"இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவோடு கூட இருந்த சீஷர்கள் அவரோடு மரிப்பதாக வாக்குப்பண்ணினார்கள். ஆனால் துன்பம் வந்தபோதோ அவர்கள் எல்லோரும் இயேசுவை விட்டே ஓடிப்போய்விட்டார்கள். ஆனால் ஸ்திரீகளோ புருஷர்களைவிட தைரியமுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடத்திற்கே வந்துவிட்டார்கள். (லூக்கா 8:3)

"மகதலேனா மரியாள்" - (மத் 13:55)

"செபெதேயுவின் குமாரருடைய தாய்" - (மத் 4:21; மத் 20:20-22)

12. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மாற்கு 15:24; லூக் 23:50; யோவான் 19:38)

மத் 27:57 சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து,

மத் 27:58 பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான்.

மத் 27:59 யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி,

மத் 27:60 தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான்.

மத் 27:61 அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்.

"ஐசுவரியவான்" - ஏசா 53:9 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

"அரிமத்தியா" - (மத் 2:18; 1சாமு 1:1,19; மாற்கு 15:43; லூக்கா 23:51; யோவான் 19:38)

"யோசேப்பு" - யோசேப்பும், நிக்கொதேமுவும் இயேசுவின் இரகசிய சீஷர்கள். அவர்கள் இயேசுவை அடக்கம் பண்ணினார்கள். (மாற்கு 15:43; லூக்கா 23:50-53; யோவான் 19:38-39)

பஸ்கா இராப்போஜனத்திலிருந்து கல்வாரி சிலுவையில் இயேசுவின் மரணம் வரையிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

1. போஜனம்பண்ணுவதற்கு அமர்ந்தார் (மத் 26:20; மாற்கு 14:17; லூக்கா 22:14; யோவான் 12:1)
2. கால்களைக் கழுவினார் (யோவான் 13:2-20)
3. பஸ்கா போஜனம் புசித்தார். கர்த்தருடைய இராப்போஜனம் ஆரம்பமாகிறது. தாம் காட்டிக்கொடுக்கப் படப்போவதை அறிவித்தார். புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். (மத் 26:21-29; மாற்கு 14:18-25; லூக்கா 22:15-23; யோவான் 13:21-30)
4. பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனம் (யோவான் 13:36-38)
5. சீஷர்கள் மத்தியில் பிளவு (லூக்கா 22:24-30)
6. பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதைப் பற்றிய இரண்டாவது தீர்க்கதரிசனம் (லூக்கா 22:31-34)

27 அதிகாரம்

7. சீஷர்களின் ஊழியத்தைப் பற்றிய இறுதி அறிவிப்புக்கள் (லூக்கா 22:35-38; யோவான் 14:1-31)

8. மேலறையிலிருந்து புறப்பட்டுப் போனார்கள் (மத் 26:30; மாற்கு 14:26; லூக்கா22:39;யோவான் 14:31)

9. கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் கடைசி பிரசங்கமும், ஜெபமும் (யோவான் 15:1-17:26)

10. பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதைப் பற்றிய மூன்றாவது தீர்க்கதரிசனம் (மத் 26:31-35; மாற்கு 14:27-31)

11. இயேசு கிறிஸ்து கெத்செமனே தோட்டத்திற்கு வந்து வியாகுலப் படுகிறார். (மத் 26:36-46; மாற்கு 14:32-42; லூக்கா 22:40-46; யோவான் 18:1)

12. இயேசு கிறிஸ்து காட்டிக் கொடுக்கப் படுவதும், கைதுபண்ணப் படுவதும். (மத் 26:47-56; மாற்கு 14:43-52; லூக்கா 22:47-53; யோவான் 18:2-11)

13. பிலாத்துவின் முன்பாக விசாரணை (மத் 26:57-27:26; மாற்கு 14:53-15:15; லூக்கா 22:54-23:25; யோவான் 18:12-19:15)

14. இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள் (மத் 27:27-56; மாற்கு 15:16-41; லூக்கா 23:32-49; யோவான் 19:16-36)

15. இயேசுவை அடக்கம்பண்ணுகிறார்கள் (மத் 27:57-66; மாற்கு 15:42-47; லூக்கா 23:50-56; யோவான் 19:38-42)

13. கல்லுக்கு முத்திரைபோட்டு இயேசுவின் கல்லறையைப் பத்திரப்படுத்துகிறார்கள் -

மத் 27:62 ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து:

மத் 27:63 ஆண்டவனே, அந்த எத்தன்உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப் பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது.

மத் 27:64 ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும்,முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடியதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப் படுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்றார்கள்.

மத் 27:65 அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான்.

மத் 27:66 அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தி னார்கள்.

தீர்க்கதரிசன எண் - 47

"மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன்" ((மத் 27:63) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப் படுத்திக் கொள்ளுங்கள்" - ஒருவேளையில் நான்கு சேவகர்கள் காவல்காப்பார்கள். மூன்றுமணி நேரத்திற்கு ஒருமுறை காவற்சேவகர் மாற்றப்படுவார்கள். (அப் 12:4)

"கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்" - தேவன் அசையும்போது அவரை யாராலும் கட்டுப்படுத்த முடியாது.

"அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரை போட்டார்கள்" - கல்லறையை மூடியிருக்கும் கல்லில் ஒரு கயிற்றைக் கட்டி அதில் ரோம அரசாங்கத்தின் முத்திரையைப் பதித்தார்கள். கல்லறை திறக்கப்பட்டால் முத்திரை உடைக்கப்பட்டிருக்கும். ரோமப் பேரரசின் முத்திரையை உடைப்பது மகாப் பெரிய குற்றம்.

28 அதிகாரம்

VI. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. உயிர்த்தெழுதலுக்குக் கர்த்தருடைய தூதனின் சாட்சி - (மாற்கு 16:1; லூக் 24:1; அப் 1:11)

மத் 28:1 ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனாமரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்கவந்தார்கள்.

மத் 28:2 அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலி லிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்.

மத் 28:3 அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மை யாகவும் இருந்தது.

மத் 28:4 காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்த வர்கள் போலானார்கள்.

மத் 28:5 தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசு வைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்.

மத் 28:6 அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த் தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்;

மத் 28:7 சீக்கிரமாய் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவனுடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்.

"ஓய்வுநாள்" - இது வாரத்தின் ஓய்வுநாள் ஆகும். பண்டிகையின் விசேஷித்த ஓய்வுநாள் அல்ல. (லேவி 23:7)

"விடிந்துவருகையில்" - அதிகாலைப் பொழுதில். (மாற்கு 16:2; லூக்கா 24:1) இன்னும் இருட்டு இருக்கும்போது. (யோவான் 20:1)

"பூமி மிகவும் அதிரும்படி" - ஸ்திரீகள் கல்லறைக்கு வருவதற்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து விட்டார். (மாற்கு 16:4; லூக்கா 24:2; யோவான் 20:1) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். (மத் 12:40, மத் 28:1; மாற்கு 16:2,9; லூக்கா 24:1; யோவான் 20:1,19)

"பூமி அதிர்ச்சி" - மூன்று நாளில் இது இரண்டாம் முறையாக ஏற்பட்ட பூமி அதிர்ச்சி. (மத் 27:51)

"கர்த்தருடைய தூதன் வானத்திலி ருந்திறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்" - ஸ்திரீகள் கல்லறைக்கு வரும்போது கர்த்தருடைய தூதன் கல்லின்மேல் உட்கார்ந்திருந்தான். (மத் 28:5; மாற்கு 16:5)

"அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது" - சாதாரணமாக தேவதூதர்கள் வரும்போது மனுஷரைப்போலவே இருப்பார்கள். அவர்களிடம் விசேஷித்த தன்மை எதுவும் காணப்படாது. ஆனால் இங்கோ கர்த்தருடைய தூதன் விசேஷித்த வல்லமையோடு வருகிறான். (எபி 13:2)

"காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்" - திடுக்கிட்டு செத்துப்போனவர்கள்போல மயங்கி விழுந்தார்கள். விழித்தவுடன் நடைபெற்ற செய்தியைச் சொல்வதற்காக ஓடிப்போனார்கள். (மத் 28:11)

தேவனுக்கு முன்பாகத் திடுக்கிட்டவர்கள்

1. எலிப்பாஸ் (யோபு 4:14)
2. மோசே (எபி 12:21)
3. எசேக்கியேல் (எசே 12:18)
4. பல புருஷர்கள் (தானி 10:5-7)
5. காவலாளர் (மத் 28:4)
6. பவுல் (அப் 9:6)
7. சிறைச்சாலைக்காரன் (அப் 16:29)

28 அதிகாரம்

செத்தவர்கள்போல இருந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1. ஆபிரகாம் (ஆதி 15:12-17)
2. மோசே (உபா 9:18,25)
3. எசேக்கியேல் (எசே 1:28; எசே 3:23; எசே 4:4-17; எசே 43:3)
4. தானியேல் (தானி 8:17; தானி 10:5-19)
5. சீஷர்கள் (மத் 17:6)
6. காவலாளர் (மத் 28:4)
7. பவுல் (அப் 9:4)
8. பேதுரு (அப் 10:10-16)
9. யோவான் (வெளி 1:17; வெளி 19:10; வெளி 22:8)

"அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" - இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குத் தேவதூதர்கள் சாட்சி பகர்ந்தார்கள். (மாற்கு 16:6; லூக்கா 24:5-6,23, யோவான் 21:14)

"சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்" - இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகள் இரண்டாவது சாட்சிகள். (மத் 28:7-8,10)

2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (மாற்கு 16:8; லூக் 24:8; யோவான் 20:11)

மத் 28:8 அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்.

மத் 28:9 அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப்போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.

மத் 28:10 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.

"அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து மரியாளிடம் "என்னைத் தொடாதே. நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" என்று சொன்னார். (யோவான் 20:17)

"சகோதரர்" - இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் கெத்செமனே தோட்டத்தில் அவரை விட்டு ஓடிப்போனார்கள். தங்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் இயேசுவை விட்டு விலகியே இருந்தார்கள். அவர்களுடைய பாவங்களை இயேசு கிறிஸ்து மன்னித்துவிட்டதற்கு அடையாளமாக அவர்களைச் "சகோதரர்" என்று அழைக்கிறார்.

3. உயிர்த்தெழுதலுக்குக் காவல் சேவகரின் சாட்சி

மத் 28:11 அவர்கள் போகையில், காவல்சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள்.

4. இயேசுவின் உயிர்த்தெழுதல் மீதுள்ள விசுவாசத்தை அழிப்பதற்கு சதியாலோசனை -

மத் 28:12 இவர்கள் மூப்பரோடே கூடவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து:

மத் 28:13 நாங்கள் நித்திரை பண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள்.

28 அதிகாரம்

மத் 28:14 இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள்.

மத் 28:15 அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது.

"சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தார்கள்" - எவ்வளவு கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இயேசுவின் கல்லறையை சுமார் 12 சேவகர்கள் முதல் 72 சேவகர்கள் வரை காவல் புரிந்திருக்க வேண்டும். 3 மணிக்கு ஒரு தடவை சேவகர்கள் மாற்றப்படுவார்கள். ஒவ்வொரு பிரிவிலும் நான்கு சேவகர்கள் இருப்பார்கள். மூன்று நாட்களாக காவல் புரிந்தார்கள். சேவகர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் சொன்ன பிரகாரமாகவே பொய் கூறினார்கள். இது பாவமான செயல். இவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் மனந் திரும்பி வந்தால், அவர் அவர்களை நிச்சயமாகவே மன்னிப்பார். (வெளி 1:5; 1யோவான் 1:7-9; எபே 1:7)

"நாங்கள் நித்திரை பண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார் கள்" - இது ஒரு பொய்ச் சாட்சி. இதற்கான காரணங்கள்

1. நான்கு சேவகர்களும் ஒரே வேளையில் தூங்கியிருப்பார்களா.
2. கல் புரட்டப்படும் சத்தத்தில் எழுந்திருக்க மாட்டார்களா.
3. கல்லைப் புரட்டித் தள்ளுவது மிகவும் கடினமானது. அந்த சத்தத்தில் ஒரு சேவகர்கூட எழுந்திருக்க மாட்டானா.
4. சேவகர்கள் கல்லறையின் வாசலிலே இருக்கிறார்கள். அவர்களைத் தாண்டி சீஷர்களால் எப்படி இயேசுவைக் களவாய்க் கொண்டுபோக முடியும்.
5. தூங்கும் சேவகர்களுக்குச் சீஷர்கள் தான் இயேசுவைக் களவாய்க் கொண்டுபோய் விட்டார்கள் என்று எப்படித் தெரியும்.

5. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சீஷர்களின் சாட்சி - (மாற்கு 16:12; லூக் 24:13; யோவான் 20:21)

மத் 28:16 பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள்.

மத் 28:17 அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள்; சிலரோ சந்தேகப் பட்டார்கள்.

"அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள்" - (யோவான் 21:14)

சந்தேகப்படு (doubted) - διστάζω - distazoo - 1365

வினைச்சொல் - சந்தேகப்படு - இந்தக் கிரேக்கச்சொல் மத் 14:31, 28:17 ஆகிய இரண்டு வசனங்களில் மட்டுமே வருகிறது.

6. பிரதான கட்டளை

மத் 28:18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மத் 28:19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

மத் 28:20 நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

மத்தேயு - தொகுப்புரை

28 அதிகாரம்

அதிகாரம் (power) - ἐξουσία - **exousia** - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் (மத் 9:8)

"வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" - பிதா குமாரனுக்கு சகல அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். குமாரன் மனுக்குலத்து மீட்பின் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனுஷனாக வருவதற்கு முன்பாக அவர் பரலோகத்தில் பிதாவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் சம அந்தஸ்தில் இருந்தார். அவர் பூமியில் மனுஷனாக இருந்தபோதோ, மனுஷனுக்குரிய வரையறைகள் அவருக்கும் இருந்தது. (லூக்கா 2:40,52; யோவான் 8:28; பிலி 2:7) இப்பொழுது குமாரனுடைய மகிமை மறுபடியும் விளங்குகிறது. (யோவான் 17:5; எபே 1:20-23; கொலோ 1:15-18).

"ஆகையால்" - எனக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருப்பதினால் நான் ஆரம்பித்து வைத்த ஊழியத்தை நீங்கள் தொடர்ந்து செய்யுமாறு நான் உங்களுக்கு சகல அதிகாரமும் கொடுக்கிறேன். யோவான் 16:23)

பிரதான கற்பனை

"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்"

1. புறப்பட்டுப்போங்கள் - எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை. பிரசங்கியார்களுக்கு மட்டும் என்று இதை வரையறுக்கக்கூடாது. இரட்சிப்பின் அழைப்பு எல்லோருக்கும் பொதுவானது. அதுபோலவே கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்னும் அழைப்பும், எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவானது.
   தேவன் நமக்கு சகல அதிகாரத்தையும் கொடுக்கிறார். அவர் நம்மோடு கூடவே இருப்பார்.
2. சீஷராக்குங்கள் - இந்த வாக்கியம் மத் 13:52; மத் 27:57; மத் 28:19 அப் 14:21 ஆகிய வசனங்களில் மட்டுமே வருகிறது.

   சீஷராக்கு (Teach) - μαθητεύω - **matheeteuoo** - 3101

   வினைச்சொல் - உபதேசி, சீஷராக்கு **(to make disciples, enroll as a learner or pupil)**
3. எல்லா சீஷர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுங்கள் (மத் 3:6, அப் 8:38)
4. உபதேசம் பண்ணுங்கள் - விசுவாசிகளைச் சீஷர்களாக்கிய பின்பு அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும். இயேசு கிறிஸ்துவின் கற்பனைகள் எல்லாவற்றையும் விசுவாசிகள் கைக்கொள்ளுமாறு அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும்.

   உபதேசி (Teaching) - διδάσκω - **didaskoo** - 1321

   வினைச்சொல் - உபதேசி, போதி, பிரசங்கி, போதகம் பண்ணு, உபதேசம் பண்ணு, கற்றுக்கொடு

"நாமத்திலே" - இதற்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் அதிகாரத்தினால் என்று பொருள். இயேசுவின் அதிகாரத்தினால் மட்டுமல்ல, திரித்துவத்தில் இடம் பெற்றிருக்கிற பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தினால் நாம் ஞானஸ்நானங் கொடுக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தம்மையும், பிதாவையும் பரிசுத்த ஆவியானவரையும் அங்கீகரிக்குமாறு நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். அப் 2:38; அப் 8:16; அப் 10:48; அப் 19:5 ஆகிய வசனங்களைப் புரிந்து கொள்வதற்கு இது உதவி புரியும். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு இயேசு கிறிஸ்து நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் என்றாலும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்குமாறு நமக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

மத்தேயு - தொகுப்புரை

28 அதிகாரம்

"பிதா குமாரன் பரிசுத்த ஆவி" - இந்த வாக்கியம் ஏதோ ஒரு பிதாவையோ ஏதோ ஒரு குமாரனையோ ஏதோ ஒரு பரிசுத்த ஆவியானவரையோ குறிக்காது. இது தெளிவாக இயேசு கிறிஸ்துவின் பிதாவானவரையும், அந்தப் பிதாவானவரின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் திரித்துவத்தில் மூன்றாம் நபராக இடம் பெற்றிருக்கும் பரிசுத்த ஆவியானவரையுமே குறிக்கும்.

"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும்" - நாம் ஜனங்களுக்கு உபதேசம் பண்ணவேண்டிய சத்தியம் மிகவும் தெளிவாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும். அவற்றை அவர்கள் கைக்கொள்ளுமாறு உபதேசம் பண்ண வேண்டும். இயேசு கிறிஸ்துவின் கட்டளையைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ நமக்கு அதிகாரம் இல்லை.

"உலகம்" - இது காலத்தைக் குறிக்கும். மனுஷனுடைய முடிவையோ வேறு எதனுடைய முடிவையோ குறிக்காது. இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்வரையிலும் நாம் அவருடைய கட்டளைகளை ஜனங்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவும் நம்மோடே கூட உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் இருப்பார்.

உலகம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32; மாற். 10:30